Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 5-4-2013 Issued : 5-4-2013

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, நவம்பர் 2, 2012—தொகுதி 36—எண் 2

Friday, the 2nd November 2012—Volume 36—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை -600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2–11–2012

உள்ளடக்கம்

பக்கங்கள்

1. வினாக்கள்–விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 493-533

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 5, 6 மற்றும் 7) 533-761

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—

(அ) சுகாதாரப் பணிகளை மேம்படுத்தி அரசு மருத்துவமனைகளின் வசதிகளையும், பாதுகாப்பையும் அதிகரிக்க பணியாளர்களை நியமித்தல் மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 756-760

(ஆ) பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 760-761

(இ) சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகளை அறிமுகம் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 761-764

3. சுகாதாரப் பணிகள் மேம்பாடு மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படுதல், பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம் ஆகியவை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 764-790

முனைவர் செ.கு. தமிழரசன் 764-766

திரு. உ. தனியரசு 766-769

பக்கங்கள்

3. சுகாதாரப் பணிகள் மேம்பாடு மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படுதல், பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம் ஆகியவை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—*தொடர்ச்சி*

*திரு. பி.வி. கதிரவன் 769-770

திரு. ரா. சரத்குமார் 770-774

*மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் 773, 789

டாக்டர் க. கிருஷ்ணசாமி 774-777

டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் 777-778

திரு. ஜேஜி. பிரின்ஸ் 778-779

திரு. சு. குணசேகரன் 779-784

திரு. ச. இராமச்சந்திரன் 784-785

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 785-787

*மாண்புமிகு திரு. செ. தாமோதரன் 787

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—

காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை— 790-801

*திரு. க. பாலகிருஷ்ணன் 791-792

திரு. கே. உலகநாதன் 792-794

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 794-801

பக்கங்கள்

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு 801

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 801-802

(இ) அரசு உறுதிமொழிக் குழு 802-803

(ஈ) மனுக்கள் குழு 803-804

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —

(அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 804-805

*மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 804

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2012 851-852

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 851-852

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

திரு. ச. இராமச்சந்திரன் 805-818, 820-823, 825

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 806-807

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 808 810,812 813,814,816 820,822-823

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 811

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 815-821, 823-824

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 825-837

திரு. அ. சவுந்தரராசன் 837-838

பக்கங்கள்

8. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.) 851

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.) 857

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.) 880-881

9. அரசினர் தீர்மானங்கள்—

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 852

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 901-902

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2012 853-854

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 853-854

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 855-856

(இ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012 857-859

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 857, 859

பக்கங்கள்

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(ஈ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 859-861

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 859-861

(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 861-863

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — 861,863

(ஊ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 863-865

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — 863-865

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 865-867

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — 866-867

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 868-869

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி — 868-869

(ஐ) தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 870-871

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் — 870-871

(ஒ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 872-873

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் — 872-873

பக்கங்கள்

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஓ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 874-875

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் — 874-875

(ஔ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன, இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2012 — 876-877

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 876-877

(அஅ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 878-880

*திரு. க. பாலகிருஷ்ணன் — 878

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 878-880

(அஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 881-882

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 881-882

(அஇ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 883-884

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு — 883-884

(அஈ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 885-886

*மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா — 885-886

(அஉ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 — 887-888

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் — 887-888

பக்கங்கள்

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அஊ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 889-891

*மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 889-890

(அஎ) தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 891-893

*மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 891-892

(அஏ) தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 893-895

*மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 893-894

(அஐ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 895-897

*மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 895-896

(அஒ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 897-899

*மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் 897-899

(அஓ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 899-901

*மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் 899-901

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 902-904

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043 – ஐப்பசி 17

2012 நவம்பர் 2, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்."

நீதி நெறிகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***6853—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சி, தேவூர் பேரூராட்சி (பகுதி) மற்றும் சங்ககிரி ஒன்றியத்திலுள்ள 245 கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டமானது காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது இத்திட்டத்தின்மூலம் இப்பேரூராட்சிக்கு சராசரியாக நாளொன்றுக்கு 22,43,000 லிட்டர் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கைப்பம்பு, மின் விசைப்பம்புமூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சிக்கு ஏற்கெனவே காவிரி கூட்டுக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மற்றுமொரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள சங்ககிரி பேரூராட்சிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு கூறினார்கள். என்னுடைய தொகுதியில் சங்ககிரி பேரூராட்சி மற்றும் சங்ககிரி ஒன்றியத்திலுள்ள 22 ஊராட்சி ஒன்றியங்களில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுவதால், போதுமான அளவு குடிதண்ணீர் பொது மக்களுக்குக் கிடைப்பதில்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சங்ககிரி பேரூராட்சி பகுதிக்கு மட்டும் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்வாரா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 2006-ல் துவங்கப்பட்டு, சங்ககிரி பேரூராட்சி, தேவூர் பேரூராட்சியினுடைய ஒரு பகுதியான

2012 நவம்பர் 2]

சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 250 குடியிருப்புகளுக்கு இந்தக் குடி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சங்ககிரி பேரூராட்சியைப் பொறுத்தவரையில், 29,715 மக்கள்தொகை கொண்ட ஒரு பேரூராட்சியாகும். இதற்கு சராசரி அளவாக 20,80,000 லிட்டர் குடி தண்ணீர் கொடுத்தாலே போதும். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில், 22,43,000 லிட்டர் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. போதிய நீர் வழங்கப்பட்டு வருவதால், மேலும் குடி தண்ணீர் வழங்க இயலவில்லை என்று சொன்னாலும், தேவையில்லை. ஆனால், வளர்ந்து வருகின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தால், தேவைப்படுகின்ற நேரத்தில், இதே திட்டத்தின் வாயிலாக, கூடுதலான குடி தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எனது தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம் ஒன்றியத்திற்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. துட்டம்பட்டி ஊராட்சி, வனிச்சம்பட்டி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு, இருப்பாளியிலிருந்து நீரேற்றம் செய்யப்படுகிறது. பின்னர் இங்கிருந்து தாரமங்கலம் பகுதியில் உள்ள சுமார் 300 மேல்நிலைத் தொட்டிகளுக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு, பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. போதுமான நீர் இல்லாத காரணத்தினால், அனைத்து மேல்நிலைத் தொட்டிகளுக்கும் நீரேற்றம் செய்ய முடியவில்லை. இதனால் பொது மக்களுக்குப் போதுமான குடிநீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இருப்பாளியிலிருந்து ஒரு புதிய பிரதான குடிநீர்க் குழாய் அமைத்து, எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, தாரமங்கலம் ஆகிய ஒன்றியப் பகுதிகளுக்குப் போதுமான குடிநீர் கிடைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதுமான குடி தண்ணீர் கிடைக்கவில்லை என்று கூறியிருக்கிறார். ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற நீராதாரங்களிலிருந்து குடி தண்ணீர் குறைவாகக் கிடைக்கின்றபட்சத்தில், இதுபோன்ற நிலைமை ஏற்படும். ஆனால், இப்பொழுது மழை பெய்திருக்கிறது. நிச்சயமாக தேவையான அளவு குடி தண்ணீர் கிடைக்கும். அப்படி தண்ணீர் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டால், ஏற்கெனவே அந்த பம்ப் மோட்டார்களில் போதுமான சக்தி இருக்கின்றபட்சத்தில், ஒரு மணிக்கு இத்தனை இலட்சம் லிட்டர் தண்ணீர் என்று ஏற்றப்படும். ஆனால், பம்புகள், மோட்டார்கள் பழுதடைந்து அதில் வேகக் குறைவு இருக்கின்றபட்சத்தில் தண்ணீர் குறைவாக வரும். அதையும் சீர் செய்து, குறித்த காலத்தில் தேவையான குடிதண்ணீர் கிடைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்பம்பட்டி ஊராட்சிக்கு இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அந்த மக்களின் பயன்பாட்டிற்கு இணைக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதி நிச்சயமாக ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும். அவ்வாறு இணைக்கப்படவில்லையென்று சொன்னால், ஆய்வு செய்து, உடனடியாக இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்வி நேரம் என்ற காரணத்தால்,

2012 நவம்பர் 2]

வேறு ஏதாவது கருத்துகளைச் சொல்ல முடியவில்லை என்று சொன்னாலும்கூட, உண்மை நிலைகளைச் சொல்ல வேண்டும். அவருடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் தருமபுரிக்கு வந்தபோது, பணி நடைபெறவில்லை என்று சொன்னார். வருகின்ற டிசம்பர் திங்களில் அல்லது ஜனவரியில் உங்களுடைய தொகுதிக்கு உட்பட்ட தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் வாழ்கின்ற கிட்டத்தட்ட 30 இலட்சம் மக்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருக்கரங்களால், காவிரித் தண்ணீர் தொடுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இப்பேரவையில், பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கருணையால் மேலூர் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் இப்போது தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன. இந்தக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், புரட்சித் தலைவி அம்மாவினுடைய கடந்த ஆட்சிக் காலத்தில், முயற்சி செய்து தயார் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, 5 ஆண்டுக் காலம் அந்தப் பணியைத் தொடங்காமல், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்த காரணத்தினால், அந்தப் பணியைத் தொடங்காமலேயே, 5 வருடங்களாக, 'இந்த வருடம், அடுத்த வருடம்' என்று சட்டசபையிலே சொல்லி இழுத்தடித்தது. மீண்டும் 3-வது முறையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே மேலூர் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு உத்தரவிட்டு, இன்றைக்கு அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தொகுதியில் இருக்கின்ற அனைத்துக் கிராமங்களுக்கும், எல்லாப் பட்டிதொட்டிகளுக்கும் தண்ணீரை வழங்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அறிவிப்புக்கு, அம்மா அவர்களுக்கும், அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு,

[2012 நவம்பர் 2

இந்தப் பணியை விரைந்து முடித்து, இந்த ஆண்டே அந்தப் பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலமாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதநேயமிக்க தலைவர், யார், என்ன என்பது இல்லாமல், எப்படி வானம் நல்லவர்களுக்கும் மழை பெய்து, கெட்டவர்களுக்கும் மழை பெய்து, எல்லோரையும் வாழ வைப்பதைப்போல, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், யார் எப்படி இருந்தாலும், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களும் தன்னுடைய மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு தொலைநோக்கு சிந்தனையோடு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டு வந்து கொண்டிருப்பவர். அதுவும் குறிப்பாக, குடி தண்ணீரைப் பொறுத்தவரையில், அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே, ஏற்கெனவே அவருடைய மேலூர் தொகுதிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், அதிகாரிகளும், நானும் நேரடியாகச் சென்று ஆய்வு செய்தோம். விரைவாகப் பணி நடந்து கொண்டிருக்கிறது. குறித்த காலத்தில் பணி முடிக்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்தப் பகுதிகளுக்கு குடி தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் 90 விழுக்காடு கீழூற்று தண்ணீர்மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது. (குறுக்கீடு) சிவகங்கை மாவட்டத்திலே. அந்தத் தண்ணீரில் டி.டி.எஸ். என்று

2012 நவம்பர் 2]

சொல்லக்கூடிய உப்புத்தன்மை, 1,000-லிருந்து 1,800 வரை இன்றைக்குப் பெரும் பகுதியில் இருக்கிற ஒரு சூழ்நிலையில், அந்த மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி, அந்த மாவட்டம் முழுவதும் தண்ணீர் தர வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் மற்றும் மேலூர் கூட்டுக் குடிநீர் மூலம் எங்களுக்கு ஒவ்வொரு பகுதிக்காகக் கொடுக்கிற தண்ணீர்கூட போதுமானதாக இல்லை. எனவே, சிவகங்கை மாவட்டம் முழுவதிற்கும் தனியாக ஒரு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, குடிதண்ணீர் வழங்குகிற திட்டத்தை அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. குடிக்கின்ற தண்ணீரில் உப்பு கலந்திருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக உடனடியாக மாற்றப்பட வேண்டும். எந்தெந்தப் பகுதிகளில் இதுபோன்ற நிலைமை இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, ஏற்கெனவே உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் எந்தெந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுகிறதோ, அதோடு சேர்த்து இந்தப் பகுதிகளுக்கும் கிடைக்கின்ற வகையிலே, இந்தத் திட்டத்தை மேம்படுத்தி, தூய்மையான தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கிராமங்களில் இருக்கின்ற அனைத்து குடியிருப்புகளுக்கும் தண்ணீர் வழங்க வேண்டுமென்று சொல்லி, ஏறத்தாழ 575 குக்கிராமங்களுக்குத் தற்போது பில்லூர் குடிநீர்த் திட்டம் தந்து, இன்று அதை அபிவிருத்தி செய்கிற

[2012 நவம்பர் 2

வகையிலே, 955 குக்கிராமங்களுக்கு வழங்குகிற இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைத் தந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து, எனது தொகுதிக்குட்பட்ட காரமடை ஒன்றியத்தில் 9 ஊராட்சிகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படாத நிலையில், இந்த 9 கிராமங்களுக்கும் மேட்டுப்பாளையம், பவானி ஆற்றிலிருந்து இரண்டாவது குடிநீர்த் திட்டத்தை வழங்குவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிற வெள்ளாதி, சிக்காரம்பாளையம், ஜடையம்பாளையம், சிக்கதாசம்பாளையம், பள்ளியபாளையம், இரும்பறை, இலுப்பநத்தம், முடுதுறை, சின்னகள்ளிப்பட்டி ஆகிய 9 ஊராட்சிகளுக்கும் ஆய்வு செய்யப்பட்ட இந்தத் திட்டத்தை இரண்டாவது திட்டமாக அறிவித்து, இந்தத் திட்டத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட திட்டங்களில், அவருடைய ஊராட்சி ஒன்றியங்கள் முழுவதும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விடுபட்டிருக்கின்ற சில ஊராட்சிகள் ஒன்று மேட்டுப் பகுதியிலே இருக்கும். அல்லது இந்தக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு செல்ல முடியாத ஒரு நிலையிலே இருக்கும். அதை ஆய்வு செய்து, அந்தத் திட்டத்திலே சேர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு முடியவில்லை என்று சொன்னால், இரண்டாவது திட்டத்தில் ஆய்வு செய்து, அதற்கு எவ்வளவு செலவானாலும் அந்தத் திட்டத்தை, அந்த ஊராட்சிகளுக்கு எடுத்துச் சென்று, மக்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் நகராட்சியில் நிலவும் கடுமையான குடிநீர்ப்

2012 நவம்பர் 2]

பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வின் ஒரு முக்கிய அம்சமாக, 10 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியும், 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட 2 மேல்நிலைத் தொட்டிகளும் தேவை; இந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டங்களை அரசு செயல்படுத்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே குடிதண்ணீர் தட்டுப்பாடு இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள கோரிக்கையின் அடிப்படையிலும், அங்குள்ள மக்களுக்கு நிறைவான குடிதண்ணீர் கிடைக்கின்ற வகையிலேயும் விரைவாக நடவடிக்கை எடுத்து செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியில், 2006 ஜனவரியில், வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் பேரூராட்சிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டு, அதன் பின்னர் வந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் குளறுபடிகளால் அந்தத் திட்டமானது இன்று வரை செயல்படாமல் இருக்கிறது. வேடசந்தூர் மற்றும் சுற்றுப் பகுதிகளிலுள்ள கிராம மக்களுக்கு, இதுவரை குடிநீர் வழங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து அந்தப் பணிகளை முடித்து, வேடசந்தூர் பேரூராட்சி மற்றும் சுற்றுப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சில திட்டப் பணிகள் வேகமாகச் செயல்படாமல் முடக்கத்திலே இருந்து வந்ததை ஆய்வு செய்து, அவை துரிதமாக நடைபெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துள்ள கோரிக்கையின் அடிப்படையிலே ஏற்கெனவே பணிகள் தொய்வடைந்திருந்தன. அவற்றை வேகப்படுத்தி இருக்கிறோம். விரைவாக அப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அங்குள்ள மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ரீத்தாபுரம் பேரூராட்சி மற்றும் சைமன்காலனி ஊராட்சிப் பகுதிகளிலே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. தேவையான தண்ணீர் கிடைப்பதில்லை. குழித்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டம் இருக்கிறது. ஆனால் உப்பு கலந்த தண்ணீர்தான் அதிகமாகக் கிடைக்கிறது. அந்த மக்களுக்கு தண்ணீர் முறையாகக் கிடைப்பதற்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருத்துகளைத் தவறாகக் கூறுகிறார். கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் பெறும் தண்ணீரிலே உப்பு இருக்கிறது என்று சொல்கிறார். நிச்சயமாக (குறுக்கீடு) அப்படிச் சொல்லவில்லையா? (குறுக்கீடு) சரி, சரி. உப்பு தனி, இது தனி. சரி.

2012 நவம்பர் 2]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: கிணறுகளில் தண்ணீர் எடுக்கும்போது தண்ணீர் உப்பாக இருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர், தோழர் திரு. குணசேகரன் அவர்கள் சொன்னதுபோல், தமிழகத்தில் எந்தப் பகுதியில் இருந்தாலும், குறிப்பாக கடலோரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அங்கே தோண்டினால் நிச்சயமாக உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. கடலோரப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்குத் தூய்மையான தண்ணீர் வழங்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், அதையும் ஆய்வு செய்து, தூய்மையான தண்ணீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி ஏற்கெனவே இருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கிடைக்கவில்லை என்று சொன்னால், புதிய திட்டத்தையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையோடு ஏற்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் வைகை ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து மதுரை, இராமநாதபுரம் விருதுநகர் போன்ற மாவட்டங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால், மானாமதுரை தொகுதியில் இருக்கின்ற பூவந்தி கிராமம், மேலராங்கியம், கீழராங்கியம், கூடத்துப்பட்டி போன்ற பகுதிகளில் குடிநீர் இல்லை. அந்தப் பகுதியில் நிலத்தடி நீரும் உப்பாக இருக்கிறது. குறிப்பாக, பூவந்தி கிராமத்தில் பூமியைத் தோண்டினால் ஒருவித எண்ணெய்ப் பசைபோல் வருகின்றது. இந்தப் பகுதியின் மக்கள் குடிநீருக்கு அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நல்ல

[2012 நவம்பர் 2

தண்ணீர் வைகை ஆற்றில் இருந்து எடுத்து வழங்க, கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்து, பூவந்தி கிராமம், மேலராங்கியம், கீழராங்கியம், கூடத்துப்பட்டி போன்ற பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகை ஆற்றிலிருந்து குடிநீர் எடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். வைகை ஆற்றிலிருந்து ஏற்கெனவே பல்வேறு இடங்களில் குடிநீர் எடுக்கப்படுகின்றது. இருந்தும் பல இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது. அதனால், அதை ஆய்வு செய்து, எந்தப் பகுதியிலிருந்து குடிநீர் எடுத்துச் சென்றால், அவர்களுக்கு வருடம் முழுவதும் தண்ணீர் கிடைக்கும் என்பதை ஆய்வு செய்து, அதற்கேற்றவாறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முயற்சி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பெண்ணை ஆற்றிலிருந்து செஞ்சி நகரத்திற்கு குடி தண்ணீர் கொண்டு வருவதற்காக செஞ்சி கூடுதல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம், நீண்ட நாட்களாகியும் நிறைவு பெறாத நிலையில், பேரூராட்சியிடம் ஒப்படைக்காமல் உள்ள சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், செஞ்சி நகரத்தில் பெரும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, விரைவில் நிறைவேற்றித் தருவதற்கு முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது இருக்கின்ற திட்டம்...

திரு. அ. கணேஷ்குமார்: அந்தத் திட்டம் நிறைவுபெறாமல் இருக்கிறது. 90 சதவிகிதப் பணிகள் முடிந்து நீண்ட நாட்களாக ஒப்படைக்கப்படாத காரணத்தினால், அதைத் துரிதப்படுத்தி முடித்துத் தருமாறு கோருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செஞ்சி நகரத்திற்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. புதிய திட்டம், நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார். இதை ஆய்வு செய்து, விரைவுபடுத்தி, உடனடியாகத் தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாப்பிள்ளையூரணி ஊராட்சி, 63 குக்கிராமங்களை உள்ளடக்கி, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பகுதியாகும். 20 வருடங்களுக்கு முன்பு திட்டமிடப்பட்டு, இப்போது 4 இலட்சம் லிட்டர் முதல் 5 இலட்சம் லிட்டர் வரை மட்டுமே தினமும் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. வாரத்திற்கு அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறைதான், சுழற்சி முறையில் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. எனவே, இப்போது வளர்ந்து வரக்கூடிய மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு, மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்கு மட்டும் பிரத்யேகமான, விரிவான திட்டம் கொண்டு வரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நிறைய பகுதிகளில் நிலவி வருகிறது. அதைப் போக்கும்

[2012 நவம்பர் 2

வகையில் கடந்த நிதியாண்டிலும், இந்த நிதியாண்டிலும் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை, எங்கெங்கெல்லாம் நீராதாரம் இருக்கின்றதோ, அவையெல்லாம் அடையாளம் காணப்பட்டு, அந்தத் திட்டங்கள் சபையில் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதைத் தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கருத்தையும் பரிசீலனை செய்து, அந்தப் பகுதிகளுக்கும், எந்த இடத்திலிருந்து, காவிரி ஆற்றிலிருந்தா அல்லது வேறு எந்தப் பகுதியிலிருந்து வாய்ப்பு எங்கிருக்கிறது என்பதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின்படி, அப்பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி மேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், என்னுடைய திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், திருமங்கலம் நகரப் பகுதிக்கு தண்ணீர் வழங்கப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. ஆனால், ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள 38 ஊராட்சிகளில் உள்ள சில கிராமங்கள் இத்திட்டத்தில் இடம்பெறாமல் விடுபட்டிருக்கின்றன. எனவே, அந்த விடுபட்ட கிராமங்களையும் இணைத்து, 38 ஊராட்சிகளில் உள்ள உட்கிராமங்கள் அனைத்திற்கும் இந்தக் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல குடிநீர் வழங்கினார் என்ற செய்தியை வழங்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபோது, மேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அந்த ஊராட்சியின் ஒரு பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும், ஒருசில கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். பொதுவாக கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்வாயிலாக திட்டங்கள் தயாரிக்கும்போது, எந்தெந்தப் பகுதிகளுக்குச் செல்கிறதோ அந்தப் பகுதிகளில் உள்ள அனைத்துக் கிராமங்களையும் இணைத்துத்தான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. உறுப்பினர் கூறும் ஏற்கெனவே விடுபட்டிருக்கின்ற அந்த ஊராட்சிகள், வேறு திட்டங்களில் இருக்கலாம். அப்படி இருக்கும்பட்சத்தில்தான், இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் அவை சேர்க்கப்படாமல் இருந்திருக்கும். அவ்வாறு சேர்க்கப்படாமல் இருந்தால், அதை ஆய்வு செய்து, இந்தத் திட்டத்திலேயே சேர்த்து குடி தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்வதோடு, ஏற்கெனவே வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இந்தக் கிராமங்கள் சேர்க்கப்பட்டிருந்தால், அது இயலாது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கு நல்ல குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரத்தில், சமீப காலத்தில், சில இடங்களில், குடிநீரும், கழிவுநீரும் கலந்து பைப்பில் அடிக்கிறபோது வருகிறது. குறிப்பாக எனது தொகுதியில் அது மிகப்பெரும் பிரச்சினையாக இருக்கிறது. கல்யாணபுரம், வியாசர்பாடி, பக்தவச்சலம் காலனி, கரிமோடு, கக்கன்ஜி காலனி போன்ற பகுதிகளில் இப்பிரச்சினை மிக அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதிகளை உடனடியாக சர்வே செய்து, குடிநீரில் கழிவுநீர் கலந்து வரும் பகுதிகளுக்கு, குடிநீரை லாரிகள்மூலம் சப்ளை செய்வதற்கும், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு மழை பொய்த்துவிட்டிருந்தபோதும்கூட, இயற்கை நமக்கு உறுதுணையாக இல்லாதிருந்த காலத்திலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2002-ல் எடுத்த கடுமையான முயற்சியால், புதிய வீராணம் திட்டத்தின்வாயிலாக, இன்றைக்கு ஒரு நாளைக்கு சென்னை மாநகராட்சிக்கு மட்டும் 831 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு நாளைக்கு 83 கோடி ரூபாய் செலவில் இந்தக் குடிதண்ணீரை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில இடங்களில் கழிவு நீர் கலப்பதாகக் கூறுகிறார். அப்படி இருப்பின், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கெனவே, இதுபோல் உள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் 180 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கீடு செய்து, விரைவாகச் செயல்படுத்த உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி ஒரு சில இடங்களில் லாரிகள்மூலம் குடிநீர் வழங்க வேண்டிய சூழ்நிலை வந்தால், லாரிகள்மூலம் வழங்கி, தூய்மையான குடிநீர் மக்களுக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

21—

அங்கன்வாடி மையம்

***4932—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, குறிஞ்சிகுளத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராமத்தில் அங்கன்வாடி மையம் அரசு கட்டடத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. குறிஞ்சிகுளம் கிராமத்தில் உள்ள பயனாளிகள் விஜயாபதி அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருகிறார்கள். மேலும், இம்மையத்திற்கும், குறிஞ்சிகுளம் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ. என்பதால் மத்திய அரசு விதிகளின்படி, ஒரு கிலோ மீட்டருக்குள் இம்மையம் செயல்பட்டு வருவதாலும், மேலும் மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் குறைந்தபட்ச மக்கள்தொகை 400 இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாலும், குறிஞ்சிகுளம் கிராமத்தில் மக்கள்தொகை வெறும் 209 மட்டுமே இருப்பதால், குறிஞ்சிகுளத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான தேவை தற்போது ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை.

அடுத்து, வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

22—

அரசு கலைக் கல்லூரி

***292—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) அவினாசி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனைகளைச் செய்த, தாயுள்ளம்கொண்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவை 2,200 ஏக்கர் பரப்பளவில், 3,100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதன்பயனாக 25,000 மக்கள் பயனடைவார்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவித்ததற்கு அவினாசி தொகுதி மக்கள் சார்பாகவும், திருப்பூர், கோவை மாவட்ட மக்களுடைய சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசியில் அரசுக் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரிகள் எதுவும் இல்லாத காரணத்தால், திருப்பூருக்குச் செல்ல வேண்டியிருந்தால் 35 கிலோ மீட்டர் தொலைவிலும், அதேபோல கோவைக்குச் செல்ல வேண்டியிருந்தால் 50 கிலோ மீட்டர் தொலைவிலும் கல்லூரி உள்ளது. அதனால், அம்மாணவர்களுக்கு மிகவும் சிரமமாக உள்ளது. அவினாசி பேரூராட்சிக்குச் சொந்தமான நிலம் க.ச.எண் 211/27-ல் 21 ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. எனவே, அவ்விடத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

2012 நவம்பர் 2]

நல்லாட்சியில் அரசுக் கல்லூரி அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சார்ந்திருக்கின்ற அவினாசி சட்டமன்றத் தொகுதி என்பது திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்ததாகும். அந்தத் தொகுதி சார்ந்துள்ள மாவட்டத்தில் 3 அரசு கலைக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அரசு உதவிபெறும் கலைக் கல்லூரியாக ஒரு கல்லூரி செயல்பட்டு வருகிறது. அதற்கு மேலும் 13 சுய நிதிக் கல்லூரிகள், ஆக மொத்தம் 17 கல்லூரிகள் அந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டு, நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கின்ற சாதனை, 100 ஆண்டு பேசுகின்ற ஓராண்டு சாதனை. இன்றைக்கு தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஆட்சி அமைத்து ஒன்றரை ஆண்டுகளில் 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி, தமிழகத்தினுடைய உயர் கல்வித் துறையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு கலைக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்கான நிலம் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்குள்ள மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, எதிர்காலத்தில் கல்லூரி தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது தொகுதியில் கல்லூரி கட்டித் தருவதற்கான நல்லதொரு கருத்தைச் சொன்னதற்கு மனமார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருந்தாலும், அங்கே பட்டப் படிப்பு படிக்கின்ற வாய்ப்பு என்பது இல்லை. பட்ட மேற்படிப்புக்கு மட்டும்தான் வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே, சிதம்பரம், காட்டுமன்னார்குடி இரண்டு தாலுகாக்களுக்கு சேர்த்து ஒரேயொரு கல்லூரி, ஆண்கள், பெண்கள் இரண்டு பேரும் சேர்ந்து படிக்கக்கூடிய ஒரேயொரு கலைக் கல்லூரிதான் இருக்கிறது. இதனால், அதிக பெண்கள் கல்லூரியிலே படிக்கின்ற வாய்ப்பை இழந்துவிடுகிறார்கள். எனவே, பெண்களுக்காக, அரசு, தனிக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடையே நீண்டநாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெண்களுக்கென்று தனி கலைக் கல்லூரி வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சட்டமன்றத்தில் இதற்கான வினாவைத் தொடுத்திருக்கிறார்கள். சிதம்பரத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகிற கலைக் கல்லூரியில், மாணவர்களின்

2012 நவம்பர் 2]

எண்ணிக்கைக்கேற்ப, கூடுதலாக பாடப் பிரிவுகள் துவக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருந்தார். அதனுடைய அடிப்படையிலேதான், அங்கே அந்த மாவட்டத்தினுடைய கல்வி நிலைக்கேற்ப உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், கூடுதலாக இந்த ஆண்டு அங்கே பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்களோடு, பெண்களும் அதிகமாகப் படிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் 'Vision 2023' தயாரித்து, ஆவணத்தை வெளியிட்டு, இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். பெண்கள் உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறுபட்ட நடவடிக்கை எடுத்துவருகிறது. எதிர்காலத்தில் தேவையிருப்பின், அதற்கான கருத்துரு பெற்று, ஆராய்ந்து, நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், பக்கத்தில் இருக்கக்கூடிய பேரணாம்பட்டு, வாணியம்பாடி, அதைச் சுற்றியுள்ள ஒன்றியப் பகுதிகள், எங்கேயும் அரசு கல்லூரி கிடையாது. பெண்கள் படிக்க வேண்டுமென்று சொன்னால், வாணியம்பாடியில் இருக்கக்கூடிய தனியார் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆம்பூர் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தருவார்களா? அதற்காக 10 ஏக்கர் நிலமும் இருக்கின்றது என்பதால், அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் தொகுதிக்கு ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு ஒரே ஆண்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், அந்த மாவட்டத்தினுடைய மாணவர்கள் நலன் கருதி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரியும், இந்த ஆண்டு மட்டும் வேலூர் மாவட்டத்தில் இரண்டு கல்லூரிகளையும் வழங்கிய பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தொடர் நடவடிக்கையாக மேலும் அந்த மாவட்டத்திற்கு வாய்ப்பு ஏற்படுகிறபோது, மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்போது, அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், மயிலாடுதுறையில் அரசு பெண்கள் கலைக் கல்லூரி இருந்து வருகிறது. அங்கு ஆடவருக்கென்று கலைக் கல்லூரி இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மயிலாடுதுறையில் ஆடவர் கலைக் கல்லூரி அமைக்க ஆவன செய்வாரா என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடவர் கலைக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒரு பல்கலைக்கழக உறுப்பு கலைக் கல்லூரியைத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 2]

அதோடுமட்டுமல்லாமல், இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு, ஆட்சி அமைத்த ஒன்றரை ஆண்டுகளுக்குள்ளாக, 22 கலைக் கல்லூரிகள் வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மட்டும்தான். அதோடுமட்டுமல்லாமல், மாணவர்களுடைய ஆராய்ச்சிப் படிப்பை மேம்படுத்துவதற்காகவும், ஆராய்ச்சித் திறனை வளர்ப்பதற்காகவும் தமிழகத்தில் பட்ட மேற்படிப்பு மையங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இப்படி மாணவர்களுடைய எண்ணிக்கை, உயர் கல்வி பெறுவோருடைய எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கலைக் கல்லூரியைத் தொடங்கிய அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, இந்திய அளவில் உயர் கல்வி பெறுவோருடைய எண்ணிக்கை 13 சதவீதமாக இருக்கிற காலகட்டத்தில், தமிழ்நாடு அளவில் Gross Enrolment Ratio, இந்த உயர் கல்வி பெறுவோருடைய எண்ணிக்கை 18 சதவீதத்தையும் தாண்டி வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டை கல்வித் துறையிலே முன்னோடி மாநிலமாக உருவாக்கிக் காட்டிய எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் பணிவான வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலே எந்தவொரு அரசுக் கல்லூரியும் இல்லை. மேலும், என்னுடைய தொகுதியானது பர்கூர் மலையை உள்ளடக்கிய தொகுதி. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 15,000 மக்கள் வசிக்கின்றனர். அங்கே கல்லூரிப் படிப்பைப் படிப்பதற்காக, மலைவாழ் குழந்தைகள் 100

[2012 நவம்பர் 2

கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஈரோட்டிற்கும், 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோபிசெட்டிப்பாளையத்திற்கும்தான் வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. எனவே, எனது அந்தியூர் பகுதியிலே அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கலை மற்றும் அறிவியல் கல்லூரி சம்பந்தப்பட்டது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில், பாலிடெக்னிக், பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பொதுவாக, இந்த ஆண்டு மட்டும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7 பாலிடெக்னிக் கல்லூரிகளைத் திறந்து, நம்முடைய தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கிற வகையில், இந்த ஆண்டு மொடக்குறிச்சியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், இந்த ஆண்டு, அந்த மாவட்டத்திற்கு பட்ட மேற்படிப்பு பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்காக, ஒரு புதிய P.G. Centre, பட்ட மேற்படிப்பு மையத்தையும் தொடங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் அந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 நவம்பர் 2]

23—

கூட்டுறவுச் சங்கம்

***13104—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அந்தியூர் கிராம தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1999-2000 ஆம் ஆண்டில், அதாவது தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கையிருப்பு குறைவு, முறைகேடாக உரம் மற்றும் பினாமிகள் கடன் வழங்கியது போன்ற காரணங்களால், சங்கம் வாழ்வாதாரத்தை இழந்தது. அதனால், 8-9-2003 அன்று இச்சங்கம் கலைக்கப்பட்டது. இச்சங்கத்தைப் புத்துயிரூட்ட வேண்டுமென்று சங்க உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டதைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், நம்முடைய அம்மா அவர்களுடைய அரசால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 27-4-2012 முதல் இச்சங்கம் மீண்டும் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியிலே உள்ள அந்தியூர் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட நிலைப்பாட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்

[2012 நவம்பர் 2

சென்றதற்குப் பின்பு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை புனரமைப்பு செய்து, அரசாணை பிறப்பித்து, உரிய நடவடிக்கை எடுத்தார்கள். அதற்காக அந்தப் பகுதி விவசாயிகளின் சார்பில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது கோடானு கோடி நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறபொழுது அந்தச் சங்கமானது புனரமைப்பு செய்யப்பட்டு, பயிர்க் கடன்கள் வழங்கப்படுகிறதாகவும் கூறினார்கள். அந்த இரண்டு கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளிலே அதிகமான விவசாயிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு அதிக அளவில் பயிர்க் கடன் கிடைக்கக்கூடிய வகையிலே, தற்போது 15 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு வருவதை, ஒரு கோடி ரூபாய் வரை உயர்த்திக் கொடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டில், பயிர்க் கடன் வழங்கப்பட்டதைப் பொறுத்தவரையில், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின்மூலமாக 25 இலட்சம் ரூபாய் கிரஷ் கடன் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 38 உறுப்பினர்களுக்கு 15 இலட்சம் வரை கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு 20 உறுப்பினர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வரை பயிர்க் கடன் வழங்குவதற்கு தற்போது கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

2012 நவம்பர் 2]

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு ஒருங்கிணைந்து, அந்த விவசாயப் பெருமக்களுடைய நலன் கருதி, அங்குள்ள விவசாயிகளுக்கு நகைக் கடன் கொடுக்கக்கூடிய வகையிலே, C.R.D.F. நிதித் திட்டத்தின்மூலமாகக் கடன் கொடுப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொண்டு, அதோடு, எங்களது பகுதிகளிலே 18 Settlement பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு ரேஷன் பொருட்கள் சரியாகக் கிடைப்பதில்லை. அங்கே நடமாடும் ரேஷன் கடைமூலமாக பொருட்களை வழங்குவதற்கு இராமநாதபுரம் மற்றும் மானுபட்டி ஊராட்சியிலும், தளி பேரூராட்சியிலும் தொடக்க வேளாண்மை சங்கத்தின்மூலமாக உரிய முறையிலே ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு, நகைக் கடனுக்குப் பாதுகாப்புப் பெட்டகக் கட்டடமும் கட்டுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுதான் அந்தச் சங்கம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் புனரமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. சிறப்பான ஒரு பணியைச் செய்வதற்காக, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல ஆலோசனையைப் பெற்று, அந்தச் சங்கம் எதிர்காலத்தில் சிறப்பாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

24—

கடலரிப்புத் தடுப்புச் சுவர்

***12284—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலோரக் கிராமங்களில் ஏற்படுகின்ற கடல் அரிப்பினைத் தடுக்க நிரந்தரமாகத் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலோரக் கிராமங்களில் ஏற்படுகின்ற கடல் அரிப்பினைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இந்த ஆண்டு 22.46 கோடி ரூபாய்க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் மட்டும், 6.13 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் எண்ணுகின்றபோதே அதைச் செயல்படுத்துகின்ற அரசாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். சிறிய கற்களாலும், முறையாகத் தடுப்புச் சுவர் அமைக்காததாலும்தான் கடல் சீற்றத்தால் தடுப்புச் சுவர் நாசமாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 42 கடற்கரைக் கிராமங்கள் இருக்கின்றன. அனைத்துப் பகுதிகளிலுமே தடுப்புச் சுவர் போடப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவில் இராட்சத அலைகளாலும், கடல் சீற்றத்தாலும் பாதிக்கப்படும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் என்பதால், அங்கு

2012 நவம்பர் 2]

போடப்பட்ட தடுப்புச் சுவர் நாசமாகிவிட்டது. ஆண்டொன்றிற்கு சுமார் 100 வீடுகள் நாசமாகின்றன. பல கோடி ரூபாய் உடமைகள் நாசமாகின்றன. இதனைத் தடுப்பதற்கு பெரிய பாறைகளால் தடுப்புச் சுவர் அமைக்கவும், நவீனமாகச் செய்யப்பட்ட பெரிய சிமெண்ட கற்களால் தடுப்புச் சுவர் அமைத்து—sand accumulation beach system மூலமாக தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும், குறிப்பாக என் தொகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டிய பகுதிகளில் எப்போது இந்தப் பணிகளை ஆரம்பிப்பீர்கள் என்பதைத் தாங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே மூன்று பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் அடுத்த நிதியாண்டிலே ஒரு பணி துவங்கப்பட உள்ளது. மேலும், முக்கியமான பணிகள், தேவைப்படுகின்ற பணிகளுக்காக 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கருத்துரு பெறப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

சுற்றுலாத் தலம்

***2596—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) சிவகங்கை தொகுதி, மருது சகோதரர்களின் நினைவிடம் உள்ள காளையார் கோவில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மருது சகோதரர்களின் நினைவிடமான காளையார் கோவில் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக மத்திய, மாநில அரசுகள் நிதி உதவியுடன், சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுற்றுலா சுற்று திட்டத்தின்கீழ் ரூபாய் 84.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் குழந்தைகள் பூங்கா, தகவல் பலகைகள் அமைத்தல், மருதுபாண்டியர் நினைவுச் சின்னத்தைச் சுற்றியுள்ள பகுதியை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ஏற்கெனவே முடிவுற்று, தற்போது பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: நடைபெற்ற பணிகளுக்காக நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியில், மருதுபாண்டியர் நினைவிடத்திற்குப் பின்னால் மிகப்பெரிய குளம் இருக்கிறது. அங்கு ஏற்கெனவே பணிகள் தொடங்கப்பட்டு பூர்த்தியடையாத ஒரு நிலையில், நிதிப் பற்றாக்குறையால் நடைபெறாமல் நின்று கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பணியையும் இந்தநேரத்தில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1862 ஆம் ஆண்டு இழந்த அரசு உரிமையை, 1869 ஆம் ஆண்டு வீரமங்கை வேலுநாச்சியார், மருதுபாண்டியர் போன்றவர்கள் எல்லாம் மக்களை இணைத்துக்கொண்டு, களத்திலே நின்று போராடி, ஆட்சி உரிமையைப் பெற்ற ஒரு மண், இந்திய வரலாற்றிலேயே சிவகங்கை மட்டும்தான், வெள்ளையர்களை எதிர்த்து களத்திலே நின்று வெற்றிபெற்ற இடம் அது. முழுமையான அந்த வெற்றிக்கு அடிப்படையான காரணம் அந்தப் பகுதியில் உள்ள மக்கள். இன்னும் சொல்லப்போனால்,

2012 நவம்பர் 2]

அந்த வரலாற்றில், குயிலி என்ற ஒரு தாழ்த்தப்பட்ட வீரத்தாய், தன்னுடைய உடலிலே நெய்யை ஊற்றி, முதல் மனித குண்டாக அந்த வெடி கிடங்கிலே இறங்கி அந்த வெடி கிடங்கை சிதற அடித்த பின்னால்தான் அந்த வெற்றியே கிடைத்தது என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களும், தலித் மக்களும், அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றுபட்டதால் அந்த மிகப்பெரிய வெற்றியை ஈட்ட முடிந்தது. அப்படிப்பட்ட மக்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான அந்த நாளை, ஒரு தேசிய வெற்றி நாளாக, மக்களின் ஒற்றுமை நாளாக, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்னும் ஆய்வுகளை மேற்கொண்டு, அறிவித்து, ஒரு மிகப்பெரிய விழாவாக நடத்திட வேண்டும். மறைந்த வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம், அதைப்போல வீரமங்கை வேலுநாச்சியாருக்கும் நினைவுச் சின்னங்களை எழுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் நேரடியாக இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். நிச்சயமாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்களை எதிர்கொண்டு வெற்றி கண்ட வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவாக நினைவுச் சின்னம் தமிழக அரசால் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சு. குணசேகரன்: கோரிக்கை வைத்த அடுத்த நொடியே சுடச்சுட அந்தக் கோரிக்கையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பகுதி மக்களுடைய மனம் குளிர நினைவுச் சின்னம் அமைத்துக்கொடுத்த நமது மாண்புமிகு தமிழக முதல்வர்

[2012 நவம்பர் 2

அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பாண்டி மக்களுக்கு இன்றைக்கு ஒரு மகா புருஷராக இருக்கின்ற, எங்களுடைய வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அறிவிப்பானது, தென் பாண்டி மக்களுடைய இதயத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்து, உங்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்றைக்கும் தென் பாண்டி மக்கள் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள், அவர்கள் அம்மாவிற்குப் பின்னால் அணிவகுத்திருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

பேருந்து வசதி

***5473—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, மயிலாடும்பாறை-மல்லபுரம் சாலையில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, மயிலாடும்பாறை-மல்லபுரம் வரையில் உள்ள 16.5 கி.மீ. சாலையில் தாழையூத்து முதல் எம்.புதூர் வரையிலுள்ள 6 கி.மீ. பகுதி வனத் துறையின்

2012 நவம்பர் 2]

கட்டுப்பாட்டிலுள்ள மலைச் சாலையாகும். சாலையின் இருபுறங்களும் அரிக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில், இந்தச் சாலையின் வழியாகப் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளதால், மாற்றுப் பாதையாக தற்போது மல்லபுரம் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், உசிலம்பட்டியிலிருந்து மல்லபுரத்திற்கு 4 தனி நடைகள் செல்லும் நகரப் பேருந்தும், மல்லபுரம் பிரிவு நிறுத்தம் வரையில் 36 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி சாலை, மேம்பாடு செய்யப்பட்ட பின்பு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து வருகின்ற இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2001 முதல் 2006 வரை முதல்வராக இருந்த காரணத்தால், அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, வனத் துறையின் அனுமதி பெற்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த வழித்தடத்தில் பேருந்தை இயக்கினார்கள். அதற்குப் பின்பு ஆட்சி மாறியபோது, மைனாரிட்டி தி.மு.க. அரசு, அந்த வழித்தடத்தில் பேருந்து விடுவதை 5 ஆண்டுக் காலம் நிறுத்தி விட்டது. இப்போது வனத் துறை அனுமதி கொடுத்தும் பேருந்து விடப்படுவது நிறுத்தப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், பெரிய பேருந்தை விடாமல், சிறிய பேருந்தையாவது அந்த வழித்தடத்தில் விட்டால், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, விருதுநகர் சட்டமன்றத் தொகுதி ஆகிய 4 சட்டமன்றத் தொகுதி மக்களும் பயனடைவார்கள். அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சாலையை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அலுவலர் மற்றும் போக்குவரத்துக் கழகத்தினுடைய கோட்ட மேலாளர் ஆகியோரும் கூட்டாகக் கடந்த 25-10-2012 அன்று நேரடியாகச் சென்று, ஆய்வுகளை செய்து அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலை வழியாக பெரிய பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை. இருபுறமும் சாலைகள் அரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையால் அந்தப் பேருந்துகளை தற்போது இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே சிறிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று விரைவில் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

மீன்பிடி துறைமுகம்

***7712—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவர் பகுதியில் சிறு மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவர் கிராமத்தில் 362 மீனவர்

2012 நவம்பர் 2]

குடும்பங்கள் உள்ளன. வெள்ளப்பள்ளம் மீனவர் கிராமத்தில் வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய 220 கண்ணாடி நார் இழைப் படகுகளும் 2 விசைப்படகுகள் மட்டுமே உள்ளன. இவற்றில் கண்ணாடி நார் இழைப் படகுகள் வெள்ளப்பள்ளத்திலிருந்தே மீன்பிடித் தொழில்கள் செய்து வருகின்றன. விசைப்படகுகள் புதுக்கோட்டை மாவட்ட கடற்பகுதியிலிருந்து மீன்பிடிப்பை மேற்கொண்டு வருகின்றன. அங்கு மீனவ மக்கள்தொகை சுமார் 1,500 ஆகும். வெள்ளப்பள்ளம் மீனவர் பகுதியில் மீன்பிடி துறைமுகம் அமைப்பது தொடர்பான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி திட்ட மதிப்பீடு தயார் செய்து, அரசின் அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பணியைத் துவங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: எல்லாத் தரப்பு மக்களுக்கும், அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுத்து, எல்லோருடைய இதயங்களிலும் வீற்றிருக்கும் எங்கள் தாயே! இதய தெய்வம், தங்கத் தாரகை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.

வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வெள்ளப்பள்ளம் ஊராட்சி, வானவன்மாதேவி மீனவர் கிராமம், வெள்ளப்பள்ளம் மீனவர் கிராம கடற்கரைப் பகுதிகளில் ஜூலை மாதம் முதல் நவம்பர் மாதம் வரை சகதியுடன்கூடிய களிமண் கரை ஒதுங்குவதால், மீன்பிடி தொழில் செய்துவரும் மீனவர்களின் fibre படகுகளும், 300-க்கும் மேல் விசைப் படகுகளும் கடலிலிருந்து கரைக்கும், கரையிலிருந்து கடலுக்கும் செல்ல முடியாமல் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, மீன்பிடித் தொழில் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மீனவ மக்களின் வாழ்வில் ஒளியேற்றி, மீனவர்களின் கலங்கரைவிளக்கமாக விளங்குகின்ற இதய தெய்வம்,

[2012 நவம்பர் 2

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கருணைகூர்ந்து, அருள்கூர்ந்து இப்பகுதி மீனவ மக்களின் வாழ்வில் ஒளி வீசிட, இப்பகுதி கடற்கரையில் சிறு துறைமுகம் ஒன்றை அமைத்திடுமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பிக்கின்றேன் தாயே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில், சேறானது வெள்ளப்பள்ளம், விழுந்தமாவடி, வானவன்மாதேவி ஆகிய கிராமங்களில் கரை சேருகிறது. குளிர் காலத்தில் சேறு தானாகவே கரைந்துவிடுகிறது. சேறு எங்கிருந்து இங்கு வந்து கரைசேருகிறது என்பதை நன்கு ஆராய்ந்து, ஆய்வு மேற்கொள்ளப்படும். விழுந்தமாவடி, வானவன்மாதேவி, வெள்ளப்பள்ளம், புஷ்பவனம் ஆகிய கிராமங்களில் அவர்கள் மீன்பிடி தொழில் செய்வதற்கு தகுந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

28—

உள் விளையாட்டு அரங்கம்

***5707—திரு. சு. ரவி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க இடவசதி உள்ளதால், உள் விளையாட்டு அரங்கம் சட்டமன்ற உறுப்பினர்/நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒட்டுமொத்த இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், இளைஞர்களின் உள்ளங்களில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்துகொண்டு, வருங்காலத்தில் இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த இளைஞர்களின் எதிர்காலமாய்த் திகழப்போகும் மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தமிழகத்திலுள்ள இளைஞர்கள் விளையாட்டுகளில் அதிக அளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில், விருதுகள், ஊக்கத் தொகைகள், பயிற்சி உதவித் தொகைகள் வழங்க அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எங்கள் அரக்கோணம் தொகுதியைச் சேர்ந்த நகர, கிராமப்புற இளைஞர்கள், அரக்கோணம் நகரில் ஒரு பல்பயன்பாட்டு உள் விளையாட்டு அரங்கம் வேண்டுமென நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஆனால், மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வழிவகை உள்ளதாகக் கூறப்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 2

எங்கள் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மாவட்டத் தலைநகரமான வேலூருக்குச் செல்ல வேண்டுமென்றால், 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும். இதனால் இளைஞர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இளைஞர்களின்மீது மிகுந்த அக்கறை கொண்ட அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 80 கிலோ மீட்டர் என்ற நீண்ட தூரத்தைத் கருத்திற்கொண்டு, எனது தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் நகரில் பல்பயன்பாட்டு உள் விளையாட்டு அரங்கம் ஒன்றை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலேயே தமிழ்நாட்டில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு விளையாட்டுத் துறையில் சிறப்பான அறிவிப்பையெல்லாம் அறிவித்திருக்கின்ற இந்த நல்ல நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு விளையாட்டு அரங்கமும், ஒரு உள் விளையாட்டு அரங்கமும், நீச்சல் குளமும் அமைக்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் குறிக்கோளாகும். அந்த அடிப்படையில், எல்லா மாவட்டத் தலைநகரத்திலும் இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு, படிப்படியாக அந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளிலும், ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் நிலை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றவில்லையெனில், 70 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்கென்று பைக்கா திட்டமும் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே மைதானம் அமைப்பதற்கு 5 இலட்சம் ரூபாயும், விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு 1¼ இலட்சம் ரூபாயும் வழங்கும் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவோடு மாண்புமிகு

2012 நவம்பர் 2]

உறுப்பினரின் கோரிக்கையை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

மாணவர் விடுதி

***13036—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் சிறுபான்மையினர் மாணவர்களுக்கு விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாளைய பாரதத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருக்கும் மனித நேயம் மிக்க மாணிக்கத் தலைவி, தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வராக விளங்கும் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 3 ஆம் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஒரு வார காலத்திற்குள் தமிழகத்தில் 56 விடுதிகளை அமைத்து, அதிலும் சிறுபான்மையினருக்காக 6 பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளுக்காக விடுதிகளை அமைத்து சாதனை புரிந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதியில் சிறுபான்மையின மாணவர்களுக்காக சிறுபான்மையினர் நல விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்திலே சிறுபான்மையினர் நடத்தக்கூடிய கல்லூரி இருக்கின்றது. அங்கே 1,600 மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்குள்ள பேர்ணாம்பட்டு நகரத்திலிருந்தும், குடியாத்தம் நகரத்திலிருந்தும், பள்ளிகொண்டா பகுதியிலிருந்தும் மாணவர்கள் அந்தக் கல்லூரிக்கு வந்து படிக்கின்றார்கள். அங்கே நீண்ட நாட்களாக சிறுபான்மையினர் மாணவர் விடுதி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள். கல்லூரி நிருவாகத்தின் சார்பிலும் என்னிடம் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாணவர் விடுதி கட்டுவதற்காக ஆம்பூர் முஸ்லீம் கல்விச் சங்கம் இடம் அளிப்பதற்கும் தயாராக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, ஆம்பூர் தொகுதியிலே சிறுபான்மையினர் மாணவர் விடுதி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்த இடத்தில் ஆய்வு செய்து, அங்கு உண்மையிலேயே விடுதி தேவைப்படும் என்றால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையுடன் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

2012 நவம்பர் 2]

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டிக்கு அருகிலே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கலைக் கல்லூரி இருக்கிறது. அதற்கு அருகிலே கருமாத்தூரில் அருளானந்தர் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிகள் இரு பாலரும் படிக்கின்ற கல்லூரிகள். அங்கு அரசினர் விடுதி பெண்களுக்கு இல்லை. உசிலம்பட்டியில் கள்ளர் சீரமைப்புத் துறையின் சார்பிலே, 100 மாணவிகள் தங்கிப் படிக்கக்கூடிய அளவிலே, ஒரு பெண்கள் கல்லூரி விடுதி அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சிறுபான்மையினருக்கு நிறைய திட்டங்களையும், பொறியியல் கல்லூரிகளையும், செவிலியர் கல்லூரிகளையும் அமைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடத்தில் விடுதி தேவைப்பட்டால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 5, 6 மற்றும் 7)@

• பட்டியல் 5

1—

பணியிடங்கள்

வினா எண் 5629—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்தில் கருவூலத் துறையின்கீழ் காலியாக உள்ள 46 பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் கருவூலக் கணக்குத் துறையின்கீழ் காலியாக உள்ள பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பதவி உயர்வு மூலம் நிரப்பிட அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2—

அரசு கருவூலம்

வினா எண் 14746—திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சியில் புதியதாக அரசு கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம் என்ற அடிப்படையில், கருவூல அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மொடக்குறிச்சி, வருவாய் வட்டத் தலைமையிடம் இல்லை. மேலும், மொடக்குறிச்சியில் சார் கருவூலம் ஏற்படுத்தும் அளவிற்கு கருவூலப் பணி பளுவும் இல்லை. எனவே, மொடக்குறிச்சியில் புதிய சார்நிலைக் கருவூலம் அமைப்பது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

குடும்பப் பாதுகாப்பு நிதி

வினா எண் 16172—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ் இறந்த ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபாயை, 50 ஆயிரமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1997 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூ.70/-வீதம் பிடித்தம் செய்யப்பட்டு, ஓய்வூதியதாரர் இறக்கும் நேர்வில், அவரது வாழ்க்கைத் துணைக்கு (அல்லது) அவரால் நியமனம் செய்யப்பட்டவருக்கு (அல்லது) அவரது வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000/- வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.25,000/-ஐ ரூ.35,000/- ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், உடனடியாக இத்தொகையை ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்கும் நிலை எழாது.

4—

மருத்துவ உதவித் தொகை

வினா எண் 16173—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஓய்வூதியம் பெறுவோர் மருத்துவ நல நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகையை, ரூ.1.50 இலட்சமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1995 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் தமிழ்நாடு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித் திட்டத்தின்கீழ் ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூ. 150/-வீதம் மாத சந்தாத் தொகையாகப் பிடித்தம் செய்யப்பட்டு ஓய்வூதியதாரர் / அவரது வாழ்க்கைத் துணை இருவருக்குமான உச்சவரம்புத் தொகை ரூ.1,00,000/-ற்குட்பட்டு, அவர்கள் மேற்கொள்ளும் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை / சிகிச்சைகளுக்கு செலவு செய்த தொகையில் 75% அல்லது ரூ.1,00,000/-, இவற்றில் எது குறைவோ

அத்தொகையை மீளப் பெறலாம். குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் செப்டம்பர், 2009 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு, அவர்களது விருப்பத்தின் பேரில், இத்திட்டத்தின்கீழ் ரூ. 100/- சந்தாத் தொகை செலுத்தி, அவர்கள் மேற்கொள்ளும் குறிப்பிட்ட சிகிச்சை / அறுவை சிகிச்சைகளுக்கு செலவு செய்த தொகையில், 75% அல்லது ரூ.1,00,000/-, இவற்றில் எது குறைவோ அத்தொகையை மீளப் பெற ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஏராளமான ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயனடைந்து வருவதால், ஓய்வூதியதாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சந்தாத் தொகை, மீள வழங்கப்படும் தொகையை ஈடு செய்ய போதுமானதாக இல்லாத நிலையில், அவ்வப்போது அரசால் இத்திட்டத்திற்கு மானியமும் வழங்கப்படுகிறது. இதுவரை, திட்டம் தொடங்கியதிலிருந்து நாளது தேதிவரை, இத்திட்டத்திற்கு அரசால் ரூ.111.50 கோடி கூடுதல் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு ஓய்வூதியதாரர் மருத்துவ நல நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகையை ரூ.1.50 இலட்சமாக உயர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

கணக்கு எண்கள்

வினா எண் 16175—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்மூலம் தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப் பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்கு எண்கள் வழங்கும் பணியை தேனி மற்றும் திருநெல்வேலி தவிர இதர மாவட்டங்களிலும் முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (சஉதி.2) துறை, நாள் 19-04-2010-ன்படி சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள்

2012 நவம்பர் 2]

வளர்ச்சித் திட்ட மையங்களில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர், அங்கன்வாடி பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் ஆகிய அனைவருக்கும் 01-04-2010 முதல் "தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி" எனும் திட்டத்தை அமல்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது. அதற்கிணங்க, அனைத்து மாவட்டப் பணியாளர்களுக்கும், பொது வைப்பு நிதி கணக்கு எண்கள் வழங்கும்பொருட்டு, விண்ணப்பங்கள் தொலைப்பதிவு (online) மூலம் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பதியப்பட்டு வருகிறது. இப்பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6—

தனி வட்டம்

வினா எண் 6031—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், துணை வட்டம் பரங்கிப்பேட்டையைத் தனி வட்டமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டை துணை வட்டத்தை புதிய வட்டமாக அமைக்க வாய்ப்பில்லை. ஏனெனில், உத்தேசிக்கப்படும் பரங்கிப்பேட்டை துணை வட்டம், அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல்களான, குறைந்தபட்ச பரப்பளவு, மக்கள் தொகை, வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை நிறைவுசெய்யவில்லை, ஆகையால், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலுள்ள பரங்கிப்பேட்டை துணை வட்டம் தற்போது வட்டமாக அமைய வழிவகை ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

[2012 நவம்பர் 2

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 3836—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், அடங்கார்குளம் ஊராட்சி, ஊரல்வாய்மொழி ஊரில் குடிநீர் சீராக வழங்கிட கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், அடங்கார்குளம் ஊராட்சியைச் சார்ந்த ஊரல்வாய்மொழி குடியிருப்பின் மக்கட்தொகை 2006 மறு ஆய்வின்படி 734 ஆகும். இக்குடியிருப்பில் 2000 ஆம் ஆண்டு வாரியத்தால் அமைக்கப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வாரிய விதிமுறைகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட திசையன்விளை, நாங்குநேரி பேரூராட்சிகள் மற்றும் 297 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திலும் இக்குடியிருப்பு பயன்பெற உள்ளது.

8—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 9045—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், விஜயாபதி ஊராட்சி, ஆவுடையார்புரத்திற்கு தாமிரபரணி குடிநீரை சீராக வழங்கிட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், விஜயாபதி ஊராட்சி, ஆவுடையார்புரம் குடியிருப்பின் மக்கள் தொகை 2006 ஆம் ஆண்டு மறு ஆய்வின்படி 900 ஆகும். இக்குடியிருப்பிற்கு ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய ஒரு தனி மின்விசைத் திட்டம் இயங்கி வருகிறது. தற்போது இத்திட்டம் ஊராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மேலும், சுனாமி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் தினமும் 40,800 லிட்டர் குடிநீர் நங்குநேரி திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் விஜயாபதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 15,000 லிட்டர் தரைமட்ட தொட்டியிலிருந்து ஆவுடையார்புரத்திற்கு தனியாக மின்மோட்டார் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, வாரிய விதிமுறைகளின்படி கூடுதலாக தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 9502—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூர் பேரூராட்சி, 8-வது வார்டில் சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 8-வது வார்டில் 3 கையிறைப்பான்கள், 3 சிறு மின்விசை இறைப்பான்கள் மற்றும் 4 காவேரி பொதுக் குடிநீர்க் குழாய்கள் உள்ளன. மேற்படி பகுதியில், போதுமான அளவிற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. வறட்சிக் காலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும்பொருட்டு மேற்படி நல்ல நீர்ப் பிடிப்பு உள்ள கையிறைப்பான் ஒன்றில் சிறு மின்விசை இறைப்பான் அமைக்க, வரும் 2012-2013ஆம் ஆம்ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

குடிநீர் வசதி

வினா எண் 9811—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சி, கீழாயூர் காலனியிலுள்ள பசுமை நகருக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட கீழாயூர் காலனி, பசுமை நகரில் உள்ள குடியிருப்புகளடங்கிய பகுதி, அரசு புறம்போக்கு நிலம் என்பதால் வருவாய்த் துறையில் பட்டா வழங்கப்பட்டு, அதன்பின், வழங்கப்பட்ட பட்டாக்களும் ரத்து செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி குடியிருப்புகளுக்கு பேரூராட்சியால் வரிவிதிப்புகளும் மேற்கொள்ளப்படாததால் தற்போது அங்கு குடிநீர் வசதி செய்து தர இயலாது.

2012 நவம்பர் 2]

11—

குடிநீர் வசதி

வினா எண் 9812—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சி, விஜயேந்திரர் தெருவில் உள்ள சின்டெக்ஸ் தொட்டியை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்து, குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி பேரூராட்சி, விஜயேந்திரர் தெருவில் உள்ள சின்டெக்ஸ் தொட்டிக்கான ஆழ்துளைக் கிணற்றின் பழுதான மின்மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

12—

குடிநீர் வசதி

வினா எண் 10099—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூர் பேரூராட்சி, 9-வது வார்டு பகுதியில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இலுப்பூர் பேரூராட்சியின்

[2012 நவம்பர் 2

தற்போதைய மக்கட்தொகை 13,595 ஆகும். இப்பேரூராட்சிக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் மொத்தம் வழங்க வேண்டிய குடிநீரின் அளவு 9.52 இலட்சம் லிட்டர்கள் ஆகும். புதுக்கோட்டை நகராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து இப்பேரூராட்சிக்கு 9.50 இலட்சம் லிட்டர் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இலுப்பூர் பேரூராட்சியில் 3.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூன்றும் (3 எண்ணம்) உள்ளது. இப்பேரூராட்சிக்கு உட்பட்ட 9-வது வார்டில், வண்ணாரத் தெரு, வடுகன் தெரு 4, வடுகன் தெரு 3 ஆகிய பகுதிகள் உள்ளன. இந்த வார்டில், தற்போதைய மக்கட்தொகை 751 ஆகும். 9-வது வார்டு பகுதிக்கு 3.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தற்சமயம் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 9-வது வார்டுக்கு குடிநீர் வசதி செய்ய வேண்டிய அவசியம் எழுவில்லை.

13—

குடிநீர்த் தொட்டி

வினா எண் 10151—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குஞ்சாம்பாளையம் அருந்ததியர் தெருவிற்கு சிறிய குடிநீர்த் தொட்டி, கழிவு நீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குஞ்சாம்பாளையம் அருந்ததியர் தெரு, அரசிராமணி பேரூராட்சியின் 1-வது வார்டு பகுதியாகும். இப்பகுதியில் சுமார் 320 பேர் வசிக்கின்றனர். இப்பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு

2012 நவம்பர் 2]

கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2011-12 ஆம் ஆண்டில் IUDM திட்டத்தின்கீழ் வடிகால் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

14—

கொசு ஒழிப்பு

வினா எண் 10299—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து பேரூராட்சிகளிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலத்திலுள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் கழிவுநீர் வடிகால்கள் தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டும், தண்ணீர் தேங்காத வண்ணம் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டும், கொசு ஒழிப்பு மருந்துகள், பயன்படுத்தப்பட்டும் பொதுச் சுகாதாரம் பேணப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

15—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 10768—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கட்டக்குடி ஊராட்சி, கட்டக்குடியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, கட்டக்குடி என்பது மறு ஆய்வின்படி தனிக் குடியிருப்பாக இல்லை. இப்பகுதி கட்டக்குடி ஆதி திராவிடர் காலனியின் ஒரு பகுதியாகும். கட்டக்குடி ஆதி திராவிடர் காலனியின் மக்கட்தொகைக்கேற்ப 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, வாரிய ஊரகக் குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி, இப்பகுதிக்குக் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

பராமரிப்பு

வினா எண் 15657—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, நெருங்குளாக்குளம் புதுக்காலனி பழைய வீடுகளை பழுது நீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2012 நவம்பர் 2]

17—

பராமரிப்பு

வினா எண் 15658—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி ஊராட்சி, நீர்பழனி மற்றும் காரப்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

18—

பராமரிப்பு

வினா எண் 15659—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி ஊராட்சி, நீர்பழனி ஆதி திராவிடர் காலனியில் உள்ள வீடுகளைப் பழுது நீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம்

[2012 நவம்பர் 2

10 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

19—

பராமரிப்பு

வினா எண் 15660—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், வெம்மணி ஊராட்சி, வெம்மணி, நரியப்பட்டி ஆதி திராவிடர் காலனி வீடுகளையும் மற்றும் நரியப்பட்டி வடக்கு காலனி வீடுகளையும் பழுது நீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

20—

பராமரிப்பு

வினா எண் 15662—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், மதியநல்லூர் ஊராட்சி, மதியநல்லூர் ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பழுது நீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

21—

மராமத்து

வினா எண் 15663—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், கத்தலூர் ஊராட்சி, கத்தலூர் ஆதி திராவிடர் காலனி வீடுகளை மராமத்து செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

22—

பராமரிப்பு

வினா எண் 16303—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், புல்வயல் ஊராட்சி, நெரிஞ்சிப்பட்டி காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

23—

சீரமைத்தல்

வினா எண் 18250—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி மற்றும் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2012 நவம்பர் 2]

24—

புதுப்பித்தல்

வினா எண் 20800—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளாளர் ஊராட்சி, காளிக்கவுண்டனூரில் அன்னை இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகளைப் புதுப்பித்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசுத் திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

25—

பழுதுபார்த்தல்

வினா எண் 21286—டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, விருதுநகர் ஒன்றியம், மெட்டுக்குண்டு, கடம்பன்குளம், நக்கலக்கோட்டை ஆகிய ஊராட்சிகளிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்பு வீடுகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து

[2012 நவம்பர் 2

வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

26—

பொறியியல் கல்லூரி

வினா எண் 11430—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய அரசு பொறியியல் கல்லூரி துவக்கும் திட்டத்தின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், மேலசொக்கநாதபுரத்தில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க, அரசாணை (நிலை) எண் 37, உயர் கல்வி (ஜே2) துறை, நாள்: 22-3-2012 இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

27—

பொறியியல் கல்லூரி

வினா எண் 11458—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் புதிய அரசு பொறியியல் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 37, உயர் கல்வி (ஜே2) துறை, நாள்: 22-3-2012-ன்படி தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம்,

2012 நவம்பர் 2]

மேலசொக்கநாதபுரத்தில் ஒரு புதிய அரசு பொறியியல் கல்லூரி துவங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

28—

இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகம்

வினா எண் 11723—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதியில் இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

ஸ்ரீரங்கத்தில் இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகம் IIIT அமைப்பது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 4, உயர் கல்வி (ஜே1) துறை, நாள் 6-1-2012-ல் அரசுச் செயலாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் தொழில்புரிபவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில வழிகாட்டுக் குழு (State Steering Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவானது தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தலைமையில் துணை மாநில வழிகாட்டுக் குழு (Sub State Steering Committee) ஒன்றினை அமைத்து தொழில் துறையில் உள்ள நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் பங்களிப்புடன் இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகம் அமைப்பது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2-5-2012 அன்று அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் இரண்டாவது மாநில வழிகாட்டுக் குழுக் கூட்டம் (State Steering Committee) இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகம் அமைப்பது தொடர்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் சில தொழில் துறை நிறுவனங்கள் இதில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளன. தொழில் துறை நிறுவனங்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து கடிதம் கொடுத்தவுடன், இந்தியத் தகவல் தொழில்நுட்ப மையம் அமைப்பதற்கான பணிகள் முழு வீச்சில் தொடங்கப்படும்.

[2012 நவம்பர் 2

29—

பத்திரப் பதிவு

வினா எண் 941—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் 2006-2011 வரை பதிவு செய்துள்ள பத்திரப் பதிவுகளை ஆய்வு செய்து, போலிப் பதிவுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் 2006-2011 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் போலியான ஆவணப் பதிவுகள் ஏதும் கண்டறியப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

30—

கணினி பயிற்சி

வினா எண் 3044—திரு. க. பீர்ராவுத்தர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப் பதிவுத் துறையில் பணியில் சேருவதற்கு முன்பு பயிற்சியின்போது கணினி பயிற்சியும் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இருப்பினும், நேரடி நியமன மற்றும் கருணை அடிப்படை இளநிலை உதவியாளர்களுக்கு பணியில் சேர்ந்தபின் பதிவுத் துறை பயிற்சி நிலையத்தில் கணினிப் பயிற்சி வழங்கப்படுகிறது. நேரடி நியமன சார்பதிவாளர்கள் பணியில் சேர்ந்து ஓராண்டுக் காலம் பயிற்சி சார்பதிவாளர்களாக இருக்கும்பொழுது, பதிவுத் துறை நிலையாணை 15(9)-ல் குறிப்பிடப்பட்ட பயிற்சி கால அட்டவணையில் வரிசை எண். 3-ல் Institutional Training, Chennai மூலம் பதிவுத் துறை சார்ந்த கணினி பயன்பாடு குறித்த 2 வார காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வுமூலம் 2 ஆம் நிலை சார்பதிவாளராக நியமனம் பெற்றவர்களுக்கு அவர்கள் 53 வயது நிறைவடையாத பட்சத்தில் "அண்ணா மேலாண்மை நிலையத்தில்" 2 வார கால கணினி பயிற்சி வழங்கப்படுகிறது.

31—

மதிப்புக் கூட்டு வரி

வினா எண் 9040—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண் சாதனங்கள், தெளிப்பான்கள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்ற வேளாண்மை தொடர்புடைய பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரி நீக்கப்பட்டதைப் போல பஞ்சகவ்யா, மூலிகை பூச்சிவிரட்டி, இயற்கை உரங்கள், மண்புழு உரங்கள் ஆகியவற்றிற்கும் மதிப்புக் கூட்டு வரியை நீக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பஞ்சகவ்யா என்பது கால்நடைகளின் (ஆடு, மாடு, எருமை) சிறுநீரினை மூலப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படுவது. இது ஒரு வகை வேளாண்மை நோக்கத்திற்கான பாக்டீரியா வளர்ப்பாகும். இத்துடன் இயற்கை உரங்கள் மற்றும் மண்புழு உரங்கள் ஆகியவற்றிற்கு 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் அட்டவணை IV பகுதி B, வரிசை எண் 7-ல் வேளாண்மை நோக்கத்திற்கான பாக்டீரியா வளர்ப்பு, இயற்கை உரங்கள் (Organic Manure) என்ற பெயரில் ஏற்கெனவே வரிவிலக்களிக்கப்பட்டுள்ளன. மேலும், புழுபூச்சிக் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள், பூஞ்சனக் கொல்லிகள், மூலிகைக் கொல்லிகள் மற்றும் அதன் கலவைகள், பூச்சி விரட்டிச் சுருள்கள், வில்லைகள், திரவங்கள் இவற்றுடன் தாவர வளர்ச்சி சீராக்கிகள், தாவர ஊட்டச் சத்துக்கள், தாவர உரங்கள், நோய் எதிர்ப்பான்கள் மற்றும் அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம் போன்றவற்றின் மீதான மதிப்புக் கூட்டு வரியை 12-07-2011 முதல் நீக்கி அரசாணை (நிலை) எண் 76, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 11-07-2011-ல் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

32—

பயிற்சி

வினா எண் 9159— திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மேலாண்மை நிலையத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் நாளது வரை எத்தனை அணிகளில் எத்தனை 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) நிர்ணயித்த இலக்கான 22 அணிகளில் 856 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) அண்ணா மேலாண்மை நிலைய பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையத்தில் 2011-2012 நிதியாண்டில் 'அ' பிரிவு அலுவலர்களுக்கு ஆறு அணிகளிலும், 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு 16 அணிகளிலும் ஆக 22 அணிகளில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டது. இவற்றுடன் நேரடி நியமன காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் சிறப்பு அணியுடன் சேர்த்து 23 அணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 22 அணிகளுக்கும் கூடுதலாக, 'அ' பிரிவு அலுவலர்களில் ஒரு சிறப்பு அணிக்கும் பயிற்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. நிர்ணயித்த இலக்கான 856+24 அலுவலர்களுக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் வழியாக அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டு சில துறைகளில் நிருவாகக் காரணங்களை முன்னிட்டு கோரப்பட்ட எண்ணிக்கையில் பயிற்சியாளர்கள் அனுப்பி வைக்கப்படாத காரணத்தால், 758 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

33—

நவின கருவிகள்

வினா எண் 9161—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு நவீன கருவிகள் வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் நிதியுதவியின்கீழ் தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் இதுவரை வாங்கிய நவீன கருவிகளின் விவரம்:

1.	மடிக் கணினிகள்	-	8 எண்ணிக்கை
2.	கணினிகள்	-	34 எண்ணிக்கை
3.	லேசர் பிரிண்டர்	-	13 எண்ணிக்கை
4.	ஒளிநகல் இயந்திரம்	-	2 எண்ணிக்கை
5.	பிரான்கிங் இயந்திரம்	-	1 எண்ணிக்கை
6.	டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள்	-	2 எண்ணிக்கை
7.	1 KVA யுபிஎஸ்	-	1 எண்ணிக்கை
8.	வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்	-	8 எண்ணிக்கை

எனவே, தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு தற்போது நவீன கருவிகள் வாங்குவது குறித்து அரசிடம் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

34—

கம்பி வேலி

வினா எண் 4974—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கருத்தாலகுறிச்சி, நைனார்பாளையம், செம்பாகுறிச்சி, கருங்குழி, ஈரியூர், கீழ்நாரியப்பனூர், எஸ்.ஓகையூர், ஈயனூர், வேளாக்குறிச்சி வாஞ்சரம், அசகளத்தூர், கூத்தகுடி காச்சக்கூடி, எரஞ்சி ஆகிய பகுதிகளில் வன விலங்குகளிடமிருந்து பொது மக்களைப் பாதுகாக்க கம்பி வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கருத்தாலகுறிச்சி, நைனார்பாளையம், செம்பாகுறிச்சி, கருங்குழி, ஈரியூர், கீழ்நாரியப்பனூர், எஸ்.ஓகையூர், ஈயனூர், வேளாக்குறிச்சி, வாஞ்சரம், அசகளத்தூர், கூத்தகுடி காச்சக்கூடி, எரஞ்சி ஆகிய கிராமங்கள் விழுப்புரம் வன மண்டலத்தைச் சார்ந்த விழுப்புரம் வனக்கோட்டத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் வருகின்ற கிராமங்களாகும். இக்கிராமங்கள் அனைத்திலுமுள்ள சிருஷ்ணபுரம், தோட்டப்பாடி, வாஞ்சரம், மகனூர், கூத்தகுடி ஆகிய காப்புக் காடுகளில் உள்ள வன உயிரினங்களுக்கும், பொது மக்களுக்கும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு 2012-2013 ஆம் நிதியாண்டில் மேற்கண்ட காப்புக் காடுகளைச் சுற்றிலும் சோலார் மின்வேலி அமைக்கும் திட்டம் முழுமையான அளவில் கருத்துரு பெற்று Integrated Development of Wildlife Habitat என்ற திட்டத்தின்கீழ் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

35—

ஆலை

வினா எண் 6042—திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, தெக்குப்பட்டில் மூடப்பட்டுள்ள சந்தன எண்ணெய் ஆலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சந்தன எண்ணெயின் உற்பத்தி விலை நாளுக்கு நாள் அதிகரித்ததாலும், வனத் துறையில் சந்தனக் கட்டையின் இருப்பும் குறைந்ததாலும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் சந்தன எண்ணெய் தேவை குறைவினாலும், தனியார் நிறுவனங்களோடு போட்டியிட முடியாத நிலை உருவானது. சந்தன

[2012 நவம்பர் 2

எண்ணெயின் வியாபாரச் சந்தையானது விற்பனை வியாபாரிகளின் சந்தை என்பதால். பணம் முடக்கப்படுவதைத் தடுக்க, தேவையைப் பொறுத்தே உற்பத்தி செய்யப்பட்டதால் சந்தன எண்ணெய் உற்பத்தி மற்றும் விற்பனை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வந்தது. இக்காரணங்களால் தெக்குப்பட்டு சந்தனப் பொருட்கள் தொழிற்சாலை, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் தொடர்ந்து நடத்த இயலாத சூழ்நிலையில்தான் இத்தொழிற்சாலை மூடப்பட்டது. இந்நிலையில், இத்தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

36—

பொருட்கள் வழங்குதல்

வினா எண் 7410—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் தொழிற்கூடத்தில் பால்வடிப்பு, களப்பணி வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு சீருடை, காலணி மற்றும் இதர பொருட்களை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிற்கூடத் தொழிலாளர்களுக்கு மட்டும் சீருடை, ரப்பர் காலணிகள், எண்ணெய் மற்றும் சோப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தொழிலாளர்கள் இயந்திரத்தில் பணி புரிவதால் பாதுகாப்பு நலன் கருதி தொழிற்கூடச் சட்டத்தின்கீழ் இப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. மேலும் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் 1951-ன்படி இதர தோட்டத் தொழிலாளர்களுக்கு சீருடை, காலணி மற்றும் இதர பொருட்கள் வழங்குவதற்கு வழிவகை ஏதுமில்லை. விதிகளின்படி உள்ள போர்வை, குடை போன்ற இதர பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2012 நவம்பர் 2]

37—

தொகை

வினா எண் 7411—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களின் தினசரி ஊதியத்தில் பிடித்தம் செய்து வரும் தொகையை அரசு ரப்பர் கழக நிருவாகம் தொழிலாளர்களிடம் திருப்பிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரிந்து வரும் பால்வடிப்பு தொழிலாளர்கள், பணிவீத சம்பளத் தொழிலாளர்கள் ஆவர். இவர்களுக்கு இதர காலவீத சம்பளத் தொழிலாளர்களைப் போல் எட்டு மணி நேர வேலை கிடையாது. அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரிந்து வரும் பால்வடிப்பு தொழிலாளர்களுக்கு உற்பத்தியோடு இணைந்த சம்பளம்தான் ஆரம்பம் முதல் பல காலமாக வழங்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் ரப்பர் தோட்டங்களிலும், கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலும், இதே நடைமுறைதான் உள்ளது. அரசு ரப்பர் கழகத்தில் 4-வது கிரேடில் நிர்ணயிக்கப்பட்ட பணி ஒதுக்கீட்டில் பணி செய்யும் பால்வடிப்புத் தொழிலாளி நிர்ணயிக்கப்பட்ட 8 கிலோவுக்கு மேல் ஒப்படைக்கும் ஒவ்வொரு கிலோ பாலுக்கும் ரூ.5/-ம், ஓட்டுக்கறைக்கு ரூ.150-ம் தரமேல் சம்பளம் வழங்கப்படுவது போல் தரவேலைப் பளுவுக்கு (8 கிலோவுக்கு) குறைவாக உற்பத்தி ஒப்படைக்கும் தொழிலாளர்களிடம் அதற்கான குறைவு செய்யப்படுகிறது. இது சம்பளப் பிடித்தம் ஆகாது. எனவே, இதனைத் திருப்பிக் கொடுக்க இயலாது. இந்த நடைமுறையை மாற்றும்பட்சத்தில் ரப்பர் உற்பத்தி மிகவும் பாதிக்கும் என்பதால் தற்போதைய நடைமுறையில் மாற்றம் செய்ய வழிவகையில்லை.

[2012 நவம்பர் 2

38—

தடுத்தல்

வினா எண் 14354—திரு. ரா.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, காமக்கூரில் குரங்கு தொல்லைகளால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் வன மண்டலம், திருவண்ணாமலை வனக்கோட்டம், ஆரணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காமக்கூர் கிராமத்தில் குரங்குகளால் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளதாக இதுவரை அக்கிராம மக்களிடமிருந்து எவ்விதமான புகாரும் வனத் துறையில் பெறப்படவில்லை. எனினும், இதுகுறித்து சம்பந்தப்பட்ட காமக்கூர் கிராமத்திற்கு ஆரணி வனச்சரக அலுவலரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அங்கு குடியிருப்புப் பகுதிகளில் சுமார் 50 குரங்குகள் உள்ளதாகவும், அக்குரங்குகளால் இதுவரை எவ்வித பயிர் சேதாரமும் ஏற்படவில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

தற்சமயம் காமக்கூர் கிராமத்தில் விவசாயப் பயிர்களுக்கு குரங்குகளால் எவ்விதமான சேதாரமும் இல்லாத நிலையில், குரங்குகளை விரட்டும் சூழல் ஏற்படவில்லை. எனினும், குரங்குகளால் தொல்லை ஏற்படும்பட்சத்தில் உடனடியாக ஆரணி வனச்சரக அலுவலர் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அக்கிராம பகுதிகளுக்கு உரிய வனப் பணியாளர்களால் தினந்தோறும் சென்று குரங்குகளால் மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாதவாறு கண்காணித்து வரப்படுகிறது.

39—

அரசுத் துறை

வினா எண் 14489—திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) அரசு ரப்பர் தோட்டக் கழகம், டாப்கான் மற்றும் அரசு தேயிலை தோட்டக் கழகம் மூன்றையும் ஒன்றாக இணைத்து அரசுத் துறையாக நடத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஆகிய மூன்று பொதுத் துறை நிறுவனங்களையும் ஒன்றாக இணைத்து அரசுத் துறையாக நடத்துவதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

பாதுகாப்பு

வினா எண் 14711—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்ட காடுகளில் விலங்குகள் அதிகமுள்ள அபாயகரமான பகுதிகளில் தகவல் பலகை, சைகை விளக்கு மூலமாக அறிவிப்பு செய்து பாதுகாப்பு ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி கோட்டத்திலுள்ள வனப்பகுதிகளில் விலங்குகள் அதிகமாக உள்ள பகுதிகளில் தகவல் பலகைகள் ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ளன. 2005-2006, 2007-2008, 2008-2009, 2009-2010, 2010-2011 ஆகிய வருடங்களில் கன்னியாகுமரி வன உயிரின சரணாலயத் திட்டத்தின்கீழ் கிடைக்கப் பெற்ற நிதியின்கீழ் தகவல் விளம்பரப் பலகைகள் அமைக்கப்பட்டு ரூ.3,25,000/- செலவிடப்பட்டுள்ளது.

[2012 நவம்பர் 2

பூதப்பாண்டி சரகத்தில், திருநெல்வேலி-கன்னியாகுமரி எல்லையில் அமைந்துள்ள மகேந்திரகிரி காப்பு வனத்திற்கு அருகில் தகவல் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. குலசேகரம் சரகத்தில், வீரப்புலி காப்பு வனத்திற்கு அருகில் பேச்சிப்பாறை, சீரோபாயிண்ட், லோயர் கோதையார், குற்றியார் மற்றும் அழகியபாண்டியபுரம் சரகத்தில் வட்டப்பாறை பகுதிகளில் வன விலங்கு அதிகமுள்ள இடங்களில் வன உயிரினங்கள் விவரம் குறித்த அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டிலும் தகவல் பலகைகள் மற்றும் சைகை விளக்குகள் நிறுவ அரசு பரிசீலித்து வருகின்றது.

41—

உயிரியல் சிறுவர் பூங்கா

வினா எண் 15244—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நேத்தப்பாக்கத்தில் அரசுக்குச் சொந்தமான கோழிப்பண்ணை இடத்தில் உயிரியல் சிறுவர் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் ஆரணியிலிருந்து செய்யார் செல்லும் சாலையில் சுமார் 7 கி.மீ. தூரத்தில் நேத்தப்பாக்கம் என்ற கிராமம் உள்ளது. இக்கிராமப் பகுதியில் தமிழ்நாடு கால்நடை துறையால் கோழிப்பண்ணை அமைக்கப்பட்டு அத்துறையின் பொறுப்பில் உள்ளது. இக்கோழிப்பண்ணையானது மேற்கண்ட சாலையின் இருபுறமும் சுமார் 6 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோழிப்பண்ணை தற்சமயம் இயங்காமல் உள்ளது. உயிரியல் சிறுவர் பூங்கா அமைக்கப்பட வேண்டுமெனில் அப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்கும் விடுதிகள், உணவகங்கள், வாகன நிறுத்தத்திற்குத் தேவையான இடங்கள்

2012 நவம்பர் 2]

மற்றும் அலுவலகம், சிறுவர் பூங்கா, வன உயிரினங்கள் வசிப்பதற்கான உயர்தரக் கூண்டுகள் ஆகியவை அமைக்கப்பட வேண்டும். வன உயிரினங்களின் ஆரோக்கியத்திற்குத் தக்கதாய்ப் பராமரிக்க வேண்டும்.

குறு உயிரியல் பூங்கா அமைப்பதற்கு 20 ஹெக்டேர் நிலப்பரப்புக்குக் குறையாமல் இருக்க வேண்டும். 200 வன உயிரினங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். அழிவின் விளம்பில் உள்ள வன உயிரினங்கள் 5-க்கு குறையாமல் இருக்க வேண்டும். குறு உயிரியல் சிறுவர் பூங்காமூலம் ரூ.2,00,000/-க்குக் குறையாமல் வருமானம் வரவேண்டும். ஒரு சிறுவர் பூங்கா அமைக்க வேண்டுமெனில், மைய உயிரியல் குழுமம் (Central Zoo Authority) வழிகாட்டுதல்படி உரிய அனுமதி பெற வேண்டும். ஆரணி ஒன்றியம், நேத்தம்பாக்கத்தில் அரசுக்குச் சொந்தமான கோழிப்பண்ணை 6 ஏக்கர் பரப்பளவுதான் உள்ளது. எனவே, மேற்கண்ட காரணங்களினால் இந்தப் பகுதியில் உயிரியல் சிறுவர் பூங்கா அமைக்க இயலாது.

42—

மயில்களைப் பாதுகாத்தல்

வினா எண் 15835—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய பயிர்கள் அழிவதைத் தடுக்க நஞ்சு வைத்துக் கொல்லப்படும் மயில்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ஈரோடு கோட்டம், பெருந்துறை என்னும் இடத்தில் பட்டா நிலத்தில் 15 மயில்கள் விஷம் வைத்துக் கொல்லப்பட்டன. இது தொடர்பாக பட்டா நிலத்தின் சொந்தக்காரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இது போன்று திருச்சி வனச்சரகத்தில்

[2012 நவம்பர் 2

வடுகம்பட்டி அருகே 2011 ஆம் ஆண்டு 10 மயில்கள் தனியார் பட்டா நிலத்தில் விஷம் வைத்துக் கொல்லப்பட்டுக் கிடந்தன. நிலத்தின் சொந்தக்காரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது.

வன உயிரினச் (பாதுகாப்பு) சட்டம் 1972 பட்டியல் I-ன்கீழ் மயில்கள் இடம் பெற்றுள்ளதாலும், நம் தேசியப் பறவை மயில் என்பதாலும் மயில்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து பொது மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் காட்டினைப் பற்றியும் அதில் வாழும் வன உயிரினங்கள், மரங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் காடுகளை அழிப்பதால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகளையும் வன உயிரினங்கள், பறவைகளின் பாதுகாப்பு மற்றும் அவைகளால் வேளாண்மைக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றியும், அவற்றைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி சுற்றறிக்கை மூலமாக அறிவுரைகளும், அவ்வப்போது விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வன உயிரினங்களால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் இதர வகையான சேதங்கள் குறித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் வனத் துறையின்மூலம் விரைவாகவும், துரிதமாகவும் பரிசீலித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தாமதமின்றி உரிய நிவாரணம் கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

43—

வேட்டையாடப்படுதல்

வினா எண் 16546—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை, சிவகங்கை பகுதிகளில் வெளிநாட்டுப் பறவைகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை, சிவகங்கை பகுதிகளில் வெளிநாட்டுப் பறவைகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க, வன

2012 நவம்பர் 2]

உயிரினச் சட்டம்மூலம் வழக்குகள் பதிவு செய்து வேட்டையாடுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வேட்டையாடுவதைத் தடுக்க ஊர் பொதுமக்கள், கிராம வனக் குழு, வேட்டைத் தடுப்பு காவலர், மற்றும் வனத் துறை களப்பணியாளர்களைக் கொண்டு புலனாய்வுக் குழுக்கள் அமைத்து வேட்டையாடுவதை முன்கூட்டியே தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வனத் துறைமூலம், பறவைகள் வேட்டையாடுதல் கூடாது என்பது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த விளக்கக் கூட்டங்கள், பிரசுரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் நடமாடும் இடங்கள், பேருந்து நிலையம் மற்றும் சாலை ஓரங்களில் பிரசுரங்கள் மூலமும் மற்றும் செய்தித்தாள் விளம்பரங்கள் மூலமும் விளம்பரப்படுத்தப்படுகிறது. இந்நிதியாண்டில் மேற்கண்ட பகுதிகளில் கீழ்குறித்தவாறு பறவைகள் வேட்டையாடியதற்கு வழக்குகள் பதிவு செய்து பிடிபொருட்கள் கைப்பற்றப்பட்டு இணக்கக்கூட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	வழக்கு எண் தேதி	வேட்டையாடப் பட்ட பறவைகள் விவரம்	குற்றவாளி களின் எண் ணிக்கை	இணக்கக்கட்டணம்	
				வசூலிக்கப் பட்ட தொகை (ரூ)	பிடி பொருள்
1	4/2011 26-12-11	சிறகி 1	1	10,000	-
2	20/2011 26-07-11	கிரே டிராங்கிலின் 1 (Grey Francolin)	1	3,000	-
3	1/2012 08-02-12	எக்ரெட்-2 (Egret) பாண்டிகார்ன்-1 (Pondheron) டர்டர்-1 (Durter)	3	இராமநாதபுரம் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்து நிலுவையில் உள்ளது.	ஆட்டோ-1 துப்பாக்கி-1 ஏர்கன்
4	2/2012	கொக்கு இனம்-1 (Median Egret)	1	10,000	கவட்டை-1 ஏர்கன்-1
5	5/2012	வெள்ளை கொக்கு-1 (Egret)	1	7,000	-

[2012 நவம்பர் 2

வனத் துறை களப்பணியாளர்கள், கிராம வனக் குழு மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் வெளிநாட்டுப் பறவைகள் மற்றும் பறவைகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க 24 மணி நேர கண்காணிப்புப் பணிகள் சிவகங்கை மற்றும் மானாமதுரை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு குற்றங்கள் நடைபெறாமல் முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளன.

44—

நியாய விலைக் கடை

வினா எண் 5384—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற வீதத்தில் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் நியாய விலைக் கடைகள் மறு சீரமைக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை தற்பொழுது முழுநேரக் கடை அமைக்க பின்பற்றப்பட்டு வருகிறது. இதன்படி, முழு நேரக் கடை அமைக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டு, நியாயவிலைக் கடைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சென்னையில் இடம் கிடைக்காத காரணத்தினால், இதனை செயல்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது என்றபோதிலும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2012 நவம்பர் 2]

45—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 8366—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாய்க்கடையிலிருந்து பிரித்து சௌராஷ்டிரா தெரு, பாப்பன்குடி மற்றும் ஓலையான்பட்டி பகுதியில் தனியாக பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுக்கா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்பட்ட இலுப்பூர் 1 நியாய விலைக் கடையிலிருந்து இலுப்பூர் சௌராஷ்டிரா தெருவில் பாப்பன்குடி, ஓலைமான்பட்டி 14 மற்றும் 15-வது வார்டு பகுதிகளை உள்ளடக்கி புதிய பகுதிநேர கடை 21-11-2011 முதல் இலுப்பூர் சௌராஷ்டிரா தெருவில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

46—

பஞ்சப்பள்ளி தண்ணீர்

வினா எண் 6083—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி, சோகத்தூர் ஊராட்சி, கடகத்தூர் ஏரியிலிருந்து பச்சினம்பட்டி கிராமத்திற்கு பஞ்சப்பள்ளி தண்ணீரை கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளி அருகே சின்னாற்றின் குறுக்கே பஞ்சப்பள்ளி சின்னாறு அணை கட்டப்பட்டுள்ளது. இதன் முழு நீர் மட்டம் + 672.50 மீ. ஆகும். பஞ்சப்பள்ளி சின்னாறு அணையின் கீழ்ப்புறத்தில் சின்னாற்றின் குறுக்கே 15 அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 8 ஆவது அணைக்கட்டு மாரண்டஹள்ளி அணைக்கட்டு ஆகும். பஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரிநீர் மாரண்டஹள்ளி அணைக்கட்டிலிருந்து செல்லும் வழங்கு கால்வாய் மூலமாக செங்கன்பசுவன்தலாவ் ஏரிக்குச் செல்கிறது. பின்பு செங்கன்பசுவன்தலாவ் ஏரியின் உபரி நீர் ஜெர்தலாவ் ஏரிக்குச் செல்கிறது. ஜெர்தலாவ் ஏரியிலிருந்து ஒரு வழங்கு கால்வாய் வெட்டப்பட்டு இதன்மூலம் பச்சினாம்பட்டி அருகே உள்ள சோகத்தூர் ஏரி, கடகத்தூர் ஏரி, ராமக்கலா ஏரி உட்பட 8 ஏரிகளுக்கு பஞ்சப்பள்ளி சின்னாறு உபரி நீர் சென்றடைகிறது. ஜெர்தலாவ் ஏரியிலிருந்து பஞ்சப்பள்ளி சின்னாற்றின் நீரைப் பெறும் 8 ஏரிகளில், கடகத்தூர் ஏரியானது கடைமடை ஏரியாகும். கடகத்தூர் ஏரியிலிருந்து கொண்டு வரக்கோரும் பச்சினாம்பட்டி பகுதி சுமார் + 465.00 சமமட்டம் கோட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. புவியியல் ரீதியாக பச்சினாம்பட்டி கிராம பகுதியானது கடகத்தூர் ஏரியைவிட சுமார் + 10.00 மீட்டர் உயரமான பகுதியில் அமைந்துள்ளது. எனவே, புவியியல் ரீதியாக உயரமான இடத்தில் அமைந்துள்ள பச்சினாம்பட்டி கிராமப் பகுதிக்கு தாழ்வான பகுதியில் உள்ள கடகத்தூர் ஏரியிலிருந்து நீர் கொண்டு செல்ல சாத்தியமில்லை.

(ஆ) தற்போது எழவில்லை.

47—

நீர்ப் பாசன வசதி

வினா எண் 8248—திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2012 நவம்பர் 2]

(அ) அரூர் வட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்க அணை கட்ட சென்னக்கல் பாசனக் கால்வாய் வழியாக எம்.வெளாம்பட்டி, மருதிப்பட்டி, கீழ்மொரப்பூர், கே. வேட்ரம்பட்டி, கொங்கவேம்பு, மாம்பட்டி, மத்தியம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) அரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எம்.கொளகம்பட்டி, மருதிப்பட்டி உள்ளிட்ட எட்டு ஊராட்சிகளின் நிலம் பாசனம் பெறும்பொருட்டு தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டம்பட்டி கிராமத்தின் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே அணை அமைத்து சென்கல் மதிகெட்டான் கால்வாய்மூலம் அருகில் உள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் வசதி அளிக்க 1991-1992 ஆம் ஆண்டில் ரூ.475.00 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதன் பயன்செலவு 0.12:1 என்ற விகிதத்தில் அமைந்தது. இத்திட்டத்தினைச் செயலாக்குவதன்மூலம் 132 ஏக்கர் நன்செய் நிலங்கள் இடைவெளி நிரப்பப்படுவதோடு, 468 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெறும். இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கு 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும், 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வனநிலமும் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின் பயன்செலவு விகிதம் மிகக் குறைவாக இருப்பதனாலும், பாதுகாக்கப்பட்ட வனநிலம் கையகப்படுத்துவது கடினம் என்பதாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது. மேலும், இத்திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக பொருளாதார ரீதியாக சாத்தியமான திட்டமாக மாற்றி அமைக்க தள ஆய்வு செய்ததில் சாத்தியக்கூறு இல்லை என்பதால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

(ஆ) எழவில்லை.

48—

பாதுகாத்தல்

வினா எண் 9324—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

மத்திய அரசின் நிதியுதவிமூலம் கடலூர் மாவட்டம், பண்ருட்டி, கடலூர் ஆகிய நகரங்களை பெண்ணையாறு, கெடிலம், உப்பனார், பரவனாறு மற்றும் தெற்கு மலட்டாற்றின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்க நடைபெறும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதி உதவிமூலம் கடலூர் மாவட்டம், பண்ருட்டி, கடலூர் ஆகிய நகரங்களை பெண்ணையாறு, கெடிலம், உப்பனார், பரவனாறு மற்றும் தெற்கு மலட்டாற்றின் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் பணி முடிக்கப்பட்டுவிட்டது.

49—

மேம்படுத்துதல்

வினா எண் 14020—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், கோவிலாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் கோவிலாறு துணை வடிநிலப் பகுதியில் உள்ள 2 அணைக்கட்டுப் பணிகள் உலக வங்கியின் நிதியுதவியின்மூலம் நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் ரூ.66.00 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு, 26-08-2011-ல் முழுமையாக செய்து முடிக்கப்பட்டன. இதனால், இப்பகுதியிலுள்ள விடுபட்ட பாசனப் பரப்பு 129.76 ஹெக்டேர் முழு பாசனப் பயன் பெற்றுள்ளது.

2012 நவம்பர் 2]

50—

ஊக்குவித்தல்

வினா எண் 9773—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதியில் ஆடு வளர்க்கும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாட்டில் அரசு மாவட்ட கால்நடைப் பண்ணையில், செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு இனங்கள் பராமரிக்கப்பட்டு தேவைப்படும் விவசாயிகளுக்கு இனவிருத்தி விற்பனைக்காக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

51—

உயர்நுட்பத் தொழில் பூங்கா

வினா எண் 3581—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, வாகைகுளத்தில் உயர்நுட்பத் தொழில் பூங்கா அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டிட்கோ ஒரு பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தை திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் ஏ.எம்.ஆர். குரூப், ஹைதராபாத் உடன் இணைந்து

[2012 நவம்பர் 2

கூட்டுத் துறை நிறுவனமான ஏ.எம்.ஆர்.எல். ஹைடெக் சிட்டி என்ற நிறுவனத்தின்மூலம் 2520 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கி வருகிறது. மத்திய அரசின் முறையான அறிக்கை நவம்பர் 2008-ல் பெறப்பட்டது. முதல்நிலை கட்டுமானப் பணிகள் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்கப்பட்டு, மார்ச் 2013-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை 16 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மேலும் 11 நிறுவனங்களுக்கு அலகு ஒப்புகைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. கொலாய்டு அன்டு காகுலன்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், எக்சல் ஐட்ரோ நியுமேட்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஹெப்ரல் பல்க் கன்டெய்னர்ஸ் தங்களது செயல்முறையைத் துவக்கி, பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதன்மூலம் நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் தனது செயல்முறையைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் இதுவே மத்திய அரசின் முறையான அறிக்கை பெற்ற முதல் பல்துறை பொருட்கள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலமாகும்.

52—

தொழிற்சாலைகள்

வினா எண் 7933—திரு. க. தினகரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் தொகுதியில் அரசுத் துறை சார்ந்த புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

சூலூர் தொகுதியில் அரசுத் துறை சார்ந்த புதிய தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

தகுந்த தொழில் முனைவோர்கள் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதி முதலீட்டுகளுடன், செயல் குறிப்புகளுடன் செயல்படுத்த முன்வந்தால், அவர்களுடன் டிட்கோவும் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து

2012 நவம்பர் 2]

சூலூர் தொகுதியில் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

53—

உதவித் தொகை

வினா எண் 14579—திரு. ஆர். சாமி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரில் மூடப்பட்ட கூட்டுறவு நூற்பாலையில் பணியிழந்த தொழிலாளர்களுக்கு உதவித் தொகை கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

மதுரை கூட்டுறவு நூற்பாலை செயலிழந்தபோது, அவ்வாலையில் பணிபுரிந்த பணியாளர்கள் / தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், தன்விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ரூ.20,000 கருணைத்தொகை வழங்கப்பட்டது. இது புதிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ரூ.1,00,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளில் தன்விருப்ப ஓய்வுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, அவர்களுக்குக் கூடுதலான கருணைத் தொகை வழங்கப்படுவதோடு, அவர்களுக்குச் சேரவேண்டிய பணப் பயன்களுடன் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

54—

தங்கும் விடுதிகள்

வினா எண் 6331—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வேதியரேந்தலில் ஆதி திராவிடர் நல மாணவிகள் தங்கும் விடுதிகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் 25 புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் துவங்க (21 பள்ளி விடுதிகள், 4 கல்லூரி விடுதிகள்) அரசாணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையில் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்திற்குட்பட்ட வேதியரேந்தல் என்ற இடத்தில் புதியதாக பள்ளி மாணவியர் விடுதி ஒன்று துவங்கவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசு ஆணை (நிலை) எண் 22, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 19-3-2012.]

55—

சுற்றுச்சுவர்

வினா எண் 13335—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பெருமாள் புதூர் கிராமத்தில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பெருமாள்புதூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிக்கு ரூ.5 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு 2012-2013 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவி பெறப்பட்டு, மேற்படி பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2012 நவம்பர் 2]

56—

ஒலிப்பதிவுக் கருவி

வினா எண் 11354—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு எம்.ஜி.ஆர். திரைப்படத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ரூ.5 இலட்சம் செலவில் ஒரு லைவ் சிங்க் ஒலிப்பதிவுக் கருவி வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 263, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ)த்துறை, நாள் 27-10-2011-ன்படி எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.5.00 இலட்சம் செலவில் ஒரு லைவ் சிங்க் ஒலிப்பதிவுக் கருவி கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது அந்நிறுவன ஒலிப்பதிவுப் பிரிவில் பொருத்தப்பட்டு, மாணவர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

57—

படத் தொகுப்புக் கருவி

வினா எண் 11355—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு எம்.ஜி.ஆர். திரைப்படத் தொலைக்காட்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.15 இலட்சம் செலவில் இரண்டு அவிட் நான்லீனியர் படத்தொகுப்புக் கருவிகள் வாங்கும் செயற்குறிப்பு குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 258, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ1)த்துறை, நாள் 27-10-2011-ன்படி, எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.15.00 இலட்சம் செலவில் இரண்டு அவிட் நான்லீனியர் படத்தொகுப்புக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு, அந்நிறுவன படத்தொகுப்புப் பிரிவில் பொருத்தப்பட்டு மாணவர்களின் கல்வி நலனுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

58—

தொலைக்காட்சிப் பெட்டி

வினா எண் 11356—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு எம்.ஜி.ஆர். திரைப்படத் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு எல்.சி.டி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 257, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ1)த்துறை, நாள் 27-10-2011-ன்படி எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு எல்.சி.டி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது எல்.சி.டி. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அந்நிறுவனத்தின் முதல்வர் பிரிவுத் தலைவர் இயக்குதல் பிரிவு மற்றும் தொலைக்காட்சிப் பிரிவு அறைகளில் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2012 நவம்பர் 2]

59—

வீடியோ எடிட்டிங் சிஸ்டம்

வினா எண் 11358—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ரூ.6.79 இலட்சத்தில் ஒரு ஆப்பிள் மேக் புரோ 8 கோர் வீடியோ எடிட்டிங் சிஸ்டம் வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் நலத் திட்டங்கள் குறித்த செய்திகள் மக்களைக் கவரும் விதத்திலும், எளிதில் புரியும் வண்ணமாக அனைவரையும் சென்றடையும் விதத்தில், கருத்து விளக்கப் படங்கள், வீடியோ செய்தி மலர்கள் மற்றும் குறும்பாடல்கள் தயாரித்து அனைத்து மாவட்டங்களுக்கும் கள விளம்பரப் பணிக்கும், கேபிள் டிவிகளில் ஒளிபரப்புவதற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. அந்த வகையில், மேற்கண்ட வீடியோ செய்தி மலர்கள் மற்றும் கருத்து விளக்கப் படங்களை படத்தொகுப்பு செய்வதற்கு அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பமான ஆப்பிள் மேக்புரோ 8 கோர் வீடியோ எடிட்டிங் சிஸ்டம் ஒன்று 2011-2012 நிதியாண்டில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

60—

மிச்சுபிஷி வாகனம்

வினா எண் 11359—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

அரசு எம்.ஜி.ஆர். திரைப்படத் தொலைக்காட்சி நிறுவன மாணவர் வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு ரூ.15 இலட்சம் செலவில் ஸ்வராஜ் மஸ்டா அல்லது மிச்சுபிஷி வாகனம் வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண். 241 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(தி.தொ)த் துறை, நாள் 24-10-2011-ன்படி, எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு ரூ.15 இலட்சம் செலவில் ஸ்வராஜ் மஸ்டா கொள்முதல் செய்வதற்கு ரூ.9,98,583/-ஐ ஒதுக்கீடு செய்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ரூ.1,01,417/-இல் உதிரி பாகங்கள், எரிபொருள் மற்றும் இதர செலவினங்களுக்கு இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை அவர்களின் செயல்முறை ஆணை எண் 23234/நிர் 5/2011-2012, நாள் 02-01-2012-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாகன உதிரி பாகங்கள் பொருத்தப்பட்டு விரைவில் இந்நிறுவன மாணவர்களின் படப்பிடிப்புப் பணிகளுக்கு உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்பட உள்ளன.

61—

மடிக்கணினிகள்

வினா எண் 11360—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு எம்.ஜி.ஆர். திரைப்படத் தொலைக்காட்சி நிறுவன முதல்வர் உட்பட பிரிவுத் தலைவர்களுக்கு ரூ.3.15 இலட்சம் செலவில் 7 மடிக்கணினிகள் வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 261, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(தி.தொ)த் துறை, நாள் 27-10-2011-ன்படி, எம்.ஜி.ஆர்

2012 நவம்பர் 2]

அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.3.15 இலட்சம் செலவில் 7 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது முதல்வர் மற்றும் அனைத்து பிரிவுத் தலைவர்களின் பயன்பாட்டில் உள்ளன.

62—

திரைப்பட மானியம்

வினா எண் 11363—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2007 முதல் 2010 வரையுள்ள ஆண்டுகளுக்கு திரைப்பட மானியம் விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) சிறிய முதலீட்டில் திரைப்படம் தயாரிப்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தகுதியான திரைப்படங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசால் தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட மானியம் வழங்குவதற்கு தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, வரப்பெற்றுள்ள திரைப்படங்கள் பார்வையிடப்பட்டு வருகின்றன.

(ஆ) தேர்வுக் குழுவால் அனைத்துத் திரைப்படங்களும் பார்வையிடப்பட்டு மானியம் பெறுவதற்கு தகுதியான திரைப்படங்களைத் தேர்வு செய்தபின் அரசு மானியம் வழங்கப்படும்.

[2012 நவம்பர் 2

63—

முதியோர் ஓய்வூதியத் தொகை

வினா எண் 11374—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம் மூலம் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியத் தொகையை ரூ.1,000/- ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் உருவாக்கப்பட்டது.

2. திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழ வேண்டுமென்பதற்காக திரைப்படத் துறையினர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் முதியோர் ஓய்வூதியத் தொகையாக ரூ.400/- வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் ஓய்வூதியத் தொகையை ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

பரிசுத் தொகை

வினா எண் 11383—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) சின்னத்திரையில் சிறந்த வாரத் தொடருக்கான பரிசை ரூ.2 இலட்சமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சின்னத்திரைக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் 2006 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சின்னத்திரை தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த வாரத் தொடர் ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

சின்னத்திரையில் சிறந்த வாரத் தொடருக்கான பரிசை ரூ.2.00 இலட்சமாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

நவீன இயந்திரங்கள்

வினா எண் 15334—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் அனைத்து அரசு அச்சகங்களின் அச்சுத் தரத்தினையும் அளவினையும் உயர்த்த நவீன இயந்திரங்கள் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். 2011-2012 ஆம் நிதியாண்டில் அரசு மைய அச்சகத்தின் அச்சுத் தரத்தினையும், அளவினையும் உயர்த்தும்பொருட்டு, அரசாணை எண் 13, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 23-01-2012-ல் கணினியிலிருந்து அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம் (CTP)

[2012 நவம்பர் 2

கொள்முதல் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டு, கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதர அச்சகங்களின் தேவை குறித்து ஆய்வு மேற்கொண்டு தேவை ஏற்படின், நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

66—

சி.டி.ப்பி. இயந்திரம்

வினா எண் 15336—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மைய அச்சகத்தில் ப்ரீ-பிரிண்டிங் பிரிவை நவீனப்படுத்த துணைப் பாகங்களுடன்கூடிய சி.டி.ப்பி. இயந்திரத்தை வாங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு மைய அச்சகத்தில் ப்ரீ-பிரிண்டிங் பிரிவை நவீனப்படுத்த துணைப் பாகங்களுடன்கூடிய சி.டி.ப்பி. இயந்திரத்தை கொள்முதல் செய்திட அரசாணை எண் 13, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 23-01-2012-ல் ரூ.1,10,00,000/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

67—

இயந்திரங்கள்

வினா எண் 15337—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அச்சகங்களை நவீனமயமாக்க அச்சுப் பணிக்குப் பிந்தைய பணிகளை மேற்கொள்ளும் பணிகளை செயல்படுத்த 69 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்கள் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அச்சகங்களை நவீனமயமாக்க அச்சுப் பணிக்குப் பிந்தைய பணிகளை மேற்கொள்ளும் பணிகளைச் செயல்படுத்த ரூ. 69 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களைக் கொள்முதல் செய்திட அரசாணைகள் 228, 229, 230, 231, 232 மற்றும் 233 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 12-10-2011-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, பெருவாரியான இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

68—

நிதி ஒதுக்கீடு

வினா எண் 15338—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மற்றும் மதுரை அரசு கிளை அச்சகங்களுக்கு சிங்கிள் ஷெட் கம்பியடிக்கும் இயந்திரம், புரோகிராம் கட்டிங் இயந்திரம், நியூமேட்டிக் பண்டலிங் இயந்திரம் வாங்க பகுதி 2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை மற்றும் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகங்களுக்கு சிங்கிள் ஷெட் கம்பியடிக்கும் இயந்திரம்,

[2012 நவம்பர் 2

புரோகிராம் கட்டிங் மற்றும் நியூமேட்டிக் பண்டலிங் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்ய 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண்கள் 230 மற்றும் 232, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 12-10-2011-ல் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, சிங்கிள் ஹெட் கம்பியடிக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. புரோகிராம் கட்டிங் இயந்திரம், நியூமேட்டிக் பண்டலிங் இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

69—

உயர்த்துதல்

வினா எண் 15344—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களின் சிற்றுண்டிப் படி 150 ரூபாயை 200 ரூபாயாகவும், இரவு முறை மாற்றுப்படி 14 ரூபாயை 50 ரூபாயாகவும் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அனைத்து அச்சகங்களிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிற்றுண்டிப் படியை மாதம் ரூ.150/- லிருந்து ரூ.200/- ஆக உயர்த்தியும் மற்றும் இரவு முறை மாற்றுப்படியை ரூ.14/- லிருந்து ரூ.25-/ ஆக உயர்த்தியும் 01-11-2011 நாளிடப்பட்ட தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் அரசாணை (நிலை) எண்கள் முறையே 286 மற்றும் 288 ஆகியவற்றில் ஆணைகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

2012 நவம்பர் 2]

70—

புதிய கழிவறைகள்

வினா எண் 1992—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, அரசு இரப்பர் கழகம், குத்தியார், மைலார் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருப்பில் புதிய கழிவறைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) குத்தியார் மற்றும் மைலார் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளுக்குத் தேவையான கழிவறைகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களில் உள்ள குடியிருப்புகளின் விவரம் பின்வருமாறு:-

பிரிவு	தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை	குடியிருப்பு எண்ணிக்கை	தோட்டத் தொழிலாளர்கள் குடியிருந்து வரும் குடியிருப்பு எண்ணிக்கை	பயன்படுத்தப்படும் கழிவறைகள் எண்ணிக்கை
மைலார்	240	187	187	187
குத்தியார்	136	115	115	115

மேலும் மேற்குறிப்பிட்டுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் கணவன் மற்றும் மனைவி இருவரும் தோட்டத் தொழிலாளியாகப் பணிபுரிந்து வருவதால், இருவருக்கும் சேர்த்து ஒரு குடியிருப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தற்போதுள்ள குடியிருப்புகளும் மற்றும் கழிவறைகளும் போதுமானதாக உள்ளதால் புதிதாக கழிவறைகள் அமைக்க உத்தேசம் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2012 நவம்பர் 2

71—

பணி நியமனத் தேர்வு

வினா எண் 15757—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நிறுவனங்களின் பணி நியமனத் தேர்வினை வேலைவாய்ப்பு அலுவலகம்மூலமாக பதிவு மூப்பின் அடிப்படையில் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் பிரதி மாதம் 2-வது வெள்ளிக் கிழமையானது தனியார் வேலைவாய்ப்பு தினமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. அந்நாளில் வேலையளிப்பவர்களும், வேலை நாடுநர்களும் நேருக்கு நேர் தொடர்புகொள்ள வைக்கப்படுகின்றனர். இதன்மூலம் வேலை நாடுநர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் பெறுகின்றனர். அதுமட்டுமின்றி பன்னாட்டு நிறுவனங்கள், பெரிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவனங்கள் துணையுடன் தனியார் வேலைவாய்ப்பு சிறப்பு முகாம்கள் நடத்தப் பெறுகின்றன. இதன்மூலமும் தனியார் துறையில் இளைஞர்கள் பணிவாய்ப்பு பெறுகின்றனர். தனியார் துறை நிறுவனங்களில் எழும் காலியிடங்கள் குறித்த அறிவிக்கையை வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிப்பதை Employment Exchanges (Compulsory Notification of vacancies) Act, *1959*-ன்கீழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளதே தவிர, தனியார் நிறுவனங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் பதிவு மூப்பின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும் என்பது குறித்து அச்சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆதலால் இதனை வலியுறுத்த இயலாது.

2012 நவம்பர் 2]

72—

கட்டட விரிவாக்கம்

வினா எண் 2077—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி கட்டட விரிவாக்கத்தை விரைந்து முடிக்க 150 எம்.பி.பி.எஸ். இடங்களை இந்திய மருத்துவக் கழகத்திடமிருந்து பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையினரால் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் முடிவுற்ற பின்னர், இந்திய மருத்துவக் குழுமம் சுட்டிக்காட்டியுள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, 150 எம்.பி.பி.எஸ். இடங்கள் 250 எம்.பி.பி.எஸ். இடங்களாக உயர்த்துவது தொடர்பாக இந்திய மருத்துவக் குழுமத்தின் அனுமதியினைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

73—

மருத்துவர் பணியிடம்

வினா எண் 3452—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்பிடவும், பிரேதப் பரிசோதனை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள மொத்த பணியிடங்கள் (உதவி மருத்துவர் மற்றும் குடிமை மருத்துவர்) 5. தற்போது அம்மருத்துவமனையில் 3 மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். மீதம் உள்ள 2 காலிப் பணியிடங்கள் (1 உதவி மருத்துவர் மற்றும் 1 முதன்மை குடிமை மருத்துவர்) மருத்துவர்களின் விருப்பத்தின்பேரில் பதவி உயர்வு மற்றும் இடமாறுதல் கலந்தாய்வின் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் பொது மருத்துவரைக் கொண்டு பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

74—

கதவுகளைத் திறத்தல்

வினா எண் 3469—திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, அரசு இராசாசி மருத்துவமனையில் அடைத்து வைத்துள்ள கதவுகளைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மதுரை, அரசு இராசாசி மருத்துவமனையில் நோயாளிகளின் நலன் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் அனைத்து வாயிற் கதவுகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், வெளி நோயாளிகள் பகுதி காலை 6.30 மணிக்குத் திறக்கப்பட்டு பிற்பகல் 12.30 மணிக்கு அடைக்கப்படுகிறது. அதேபோல், மெயின் கேட் (முதன்மை வாயில்) மற்றும் கண் பிரிவு பகுதியில் உள்ள வாயிற் கதவுகள் காலை 6.00 மணிக்குத் திறக்கப்பட்டு பொது மக்கள்

2012 நவம்பர் 2]

மற்றும் நோயாளிகளின் நலன் கருதி இரவு 8.30 மணிக்கு அடைக்கப்படுகிறது. பொது அவசரப் பகுதி மற்றும் மகப்பேறு அவசரப் பகுதி ஆகியவை 24 மணி நேரமும் திறந்தே வைக்கப்பட்டுள்ளன.

75—

சி.டி. ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே கருவி

வினா எண் 3501—திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு பொது மருத்துவமனைக்கு கட்டடம் கட்டவும், மருத்துவரைப் பணி நியமனம் செய்யவும், சி.டி.ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே கருவிகளை வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி அரசு தலைமை மருத்துவமனை தற்போது 108 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருவதோடு, இம்மருத்துவமனையில் அனைத்துப் பிரிவுகளுக்கும் தனித்தனியே கட்டட வசதி உள்ளது. மேலும், தேசிய ஊரக சுகாதாரத் திட்ட முகமை நிதியின்கீழ் பிரசவப் பிரிவு, ஆழ்துளைக் கிணறு, புறநோயாளிகள் பிரிவு, நவீன சமையல் கூடம் ஆகியவற்றிற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணியும் மற்றும் தற்போதுள்ள கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. இது தவிர, 30 மருத்துவப் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொள்ளாச்சி, கோவில்பட்டி, கள்ளக்குறிச்சி மற்றும் வாலாஜா ஆகிய 4 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு ரூ.7 கோடி செலவில் புதிய சி.டி.ஸ்கேன் வழங்குவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எக்ஸ்ரே இயந்திரம் ஏற்கெனவே வழங்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 2

எனவே, கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு மேலும் கட்டடம் கட்டவும், மருத்துவரைப் பணி நியமனம் செய்யவும், ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

76—

குடிநீர் வசதி

வினா எண் 3669—திரு. ப. பார்த்தசாரதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கே.கே. நகர் பொது மருத்துவமனையில் குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்யவும், சமூக விரோதச் செயல் நடப்பதைத் தடுக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கே.கே. நகர் புறநகர் மருத்துவமனையில் குடிநீர் வசதிக்காக ஆர்.ஓ. பிளாண்ட் பொருத்தப்பட்டு சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டு வருவதோடு அடிப்படை வசதிகள் அனைத்தும் எவ்வித தடங்கலுமின்றி நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேலும், இம்மருத்துவமனையில் எவ்வித சமூக விரோதச் செயல்களும் நடைபெறவில்லை. இனிமேலும் நடைபெறாவண்ணம் தடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

77—

காலிப் பணியிடங்கள்

வினா எண் 4258—திரு. து. முருகேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 491 பணியிடங்களில் தற்போது 121 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள பணியிடங்களை மாறுதல் கலந்தாய்வின் மூலம் நிரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்த காலிப் பணியிடங்களை மருத்துவப் பணிகள் தேர்வாணையம் (Medical Service Recruitment Board) மூலம் தேர்ந்தெடுத்து நிரப்புவதற்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

78—

கட்டட வசதி

வினா எண் 4584—திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்வதற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்வதற்கு கட்டடம் கட்டிட 2011-2012 ஆம் ஆண்டிற்கான கட்டடப் பராமரிப்பு தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.9.35 இலட்சம், தலைமைப் பொறியாளர் (செ), பொதுப் பணித் துறை அவர்களுக்கு விடுவிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2012 நவம்பர் 2

79—

பணியிடங்கள்

வினா எண் 5508—திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள அனைத்து மருத்துவர் பணியிடங்களையும் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் சுகாதார மாவட்ட கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 66. தற்போது அம்மருத்துவமனையில் 41 மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதம் உள்ள 25 காலிப் பணியிடங்கள் இனி நடைபெறும் தற்காலிக மருத்துவர் நியமனம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி சுகாதார மாவட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருத்துவ அலுவலர் பணியிடம் 68. தற்போது அம்மருத்துவமனையில் 49 மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதம் உள்ள 19 காலிப் பணியிடங்கள் இனி நடைபெறும் தற்காலிக மருத்துவர் நியமனம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

80—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6821—திருமதி ம. சக்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில், திருவெண்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், 3 செவிலியர்களுடன்கூடிய 24X7 பிரசவ கவனிப்பு சேவையுடன் விரிவுபடுத்தப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

81—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6822—திருமதி ம. சக்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில், கொள்ளிடம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 3 செவிலியர்களுடன்கூடிய 24X7 பிரசவ சேவையுடன் விரிவுபடுத்தப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

[2012 நவம்பர் 2

82—

பராமரிப்பு

வினா எண் 7674—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கழிவுநீர்க் கால்வாயை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கழிவுநீர்க் கால்வாயைப் பராமரிக்க 2011-2012 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

83—

மருத்துவர் நியமனம்

வினா எண் 8301—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, கோனேரிப்பட்டி ஊராட்சி, காவேரிப்பட்டி மற்றும் புதூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பகுதி நேர மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டி ஊராட்சி, காவேரிப்பட்டி மற்றும் புதூர் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. தமிழகத்தில் உள்ள

2012 நவம்பர் 2]

அனைத்து துணை சுகாதார நிலையங்களில் கிராம சுகாதார செவிலியர் பணியிடம் மட்டுமே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே துணை சுகாதார நிலையங்களில் பகுதிநேர மருத்துவரை நியமனம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

84—

சிறப்பு மருத்துவமனை

வினா எண் 9169—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மருத்துவமனையை மக்களின் பயன்பாட்டிக்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ மற்றும் (ஆ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மருத்துவமனை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, ரூ.139.31 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, கடந்த 29-07-2011 முதல் மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, 5-3-2012 அன்று முதல் ஐந்து அறுவை அரங்குகள் முழுவதுமாக இயங்கத் தொடங்கியுள்ளன.

85—

விபத்து மற்றும் தலைக்காயப் பிரிவு

வினா எண் 9176—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விபத்து மற்றும் தலைக்காயப் பிரிவு அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விபத்து மற்றும் தலைக்காயப் பிரிவு அமைக்க கட்டடப் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. இப்பிரிவிற்கு மத்திய அரசின் நிதியுதவியுடன் உபகரணங்கள், விபத்து ஊர்தி வழங்குவதோடு பணியாளர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

86—

பராமரிப்பு

வினா எண் 9905—திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருத்தணி அரசு மருத்துவமனையை சுகாதாரமாக பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருத்தணி அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் மூலம் மருத்துவக் கழிவுக் கிடங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும், நோயாளர் நலச் சங்கம் மற்றும் ஜனனி சுரக்ஷா போஜனா திட்டம் இங்கு செயல்பட்டு வருவதாலும், இம்மருத்துவமனை சுகாதாரமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

87—

கழிவுநீர்ப் பாதை

வினா எண் 9909—திரு ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) சிவகங்கை, அரசு மருத்துவமனையில் கழிவுநீர்ப் பாதையை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கையில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையோடு தொடங்கப்பட்டுள்ளது. தற்போது இயங்கும் மருத்துவமனை புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும், தற்போது இயங்கும் சிவகங்கை மருத்துவமனையில் கழிவுநீர்ப் பாதை சீரமைக்கப்பட்டுள்ளது.

88—

குடும்ப நல அறுவை சிகிச்சை

வினா எண் 11018—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நல அறுவை சிகிச்சைகளை அரசு உள்ளாட்சி அமைப்பு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள்மூலம் அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 2010-2011 ஆம் ஆண்டில், குடும்ப நல அறுவை சிகிச்சைகள் உள்ளாட்சி அமைப்பில் 16,402 (5%), தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் 16,406 (5%) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் 92572 (28.3%) செய்யப்பட்டுள்ளன. 2010-2011 ஆம் ஆண்டுவரை 1,863 தனியார் மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அரசு அங்கீகாரம் பெறாத தனியார் மருத்துவமனைகளைக் கண்டறிந்து

[2012 நவம்பர் 2

அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் அங்கீகாரம் பெறுவதற்கு துணை இயக்குநர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நலம்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

89—

முறைப்படுத்துதல்

வினா எண் 11022—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நல அறுவை சிகிச்சைகள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள்மூலம் 22 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் மருத்துவமனைகளில், குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்வதற்காக, அம்மருத்துவமனைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் இயங்கும் மருத்துவக் குழுவிலுள்ள மாவட்ட இணை இயக்குநர்கள் / துணை இயக்குநரின் தீவிர நேரடி ஆய்வின் பிறகு, உரிய பரிந்துரை அடிப்படையில், குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கு மாவட்ட ஆட்சியர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வறுவை சிகிச்சை செய்வதற்கு தமிழ்நாட்டில் 1,863 அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் உள்ளன. இம்மருத்துவமனைகளில் செய்யப்படும் குடும்ப நல கருத்தடை அறுவை சிகிச்சைகளின் தரம் குறித்தும், உண்மை நிலை குறித்தும் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11036—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

மணப்பாறை வட்டம், மறவனூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருச்சி சுகாதார மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், மறவனூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, 13-2-2012 முதல் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

91—

உடல் உறுப்புகள் தானம்

வினா எண் 11051—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் எத்தனை உடல் உறுப்புகள் தானம் பெறப்பட்டன?

(ஆ) இதனால் பயன் அடைந்தவர்கள் விவரம் யாது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் தெற்கு மண்டலத்தில் மொத்தம் 3 நபர்களும், மேற்கு மண்டலத்தில் இரண்டு நபர்களும் தானம் செய்துள்ளனர்.

(ஆ) இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் தெற்கு மண்டலத்தில் மொத்தம் 3 உடல்கள் பெறப்பட்டு அதில் 21 நபர்கள், மேற்கு மண்டலத்தில் மொத்தம் 3 உடல்கள் பெறப்பட்டு அதில் 14 நபர்கள் ஆக மொத்தம் 35 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

92—

கட்டட வசதி

வினா எண் 11183—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 10 படுக்கை வசதியுடன்கூடிய விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம் கட்டுவதற்காக 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 259, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஜே2) துறை, நாள் 28-10-2011-ல் ரூ.40.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

93—

தளம் அமைத்தல்

வினா எண் 11308—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள காலரா வாந்திபேதி சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் கூரையை அகற்றி தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள காலரா வாந்திபேதி சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் கூரையை அகற்றி தளம் அமைக்க 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் பணியினை மேற்கொள்ள முதன்மைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்குப் பரிந்துரை செய்து பணிகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

94—

குடிநீர்க் குழாய்

வினா எண் 11314—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் புற நோயாளி அனுமதிச் சீட்டு வழங்கும் இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்க் குழாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் புற நோயாளி அனுமதிச் சீட்டு வழங்கும் இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்க் குழாய் அமைக்க 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் பணியினை மேற்கொள்ள முதன்மைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களுக்குப் பரிந்துரை செய்து பணிகள் மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2012 நவம்பர் 2

95—

மருத்துவர் நியமனம்

வினா எண் 11612—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு மகப்பேறு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள உதவி மருத்துவர்/குடிமை மருத்துவர் மற்றும் முதுநிலை உதவி மருத்துவர் மொத்த பணியிடங்கள் 7. தற்போது அம்மருத்துவமனையில் 4 மருத்துவப் பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்களை எதிர்வரும் மருத்துவர்களின் கலந்தாய்வின் மூலம் நிரப்பும்பொழுது ஒரு மகப்பேறு மருத்துவரையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

96—

கட்டட வசதி

வினா எண் 12165—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்குடன் பிரசவ அறை கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை அரங்குடன்கூடிய மகப்பேறு பிரிவு கட்ட 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 257, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஜே2) துறை, நாள் 25-10-2011-ல் ரூ.16.00 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பொதுப் பணித் துறையினரால் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

97—

பயிற்சி

வினா எண் 12171—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெறாத அனைத்து மகப்பேறு மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும் லேப்ராஸ்கோப்பிக் குடும்ப நல அறுவை சிகிச்சை பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பயிற்சி பெறாத தகுதியுடைய அனைத்து மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து அரசு மருத்துவமனைகளில் லேப்ராஸ்கோப்பிக் பயிற்சி தொடர்ந்து 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 147 மகப்பேறு மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கு லேப்ராஸ்கோப்பிக் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பயிற்சி

[2012 நவம்பர் 2

பெறாத அனைத்து மகப்பேறு மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்கும் லேப்ராஸ்கோப்பிக் பயிற்சி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

98—

குடும்பநல முறைகள்

வினா எண் 12172—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராம வாரியாக மிகைப் பிறப்பு வரிசையிலுள்ள தாய்மார்களைக் கண்டறிந்து அவர்கள் குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மிகைப் பிறப்பு வரிசை குழந்தைகள் விகிதம் 2002 ஆம் ஆண்டு 20.2 சதவிகிதத்திலிருந்து 2010 ஆம் ஆண்டு 10.6 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. அதாவது 2010 ஆம் ஆண்டு உயிருடன் பிறந்த குழந்தைகளில் 10.6 சதவிகித குழந்தைகள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிறப்பு வரிசையினைச் சார்ந்ததாகும். மீதமுள்ள 89.4 சதவிகித குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு பிறப்பு வரிசையைச் சார்ந்ததாகும். இம்மிகை பிறப்பு வரிசை விகிதத்தை மேலும் குறைப்பதற்கு நடவடிக்கைகள் வட்டார ரீதியாக எடுக்கப்பட்டு வருகின்றன.

99—

குடிநீர் வசதி

வினா எண் 12179—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் குடிநீர் மற்றும் சுடு தண்ணீர் வசதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு 2011-2012 ஆம் ஆண்டிற்கான கட்டடப் பராமரிப்பு தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ரூ.100 இலட்சம் குடிநீர் மற்றும் சுடுநீர் வசதிக்காக தலைமை பொறியாளர் (கட்டுமானம்), சென்னை அவர்களுக்கு விடுவிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

100—

தடையில்லா மின்சாரம்

வினா எண் 14985—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தடையில்லா மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 2

பட்டியல் 6

1—

வாக்காளர் அடையாள அட்டை

வினா எண் 17238—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் அடையாள அட்டையில் திருத்தம் செய்வதற்கு, இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை உள்ளடக்கிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வாக்காளர்களுக்கு வழங்கப்படுகிறது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் திருத்தங்கள் ஏதும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனில், வாக்காளர் பட்டியலிலும் மேற்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். படிவம் 8-ல் உரிய விவரங்களை பூர்த்தி செய்து புகைப்பட வாக்காளர் பட்டியலில் உரிய மாற்றங்களையும், படிவம் 001சி-ல் உரிய விவரங்களுடன் மனு செய்து புதிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையும் பெறலாம். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள பதிவுகளுக்கு வாக்காளர் திருத்தம் செய்யக் கோரும் நேர்வில் ரூ.25/- கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதற்கு தற்போதுள்ள நடைமுறைப்படி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்கும் மையங்களிலோ அல்லது மாவட்ட கருவூலங்களிலோ ரூ.25/-க்கான தொகையைச் செலுத்தி திருத்தம் செய்யப்படுவதற்குரிய படிவம் 001-சி-ஐ பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இம்மனுக்களில் வாக்காளர்கள் தங்கள் புகைப்படத்தை ஒட்டி நேரிடையாக மனு செய்ய

2012 நவம்பர் 2]

வேண்டுமென்பதால், இணையதளம் மூலமாக இம்மனுக்களைப் பெற இயலாது.

சரியான விவரங்களை வாக்காளர்கள் உரிய படிவத்தில் கொடுத்திருந்தும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் பிழைகள் ஏதும் இருப்பின் கட்டணமின்றி பிழைகளை நீக்கி புதிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வாக்காளர்களுக்கு வழங்கப்படும்.

2—

வாக்குச் சாவடிகள்

வினா எண் 17344—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவியியல் குறியீட்டு முறையில் வாக்குச் சாவடிகளை சீரமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

வாக்காளர் பட்டியல்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் பொருட்டும், பல வாக்குச் சாவடிகளை ஒரே இடத்தில் அமைக்காமல் அவற்றின் வாக்குப் பதிவுப் பரப்பை தெளிவாக வரையறை செய்து, அறிவியல் முறையில் வாக்குச் சாவடிகளின் அமைவிடங்களை அமைக்கவும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தேர்தல் பொருட்களை வாக்குச்சாவடிக்குக் கொண்டு செல்ல சீரான வழித்தடங்களைத் திட்டமிடவும் புவியியல் குறியீட்டுமுறை (GIS)-யை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இதற்காக, வாக்குச் சாவடி அமைவிடங்களையும், வாக்காளர் பட்டியல் பாகங்கள்/பிரிவுகளின் எல்லைகள் முதலியவற்றையும் புவியியல் குறியீட்டு முறையில் வரைபடங்களாக்க ELECGIS *1* என்று பெயரிடப்பட்ட முதல் கட்ட திட்டப் பணி திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவு பெற்றது. இதன் இரண்டாம் கட்ட திட்டப் பணியும் ELECGIS *2* என்று பெயரிடப்பட்டு

[2012 நவம்பர் 2

அப்பல்கலைக்கழகத்திடமே ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணியை நான்கு கட்டப் பணியாக மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டு, கட்டம், கட்டமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக தமிழகத்திலுள்ள மாவட்டங்கள் நான்கு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, முதல் கட்டத்தில் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய எட்டு மாவட்டங்களும், இரண்டாவது கட்டத்தில் திருப்பூர், ஈரோடு, நீலகிரி, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, சிவகங்கை, வேலூர் ஆகிய எட்டு மாவட்டங்களும், மூன்றாவது கட்டத்தில் கடலூர், விழுப்புரம், விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, நாமக்கல், பெரம்பலூர், அரியலூர் ஆகிய எட்டு மாவட்டங்களும், நான்காவது கட்டத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, இராமநாதபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர் ஆகிய எட்டு மாவட்டங்களுமாகப் பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நேர்வில் முதல் இரு கட்டங்களில் அடங்கியுள்ள மாவட்டங்களுக்கான வரைபடங்கள் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்டு, மாவட்டங்களில் கள ஆய்வு செய்யப்பட்டு, அதன்பேரில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. மூன்றாம் மற்றும் நான்காம் கட்டப் பணிகளுக்கான வரைபடங்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படவுள்ளன.

3—

அறிக்கை

வினா எண் 18928—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நான்காவது மாநில நிதி ஆணையம், உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு அறிக்கையாக அளித்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:

(அ) ஆம். அளித்துவிட்டது.

(ஆ) 29–11–2011 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் சமர்ப்பித்துள்ளது.

4—

மழைநீர் சேகரிப்பு

வினா எண் 11214—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மழைநீர் சேகரிப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஊராட்சிப் பகுதிகளில் கட்டட அனுமதி அளிப்பது குறித்து வெளியிட்டுள்ள அரசாணை எண் 255, ஊரக வளர்ச்சித் (சி2) துறை, நாள் 18-8-1997-ல் பத்தி எண் 4, உட்பிரிவு (6)-யிலும் மற்றும் பத்தி எண் 4A-யிலும் தேவையான உத்தரவுகள் அரசால் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் மழைநீர் சேகரிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்பொருட்டு, மழைநீரை சேகரிப்பது தொடர்பான விவரங்களையும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் பராமரிக்கவும், மேற்குறிப்பிட்ட அரசாணையினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் வலியுறுத்தி, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நேர்முகக் கடித எண் 767/ஊ.2/2011, நாள் 10-10-2011-இன்மூலம் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) வினா எழாது.

[2012 நவம்பர் 2

5—

வாகனம் மற்றும் இதர வசதிகள்

வினா எண் 15202—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு வாகனம் மற்றும் இதர வசதிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு வாகனம் மற்றும் இதர வசதிகள் கோரி முன்மொழிவுகள் ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

6—

பராமரித்தல்

வினா எண் 16635—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி ஊராட்சி, வேலப்புடையான்பட்டியில் ஏ.ஓய். காலனி வீடுகளை பழுதுநீக்கி பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7—

வீடுகள்

வினா எண் 16661—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, நெருங்குளாகுடி ஆதி திராவிடர் காலனி வீடுகளை பராமரிப்புச் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

8—

மதிப்பூதியம்

வினா எண் 19453—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மதிப்பூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவது சம்பந்தமாக அரசாணை (நிலை) எண் 54, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா4) துறை, நாள் 29-6-2012-ல் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) 2011 உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் பதவி ஏற்ற நாளான 25-10-2011-லிருந்து மாதந்தோறும் ரூ.1,000/- மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது.

9—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 21779—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்ககிரி ஒன்றியம், சன்னியாசிப்பட்டி அருந்ததியர் காலனிகளில் உள்ள பழுதடைந்த தொகுப்பு வீடுகளை பழுதுநீக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை

2012 நவம்பர் 2]

வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

10—

விடுகளில் பழுது நீக்கம்

வினா எண் 21897—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், வெம்மணி ஊராட்சி, வெம்மணி மற்றும் நரியப்பட்டி வடக்கு காலனியிலுள்ள வீடுகளைப் பழுதுநீக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11—

பழுது நீக்குதல்

வினா எண் 21928—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், குடுமியான்மலை ஊராட்சி, ஒச்சபட்டி ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பழுதுநீக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ. 25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

12—

தொகுப்பு வீடுகள்

வினா எண் 22485—திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், சிறுநாவலூர் ஆதி திராவிடர் குடியிருப்பிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுநீக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

13—

சீரமைத்தல்

வினா எண் 22994—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம்,

2012 நவம்பர் 2]

வெட்டிவயல் ஊராட்சி, வெட்டிவயல் ஆதி திராவிடர் காலனியில் உள்ள வீடுகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

14—

ஊக்கத் தொகை

வினா எண் 17274—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேசும் திறனற்ற செவித்திறன் குறையுடையோரை திருமணம் செய்துகொள்ளும் சாதாரண நபருக்கு திருமண ஊக்கத் தொகை அளித்தல் திட்டத்தின் ஆண்டு வருமான வரம்பினை ரூபாய் ஒரு இலட்சமாக நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட துறை அமைச்சர்:

(அ) அரசாணை (நிலை) எண் 31, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28-6-2010-ல் மாநில அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பை 2010-2011 நிதியாண்டு முதல் முற்றிலும் நீக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

[2012 நவம்பர் 2

15—

ஊக்கத் தொகை

வினா எண் 17275—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேசும் திறனற்ற செவித்திறன் குறையுடையோரை திருமணம் செய்துகொள்ளும் சாதாரண நபருக்கு திருமண ஊக்கத் தொகை அளித்தல் திட்டத்தில் ஊக்கத் தொகையாக ரூபாய் ஐம்பதாயிரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) அரசாணை (நிலை) எண் 24, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28-6-2011-ல் வாய் பேசாத மற்றும் காது கேளாத மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவித் திட்டத்தில் பட்டம்/பட்டயம் பெற்றுள்ளவர்களுக்கு ரூ.50,000/- திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யம் செய்வதற்கு 4 கிராம் தங்கம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 70, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 21-6-2012-ல் மாற்றுத் திறனாளிகள் திருமண நிதியுதவி வழங்கும் திட்டங்களில் மணமக்களில் யாராவது ஒருவர் படித்து பட்டம்/பட்டயம் பெற்றிருந்தால் ரூ.50,000/- வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

16—

நிதியுதவி

வினா எண் 17277—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்மூலம் ஊனமுற்ற நபருக்கு மூக்குக் கண்ணாடிகள் வாங்க நிதி உதவி ரூ.500/-ஐ இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கான உதவித் தொகை ரூ.500/- வழங்கும் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

17—

நிதியுதவி

வினா எண் 17278—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்ற பெண்ணின்/ஊனமுற்ற நபரின் மனைவிக்கு, பிரசவத்திற்கு வழங்கப்படும் நிதியுதவி, ரூ.6,000/-த்தை, ரூபாய் 20,000/-ஆகவும், கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவிற்கு ரூ. 10,000/-ஆகவும் உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) தற்போது பிரசவத்திற்கு ரூ.6,000/-மும், அறுவை சிகிச்சை செய்து பிரசவம் நடைபெற்றால் ரூ.9,000/-மும், கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவுக்காக ரூ.3,000/-மும் வழங்கப்படுகிறது. உதவித் தொகை உயர்த்தி வழங்குவது குறித்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியக் கூட்டம் நடைபெறும்போது ஆய்வு செய்யப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

[2012 நவம்பர் 2

18—

நிதியுதவி

வினா எண் 17280—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊனமுற்ற நபரின் இயற்கை மரணத்தின்போது வாரிசுதாரருக்கு வழங்கப்படும் நிதியுதவியை ரூ.50,000/-மாகவும், ஈமச் சடங்கிற்கு ரூ10,000/-மாகவும் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) தற்போது இயற்கை மரணத்திற்கு ரூ.15,000/- மற்றும் ஈமச் சடங்கிற்கு ரூ.2,000/-மும் வழங்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியக் கூட்டம் நடைபெறும்போது இதுகுறித்து ஆய்வு செய்யப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

19—

தையற் கூலி

வினா எண் 19063—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தையல் கூட்டுறவுச் சங்க பெண் உறுப்பினர்களுக்கு தையற் கூலி உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ, மாணவிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 2011-12 ஆம் கல்வியாண்டு முதல் இலவச சீருடையைத் தைத்து வழங்க மகளிர் தையற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்டவாறு கூலி உயர்த்தப்பட்டுள்ளது:

இனம்	தையற் கூலி (பழைய கூலி)*	தையற் கூலி (உயர்த்தப்பட்ட கூலி)
	ரூ. பை.	ரூ. பை.
அரைக்கால் சட்டை	8.25	16.74
மேல்சட்டை	7.81	16.74
பாவாடை	4.88	12.49
பிளவுஸ்/சோளி	6.94	15.04
தாவணி	2.75	5.69

**2007 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ, மாணவிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முறையே அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், பாவாடை தாவணிக்குப் பதிலாக சல்வார் கமீசும், 2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் வழங்க ஆணையிடப்பட்டு, அதனடிப்படையில் இலவசச் சீருடையைத் தைத்து வழங்க மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்டவாறு கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

இனம்	தையற் கூலி (நிர்ணயிக்கப்பட்டது)
	ரூ. பை.
முழுக்கால் சட்டை (ஆண்)	50.00
சட்டை (ஆண்)	25.00
சல்வார் கமீசு (பெண்)	50.00

மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு தற்போது 100 சதவிகிதம் தையற் கூலியை உயர்த்தி புதிய கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தையற் கூலி மட்டுமல்லாமல் துணி வெட்டுபவர் கூலி மற்றும் போக்குவரத்துக் கட்டணமும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

20—

மின் உற்பத்தி சாதனங்கள்

வினா எண் 9027—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித் துறையின் 16 தணிக்கை சாவடிகளுக்கு மின் உற்பத்தி சாதனங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டின் பகுதி 2 திட்டத்தின் கீழ், அரசாணை (டி) எண் 141, வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள்: 4-11-2011-ன்படி, வணிக வரித் துறை சோதனைச் சாவடிகளுக்கு மின் உற்பத்தி சாதனங்கள் வாங்க ரூ.12.16 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. மேலும், 2011-2012 ஆம் ஆண்டு வணிக வரித்

2012 நவம்பர் 2]

துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் வணிக வரித் துறையிலுள்ள அனைத்து சோதனைச் சாவடிகளும் நவீனமயமாக்கப்படும் என அறிவிப்பு செய்ததன்பேரில், அரசாணை (நிலை) எண் 94, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 9-7-2012-ல், பிற இனங்களுடன், ஏழு பெரிய சோதனைச் சாவடிகளுக்கு டீசல் ஜெனரேட்டர் வாங்க ரூ.28 இலட்சங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. விரைவில் இவை வாங்கப்பட உள்ளன.

21—

மேம்படுத்துதல்

வினா எண் 9067—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலைய வகுப்பறைகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.11.80 இலட்சம் செலவில் உரிய தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டு குளிர்பதன வசதியுடன் வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலைய வகுப்பறைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

22—

கட்டண விலக்கு

வினா எண் 17237—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அரசின்கீழ் இயங்கும் எந்தத் துறையின் அலுவலகங்களிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கோருவதற்கு கட்டண விலக்கு அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1138, பொதுத் துறை, நாள் 14-11-2005-ல் தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்படி வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் அரசுத் துறைகளிடம் இருந்து தகவல் பெற கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையைத் தவிர வேறு எந்தவிதமான கட்டண விலக்கு அளிக்கும் கருத்துருக்களும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்ற விவரத்தைத் தெரிவிக்கலாம்.

23—

சொந்தக் கட்டடம்

வினா எண் 18310—திரு. ஒ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் நகரிலுள்ள வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 43, வணிக வரி மற்றும் பதிவுத் (டி.2) துறை, நாள் 20-3-2012-ன்படி

2012 நவம்பர் 2]

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் நகரிலுள்ள வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூபாய் 88 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. விரைவில் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

24—

செந்நோய்

வினா எண் 9723—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பயிரிடப்படும் கரும்பு பயிரில் செந்நோய் தாக்கி வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்தில் கரும்பு பயிர் சுமார் 5,000 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. கரும்பு பயிரைத் தாக்கும் நோய்களில் செவ்வழுகல் நோய் முக்கியமானதாகும். இந்நோயினைத் தடுக்க 0.1 சதவீதம் கார்பன்டாசிம் (அ), 0.05 சதவீதம் டிரைடிபிபான் கரைசலில் விதை கரணை நேர்த்தி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட இரகங்களான கோ 62198, கோ 7704, கோக 8001, கோ 8201 முதலியன பரிந்துரை செய்யப்படுகிறது. இந்நோய் மற்றும் தடுப்பு முறைகள் குறித்தான விழிப்புணர்வு கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் வேளாண்மைத் துறை விரிவாக்கப் பணியாளர்கள்மூலம் கோடைமுகாம், விவசாயப் பயிற்சிகள் மற்றும் கிராமப்புற பயிற்சிகள் ஏற்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும், நடப்பு மாதம் துவங்கப்பட்டுள்ள உழவர்

[2012 நவம்பர் 2

பெருவிழாவின்போது இந்நோய் மற்றும் கரணை விதை நேர்த்தி முதலிய தொழில் நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்து இந்நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்நோய் கரும்பு விதை கரணைமூலம் பரவுவதால், கரும்பு விதை நேர்த்தி தொழில் நுட்பத்திற்கு முக்கியத்துவம் அளித்திட, விதைக் கரணை வழங்கும் கரும்பாலைகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

25—

இலாபகரமான தொழில்

வினா எண் 13379—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மையை இலாபகரமான தொழிலாக மாற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண்மையை இலாபகரமான தொழிலாக மாற்ற பல்வேறு திட்டங்களான திருந்திய நெல் சாகுபடித் திட்டம், தீவிர பயிர் சாகுபடித் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட பயிர் பெருக்குத் திட்டம், நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டம் போன்ற திட்டங்கள் வேளாண்மைத் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், சில புதிய திட்டங்கள் 2012-13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ளன.

26—

பணிகளின் விவரம்

வினா எண் 15771—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் கரூர், திண்டுக்கல், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தருமபுரி, திருச்சி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விவரம் என்ன?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் ரூ.129.95 இலட்சம் செலவில், 2676 எக்டர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளும், ரூ.840.01 இலட்சம் செலவில் 1795 எண்ணிக்கையிலான நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும், ரூ.133.95 இலட்சம் செலவில் 2038 எக்டர் பரப்பளவில் தாவர வளப் பணிகளும் மொத்தம் ரூ.1103.91 இலட்சம் செலவில் 2011-2012 ஆம் ஆண்டில் கரூர், திண்டுக்கல், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

27—

பயிற்சி வகுப்புகள்

வினா எண் 17354—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மை இயந்திரமயமாக்குதலின்கீழ் பயிற்சி வகுப்புகளை நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

2011-2012 ஆம் ஆண்டில் 105 பயிற்சிகள் ரூ.31.851 இலட்சத்தில் அளிக்கப்பட்டன. அதேபோன்று இவ்வாண்டும் 110 பயிற்சிகள் ரூ.33.55 இலட்சத்தில் செயலாக்க, உரிய பிரேரணை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும் செயல்படுத்தப்படும்.

28—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 17362—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம் பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியுடன் விழுப்புரம் மாவட்டத்தில், திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம் 2008-09 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 2011-12 ஆம் ஆண்டுடன் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இப்பணிகளுக்காக ரூ.2329.09 இலட்சம் செலவழிக்கப்பட்டு, திட்டம் 2011-12-ல் முடிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

29—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 17363—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

2011-12 ஆம் ஆண்டு பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டம், கொடிவேரி அணைக்கட்டுத் திட்டம் பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், கொடிவேரி அணைக்கட்டுத் திட்டத்தில் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 2008-2009 ஆம் நிதியாண்டில் திட்டம் தொடங்கப்பட்டு, 2011-12 ஆம் நிதியாண்டு முடிய உள்ள காலங்களில் 8,884, 455 ஹெக்டர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை இப்பணிகளுக்கு (31-3-2012 முடிய) ரூ. 1,924.80 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி இத்திட்டம் 2011-12 ஆம் நிதியாண்டு முடிய செயல்படுத்தப்பட்டு, முடிவடைந்துள்ளது.

30—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 17364—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-12 ஆம் ஆண்டில் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், குண்டாறு-சித்தாறு-கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டப் பாசனப்பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டத்தில் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசு

[2012 நவம்பர் 2

நிதியுதவியுடன் குண்டாறு-சித்தாறு-கருப்பாநதி நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் பாசனப்பகுதிகளில் 2008-2009-ல் பணிகள் தொடங்கப்பட்டு, 2011-12 ஆம் நிதியாண்டு முடிய 15,002 ஹெக்டர், பரப்பளவில் பண்ணை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக இதுவரை ரூ.3,373.29 இலட்சம் செலவழிக்கப்பட்டு பண்ணை மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, திட்டம் 2011-12 ஆம் நிதியாண்டில் முடிக்கப்பட்டுள்ளது.

31—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 17365—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-12 ஆம் ஆண்டில் பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கரூர், திண்டுக்கல் மாவட்டங்கள் குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம், பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் 2010-11 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 2011-12 ஆம் ஆண்டு வரை 2747.69.5 ஹெக்டர் பரப்பில் ரூ. 527.52 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில் 2011-12 ஆம் ஆண்டுடன் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. நடப்பாண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் 800 ஹெக்டர் பரப்பில் ரூ. 174.90 இலட்சத்தில் பணிகள்

2012 நவம்பர் 2]

நிறைவேற்றிட உத்தேசிக்கப்பட்டு, 2012-13-ல் குடகனாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் திட்டம் முடிக்கப்பட உள்ளது.

32—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 17367—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டப் பாசனப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டத்தில், வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் 2008-2009 ஆம் நிதியாண்டு முதல் 2011-12 ஆம் நிதியாண்டு முடிய 9649.87 ஹெக்டேர் பரப்பில் ரூ.2422.10 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2011-2012 ஆம் ஆண்டுடன் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டு திட்டம் முடிக்கப்பட்டுள்ளது.

33—

மின்னணு வங்கியியல் வசதிகள்

வினா எண் 18378—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்னணு வங்கியியல் வசதிகளை மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, கூட்டுறவுச் சங்கங்களிடையே பணப் பரிமாற்றம் செய்ய ஏதுவாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் மின்னணு வங்கியியல் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும் மின்னணு வங்கியியல் தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியின் தலைமையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

34—

நிதி ஒதுக்கீடு

வினா எண் 13355—திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டத்திற்கு அகழிகள் வெட்ட போதுமான நிதி ஒதுக்கீடு செய்யவும், வன விலங்குகளால் இறக்கும் மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை அதிகம் வழங்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதிலும், குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலை வனப் பகுதிகளில் இருந்து காட்டு யானைகள் வெளியே வந்து மனிதர்களுடன் மோதல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், யானையினால் ஏற்படும் இறப்பைத் தடுக்கும் பொருட்டும் அரசு சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நடப்பு ஆண்டில் கூடலூர்

2012 நவம்பர் 2]

வனக் கோட்டத்தில் 20 கி.மீ. தொலைவிற்கு யானை புகா அகழி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், யானைகள் உணவுக்காகவும், குடிநீருக்காகவும், வனத்தைவிட்டு வெளியே வராமல் இருக்கும்பொருட்டு வனப்பகுதியில் தரைமட்ட நீர்த்தொட்டி, நீர்த்துளைகள், தடுப்பணைகள், கசிவு நீர்க்குட்டைகள் போன்றவை அமைத்து நீர் ஆதாரத்தைப் பெருக்கவும், தீவனத் தோட்டங்கள் அமைத்து உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வன உயிரினங்களால் இறக்கும் மக்களுக்கு இழப்பீட்டுத் தொகையினை அதிகரிக்கும்வண்ணமாக மனித உயிரிழப்பிற்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ரூ.1.50 இலட்சம் இழப்பீட்டுத் தொகையினை, ரூ.3.00 இலட்சமாக உயர்த்தி வழங்க அரசு ஆணை எண் 98, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, நாள் 17-8-2011-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, வன உயிரினத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.3.00 இலட்சமாக நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கூடலூர் கோட்டத்தில் மட்டும் வன உயிரினத்தால் தாக்கப்பட்டு 7 நபர்கள் உயிரிழந்துள்ளனர். முழுமையான அளவில் பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், 4 குடும்பங்களுக்கு ரூ.5.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இறந்தவர்கள் மூன்று நபர்களின் குடும்பத்தாரிடமிருந்து நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதும் உடனடியாக அக்குடும்ப வாரிசுதாரர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

35—

கேமரா டிராப்

வினா எண் 15281—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் சிறுத்தைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க கேமரா டிராப் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி கோட்டத்திற்குட்பட்ட வால்பாறை பகுதிகளில் வன விலங்குகளின் அதாவது புலி, சிறுத்தை மற்றும் கரடி ஆகிய மாமிச உண்ணிகளின் கணக்கெடுப்பிற்காகவும், வனப் பகுதிகளில் அவற்றின் நடமாட்டத்தைக் கண்டறிவதற்காகவும் வனப் பகுதிகளில் ஆங்காங்கே கேமரா டிராப் (Camera Trap) பொருத்தப்பட்டுள்ளது.

ஆனைமலை புலிகள் காப்பகக் கோட்டத்தில் 2008-2009 முதல் 2011-2012 வரை மொத்தம் 86 கேமரா டிராப்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலையிலும் வன உயிரின நடமாட்டத்தைக் கண்காணிக்க கேமரா டிராப் பொருத்தப்பட்டு 45 நாட்களுக்குப் பிறகு வேறு வேறு பகுதிகளுக்கு மாற்றி, வன உயிரின நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது.

36—

கம்பி வேலி

வினா எண் 19926—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையைச் சுற்றிலும் வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க கம்பி வேலி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் அரசு தோட்டக்கலைப் பண்ணையானது ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், பூவாணி என்னும் பகுதியில் தோட்டக்கலைத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது. இது ஸ்ரீவில்லிபுத்தூர் ஒதுக்குக்காடு,

2012 நவம்பர் 2]

குன்னூர் பீட் எல்லையிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவுக்கு அப்பால் அமைந்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஒதுக்குக்காடு எல்லைப் பகுதியில் 2011-2012 ஆம் ஆண்டில் 2 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின்வேலி பணியும், 1 கி.மீ. நீளத்திற்கு யானை தடுப்பு அகழியும் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு தோட்டக்கலைப் பண்ணைப் பகுதிக்கு வன உயிரினம் வருவதற்கான வாய்ப்பு மிகவும் அரிது. இதுநாள் வரையில் இப்பகுதியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையை வன உயிரினங்கள் ஏதும் சேதப்படுத்தியதில்லை. இப்பகுதி வன உயிரினங்கள் வருகையற்ற பகுதியாகும். எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையைச் சுற்றிலும் வன விலங்குகளிடமிருந்து பாதுகாக்க கம்பி வேலி அமைத்துத்தர வேண்டிய தேவை எழவில்லை.

37—

மருத்துவக் குழுக்கள்

வினா எண் 8998—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெறும் வகையில் 155 நடமாடும் கால்நடை மருத்துவக் குழுக்கள் அமைக்க உள்ளதா என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011-12-ன்கீழ் 155 கால்நடை மருத்துவக் குழுக்கள் பின்வரும் மாவட்டங்களில் அமைக்க கால்நடை மருத்துவர்கள் தெரிவு

[2012 நவம்பர் 2

செய்யப்பட்டு, மருத்துவர்கள் பணியில் சேர்ந்த பகுதியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வ. எண்	பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பெயர்கள்	மருத்துவக் குழுக்களின் எண்ணிக்கை
1.	காஞ்சிபுரம்	7
2.	விழுப்புரம்	17
3.	வேலூர்	22
4.	தர்மபுரி	8
5.	சேலம்	16
6.	ஈரோடு	15
7.	கோயம்புத்தூர்	9
8.	மதுரை	16
9.	திண்டுக்கல்	4
10.	திருச்சிராப்பள்ளி	12
11.	தஞ்சாவூர்	2
12.	புதுக்கோட்டை	1
13.	சிவகங்கை	11
14.	விருதுநகர்	2
15.	திருநெல்வேலி	11
16.	கன்னியாகுமரி	2
	மொத்தம்	155

38—

நிலம் கையகப்படுத்துதல்

வினா எண் 9007—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், அம்மாபாளையத்தில் பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க நிலம் கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தாலுகா, அம்மாபாளையம் மேல்முடியனூர் கிராமத்தில் 39.52 ஏக்கர் நிலப் பரப்பில் பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக முதல் கட்டமாக 21.57 ஏக்கர் நிலம், ஒன்றியத்தின் பெயரில் 25-1-2006-ல் கிரையம் செய்யப்பட்டது. இரண்டாம் கட்டமாக, 16.60 ஏக்கர் நிலம் 9-4-2007-ல் கிரையம் செய்யப்பட்டது. இறுதி கட்டமாக, பால் பவுடர் தொழிற்சாலையின் பிரதான வழிப் பாதைக்காக 1.35 ஏக்கர் நிலம் கட்டாய நில ஆர்ஜிதம் மூலம் 28-4-2010-ல் கிரையம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நபார்டு திட்டத்தின்மூலமாக ரூ.60.18 கோடி செலவில் இந்த பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

39—

கறவை இயந்திரங்கள்

வினா எண் 10511—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

நடப்பாண்டில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் 100 தானியங்கி பால் கறவை

[2012 நவம்பர் 2

இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 2010-2011 மற்றும் 2011-2012 ஆம் ஆண்டுகளில் இதற்கான நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை. எனவே, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அல்லது இதர திட்டங்களின்கீழ் 2011-2012-ல் தானியங்கி பால் கறவை இயந்திரங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

40—

மருத்துவக் குழுக்கள்

வினா எண் 15455—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 8.34 கோடி ரூபாய் செலவில் 155 நடமாடும் கால்நடை மருத்துவக் குழுக்கள் நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011-2012ன்கீழ் 155 கால்நடை மருத்துவக் குழுக்கள் 16 மாவட்டங்களில் அமைக்க கால்நடை மருத்துவர்கள் தெரிவு செய்யப்பட்டு, மருத்துவர்கள் பணியில் சேர்ந்த பகுதியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

41—

பாலகங்கள்

வினா எண் 15462—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் 3 இடங்களில் நவீன பாலகங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் கீழ்க்காணும் மூன்று இடங்களில் நவீன பாலகங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1. அசோக் நகர், 2. பெசன்ட் நகர் 3. வளசரவாக்கம். இதில் அசோக் நகரில் புதிய பாலகம் அமைக்கப்பட்டு, கடந்த இரண்டு மாதங்களாகச் செயல்பட்டு வருகிறது. மற்ற இரண்டு இடங்களிலும் நவீன பாலகங்கள் அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

42—

சாலை செப்பனிடுதல்

வினா எண் 15463—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணை பிரதான சாலை, மாத்தூர் முதல் மெடிமிக்ஸ் முனையம் வரை, ஆணையர் அலுவலக உள்சாலைகளும் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் பால் பண்ணை சாலையை செப்பனிடுதல் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு மாதவரம் பால் பண்ணை பிரதான சாலைப் பணி (மாத்தூர் முதல் மெடிமிக்ஸ் முனையம் வரை) 17-5-2012 அன்று வேலை துவக்கப்பட்டு தொடர்ச்சியாக பணி நடைபெற்று வருகின்றது.

43—

கற்றுச்சுவர்

வினா எண் 15464—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) மாதவரம் பால் பண்ணை பழத்தோட்டத்திற்கு சுற்றுச்சுவர் 550 மீட்டர் நீளம் அமைக்கும்செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் பால் பண்ணை பழத்தோட்டத்திற்கு சுற்றுச்சுவர் 550 மீ. நீளம் அமைக்கும் பணி தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அப்பணி செய்வதற்குத் தேவையான கட்டுமானப் பொருட்கள் சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

44—

பால் விரிவாக்க மையங்கள்

வினா எண் 15478—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு சார்பற்ற சேவை நிறுவனங்களின் உதவியுடன் கிராமப்புறங்களில் 1,500 பால் விரிவாக்க மையங்களை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் அரசாணை எண் 200 விவசாய (வி.உ.) துறை, நாள்: 31-10-2011 மூலம் அரசால் ரூ.310.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலம் அரசு சாரா நிறுவனங்கள் உதவியுடன் பின்வரும் 12 மாவட்டங்களில் 1,500 பால் விரிவாக்க மையங்களை அமைக்க அரசு ஆணை (2டி) எண் 7, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத்

2012 நவம்பர் 2]

(பாஉ 2) துறை, நாள்: 1-2-2012-ல் அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:

1.	தூத்துக்குடி	7.	தஞ்சாவூர்
2.	சிவகங்கை	8.	நாகப்பட்டினம்
3.	விருதுநகர்	9.	அரியலூர்
4.	புதுக்கோட்டை	10.	காஞ்சிபுரம்
5.	கடலூர்	11.	திருவள்ளூர்
6.	விழுப்புரம்	12.	கிருஷ்ணகிரி

மேலும், மேலே தெரிவித்துள்ள மாவட்டங்களில் 1,500 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

45—

மேம்படுத்துதல்

வினா எண் 15501—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பகம்மூலம் கிருஷ்ணகிரி பால் பண்ணையில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலை மற்றும் ஈரோடு பால் பவுடர் தொழிற்சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011-2012-ன்கீழ் அதன் துணைத் திட்டமான தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பகம் என்ற திட்டத்தில் அரசாணை எண் 198, வேளாண்மை (வே.உ1) துறை, நாள் 31-10-2011 மூலம் கிருஷ்ணகிரி மற்றும் ஈரோட்டில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலையை மேம்படுத்த அரசால் ரூ.256 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2012 நவம்பர் 2

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் ரூ.90 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி பால் பண்ணையில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலையை மேம்படுத்துவது மற்றும் ரூ.166 இலட்சம் செலவில் ஈரோடு பால் பண்ணையில் உள்ள பால் பவுடர் தொழிற்சாலையை மேம்படுத்துவது தொடர்பான பணிகள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

46—

மேம்படுத்துதல்

வினா எண் 15504—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் பால் பண்ணைகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் 2011-2012-ன்கீழ் ரூ.270 இலட்சம் மற்றும் தேசிய புரதச் சத்து வழங்கும் அமைப்பின் மூலம் ரூ.90 இலட்சமும் நிதியுதவி பெறப்பட்டு கிருஷ்ணகிரி பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

வேலூர் பால் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ.223 இலட்சம் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தூய பால் உற்பத்தி திட்டத்தின்மூலம் வேலூர் ஒன்றியத்திற்கு தொகுப்பு பால் குளிர்விப்பான்

2012 நவம்பர் 2]

நிறுவுவதற்கும் மற்றும் விவசாயிகளுக்கு தூய பால் உற்பத்தி பற்றிய பயிற்சியை அளிப்பதற்கும் மத்திய அரசு இரண்டு வருட காலத்திற்கு ரூ. 172.44 இலட்சம் அனுமதியளித்துள்ளது. இதில் முதலாமாண்டு நிதியாக ரூ.64.07 இலட்சம் பெறப்பட்டு இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

47—

குத்தகை

வினா எண் 16533—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல், திருப்புவனம் ஒன்றியம், லாடனேந்தல் ஆகிய இடங்களிலுள்ள பட்டுப்பூச்சி வளர்த்த இடங்களைத் தனியாருக்கு குத்தகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல் கிராமம் மற்றும் திருப்புவனம் ஒன்றியம், லாடனேந்தல் கிராமம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட அரசு மாதிரி பட்டுப் பண்ணைகளின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டு, பண்ணை நிலம் "ஏந்தல் கண்மாய்", அதாவது நீர்நிலை புறம்போக்கு என்ற காரணத்தால் வருவாய்த் துறையிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டு, தற்போது வருவாய்த் துறையின் பொறுப்பில் உள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

48—

விரி சுவர்

வினா எண் 2467—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் கிராமம் அருகிலுள்ள கீழ்குளத்தின் விரி சுவரை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் கிராமம் அருகிலுள்ள கீழ்குளத்தின் விரி சுவரை ரு.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி 2011-2012-ல் முடிக்கப்பட்டுவிட்டது.

49—

தண்ணீர் வசதி

வினா எண் 2468—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்திற்குட்பட்ட ஆனைகுளம், கறுப்புகாய்குளம், அய்யப்பனேரிகுளம், தங்கயம்குளம், வில்வனம்புதூர்குளம், கோனார்குளம், தோம்பாக்குளம் ஆகிய குளங்களுக்குத் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைகுளம் கிராமத்தில் உடைந்துபோன அணை ரூ.800.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு, 26-11-2011 முதல் ஆனைகுளம், கறுப்புகாய்குளம், அய்யப்பனேரிகுளம், தங்கயம்குளம், வில்வனம்புதூர்குளம், கோனார்குளம், தோம்பாக்குளம் ஆகிய குளங்களுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

2012 நவம்பர் 2]

50—

விரி சுவர்

வினா எண் 3717—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் கிராமத்தின் அருகில் உள்ள கீழ்குளத்தின் விரி சுவர் சேதமடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை யாது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கண்ணநல்லூர் கிராமம் அருகிலுள்ள கீழ்குளத்தின் சேதமடைந்துள்ள விரி சுவரை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி 2011-2012-ல் முடிக்கப்பட்டுவிட்டது.

51—

மழைநீரை சேகரித்தல்

வினா எண் 5106—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏரி, குளங்களுக்கு வரும் மழைநீர்க் கால்வாய்கள், காணாறுகளைச் சீர்படுத்தி மழைநீரை முழுமையாகச் சேமித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டமானது தெரிவு செய்யப்பட்ட 60 உபவடிநிலங்களில் ரூ.2547 கோடி மதிப்பீட்டில் 2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2013 வரை செயல்படுத்தப்படும்.

[2012 நவம்பர் 2

இத்திட்டத்தின்கீழ் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 2457 ஏரிகள், 402 அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளின் வரத்துக் கால்வாய்கள் 4260 கி.மீட்டர் நீளத்திற்கு புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் 2465 ஏரிகள், 267 அணைக்கட்டுகள் மற்றும் 3,813 கி.மீட்டர் நீளம் உள்ள வரத்துக் கால்வாய்களைப் புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், வெள்ளம் ஏற்படும் காலங்களில் தேவைப்படும் இடங்களில் தற்காலிக மறு சீரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் ஏரி, குளங்களுக்கு வரும் நீரை முழுமையாகச் சேமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

52—

கடற்பாசிகள்

வினா எண் 6644—திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாசன வடிகால், ஆறுகள் கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் சேறு, வாட்டி எனும் கடற்பாசிகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

பாசன வடிகால், ஆறுகள் கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் சேறு மற்றும் வாட்டி எனும் கடற்பாசிகளினால் அதிக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் அவ்வப்போது வருடாந்திர பராமரிப்பு மற்றும் மராமத்து நிதியின்மூலம் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

53—

பூங்கா சீரமைத்தல்

வினா எண் 7617—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல், பார்த்திபனூர் மதகு அணையில் உள்ள பூங்காவை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வேதியரேந்தல் கிராமத்திலுள்ள பார்த்திபனூர் மதகு அணையில் உள்ள பூங்காவில், இம்மதகு அணை பராமரிப்பிற்கென ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து, தேவைக்கேற்ப சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பூங்கா நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

54—

கான்கிரீட் கூரை

வினா எண் 9309 திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப் பணித் துறை வளாகத்தில் டார்மிட்டரி குடியிருப்புகளின் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் பொதுப் பணித் துறை வளாகத்தில் உள்ள டார்மிட்டரி குடியிருப்புகளின் கூரையை கான்கிரீட் கூரையாக மாற்றும் பணிக்கு 2011-2012 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.28 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, 31-3-2012-ல் பணிகள் செய்து முடிக்கப்பட்டன.

[2012 நவம்பர் 2

55—

குடியிருப்பு

வினா எண் 9310—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பொதுப் பணித் துறை அலுவலர் வளாகத்தில் கண்காணிப்புப் பொறியாளர் குடியிருப்பு கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரத் துறை, திட்டங்கள், வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் குடியிருப்பு கட்டுவதற்காக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5-1-2012-ல் பணி துவங்கி 31-3-2012-ல் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

56—

வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்

வினா எண் 9321—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் நிதியுதவிமூலம் திருவள்ளூர் மாவட்டம், ஏ.என்.குப்பம் அணைக்கட்டின் மேல், கீழ் நீர்வழிப் பாதைகள் மற்றும் லட்சுமிபுரம் அணைக்கட்டின் நீர்வழிப் பாதைகளில் நடைபெறும் வெள்ளப் பாதுகாப்புப் பணிகளின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதியுதவிமூலம் திருவள்ளூர் மாவட்டம், ஆரணியாற்றில் ஏ.என்.குப்பம் அணைக்கட்டின் மேல்,

2012 நவம்பர் 2]

கீழ் நீர்வழிப் பாதைகள் மற்றும் லட்சுமிபுரம் அணைக்கட்டின் நீர்வழிப் பாதைகளில் நடைபெறும் வெள்ளப் பாதுகாப்பு மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள் அனைத்தும் முழுவதுமாக முடிவடைந்துள்ளன.

57—

வெள்ளத் தடுப்புப் பணி

வினா எண் 9322—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் நிதியுதவிமூலம் தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட பகுதிகளில் கொள்ளிடம் ஆற்றில் நடைபெறும் வெள்ளத் தடுப்புப் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதியுதவிமூலம் தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட பகுதிகளில் கொள்ளிடம் ஆற்றில் நடைபெறும் வெள்ளத் தடுப்புப் பணி 92 விழுக்காடு முடிக்கப்பட்டுள்ளது.

58—

வெள்ளப் பாதுகாப்புப் பணி

வினா எண் 9323—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் நிதியுதவிமூலம் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வடிநிலத்தில் நடைபெறும் வெள்ளப் பாதுகாப்புப் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதியுதவிமூலம் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் வெள்ளாறு வடிநிலத்தில் நடைபெற்ற வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

[2012 நவம்பர் 2

59—

வெள்ளத் தடுப்புப் பணிகள்

வினா எண் 9325—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் நிதியுதவிமூலம் திருவள்ளூர் மாவட்டம், கொசஸ்தலையாற்றில் நாப்பாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை நடைபெறும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

மத்திய அரசின் நிதியுதவிமூலம் திருவள்ளூர் மாவட்டம், கொசஸ்தலையாற்றில் நாப்பாளையத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை நடைபெறும் வெள்ளத் தடுப்புப் பணிகள் அனைத்தும் முழுவதுமாக முடிவடைந்துள்ளன.

60—

புனரமைத்தல்

வினா எண் 9339—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு பகுதியில் கல்லணைக் கால்வாயை நபார்டு கடன் உதவித் திட்டத்தில் புனரமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாடு பகுதியில் ரூ.26.06 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதி உதவியின்கீழ் கல்லணைக் கால்வாயை புனரமைக்க திட்டமிடப்பட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

2012 நவம்பர் 2]

61—

புனரமைத்தல்

வினா எண் 9343—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டியில் உள்ள நெய்க்காரப்பட்டி ஏரிவரத்துக் கால்வாயை நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் புனரமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, கொண்டலாம்பட்டி கிராமத்தில் நெய்க்காரப்பட்டி ஏரியின் வழங்கு வாய்க்காலினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் பணியானது ரூ. 270 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு கடன் உதவித் திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு விட்டன.

62—

திறன் மேம்பாடு

வினா எண் 9346—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் பாளையம் பரவு வாய்க்கால், பிடி. ராஜன் வாய்க்கால்களின் நீர் கடத்தும் திறனை நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் அதிகப்படுத்தும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் பாளையம் பரவு வாய்க்கால், பிடி. ராஜன் வாய்க்கால்களின் நீர் கடத்தும் திறனை

[2012 நவம்பர் 2

அதிகப்படுத்தும் திட்டப் பணியானது நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் ரூ. 10.08 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் அனைத்தையும் அக்டோபர் 2013-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

63—

படுகை அணை

வினா எண் 9347—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மந்திவலசை அருகே வைகையாற்றின் குறுக்கே நபார்டு கடன் உதவித் திட்டம்மூலம் படுகை அணை அமைக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், போகலூர் ஒன்றியத்தில் மந்திவலசை அருகே வைகை ஆற்றின் குறுக்கே கவரி படுகை அணை கட்டும் பணியானது நபார்டு வங்கி நிதியுதவிமூலம் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னமும் இரண்டு மாத காலத்திற்குள் முழுமையாக முடிக்கப்பட்டுவிடும்.

64—

பாலம் கட்டுதல்

வினா எண் 9411—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாயின் குறுக்கே பாலம் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடமுகம் வெள்ளோடு கிராமத்தில் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மைல் 65-6-200-ல் குறுக்கே பாலம் கட்டும் பணிக்கு அரசாணை எண் 206, பொதுப் பணி (எஸ்.1) துறை, நாள் 1-11-2011-ல் ரூ. 60.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இப்பணிக்கான பணித்தளம் 4-5-2012 அன்று ஒப்பந்தக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டு பாலத்தின் அடித்தள கான்கிரீட் பணி நடைபெற்று வருகின்றது.

65—

கட்டுப்படுத்துதல்

வினா எண் 9948—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதி வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்பதைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறை மற்றும் காவல் துறை ஆகியோருடன் இணைந்து கூட்டு நடவடிக்கை மேற்கொண்டு, கண்காணித்து மானாமதுரை தொகுதி, மானாமதுரை பகுதி வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்பது தடுக்கப்படும்.

66—

பாசனப் பகுதிகள்

வினா எண் 13987—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாசனப் பகுதிகளில் கூடுதல் பணிகளைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தின் பாசனப் பகுதிகளை மாநில திட்டம், நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM), நபார்டு மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்மூலம், முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

67—

மேம்படுத்துதல்

வினா எண் 1400—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு நதிகளில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு நதிகளின் நீர் ஆதார அமைப்புகள் உலக வங்கி நிதி உதவியுடன், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுவிட்டன.

68—

மேம்படுத்துதல்

வினா எண் 14002—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், மேல் வெள்ளார் நதிகளில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் (IAMWARM) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் முதல் கட்டமாக (Phase-1) தமிழகத்தில் உள்ள 9 துணை படுகைகளில் உள்ள நீர் ஆதார அமைப்புகளைப் புனரமைத்து மேம்படுத்த ரூ. 399.26 கோடிகளுக்கான பணிகளுக்கு அரசாணை எண் 43, பொ.ப. (டபிள்யு-ஆர்-1) துறை, நாள் 26-2-2007-ல் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணிகளில் சேலம் மாவட்டம், மேல் வெள்ளார் நதிகளில், நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த மூன்று சிப்பங்களாக ரூ. 29.39 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

[2012 நவம்பர் 2

69—

மேம்படுத்துதல்

வினா எண் 14006—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கம்பைநல்லூர் நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் கம்பைநல்லூர் துணை வடிநிலப்பகுதியில் உள்ள அணைக்கட்டுகள்-ஏரிகளை சீரமைக்க உலக வங்கியின் நிதியுதவியின்மூலம் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.969.61 இலட்சங்கள் அளவிலான மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 50% பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் யாவும் 08/2012-க்குள் முழுமையாகச் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் முழுமையாக முடிவடைந்த பின்னர், இப்பகுதியிலிருந்த விடுபட்ட பாசனப் பரப்பு 1580.92 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

70—

தண்ணீர் வழங்குதல்

வினா எண் 14472—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, ஒட்டர்பாளையம் ஏரியிலிருந்து கால்வாய் அமைத்து, கோதவாடி குளம், தேவம்பாடி குளம்,

2012 நவம்பர் 2]

புலிப்பாறை அணை ஆகியவற்றிற்குத் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளப்பாளையம் (ஒட்டர்பாளையம்) ஏரியிலிருந்து கோதவாடி குளத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லும் திட்டத்திற்கான தோராய மதிப்பீடு ஒன்று 325 கோடி ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளது. புலிப்பாறை தடுப்பணை, கோதவாடி குளத்தின் கீழ்ப்புறம் உள்ளதால் கோதவாடி குளம் நிரப்பும்பொழுது அதன் உபரி நீரினால் புலிப்பாறை தடுப்பணையும் பயன் பெறும். பள்ளப்பாளையம் (ஒட்டர்பாளையம்) ஏரியிலிருந்து தேவம்பாடி குளத்திற்கு நீர் வழங்க இயலாது. ஏனெனில், தேவம்பாடி குளம், கோதவாடி குளத்தை விட உயர்மட்டத்தில் உள்ளது.

71—

ஒப்பந்தம்

வினா எண் 14584—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, நெய்யாறு இடதுகரை சானலில் தண்ணீர்விட கேரள அரசோடு ஒப்பந்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெய்யாறு பாசனத் திட்டம் அப்போதைய திருவாங்கூர்–கொச்சி அரசால் முதலாம் மற்றும் இரண்டாம்

[2012 நவம்பர் 2

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, 1965 ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்திலுள்ளது. 1956 அண்டைய மாநிலங்கள் திருத்தியமைக்கும் சட்டத்தின்படி (States Reorganisation Act, 1956) திருவாங்கூர்—கொச்சின் அரசின் கட்டுப்பாட்டிலிருந்த விளவங்கோடு வட்டம், தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்டது. இதனால், சுமார் 9,200 ஏக்கர் பாசனப் பரப்பு தமிழ்நாட்டுடன் இணைந்தது. தமிழ்நாட்டில் உள்ள பகுதிக்கு நெய்யாறு இடதுபுறக் கால்வாய்மூலம் கேரள அரசு தண்ணீர் அளித்தபோதிலும், அதனுடைய பாசனத் தேவையான 150 கன அடி நீரைவிட குறைவாகவே அளித்து வந்தது. இருப்பினும், பிப்ரவரி 2004 முதல் தண்ணீர் அளிப்பதை கேரள அரசு நிறுத்திவிட்டது.

2. நெய்யாறு அணை திட்டத்திற்கான மூலதனச் செலவைப் பகிர்ந்து கொள்ளுதல்; தமிழ்நாட்டிற்கு நீர் விடுவித்தல் போன்றவற்றிற்காக கேரள அரசின் இசைவு கோரி தமிழ்நாடு ஒரு வரைவு ஒப்பந்தத்தை 1971-ல் அனுப்பி வைத்தது. தமிழ்நாடு அனுப்பிய வரைவு ஒப்பந்தத்தை கேரள அரசு ஏற்கவில்லை. 1999-ல், நெய்யாறு ஒரு பன்மாநில நதி அல்ல, எனவே, ஒப்பந்தம் ஏதும் தேவையில்லை என்ற நிலைப்பாட்டினை கேரள அரசு தெரிவித்தது.

3. தமிழக அரசு, நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்றும், கேரளா, இந்நதி ஒரு பன்மாநில நதி அல்ல என்றும் தொடர்ந்து தெரிவித்து வந்தது. எனினும், ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், தமிழக அரசு மீண்டும் ஒரு வரைவு ஒப்பந்தத்தினை மே, 2009-ல் கேரள அரசுக்கு அனுப்பியது. கேரள அரசு ஜனவரி 2010-ல் அதன் வரைவு ஒப்பந்தத்தை அனுப்பி, தமிழக அரசின் இசைவினைக் கோரியது. கேரள அரசின் வரைவு ஒப்பந்தம் தமிழகத்திற்கு பாதகமாக இருந்ததால், அதனை தமிழக அரசு ஏற்கவில்லை. தமிழக — கேரள அரசுகளுக்கு ஏற்புடைய ஒரு வரைவு ஒப்பந்தத்தை உருவாக்கிட தொழில்நுட்ப அலுவலர்கள் நிலையில் திருவனந்தபுரத்தில் மே 2011-ல் நடைபெற்ற கூட்டத்தில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இதற்கிடையில், மத்திய அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு ஒப்பந்தத்தினை ஏற்படுத்துவதற்கும் மற்றும் ஒப்பந்தம் ஏற்படுவதை எதிர்நோக்கி, நெய்யாறு அணையிலிருந்து நீரை விடுவிப்பதற்கும் கேரள அரசுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வருகிறது.

2012 நவம்பர் 2]

4. இத்தகைய சூழ்நிலையில், தமிழகத்தின் உரிமையை நிலை செய்யவும் மற்றும் நெய்யாறு விவசாயிகளின் நலன் கருதியும், தமிழக அரசு 30-5-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில், ஒரு வழக்கினையும் (Original Suit) மற்றும் ஓர் இடைக்கால மனுவினையும் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கில், நெய்யாற்றிலிருந்து தடையேதுமின்றி நீரை விடுவிக்க கேரள அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவற்றிற்கு உத்தரவிட வேண்டியும், இந்த வழக்கு (Original Suit) முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரையில், (Pending disposal of the Suit), கேரள அரசு ஒவ்வொரு பாசன ஆண்டு காலத்திற்கும் கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு தாலுகாவில் உள்ள 9,200 ஏக்கர் பாசனம் பெறுவதற்கான நீரை, நெய்யாறு பாசனத் திட்டத்தின்கீழ் வழங்க கேரள அரசுக்கு உத்தரவிடக்கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

72—

தடுப்புச் சுவர்

வினா எண் 21500—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நாடியம்பாள்புரம் வாய்க்காலின் இருபுறமும் மற்றும் ராஜாமடம் வாய்க்காலின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை நாடியம்பாள்புரம் வாய்க்காலின் பாசனப் பரப்பு முழுவதும், நகராட்சி விரிவடைந்து வருவதால் வீட்டு மனைகளாகவும், தரிசு நிலங்களாகவும் உள்ளதால், வாய்க்காலின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான திட்டம் ஏதுமில்லை. ராஜாமடம் வாய்க்காலில் தேவையான இடங்களில் ரிவிட்மெண்ட் பணி ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்களில் ரிவிட்மெண்ட் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

[2012 நவம்பர் 2

73—

சம்பள உயர்வு

வினா எண் 10889—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு சம்பளம் உயர்த்தி வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் இயங்கி வரும் அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு குந்தகம் இல்லாமல், இடைக்கால நிவாரணமாக ஏற்கெனவே வழங்க வேண்டியிருந்த 10 சதவீதம் நிலுவை நிவாரணத் தொகையுடன் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் வழங்கி அரசாணை (நிலை) எண் 104, தொழில் (எம்ஐசி2) துறை, நாள் 18-05-2012-ல் ஆணை வெளியிடப்பட்டது.

74—

இணைத்தல்

வினா எண் 15843—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பிரிவில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் இணைப்பது தொடர்பான கருத்துரு அரசு கடித எண் 22747A/CV1/2007-5, நாள் 20-10-2008-ல் அனுப்பப்பட்டு அதன் மீது மைய அரசு கோரிய கூடுதல் விவரங்களுடன் நரிக்குறவன் என்கிற குருவிக்காரன் இனத்தை தமிழக அரசின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மைய அரசுக்கு அரசு கடித எண் 22747A/CV1/2007-7, நாள் 16-07-2012-ல் பரிந்துரை செய்யப்பட்டு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

75—

விழாக்கள்

வினா எண் 19091—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்திலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தின்மூலம் 2011-12 ஆம் ஆண்டில் என்னென்ன விழாக்கள் நடத்தப்பெற்றன?

விடை—

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

உதகமண்டலத்தில் முத்தோரை பாலாடா என்ற இடத்திலுள்ள பழங்குடியினர் ஆய்வு மையத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் விழாக்கள் நடத்தப்பெற்றன:

1. "குடியரசு தின விழா" – பழங்குடியினர் நடன நிகழ்ச்சி (ஜனவரி 26-2011)

2. "பழங்குடியினர் கைவினைப் பொருள்கள் செய்தல் மற்றும் கண்காட்சி" (12-03-2011 மற்றும் 13-3-2011).

[2012 நவம்பர் 2

3. "மானிடவியல் கற்பித்தல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி" (28-04-2011 மற்றும் 29-04-2011)

4. "சுதந்திர தின விழா" – பழங்குடியினர் நடன நிகழ்ச்சி (ஆகஸ்டு 15-2011)

5. "குடியரசு தின விழா" – பழங்குடியினர் நடன நிகழ்ச்சி (ஜனவரி 26-2012)

6. "பழங்குடியினர் கலை விழா" (மே 18-5-2012 முதல் 20-05-2012.

7. பழங்குடியினர் கைவினைத் திறன்கள் காட்சிப்படுத்த விழா (தேசியப் பழங்குடியினர் நல ஆணையத்தினர் 01-07-2012 வருகையின்போது)

76—

வரலாறு

வினா எண் 2983—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், 1956-ல் தமிழகத்துடன் இணைந்த வரலாற்றை தமிழக அரசு பாடத்திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தமிழகத்துடன் இணைந்த வரலாற்றை பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து அரசுக்கு கருத்துரு பெறப்படின், அதனை மாநில பொது பள்ளிக் கல்வி வாரியம் பரிசீலித்து பாடத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

2012 நவம்பர் 2]

77—

இடமாற்றம்

வினா எண் 3944—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலுள்ள ஒளவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள வன அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி ஒளவையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பழைய மருத்துவமனை வளாகம் இவற்றின் இடையில் 2.01 ஏக்கர் நிலப்பரப்பில் வனச் சரக அலுவலகம் உள்ளது. தருமபுரி வனச் சரக அலுவலகம், பணியாளர்கள் குடியிருப்பு வளாகம் மற்றும் வன ஓய்வு இல்லம் ஆகியவை இயங்குவதால் இந்நிலத்தினை தருமபுரி மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு வழங்க இயலாது.

78—

தொடக்க/நடுநிலைப் பள்ளிகள்

வினா எண் 5355—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் தொடக்க/நடுநிலைப் பள்ளிகளை அரசு எடுத்து நடத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

அரசு உதவி பெறும் பள்ளிகளின் நிருவாகிகள் முழு சம்மதத்துடன் பள்ளியை அரசுக்கு பள்ளிக் கட்டடத்துடன்

[2012 நவம்பர் 2

ஒப்படைக்க விருப்பம் தெரிவித்தால், அரசாணை (நிலை) எண் 2010 கல்வி அறிவியல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 19-10-1983-ன்படி அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் பட்சத்தில், அந்தப் பள்ளிகளை அரசு பள்ளியாக ஏற்றுக் கொள்ள பரிசீலனை செய்யப்படும்.

79—

தொல்லியல் துறை

வினா எண் 6763—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொல்லியல் துறையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் தொல்லியல் துறையினை மேம்படுத்த ரூ.54.55 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 13-வது நிதிக் குழு (2011-2015) மானியத்தின்கீழ் மத்திய அரசின் நிதியுதவியில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 85 சின்னங்களில், 31 வழிபாட்டுக் கோயில்களில் ரூ.585.00 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும், ரூ.415.00 இலட்சம் செலவில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளவும் ஆக மொத்தம் ரூ.1,000 இலட்சம் (ரூ.10 கோடி) செலவில் மேற்சொன்ன பணிகளை மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2012 நவம்பர் 2]

80—

பணியிடங்கள்

வினா எண் 7361—திரு. க. தினகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர், அரசு பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாகவுள்ள அரசுப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

1. சூலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி பணியிடங்கள் விவரம். முதுகலை ஆசிரியர் 10. பட்டதாரி ஆசிரியர் 23 மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடம் 2.

2. சூலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி பணியிடங்கள் விவரம். முதுகலை ஆசிரியர் 11. பட்டதாரி ஆசிரியர் 20 மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடம் 6.

மேற்காண் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன.

81—

செயல்படுத்துதல்

வினா எண் 9147—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, தலைமைச் செயலகம் மற்றும் தமிழ்நாட்டில் பிற அரசு அலுவலகங்களில் தமிழை ஆட்சி மொழியாக தீவிரமாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தலைமைச் செயலகத் துறைகளிலும் அவற்றின்கீழ் வரும் துறைத் தலைமை அலுவலகங்கள், சார்நிலை அலுவலகங்கள் ஆகியவற்றிலும் தமிழ் ஆட்சிமொழி செயலாக்கம் குறித்து துறைவாரியாக ஆய்வு செய்யும் வகையில் சிறப்பாய்வுத் திட்டம் தொடங்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் அரசு அலுவலகங்களில் சிறப்பாய்வுப் பணி அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் ஈடுபாடு காட்டாத நிலை தெரியவரின், உரிய துறைத் தலைமை அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு செயல்பாடுகள் தமிழில் அமைவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், தலைமைச் செயலகம் மற்றும் தமிழ்நாட்டின் பிற அரசு அலுவலகங்களில் தமிழை ஆட்சி மொழியாகத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும் நிலை எழவில்லை.

82—

மின்வசதி

வினா எண் 14967—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சிக் கோட்டைக்கு மின்வசதி மற்றும் அலங்கார மின்விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சிக்கோட்டை தற்போது மத்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, செஞ்சிக்

2012 நவம்பர் 2]

கோட்டையில் மின்வசதி மற்றும் அலங்கார மின்விளக்குகளை மாநில அரசால் அமைக்க இயலாது.

83—

பரிசுகள்

வினா எண் 15960—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் சிறப்பு வரைவுகள், குறிப்புகள் எழுதிய எத்தனை அரசுப் பணியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன?

(ஆ) மாநில மற்றும் மாவட்ட அளவில் எத்தனை பேர் பரிசு பெற்றனர்?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் மாநில அளவில் வழங்கப்படவில்லை. மாவட்ட அளவில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர்கள் மொத்தம் 89 நபர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

84—

கி. ஆ. பெ. விசுவநாதம் விருது

வினா எண் 15961—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012ஆம் ஆண்டில் தமிழ் நெறியில் தமிழ்த் தொண்டாற்றும் பெருந்தகையாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு கி. ஆ. பெ. விசுவநாதம் விருது வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, முனைவர் இரா. மோகன் அவர்களுக்கு 16-01-2012 அன்று சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது.

85—

பாரதியார் விருது

வினா எண் 15963—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் பாரதியார் நெறி பரப்பும் தகைமையாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு பாரதியார் விருது வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டிற்கான பாரதியார் விருது, முனைவர் இரா. பிரேமா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விருது, 16-01-2012 அன்று சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது.

86—

திரு.வி.க. விருது

வினா எண் 15965—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2012 நவம்பர் 2]

(அ) 2011-12 ஆம் ஆண்டில் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்கு திருவி.க. விருது வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டிற்கான திரு.வி.க. விருது, முனைவர் நா. ஜெயப்பிரகாசு அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விருது 16-01-2012 அன்று சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது.

87—

திருவள்ளுவர் விருது

வினா எண் 15966—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-12 ஆம் ஆண்டில் திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர் ஒருவர் தேர்வு செய்யப்பெற்று அவருக்கு திருவள்ளுவர் விருது வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது, புலவர் செ. வரதராசன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விருது, 16-01-2012 அன்று சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது.

88—

ஆட்சி சொல்லகராதி

வினா எண் 15969—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆட்சிச் சொல்லகராதியின் 7ஆம் பதிப்பு வெளியிடப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆட்சிச் சொல்லகராதியின் 7ஆம் பதிப்பு வெளியிடப்படவில்லை.

(ஆ) ஆட்சிச் சொல்லகராதியின் 7ஆம் பதிப்பில் வெளியிடப்பட வேண்டிய சொற்கள் தட்டச்சிடும் பணி நிறைவடைந்துள்ளது. ஒப்பு நோக்கும் பணி நிறைவடைந்தவுடன் சொற்கள் அரசு மைய அச்சகத்தில் அளிக்கப்பட்டு நூல் விரைந்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

89—

பாராட்டுச் சான்று

வினா எண் 15984—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-12 ஆம் ஆண்டில் தமிழில் புதிய நூல்களுக்கு 31 வகைப்பாடுகளில் போட்டிகள் நடத்தி இதன் நூலாசிரியருக்கும், பதிப்பகத்தாருக்கும், பரிசும் பாராட்டுச் சான்றும் வழங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்திற்கான போட்டிகள் நடத்தப் பெற்றன. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூலாசிரியருக்கும், பதிப்பகத்தாருக்கும் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) 13-4-2012 அன்று நடைபெற்ற சித்திரைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூலாசிரியருக்கும், பதிப்பகத்தாருக்கும் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டுவிட்டன.

90—

பெயர் சூட்டுதல்

வினா எண் 17172—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கையில் தமிழ் உயர் ஆய்வு மையம் அமைத்து, தியாகி சிவகங்கை இராஜேந்திரன் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் செம்மொழி உயராய்வு மையம், திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாவேந்தர் பாரதிதாசன் உயராய்வு மையம், சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் தமிழ் உயராய்வுப் பணிகளை மேற்கொண்டு வரும் நிலையில், சிவகங்கையில் தமிழ் உயராய்வு மையம் அமைக்கும் திட்டத்திற்கு அவசியம் எழவில்லை.

[2012 நவம்பர் 2

91—

உதவித் தொகை

வினா எண் 11373—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் விபத்து ஊனத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகையை ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.20,000/- முதல் ரூ.1,50,000/- வரை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்வியலிலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் திரையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினை புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் பெருமளவில் சேர்க்கப்பட்டு, வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் விபத்து ஊனத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/- வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித்தொகையை ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.20,000/- முதல் ரூ.1,50,000/- ஆக வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

2012 நவம்பர் 2]

92—

ரொக்கத் தொகை

வினா எண் 11376—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர் ஆகியோருக்கு வழங்கப்படும் ரொக்கத் தொகையை ரூ.20 ஆயிரமாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு, நல்ல திரைப்படங்களை ஊக்குவிப்பதற்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2. மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களை ஊக்கப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

3. அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர் ஆகியோருக்கு ஒரு பவுண் தங்கப்பதக்கம் மற்றும் ரொக்கத் தொகை ரூ.5,000/- வழங்கப்பட்டு வருகிறது. இந்த ரொக்கத் தொகையை ரூ.20,000/-ஆக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

[2012 நவம்பர் 2

93—

வித்தகர் விருதுகள்

வினா எண் 11386—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் எத்தனை கலைஞர்களுக்கு கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டன?

(ஆ) இவ்விருதுகளுடன் ரொக்கத் தொகையும் வழங்கப்படுகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனத்தில் இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தியாகராஜபாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான கலைத் துறை வித்தகர் விருதுகள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கலைத் துறை வித்தகர் விருதுகளுடன் ரொக்கத் தொகை வழங்கப்படுவதில்லை.

94—

வலியுறுத்துதல்

வினா எண் 11394—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

மத்திய அரசின் பதிப்புரிமைத் திருத்தச் சட்டமுன்வடிவை நிலைக் குழுமூலம் விரைந்து ஆய்வு செய்து பாராளுமன்றத்தில் சட்டமாக்க மத்திய அரசை, மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் பதிப்புரிமை திருத்தச் சட்டமுன்வடிவு பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 17-05-2012 அன்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அதனைத் தொடர்ந்து 22-05-2012 அன்று மக்களவையிலும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி திருத்தப்பட்ட சட்டமுன்வடிவில் மாநில அரசிற்கென்று குறிப்பிடத்தக்க அதிகாரங்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

95—

இயந்திரங்கள்

வினா எண் 15335—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 26.25 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் அரசு மைய அச்சகத்திற்கு ரூ. 26.25 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வாங்க அரசாணை (நிலை) எண் 228, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 12-10-2011-ல் ஆணை வழங்கப்பட்டது. அதன்படி,

[2012 நவம்பர் 2

கணினி, கணினிகளுக்கான மேசைகள் மற்றும் நாற்காலிகள், கேஸ் மேக்கிங் இயந்திரம், சிங்கிள் ஹெட் கம்பியடிக்கும் இயந்திரம், கைரேகை பதிக்கக்கூடிய காலங்குறிக்கும் இயந்திரம், தீயணைப்பான்கள், லேசர் பிரிண்டர், தடையில்லா மின் வழங்கும் 2 KVA, 5 KVA இயந்திரம், கோம்ப் வயரோ பைண்டிங் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டன. புரோகிராம் கட்டிங் இயந்திரம், நியுமாட்டிங் பண்டலிங் மற்றும் ஐலெட் பஞ்சிங் இயந்திரங்களுக்கான கொள்முதல் நடவடிக்கையில் உள்ளது.

96—

பணியிடம்

வினா எண் 13518—திரு. சு. ரவி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் காலியாக உள்ள ஆண் செவிலியர் உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடத்தை உடனடியாக நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் இருந்த ஆண் செவிலியர் உதவியாளர் பணியிடம் அரசாணை (டி) எண் 625, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 27-6-2003 வாயிலாக கலைக்கப்பட்டுவிட்டது. எனவே, மேற்படி மருந்தகத்தில் ஆண் செவிலியர் உதவியாளர் பணியிடம் ஏதும் வெற்றிடமாக இல்லை. எனவே, மேற்கண்ட ஆணையின்படி ஆண் செவிலியர் உதவியாளர் பணியிடம் கலைக்கப்பட்டுவிட்டதால் அப்பணியிடத்தை நிரப்ப இயலாது. மேலும், பணியாளர் தேர்வு நடைபெறும்போது நிரப்பப்படாமலிருக்கும் உதவியாளர் பணியிடம் நிரப்பப்படும்.

2012 நவம்பர் 2]

97—

இடமாற்றம்

வினா எண் 14039—திரு. சு. ரவி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் மாடியில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவனையை கீழ் தளத்தில் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் எந்த ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தையும் இடமாற்றம் செய்வது, வேறு கட்டடம் தேர்வு செய்வது, அதற்கான வாடகை ஒப்பளிப்பது போன்ற நடவடிக்கைகளை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மேற்கொண்டு வருவதால், அரக்கோணம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை மாடியிலிருந்து கீழ் தளத்திற்கு உடனடியாக மாற்றம் செய்ய இயலாது.

(ஆ) இருப்பினும், இதுகுறித்து சென்னை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக மாநில மருத்துவ ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கீழ் தளத்தில் செயல்படத்தக்க வகையில் வேறு கட்டடத்தைத் தேர்வு செய்து, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், கீழ் தளத்தில் அரக்கோணம் தொ.அ.ஈ. மருந்தகம் செயல்படத் துவங்கும்.

98—

ஊதிய உயர்வு

வினா எண் 14488—திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசாணை (2டி) எண் 34, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 15-6-2008-ன்படி குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 274, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 8-9-2004-ன்படி குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையிலுள்ள தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் நான்காண்டுகளுக்கு ஒரு முறை செய்யலாம் எனவும், அதற்கான நடவடிக்கை, முதல் நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யப்பட்ட தேதியிலிருந்து 3 ஆண்டு முடிந்தவுடன் தொடங்கப்படும். அதன்படி தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய மறுநிர்ணயம் செய்ய தொழிலாளர் ஆணையரிடமிருந்து பரிந்துரைகள் தற்போது பெறப்பட்டு, அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. ஆகவே தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தி வழங்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

99—

ஊதிய உயர்வு

வினா எண் 14492—திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓய்வு பெறும் தினக்கூலி மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடையாக ஒரு வருட சேவைக்கு 15 நாள் ஊதியம் என்று இருப்பதை 30 நாட்களாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மத்திய அரசு சட்டமான 1972 ஆம் வருடத்திய பணிக்கொடை பட்டுவாடா சட்டப் பிரிவு 4-ன்படி 5 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில், வருடத்திற்கு 15 நாட்கள் வீதம் பணிக்கொடை கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதனை மத்திய அரசு மாற்றம் செய்யாததால், ஒரு வருடத்திற்கு 30 நாட்களாக உயர்த்துவதற்கு மேற்படி சட்டத்தின்கீழ் வழிவகையில்லை.

100—

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

வினா எண் 19205—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் முன்னோட்டித் திட்டமாகச் செயல்படுத்தும் தொழிலாளர் தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், தமிழ்நாட்டிலுள்ள ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் உள்ள குடும்பங்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 4 இலட்சம் வரை மருத்துவக் காப்பீடு பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டதால், காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்ட தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை (இராஷ்டிரிய ஸ்வஸ்திய பீம யோஜனா) மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவது கைவிடப்பட்டுள்ளது.

[2012 நவம்பர் 2

பட்டியல் 7

1—

மின் திருட்டு

வினா எண் 5540—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் திருட்டு மற்றும் மின்கம்பி இழப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அனைத்து மின் இணைப்புகளும் கணக்கீடு செய்யப்படுகின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். மின் திருட்டை ஒடுக்க முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள 40 குழுக்கள் (25 குழுக்கள் 3-10-2011 தேதி முதலும், 15 குழுக்கள் 26-12-2011 தேதி முதலும்) அமைக்கப்பட்டுள்ளன. 31-3-2012 வரை 8,254 மின் திருட்டுகளைக் கண்டுபிடித்துள்ளன. அவற்றின் மூலம் விதிக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை மற்றும் சமரசத் தொகை ரூ.19.74 கோடி ஆகும்.

(ஆ) மீட்டர் பொருத்தப்பட்டுள்ள அனைத்து மின் இணைப்புகளிலும் மின் கணக்கீடு தவறாமல் நடைபெறுகிறது. எங்கேனும் கணக்கீட்டாளர் இல்லாத பிரிவுகளில், வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களை அமர்த்தி மின் கணக்கீடு செய்யப்படுகிறது.

2—

மின் இழப்பைக் குறைத்தல்

வினா எண் 16080—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) ஒட்டுமொத்த தொழில்நுட்பம் மற்றும் வணிக இழப்புகள் 18.5 சதவீதமாக உள்ளதை 2012 ஆம் ஆண்டிற்குள் 18 சதவீதமாகக் குறைக்கஅரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின் கட்டமைப்புகளில் ஏற்படும் மின் இழப்பு அதனுடைய உள்ளமை குணமாகும். தகுந்த பொருட்செலவின் மூலம் இந்த மின் இழப்பைக் குறைக்க முடியுமே ஒழிய, முற்றிலுமாகத் தவிர்க்க இயலாது.

தமிழ்நாடு மின்சார வாரியம் தொழில்நுட்ப மற்றும் வணிக ரீதியான மின் இழப்பைக் குறைத்திட கீழ்க்கண்ட மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

1. *உயர் மின் அழுத்த விநியோகப் பாதைகளுக்கும், தாழ்வு மின் அழுத்த விநியோகப் பாதைகளுக்கும் உள்ள விகிதத்தை மேம்படுத்த, புதிய உயர் மின் அழுத்த விநியோகப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் குறைந்த திறனுள்ள உயர் மின் அழுத்த விநியோக மின் மாற்றிகளைப் புதிதாக நிறுவுதல் (HVDS)*
2. *புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல்*
3. *அதிகத் திறனுள்ள மின் கம்பிகளைப் பயன்படுத்துதல்*
4. *உயர் மின் அழுத்த மின் தேக்கிகளை துணை மின் நிலையங்களில் நிறுவுதல்*
5. *திருத்தியமைக்கப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 110 நகரங்கள் மற்றும் நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தானியங்கி மின் அளவீட்டு முறையில் இயங்கும் மின் அளவிகள் எல்லா மின்னூட்டிகளிலும் மின் மாற்றிகள் வரை பொருத்தப்பட்டு மின் அளவு கணக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் எல்லா மின் அழுத்த நிலைகளிலும் மின் இழப்பைத் துல்லியமாகக் கணக்கீடு செய்ய இயலும்.*

[2012 நவம்பர் 2

மின் வாரியம், மின்னிழப்பை முடிந்த அளவு குறைப்பதற்கு, மிகுந்த பொருட் செலவில் தொடர்ந்து மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

3—

பழுது பார்த்தல்

வினா எண் 3875—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், பாக்குடி ஊராட்சி, விட்டாநிலைப்பட்டி ஆதி திராவிடர் காலனியில் பழுதடைந்த வீடுகளை மராமத்து செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4—

சிறப்பு நிதி

வினா எண் 8439—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் உள்ள ஆதி திராவிடர்களின் வீடுகளை மராமத்து செய்ய அரசு சிறப்பு நிதி ஒதுக்கித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5—

தார்ச்சாலை

வினா எண் 8689—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம்—இடையன்குடி சாலை—கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, கைலாசபேரி செல்லும் சாலையை தார்ச்சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, கைலாசபேரி ஊர் வரை 2010-2011 ஆம் நிதியாண்டில் இராதாபுரம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம்) மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

6—

குடியிருப்பு பராமரிப்பு

வினா எண் 11102—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், ஒச்சப்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்பை பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7—

பழுது நீக்கம்

வினா எண் 11103—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், நம்பம்பட்டி ஊராட்சி, கவரப்பட்டி ஆதி திராவிடர் காலனி குடியிருப்புகளில் பழுது நீக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2012 நவம்பர் 2]

8—

பழுது நீக்கம்

வினா எண் 11104—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை ஒன்றியம், விருதாப்பட்டி ஊராட்சி, செட்டியபட்டி ஆதி திராவிடர் காலனி குடியிருப்புகளில் பழுது நீக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அரசு திட்டங்களின்மூலம் பத்து வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை வரையறுக்கப்படாத நிதியிலிருந்து ரூ.25,000/-க்கு மிகாமல் பழுதுபார்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

9—

பசுமைக்குடில் வீடுகள்

வினா எண் 16481—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் 60 ஆயிரம் பசுமைக்குடில் வீடுகள் சூரிய ஒளி விளக்குகளுடன் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு (Chief Minister's Solar Powered Green House) திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில், 300 சதுர அடி பரப்பளவில், ரூ.180 இலட்சம் அலகுத் தொகையில், மாநில அரசின் முழு நிதியுதவியுடன் பசுமை வீடு கட்டித் தரப்படுகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் 60,000 வீடுகள் கட்டுவதற்குத் தேவையான ஆணைகள் மற்றும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், அரசாணை (நிலை) எண் 46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை, நாள் 17-8-2011-ல் வெளியிடப்பட்டு, இப்பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

10—

நிதியுதவி

வினா எண் 190491—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியினை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண் சிசுக்கொலையை ஒழிக்கவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்கை மட்டுப்படுத்தவும், சிறு குடும்ப முறையை ஊக்குவிக்கவும், 1992 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ3,000/-ம், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் தலா ரூ.1,500/-வீதம் வைப்புத் தொகை ரசீதுகள் அப்பெண்

2012 நவம்பர் 2]

குழந்தையின் பெயரில் வைப்பீடு செய்யப்பட்டு, வைப்பீடு பத்திரம் வழங்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் திட்டம்—1-ன்கீழ் குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை மட்டும் இருப்பின், அப்பெண் குழந்தையின் பெயரில் இருபது ஆண்டுகளுக்கு ரூ.22,200/-ம் திட்டம் 2-ன்கீழ் குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் இருபது ஆண்டுகளுக்கு தலா ரூ.15,200/-ம் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டது. 2011-2012 ஆம் ஆண்டில் திட்டம்-1-ன்கீழ் வழங்கப்படும். ரூ.22,200/- வைப்பீட்டுத் தொகை ரூ.50,000/- ஆகவும் திட்டம்—2-ன்கீழ் வழங்கப்படும் ரூ.15,200/- வைப்பீட்டுத் தொகை ரூ.25,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்டுள்ள இந்த நிதிப் பயன் 1-8-2011 அன்றோ, அதற்குப் பிறகோ பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 2001 முதல் 2012 வரை 4.31 இலட்சம் பெண் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக ரூ.655,71 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டில் 64.43 சதவீதமாக இருந்த பெண் கல்வி விகிதாச்சாரம், 2011 இல் 73.86 சதவீதமாக உயர்ந்துள்ளதற்கு மாநிலத்தில் செயல்படுத்தப்படும் இத்திட்டமும் ஒரு முக்கிய காரணமாகும்.

11—

சார்பதிவாளர் அலுவலகம்

வினா எண் 3760—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவிகாபுரம் தேரூரில் இயங்கி வந்த சார்பதிவாளர் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) தேவிகாபுரம் மற்றும் தேஞ்சூரில் மூடப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களை மீண்டும் திறப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

12—

பயிற்சி மையக் கட்டடம்

வினா எண் 17979—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் இந்தியக் குடிமைப் பணிகள் பயிற்சி மையக் கட்டடம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையக் கட்டடம் நவீன வசதிகளுடன் நான்கு தளங்களுடன் ஜெனரேட்டர், மின்வசதி, நூலகம், உணவுக் கூடம், குளிர்சாதன வசதி கொண்ட கலையரங்கம், வகுப்பறைகள் மற்றும் மாணவ/மாணவியர்கள் தங்கும் அறைகள் ஆகிய வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு மிக விரைவில் திறக்கும் தறுவாயில் உள்ளது.

13—

முத்திரைத்தாள் வரி

வினா எண் 19452—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2012 நவம்பர் 2]

(அ) முத்திரைத்தாள் வரியை 5% ஆகக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விற்பனை மற்றும் அதே நிலையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்படும் ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 6 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைத்து அரசாணை நிலை எண் 46, வணிக வரி மற்றும் பதிவு (ஜே)த் துறை, நாள் 27-3-2012-ல் ஆணையிடப்பட்டு, 1-4-2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

14—

நெல் சேமிக்கும் நிலையம்

வினா எண் 8700—திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, மாமண்டூர் பகுதியில் நெல் சேமிக்கும் நிலையம் அமைக்கும் செயல் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் மதுராந்தகம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் செயல்படுகிறது. மேற்படி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 1,000 டன் கொள்ளளவு உள்ள ஒரு ஊரகக் கிட்டங்கியும் 1,000 டன் கொள்ளளவு உள்ள ஒரு ஏலக் கொட்டகையும் விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. மாமண்டூர் பகுதி விவசாயிகள் 15 கி.மீ. தொலைவில் உள்ள மேற்படி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் கிட்டங்கியினை நெல் உட்பட அனைத்து விளைபொருட்களையும் இருப்பு வைத்து பயன்பெற்று வருகின்றனர்.

[2012 நவம்பர் 2

மேலும், மாமண்டூர் கிராமம், வையாவூர் பிர்க்காவிற்கு உட்பட்டு உள்ள கிராமமாகும். வையாவூர் பிர்க்காவில் சுமார் 1,875 எக்டேர் பரப்பளவில் 13,125 மெடன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி விவசாயிகள் மதுராந்தகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினைப் பயன்படுத்துவதால், தற்போதைய நிலையில் மாமண்டூர் பகுதியில் நெல் சேமிக்கும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

15—

தடுத்தல்

வினா எண் 9904—திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எடை போடுவதற்கு கட்டணம் வசூலிப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, அவலூர்பேட்டை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எடை போடுவதற்கு கட்டணம் ஏதும் இத்துறை அலுவலர்களால் வசூலிக்கப்படுவதில்லை. மேலும், விவசாயிகள் விற்பனைக்காகக் கொண்டுவரும் தங்களது விளைபொருட்களை தொழிலாளர்கள் எடை போடுகிறார்கள். இவ்வாறு எடை போடுவதற்கு எடைக்கூலியாக மூட்டை ஒன்றுக்கு ரூ.4/-வீதமென எடை போடும் தொழிலாளர்கள் வியாபாரிகளிடம் வசூலித்துக் கொள்கின்றனர். துறை அலுவலர்கள்மூலமாக மேற்படி எடைக் கூலி தொகைகள் வசூல் செய்யப்படுவதில்லை. வணிகர்கள் மற்றும் எடைப்பணி தொழிலாளர்களிடையே எடைக்கூலி தொகைகள் நிர்ணயம் செய்யப்படுகிறது.

2012 நவம்பர் 2]

16—

ஒளிபரப்பு

வினா எண் 13077—திரு. ஜே.ஜி பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து தமிழ் தொலைக்காட்சிகளிலும் விவசாயம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை 2 மணி நேர கட்டாய ஒளிபரப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) அனைத்து தமிழ் தொலைக்காட்சிகளிலும் விவசாயம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை 2 மணி நேரம் கட்டாய ஒளிபரப்பு செய்திட அரசின் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

17—

பணிகள்

வினா எண் 15213—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் ஏதேனும் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

2011-2012 ஆம் ஆண்டிற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்தவாறு ரூ.4719.00 இலட்சங்களுக்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள துறைவாரியாக

[2012 நவம்பர் 2

தொடர்புடைய துறைகளிடமிருந்து திட்டப் பிரேரணைகள் பெறப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்புடைய முக்கிய திட்டப் பிரேரணைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதற்கான ஆண்டுத் திட்டத்துக்கு மத்திய திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, அதற்கேற்ப பணிகளை துறை வாரியாக மேற்கொள்ள, அரசாணைகள் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் பிறப்பிக்கப்பட்டு திட்டப் பணிகள் சம்பந்தப்பட்ட துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2. 2012-2013 ஆம் ஆண்டு திட்டத்திற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளை மேற்கொள்ள மத்திய திட்டக்குழு ரூ.4734.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் அடிப்படையில் திட்ட இயக்குநர், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டம் அவர்கள் 2012-2013 ஆம் ஆண்டுக்கான திட்ட வரைவினைத் தயாரித்து, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளார். இத்திட்ட வரைவு, துறைவாரியாக ஆய்வு செய்யப்பட்ட பின்னர், இறுதி செய்யப்பட்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களது ஒப்புதல் பெறப்பட்டு, மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். ஒப்புதலுக்குப்பின் துறைவாரியாக பணிகள் மேற்கொள்ள அரசு ஆணைகள் வெளியிடப்படும்.

18—

மேம்பாட்டுப் பணிகள்

வினா எண் 15217—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 2011-2012 ஆம் ஆண்டில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் கீழ்க்காணும் துறைவாரியாக திட்டப் பணிகள் மேற்கொள்ள அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு அதற்கான திட்டப்பணிகள் நடந்தேறி வருகின்றன:

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	துறைகள்	கோயம்புத்தூர்	திருப்பூர்	மொத்தம்
1.	மண்வளப் பாதுகாப்பு	132.350	69.330	201.68
2.	வனம்	27.340	19.200	46.51
3.	ஆதி திராவிடர் நலன்	2.000	20.500	22.50
4.	பழங்குடியினர் நலன்	32.000	16.500	48.50
5.	சாலைகள்	59.680	-	59.680
6.	கால்நடை பராமரிப்பு	0.400	14.080	14.48
7.	புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளம்	5.100	-	5.100
	மொத்தம்	***258.840***	***139.61***	***398.45***

19—

துல்லிய பண்ணையத் திட்டம்

வினா எண் 15233—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துல்லிய பண்ணையத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துல்லிய பண்ணையத் திட்டம், கடந்த 2007-2008 ஆம் ஆண்டு முதல் கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைத் துறைமூலம் செயலாக்கம் செய்யப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வேளாண் பயிர்களில் துல்லிய பண்ணையம் அமைக்க, சொட்டு நீர் மற்றும் உரப்பாசனத் தொட்டி நிறுவ தேசிய நுண்ணீர்த் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைமூலம் நிதி பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. சென்ற 2011-2012ஆம் ஆண்டு 4,000 எக்டர் பரப்பில் ரூ.1043 இலட்சம் நிதி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நீரில் கரையும் உரம் மற்றும் முக்கிய இடு பொருட்களுக்கு 50 சதம் மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.25,000/- நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும் 4,000 விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்மூலம் துல்லிய பாசனத் திட்டம் குறித்து பயிற்சி வழங்கப்பட்டு வரப்படுகிறது. நடப்பு 2012-2013 ஆம் ஆண்டு 2,000 எக்டர் பரப்பில் ரூ.521.5 இலட்சம் நிதி இலக்கில் செயல்படுத்தப்பட உள்ளது.

20—

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

வினா எண் 15586—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி ஊராட்சி, நீர்பழனியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் 1. ஆலங்குடி, 2. அறந்தாங்கி, 3. புதுக்கோட்டை, 4. கந்தர்வக்கோட்டை, 5. ஆவுடையார்கோயில், 6. கீரனூர், 7. கீரமங்களம், 8. பொன்னமராவதி, 9. இலுப்பூர், 10. கறம்பக்குடி ஆகிய விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சராசரியாக 3,200 மெட்ன் அளவில் மட்டுமே வருடத்திற்கு வரத்துக்கள் உள்ளன. எனவே, விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனி ஊராட்சி, நீர்பழனியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்கு திட்டம் ஏதுமில்லை.

21—

திட்டப் பணிகள்

வினா எண் 15788—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் 2011-2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் விவரம் என்ன?

(ஆ) இப்பணிகள் தொடங்கப்பட்டுவிட்டனவா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் கீழ்க்கண்ட துறைவாரியாக திட்டப் பணிகள் மேற்கொள்ள அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதற்கான திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன:

[2012 நவம்பர் 2

வ. எண்	துறைகள்	மதுரை	கன்னியாகுமரி	திருநெல்வேலி	விருதுநகர்	தென்காசி	தேனி	மொத்தம்
		(ரூபாய் இலட்சத்தில்)						
1.	மண்வளப் பாதுகாப்பு	72.250	62.350	171.300	88.190	197.39	96.900	688.38
2.	வனம்	1.970	141.180	95.380	30.640	120.427	45.053	434.65
3.	ஆதி திராவிடர் நலன்	-	2.100	60.420	12.000	11.000	30.200	115.72
4.	பழங்குடியினர் நலன்	-	4.000	41.500	5.900	38.000	14.500	103.90
5.	சாலைகள்	-	-	49.130	-	-	-	49.13
6.	கால்நடை பராமரிப்பு	7.955	1.035	1.400	5.370	41.530	5.880	63.17
7.	மீன் வளம்	-	17.860	-	25.060	-	-	42.92
8.	சிறுபாசனம்	-	-	-	13.000	-	-	13.00
9.	பேரூராட்சிகள்	-	66.700	22.000	6.600	37.400	-	132.70
10.	பட்டு வளர்ப்பு	-	-	11.500	-	-	4.00	15.50
11.	புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளம்	-	4.100	-	-	3.200	28.360	35.66
12.	தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை	7.000	-	-	-	7.000	7.000	21.00
	மொத்தம்	**89.175**	**299.325**	**452.630**	**186.76**	**455.947**	**231.893**	**1715.73**

2012 நவம்பர் 2]

22—

விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 16566—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் காட்டாமணக்கு பயிர் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் காட்டாமணக்கு இறவையாக புறம்போக்கு மற்றும் பராமரிக்கப்படாத நிலங்களில் சாகுபடி செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டு சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காததால் தற்போது இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளது, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்மூலம் புதிய உயர் விளைச்சல் ரகம் அறிமுகப்படுத்தியதும் இத்திட்டம் தொடரப்படும்.

23—

கொள்முதல்

வினா எண் 16586—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் கோடையில் சாகுபடி செய்யப்படும் எள்ளை அரசே கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதியில் வேளாண்மைத் துறையின் மூலம் கோடைப் பருவத்தில் பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணைகளிலிருந்து பெறப்படும் எள்ளை விதைச் சான்று துறையினரால் சான்று பெற்ற விதைகள் எனச் சான்றளிக்கப்பட்ட பின்னர் மட்டுமே அரசால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) கோடையில் சாகுபடி செய்து பெறப்பட்ட சான்று பெற்ற எள் விதைகள், நடப்பு காரீப் 2012 பருவத்தில் கொள்முதல் செய்யப்படும்.

24—

விதை மாதிரிகள்

வினா எண் 17317—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யும் திட்டத்தினை விரைந்து முடிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் கீழ் தற்போது 29 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை, அரியலூர் தவிர) செயல்பட்டு வருகின்றன. இந்த விதைப் பரிசோதனை நிலையங்களில் பெறப்படும் விதை மாதிரிகள், விதைச் சட்டங்களுக்குட்பட்டு, விதைப் பரிசோதனை கையேட்டின்படி, பகுப்பாய்வு செய்யப்பட்டு, உரிய காலக்கெடுவிற்குள் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. எனவே, விதைச் சட்டங்களுக்குட்பட்டு, விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யும் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2012 நவம்பர் 2]

25—

அங்ககச் சான்றளிப்பு

வினா எண் 17319—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்ககச் சான்றளிப்புத் துறையின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பினை அங்ககச் சான்றளிப்பு பதிவின்கீழ் கொண்டு வரும் திட்டத்தை விரைந்து முடிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அங்ககச் சான்றளிப்புத் துறையின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 30,000 ஏக்கர் பரப்பினை அங்ககச் சான்றளிப்பு பதிவின்கீழ் கொண்டு வர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 29,062 ஏக்கர் பரப்பு அங்ககச் சான்றளிப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

26—

நில மேம்பாடு

வினா எண் 17328—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின்கீழ் நிலத்தை மேம்படுத்தும் பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் 2009-2010 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் 24 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 90:10 விகிதத்தில் மத்திய மாநில அரசின் நிதி விடுவிக்கப்பட்டு, நீர்வடிப்பகுதிகளில்

[2012 நவம்பர் 2

உள்ள நிலங்கள் மேம்படுத்தப்படுகின்றன. ஒரு நீர்வடிப்பகுதியில் இத்திட்டம் 5-7 ஆண்டுகள் வரை செயல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் முதல் தவணையாக மொத்த நிதி ஆதாரத்திலிருந்து 20% நிதி விடுவிக்கப்பட்டு, முதல் இரண்டு ஆண்டுகளில் ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்தகட்டமாக, 50% நிதி விடுவிக்கப்பட்டு, நில, நீர்வள மேம்பாட்டுப் பணிகள், நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகள், பண்ணை உற்பத்தி மற்றும் குறுந்தொழில் பணிகள் 3 முதல் 5 ஆண்டுகள் வரை மேற்கொள்ளப்படுகின்றன. நிறைவு கட்டப் பணிகளுக்கு 6 ஆம் ஆண்டில் மீதமுள்ள 30% நிதி விடுவிக்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, உற்பத்தி மற்றும் குறுந்தொழில்கள் மற்றும் நிறைவுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பணிகளை மேற்கொள்வதற்கு விரிவான செயல்முறைத் திட்டம், ஆண்டுவாரியாக மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி வகுக்கப்பட்டுள்ளது. செயல்முறைத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பணிகள் ஆண்டுதோறும், நீர்வடிப்பகுதியில் உள்ள பயனாளிகள் குழுக்கள்மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

27—

பண்படுத்தும் பணி

வினா எண் 17329—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (நவப்ரா) 2011-2012 ஆம் ஆண்டில் 20,583 எக்டர் நிலப்பரப்பை 12.35 கோடி செலவில் பண்படுத்தும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம். நவப்ரா திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டின் தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணியினை

2012 நவம்பர் 2]

விரைந்து முடிக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2011-2012 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கை கீழ்வருமாறு:

நிதி (ரூ. இலட்சத்தில்)		பரப்பு (ஹெக்டேர்)	
இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை
1237.086	664.032	20501	11067

இத்திட்டம் 2012-2013 ஆம் ஆண்டிலும் மைய அரசு நிதி பெறப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் செயல்படுத்த இயலாத நிலப்பரப்பு இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

28—

செயல் விளக்கங்கள்

வினா எண் 17355—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-2012 ஆம் ஆண்டில் 34 இலட்சம் ரூபாய் செலவில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இயக்குவது குறித்து செயல் விளக்கங்கள் 450-ஐ மேற்கொள்ளும் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இயக்குவது குறித்து செயல் விளக்கங்களுக்காக, 2011-2012 ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.15.09 இலட்சத்தில் 503 செயல் விளக்கங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2012 நவம்பர் 2

29—

உள்கட்டமைப்பு வசதிகள்

வினா எண் 17382—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூன்றாம், நான்காம் கட்டமாக நெல், மக்காச்சோளம், மிளகாய், பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகள் செய்யும் திட்டத்தினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண் விற்பனைத் துறையில் 2009-2012 ஆம் நிதியாண்டுகளில் கட்டம் 3-ல் 82 உலர் களங்களில் 43 கட்டி முடிக்கப்பட்டுள்ளன, 27 உலர் களங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 உலர் களங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்பட உள்ளன. பதினைந்து சேமிப்புக் கிடங்குகளில், ஐந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பத்து இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பத்து சேகரிப்பு மையங்களில், நான்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மூன்று பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்று பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட உள்ளன. ஆறு வேளாண் வணிக மையங்களில், ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மூன்று இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட உள்ளன.

2. 2011-2012 ஆம் நிதியாண்டில் கட்டம் 4-ல் நான்கு உலர் களங்கள், ஒரு சேமிப்புக் கிடங்கு மற்றும் இரண்டு உலர் களங்களுடன்கூடிய சேமிப்புக் கிடங்கு கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கும் தறுவாயில் உள்ளன.

2012 நவம்பர் 2]

30—

பண்ணைக் குட்டைகள்

வினா எண் 17530—திரு. சோழன் சி.த. பழனிச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், DPAP/IWMP திட்டத்தின்மூலம் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளை வேளாண்மை சார்ந்த பணிகளுக்குப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ், 2 நீர்வடிப் பகுதிகளில் 20 பண்ணைக் குட்டைகள் ரூ.10.00 இலட்சத்தில் அமைக்கப்பட்டு, 20 விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். மேலும், ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின் (2/2009-10)கீழ் 7 நீர்வடிப் பகுதிகள்மூலம் ரூ.42.00 இலட்சத்தில் 90 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 90 விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். இதனால் மழைக்காலங்களில் தண்ணீர் சேகரிக்கப்பட்டு, தண்ணீர் பற்றாக்குறை காலங்களில், வறட்சியான காலத்தில் பயிர் முழுமையாகக் காய்ந்து விடாமல் பாதுகாக்கவும் இதன் மூலம் மகசூல் பெறவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது 7 நீர்வடிப் பகுதிகளில், 110 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

31—

PVC குழாய்கள்

வினா எண் 21495—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

தென்னை விவசாயிகளுக்கு நீர்ப் பாசனம் செய்ய PVC குழாய்கள் மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தென்னை விவசாயிகளுக்கு நீர்ப் பாசனம் செய்ய PVC குழாய்களை மானிய விலையில் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை. எனினும், சொட்டுநீர் வழி உரமிடுதலுக்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்காக மொத்த செலவில் 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு மொத்த செலவில் 75 சதவீத மானியமும் அரசால் வழங்கப்படுகிறது.

2. நடப்பு 2012-2013 ஆம் ஆண்டில் தென்னை விவசாயிகள் பயனடையும் வகையில் 1,000 எக்டேர் பரப்பளவு சொட்டு நீர்ப்பாசனத்திற்கு இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

32—

கட்டட வசதி

வினா எண் 16911—திரு. க. ரவி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 17-வது வார்டிலுள்ள நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், வார்டு எண் 17, நியாயவிலைக் கடை, 1,665 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேற்படி நியாயவிலைக் கடைக்கு அரக்கோணம் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு

2012 நவம்பர் 2]

நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டவுடன், வாடகைக் கட்டடத்தில் செயல்படும் மேற்கண்ட நியாயவிலைக் கடை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்படும்.

33—

நிதி உதவி

வினா எண் 15481—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரமான பால் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த காஞ்சிபுரம்-திருவள்ளூர், திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, நீலகிரி, ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி, விழுப்புரம், வேலூர், தருமபுரி, சேலம், திருச்சி ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு மத்திய அரசு மூலம் நிதி உதவி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரமான பால் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசின் தூய பால் உற்பத்தித் திட்டத்தின்மூலம் காஞ்சிபுரம்—திருவள்ளூர், திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, நீலகிரி, ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி, விழுப்புரம், வேலூர், தருமபுரி, சேலம், மற்றும் திருச்சி ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 23.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இதில் மத்திய அரசின் மானியம் 19.03 கோடி ரூபாய் ஆகும். பயனீட்டாளர் பங்கு 4.39 கோடி ரூபாய் ஆகும். மத்திய அரசு இத்திட்டத்திற்கு இதுவரை 14.65 கோடி ரூபாய் மானியமாக அளித்துள்ளது.

[2012 நவம்பர் 2

34—

நிதியுதவி

வினா எண் 15506—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு நிதி உதவி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தீவிர பால் பெருக்குத் திட்டத்தை, சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்ட ஒன்றியங்களில் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கால அளவு ஐந்து ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு இதுவரை முறையே சிவகங்கை ஒன்றியத்திற்கு ரூ.28759 இலட்சம், திருநெல்வேலி ஒன்றியத்திற்கு ரூ. 29177 இலட்சம், தஞ்சாவூர் ஒன்றியத்திற்கு ரூ.725 இலட்சம், புதுக்கோட்டை ஒன்றியத்திற்கு ரூ. 100 இலட்சம் மற்றும் விருதுநகர் ஒன்றியத்திற்கு ரூ.89.88 இலட்சம் ஆக மொத்தம் ரூ.2048.30 இலட்சம் விடுவிக்கப்பட்டு இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், மாவட்ட அளவில் பால் உற்பத்தியைப் பெருக்குதல், பால் விற்பனையை உயர்த்துதல், பால் விற்பனைக்கும், பால் பதப்படுத்துவதற்கும் தேவையான உட்கட்டமைப்புகளை விரிவாக்கம் செய்தல், இடுபொருட்கள் வழங்கப்படுவதை அதிகரித்தல் மற்றும் மனிதவளத்தை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 நவம்பர் 2]

35—

தனிக் குழு

வினா எண் 2769—திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் நீர்வள, நிலவளத் திட்டத்தில் நடைபெற்ற பணிகளில் ஏற்பட்ட முறைகேடுகள் பற்றி ஆய்வு செய்ய தனிக் குழு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்வள, நிலவளத் திட்டத்தில் கோட்டக்கரையாறு உபவடிநிலத்தில் சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 2007-2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் செயற்பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் முறையாக ஆய்வு செய்யப்பட்டன. மேலும், துறையின் தரக் கட்டுப்பாட்டுக் கோட்டத்தின்மூலம் பணிகளின் தரம் குறித்து முறையாக ஆய்வு செய்யப்பட்டு, தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் யாவும் உலக வங்கிக் குழுவினராலும் 6 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டன. தரமான பொருட்களைக் கொண்டு பணி முறையாக முடிக்கப்பட்டுள்ளது. எனவே, எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை. இதற்கென ஆய்வு செய்ய தனிக் குழு அமைக்கத் தேவையில்லை.

36—

தடுப்பணை

வினா எண் 4789—திரு. துரை மணிவேல்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) அரியலூர் தொகுதி, கொள்ளிடம் ஆற்றில், திருமானூர், தா. பழூர் உள்ளிட்ட ஐந்து இடங்களில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஆறு வெள்ளக்காலங்களில் காவிரியின் வெள்ளநீர்போக்கும் வடிகாலாகச் செயல்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஆற்றின் அதிகபட்ச வெள்ள அளவு சுமார் 4,00,000 கன அடி/வினாடியாக உள்ளது. எனவே, தடுப்பணைகள் அமைப்பது இத்தகைய அதிக வெள்ளம் ஓடும் பெரிய ஆறுகளில் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமற்றதாகிறது. எனினும், கதவணைகள் அமைப்பது மட்டும் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமுற்றதாகும். மேலும், திருமானூர், தா.பழூர் உள்ளிட்ட இடங்களில் கொள்ளிடம் ஆற்றின் அகலம் சுமார் 1,100 மீட்டர் அளவில் உள்ளது. எனவே, இவ்விடங்களில் கதவணை அமைப்பது பொருளாதாரரீதியில் மிகவும் அதிகச் செலவை ஈட்டக் கூடியதாகும். ஏற்கெனவே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே டி. ஆதனூர்—குமாரமங்கலம் என்னுமிடத்தில் இத்தகைய கதவணை அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்தத் திட்டத்தின் சாத்தியக்கூறு பற்றி ஆராயப்பட்டவுடன், பிற இடங்களில் கதவணை அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

37—

துரிதப்படுத்துதல்

வினா எண் 9276—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் மணக்கடவின் மேல்பகுதியில் சமச்சீர் நீர்த்தேக்கம் திட்டத்தினைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டமானது தமிழகம் மற்றும் கேரளா மாநிலங்களுக்கிடையே ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பல்நோக்குத் திட்டமாகும். மணக்கடவின் மேல்பகுதியில் ஆழியாறு ஆற்றின் குறுக்கே சமச்சீர் நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஒப்பந்த மறு ஆய்வுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும்.

38—

கடல் சுவர்

வினா எண் 9374—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், சின்னமுதலியார் சாவடி கிராமத்தில் கடல் சுவர் கட்டும் பணியின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 269, பொதுப் பணி (நீவ2)த் துறை, நாள் 16-12-2011-ல் 2011-2012 நிதியாண்டில், சின்னமுதலியார் சாவடியில் தொலைக்கல் 1,850 மீட்டர் முதல் 2,370 மீட்டர் வரை மற்றும் 2,710 மீட்டர் முதல் 3,090 மீட்டர் வரை (1,000 மீட்டர்) கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைத்தல் பணிக்கு ரூ.280.25 இலட்சம் மற்றும் ரூ.825.40 இலட்சம் மதிப்பளவில் இரண்டு தொடர் தூண்டில் வளவுகள் (3 மற்றும் 4) அமைக்கும் பணிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. முன் தகுதிக்கான ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டு விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. விரைவில் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்

[2012 நவம்பர் 2

கொள்ளப்பட்டு முடிக்கப்படும். மேலும், 2012-2013 நிதியாண்டில் சின்னமுதலியார்சாவடி கிராமத்தில் இரண்டு தொடர் தூண்டில் வளவுகள் (5 மற்றும் 6) அமைப்பதற்காக ரூ.965.00 இலட்சம் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு ஒப்பந்தம் முடிவு செய்த பிறகு பணிகளின் செயலாக்கம் மேற்கொள்ளப்படும்.

39—

மேம்படுத்துதல்

வினா எண் 13973—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், சின்னாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:

சின்னாறு நதியில் பயனடையும் சின்னாறு உபவடிநிலத்தில் அமைந்துள்ள அனைத்து 33 பொதுப் பணித் துறை ஏரிகளும் உலக வங்கி நிதியுதவியுடன் நீர்வளத் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.536 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர சின்னாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

40—

சுற்றுச் சுவர்

வினா எண் 12010—திரு. சு. ரவி: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தக்கோலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், தக்கோலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான அளவு சுற்றுச் சுவர் உள்ளது என்பதால் மேற்காணும் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழுவில்லை.

41—

அடையாள அட்டை

வினா எண் 18258—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு பயோமெட்ரிக் மின்னணு அடையாள அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்திய குடிமக்களுக்கு பயோமெட்ரிக் (Biometric) அடையாள அட்டை வழங்க தேசிய மக்கள் தொகை பதிவு ஆணையம் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு பயோமெட்ரிக் (Biometric) அடையாள அட்டை வழங்குவது இப்பணியை இரட்டிப்பு செய்வதாகும். எனவே, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு பயோமெட்ரிக் (Biometric) மின்னணு அடையாள அட்டை வழங்குவதை தற்சமயம் நிறுத்தி வைத்து, அரசாணை (நிலை) எண் 33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 01-03-2012-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2012 நவம்பர் 2

42—

நலத்திட்ட உதவிகள்

வினா எண் 20100—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரம் மற்றும் வடக்கு தொகுதியிலுள்ள சுமைதூக்கும் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் மாட்டு வண்டி ஓட்டுநர்கள் ஆகியோருக்கு அடையாள அட்டை வழங்கி அரசின் நலத்திட்ட உதவிகள் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுமை தூக்கும் பணியாளர்கள் மற்றும் மாட்டுவண்டி ஓட்டுநர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நோக்கில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982-ன் அட்டவணையில் முறையே இனம் 3 மற்றும் 16-ல் இத்தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், சுமைதூக்கும் பணியாளர்கள் மற்றும் மாட்டுவண்டி ஓட்டுநர்கள், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்று, நல வாரிய அடையாள அட்டை மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின்படி அனைத்து நலத் திட்ட உதவிகளையும் பெற்று வருகின்றனர்.

43—

கட்டட வசதி

வினா எண் 1453—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கூடுதல் மகப்பேறு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசு மருத்துவமனையில் உள்ள 162 படுக்கை வசதியில் 24 படுக்கை வசதி மகப்பேறு சிகிச்சைக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இங்கு மகப்பேறு சிகிச்சைக்காக நாள் ஒன்றுக்கு சராசரியாக 348 நபர்கள் வெளி நோயாளிகளாகவும், 24 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 57 பிரசவங்கள், 15 அறுவை சிகிச்சை பிரசவங்கள் மட்டுமே நடைபெறுகின்றன. எனவே, கூடுதலாக மகப்பேறு கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் எழவில்லை.

44—

மாத்திரை

வினா எண் 1942—திரு. ஆர். சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் அரசு மருத்துவமனையில் சர்க்கரை நோயாளிகளுக்கு தினமும் மாத்திரை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மேலூர் அரசு மருத்துவமனையில் சர்க்கரை நோயாளிகளுக்கு தினசரி மருத்துவம் பார்க்கப்பட்டு, அதற்குண்டான மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

[2012 நவம்பர் 2

45—

கட்டட விரிவாக்கப் பணிகள்

வினா எண் 2118—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மருத்துவக் கல்லூரியில் கட்டட விரிவாக்கப் பணிகளை விரைந்து முடித்து கூடுதலாக 100 எம்.பி.பி.எஸ். இடங்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ரூ.5663.20 இலட்சத்திற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் முடிவுற்ற பின்னர், இந்திய மருத்துவக் குழுமத்தால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, 165 எம்.பி.பி.எஸ். இடங்களிலிருந்து 250 எம்.பி.பி.எஸ். இடங்களாக உயர்த்தி இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46—

பணியிடங்கள்

வினா எண் 3449—திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்ப ஆய்வாளர், துப்புரவுப் பணியாளர் மற்றும் காவலர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மருத்துவ பணியிடங்கள்-3. இம்மூன்று மருத்துவர் பணியிடத்தில் 2 மருத்துவர்கள் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள். (அறுவை சிகிச்சை மருத்துவர்—1, எம்.பி.பி.எஸ். தகுதி மருத்துவர்-1) மீதமுள்ள ஒரு பணியிடத்தில் ஒரு பிறப்பு மருத்துவர் (எலும்பு சிகிச்சை அல்லது மகப்பேறு மருத்துவர்) எதிர்வரும் கலந்தாய்வின்போது நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவரைத் தவிர காலியாக உள்ள மற்ற பணியிடங்கள் மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவமனைக்கு தொழில்நுட்பப் பணியிடங்கள் மற்றும் காவலர் பணியிடம் எதுவும் உருவாக்கப்படவில்லை. தேவை ஏற்படின், வருங்காலத்தில், புதிதாக உருவாக்கப்படுவது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும்.

47—

பதவி உயர்வு

வினா எண் 4468—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டம் பெற்ற மருத்தாளுநர்களுக்கு பதவி உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டம் பெற்ற மருந்தாளுநர்களுக்கு மருந்தியல் பயிற்றுநர் பதவி மட்டுமே வழங்க முடியும். இப்பொருளில் நீதிமன்ற தடையாணையிருப்பதால், மருந்தியல் பயிற்றுநர் பதவி நிரப்பப்படவில்லை. நீதிமன்ற தடையாணையினை விலக்கிக்

[2012 நவம்பர் 2

கொள்ள, தடையாணை நீக்க மனு (Stay Vacation Petition) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டவுடன், தகுதியுடைய மருந்தாளுநர்களுக்கு பதவி உயர்வு வழங்க இயலும்.

48—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 5497—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிருக்கான மருத்துவக் கல்லூரியை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் மகளிருக்காக தனியாக மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான கருத்துரு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

49—

பெண் மருத்துவர்

வினா எண் 5498—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கு பெண் மருத்துவரே சிகிச்சை அளிக்கும் முறையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவரும் நோயாளிகளில் ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி, அவரவர்தம் நோயின் தன்மைக்கு ஏற்ப மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மகப்பேறு பிரிவுகளில் பெண் மருத்துவர்களைக் கொண்டு பெண்களுக்கு

2012 நவம்பர் 2]

சிகிச்சை அளிக்கப்படுகிறது. மற்ற பிரிவுகளைப் பொறுத்தமட்டில் பெண்களுக்கு பொதுவாகவே பெண் மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. பெண் மருத்துவர் பணியில் இல்லாத நேரங்களில் மட்டுமே பெண்களுக்கு, ஆண் மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சிறப்பு சிகிச்சை மற்றும் மேற்சிகிச்சைகள் அனைத்தும் ஆண் மருத்துவர்களாலும், தகுதியுடைய பெண் மருத்துவர்கள் இருப்பின் அவர்களாலும் கொடுக்கப்பட்டு வருகிறது. மருத்துவச் சேவை என்பது ஓர் உயிர் காக்கும் சேவை. இதில் ஆண் மருத்துவர்/பெண் மருத்துவர் என பிரித்துப் பார்த்து மருத்துவ சேவை அளித்தால், தேவையில்லாத உயிர்சேதம் ஏற்படும் சூழல் உருவாகும். ஆகவே பெண்களுக்கு பெண் மருத்துவர் மட்டுமே சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற நடைமுறையைச் செயல்படுத்த சாத்தியக்கூறு இல்லை.

50—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 6179—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்கவும், அவர்களுக்கு குடியிருப்பு கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு மறு சீரமைப்பின்படி கூடுதலாக 2 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு தற்போதைய நிலையில் மொத்தம் 8 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5 பணியிடங்களில் மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். காலியாக உள்ள 3 பணியிடங்களை எதிர்வரும் கலந்தாய்வின்போது நிரப்ப

[2012 நவம்பர் 2

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனைக்கு வரும் உள் நோயாளிகள் மற்றும் மகப்பேறு எண்ணிக்கையின்படி தற்போதைய நிலையில் மருத்துவர்களுக்கு தங்கும் குடியிருப்பு கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. எதிர்வரும் காலத்தில் மக்களின் தேவை அடிப்படையில், அவசியம் ஏற்படும் நிலையில் இப்பொருள் பற்றி பரிசீலிக்கப்படும்.

51—

பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 7677—திரு. கு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள எலும்பு முறிவு மற்றும் மகப்பேறு மருத்துவர், அவசர ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள (உதவி மருத்துவர்/குடிமை மருத்துவர் மற்றும் முதுநிலை உதவி மருத்துவர்) பணியிடங்களில் ஓர் எலும்பு முறிவு மருத்துவரும், இரண்டு மகப்பேறு மருத்துவர்களும், தற்போது பணிபுரிந்து வருகின்றனர். காலிப் பணியிடம் ஏதுமில்லை. இம்மருத்துவமனையில் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஓர் ஓட்டுநர் பணியிடம் நிரப்பப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

52—

பணியிடம்

வினா எண் 7682—திரு. வே. குணசீலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) வந்தவாசி மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள மொத்த மருத்துவர் பணியிடங்கள் 15. தற்போது அம்மருத்துவமனையில் 9 பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதம் உள்ள 6 காலிப் பணியிடங்கள் இனிவரும் மருத்துவர்கள் பதவி உயர்வு மற்றும் இடமாறுதல் கலந்தாய்வின்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட 16 நிரந்தர செவிலியர் பணியிடங்களில், 15 நிரந்தர செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலியாக உள்ள 1 நிரந்தர செவிலியர் பணியிடத்தையும் கலந்தாய்வின்மூலம் விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இம்மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அடிப்படைப் பணியாளர்கள் மொத்தம் 14. இவற்றில் 6 பணியிடங்களில் பணியாளர்கள் உள்ளனர். மீதி உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

53—

உபகரணங்கள்

வினா எண் 9181—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் கூடுதல் மருத்துவ உபகரணங்கள் மற்றும் விஷ முறிவு சிகிச்சைக்கான உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஏற்கெனவே அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசாணை (2டி) எண் 105, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 20-09-2010-ன்படி, கூடுதல் மருத்துவ உபகரணங்கள், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலமாக அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசாணை (2டி) எண் 92, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை (அஎதி 1/1), நாள் 17-08-2010-ன்படி விஷ முறிவு சிகிச்சைக்கான உபகரணங்கள், அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள விஷ முறிவு சிகிச்சை மையங்களுக்கும் உலக வங்கி உதவியுடன், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மருந்துவப் பணிகள் கழகம்மூலமாக வாங்கி வழங்கப்பட்டுவிட்டன.

54—

மருத்துவர் நியமனம்

வினா எண் 9701—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், தாயினிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை சுகாதார பகுதியிலுள்ள தாயினிப்பட்டி துணை சுகாதார நிலையம், உப்பிலியக்குடி, ஆரம்ப

2012 நவம்பர் 2]

சுகாதார நிலையத்தின்கீழ் உள்ள துணை சுகாதார நிலையமாகும். உப்பிலியக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அலுவலர் மொத்த ஒப்பளிப்பு 2. தற்போது 2 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசு விதிமுறைகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு ஏதுமில்லை.

55—

ஓட்டுநர் நியமனம்

வினா எண் 9914—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு மருத்துவமனையில் அவசர ஊர்திக்கு ஓட்டுநரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் அவசர ஊர்திக்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஓர் ஓட்டுநர் பணியிடம் நிரப்பப்பட்டு ஓட்டுநர் பணிபுரிந்து வருகிறார்.

56—

கண் மருத்துவர் நியமனம்

வினா எண் 9915—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை அரசு மருத்துவமனையில் கண் மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு மறு சீரமைப்பின்படி கூடுதலாக 3 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, தற்போதைய நிலையில் மொத்தம் 15 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1 பணியிடத்தில் கண் மருத்துவர் ஒருவர் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

57—

தற்போதைய நிலை

வினா எண் 10978—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராயப்பேட்டை, சென்னை ராஜீவ் காந்தி மற்றும் ஸ்டான்லி ஆகிய அரசு மருத்துவமனைகளில் புதிய சி.டி.ஸ்கேனர் நிறுவும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராயப்பேட்டை, சென்னை ராஜீவ் காந்தி மற்றும் ஸ்டான்லி ஆகிய அரசு மருத்துவமனைகளில் சி.டி.ஸ்கேனர்கள் பயன்பாட்டில் உள்ளன. சி.டி.ஸ்கேனர்களின் பயன்பாடு, குறைந்தபட்சம் பத்து முதல் பன்னிரெண்டு வருடங்களாகக் கணக்கிடப்படுவதால், பயன்பாட்டின் அடிப்படையிலேயே சி.டி.ஸ்கேனர்களை மாற்ற வேண்டி வரும். எனவே, 12 வருடங்கள் கழிந்த சி.டி.ஸ்கேனர்கள் பயன்பாட்டின் அடிப்படையில் படிப்படியாக மாற்றப்படும்.

58—

கட்டணம்

வினா எண் 11037—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2012 நவம்பர் 2]

(அ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனைக்காக வசூலிக்கப்படும் கட்டணம் எவ்வளவு?

(ஆ) 2010-2011 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எத்தனை பேர்? விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனைக்காக வசூலிக்கப்படும் கட்டணம் ரூ.250/- ஆகும். மேலும், 2010-2011-ஆம் ஆண்டில் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தின்கீழ் 17,909 பேர் பயனடைந்துள்ளனர்.

59—

கட்டணம்

வினா எண் 11054—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 2011-2012 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தின்கீழ் எத்தனை முறை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன?

(ஆ) விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

2010 ஆம் ஆண்டு மூளைச்சாவின் எண்ணிக்கை 24 ஆகும்.

2011 ஆம் ஆண்டு மூளைச்சாவின் எண்ணிக்கை 19 ஆகும்.

[2012 நவம்பர் 2

2012 ஆம் ஆண்டு மூளைச்சாவின் எண்ணிக்கை 2 ஆகும்.

சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 2010 ஆம் ஆண்டில் 40 பேர்களுக்கும், 2011 ஆம் ஆண்டில் 33 பேர்களுக்கும், 2012 ஆம் ஆண்டில் 4 நபர்களுக்கும் சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும், 2010 ஆம் ஆண்டில் 2 நபர்களுக்கு இதய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டில் இதய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடைபெறவில்லை.

60—

அறுவை சிகிச்சை

வினா எண் 11055—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை மருத்துவமனைகள் பதிவுரிமை பெற்றுள்ளன?

(ஆ) எவ்வகையான உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு அவை பதிவுரிமை பெற்றுள்ளன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) உடல் உறுப்பு வியாபாரத்தைத் தடுப்பதற்காக, மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 இயற்றப்பட்டது. தமிழகத்தில், இச்சட்டத்தின்கீழ் பதிவுரிமை பெற்றுள்ள மருத்துவமனைகளில் மட்டுமே மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. இச்சட்டத்தின்கீழ் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மாநில செயலாக்க அலுவலர் ஆவார். மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின்கீழ் பதிவுரிமை கோரும் மருத்துவமனைகள், அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ வல்லுநர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. அவர்களின் ஆய்வறிக்கையின் அடிப்படையில், குறிப்பிட்ட

2012 நவம்பர் 2]

மருத்துவமனைகளுக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள மாநில செயலாக்க அலுவலர் பதிவுரிமை வழங்குகிறார். இந்தச் சட்டத்தில் பதிவு செய்துள்ள மருத்துவமனைகள் மட்டுமே உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யலாம்.

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994-ன்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு தனியார் மருத்துவமனைகள் பதிவுரிமை பெற்றுள்ளன.

(ஆ) சிறுநீரக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு அவை பதிவுரிமை பெற்றுள்ளன.

61—

அங்கீகாரக் குழு

வினா எண் 11056—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை வரன்முறை செய்ய திருநெல்வேலி மாவட்டத்தில் அங்கீகாரக் குழு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை வரன்முறை செய்ய திருநெல்வேலி மாவட்டத்தில் அங்கீகாரக் குழு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

62—

கட்டட வசதி

வினா எண் 11316—திரு. சு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் மேல்தளத்தில் மருத்துவ அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவு கட்டடத்தின் மேல்தளத்தில் மருத்துவ அலுவலகக் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

63—

கட்டட வசதி

வினா எண் 11318—திரு. கு. ரவி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள தொழுநோயாளிகள் சிகிச்சைப் பிரிவு கட்டடத்தைப் புதுப்பித்திடவும், பழுதடைந்த இதர கட்டடங்களை அகற்றிடவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள தொழுநோயாளிகள் சிகிச்சைப் பிரிவு கட்டடத்தைப் புதுப்பித்திடவும், பழுதடைந்த இதர கட்டடங்களை அகற்றிடவும் முன்னுரிமை அடிப்படையில் 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டட பராமரிப்பு நிதியின்கீழ் பணியினை மேற்கொள்ள முதன்மைப் பொறியாளர் (கட்டடங்கள்) பொதுப் பணித் துறை, சென்னை

2012 நவம்பர் 2]

அவர்களுக்கு பரிந்துரை செய்யப்படும்.

64—

மருத்துவர் நியமனம்

வினா எண் 13020—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், பாலாண்டாம்பட்டி ஊராட்சி, பாலாண்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியத்தில் பாலாண்டாம்பட்டியில் உள்ள துணை சுகாதார நிலையம், மண்டையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த 5 துணை சுகாதார நிலையங்களில் ஒன்றாகும். அரசு விதிமுறைகளின்படி துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. மண்டையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவ அலுவலர் பதவி ஒப்பளிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

65—

E.C.G. கருவி

வினா எண் 14986—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பழுதான E.C.G. கருவியை சீர் செய்திட அரசு ஆவன செய்யுமா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ உபகரணங்கள் / மருத்துவக் கருவிகளைப் பழுது பார்த்திடவும், பராமரித்திடவும் இந்த நிதியாண்டில் (2012—2013) ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் மருத்துவமனையில் உள்ள மருத்துவக் கருவிகளைப் பழுது நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வகையில் தற்போது கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பழுதான E.C.G. கருவி விரைவில் பழுது நீக்கம் செய்யப்பட்டு நோயாளிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

66—

உபகரணங்கள்

வினா எண் 14989—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார:—

(அ) கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக இயல் துறைக்கு போதிய உபகரணங்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக இயல் துறை இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. எனினும், பொது மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு டயாலிசிஸ் பயிற்சி அளிக்கப்பட்டு, டயாலிசிஸ் கருவியும் வழங்கப்பட்டு அதன்மூலம் சிகிச்சை செய்யப்படுகிறது.

2012 நவம்பர் 2]

67—

கட்டட வசதி

வினா எண் 17675—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை குழந்தைகள் நல மருத்துவ நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை தற்போது 537 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், 300 படுக்கைகள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்ட ரூ.18.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

68—

கட்டட வசதி

வினா எண் 17677—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதுகலை மாணவியர் விடுதி மற்றும் இதர கட்டடங்கள் கட்டும் பணியைத் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதுகலை மாணவியர் விடுதிக் கட்டடங்கள்

[2012 நவம்பர் 2

கட்ட அரசாணை எண் 122, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 10-04-2008-ல் நிதி மற்றும் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணி நிறைவு பெற்றுள்ளன.

69—

கட்டடம் கட்டும் பணி

வினா எண் 17689—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியை தரம் உயர்த்துவதற்கான கட்டடங்கள் கட்டும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு 13-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி புதிதாக நூலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.3.36 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தற்போது பொதுப் பணித் துறையினரால் பணிகள் தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், எல்காட் நிறுவனத்திற்கு நிலம் வழங்கிய வகையில், சுகாதீனத் தொகை ரூ.8,25,33,011/-ல் மாணவியர் விடுதி, மாணவர் விடுதி மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

70—

கட்டடம் கட்டும் பணி

வினா எண் 17675—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரிகளுக்கான புதிய கட்டடம் கட்டும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை மருத்துவக் கல்லூரியை விரிவாக்கம் செய்ய பழைய சிறைச்சாலை வளாகத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. சிவகங்கை மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 25-7-2012 முதல் முதலாமாண்டு மருத்துவ பட்டப்படிப்பு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

71—

கட்டட வசதி

வினா எண் 17692—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டும் பணியை விரைந்து தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி முடிந்து 3-9-2012 அன்று கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

72—

கட்டட வசதி

வினா எண் 17693—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி புதிய மருத்துவக் கல்லூரிக்கான இரண்டாம் கட்ட கட்டடப் பணிகளைத் துவக்க அரசு முன்வருமா?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதியதாக இரண்டாம் கட்டப் பணிகள் ரூ.4,367.89 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு, 24-01-2012 முதல் பயன்பாட்டில் உள்ளது.

73—

குடிநீர் வசதி

வினா எண் 20269—திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி அரசு மருத்துவமனையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க ஒரு RO (Reverse Osmosis) Plant *அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி அரசு மருத்துவமனையில் நோயாளர் நலச்சங்க நிதி மூலமாகவோ அல்லது 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டட பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நிதி மூலமாகவோ முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க ஒரு RO (Reverse Osmosis) Plant *அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

74—

சிறு பூங்காக்கள்

வினா எண் 21493—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2012 நவம்பர் 2]

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் தனியார் பங்கேற்புடன்கூடிய சிறு பூங்காக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை 2.84 ஏக்கர் பரப்பளவில் சிறு சிறு கட்டடங்களாக அமைந்துள்ளது. இவற்றில் சில கட்டடங்களை கழித்தொதுக்கம் செய்து புதியதாக ரூ.140.00 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறைமூலம் ஒருங்கிணைந்த கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கட்டடப் பணிகள் முடிந்த பின்னர், தனியார் பங்களிப்புடன் சிறு பூங்காக்களை அமைக்க பரிசீலனை செய்யப்படும்.

75—

சுற்றுச் சுவர்

வினா எண் 21853—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சுற்றுச் சுவரை உயர்த்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் எந்தவித ஆக்கிரமிப்புகளும் இல்லை. மேலும், இம்மருத்துவமனையின் சுற்றுச் சுவரை உயர்த்த, கட்டட பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[2012 நவம்பர் 2

76—

அறுவை சிகிச்சை அரங்கம்

வினா எண் 21855—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நவீன தொழில்நுட்பத்துடன் புதிய அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மூன்று குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் தேசிய ஊரகத் திட்ட முகமை நிதிமூலம் ரூ.50.00 இலட்சம் செலவில் மகப்பேறு பிரிவும் கட்டடத்தின் முதல் தளத்தில் 12 படுக்கை வசதிகளுடன்கூடிய அறுவை சிகிச்சைக்குப் பின் சிகிச்சை அளிக்கும் பிரிவும், அறுவை அரங்கமும் கட்டப்பட்டு வருகிறது.

77—

சுற்றுச்சுவர்

வினா எண் 4339—திருமதி ம. சக்தி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நாங்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, நாங்கூர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

மாணவர் விடுதி

வினா எண் 6825—திருமதி ம. சக்தி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நாங்கூர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, நாங்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கி வருகிறது. ஆகையால், மேற்கொண்டு அப்பள்ளியில் புதிய விடுதி துவங்குவது குறித்து அவசியம் எழாது.

79—

அதிகப்படுத்துதல்

வினா எண் 6836—திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவ/மாணவியர் விடுதிகளில் மாணவர்களின் சேர்க்கை இடங்களை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி ஆகியவற்றிற்கு ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட இடங்களை விட கூடுதலாக தற்போது 10 விழுக்காடு மாணவ/மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்தும் மற்றும் தமிழகத்தின் (1238) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் வீதம் மொத்தம் 6,190 கூடுதல் இடங்களைத் தோற்றுவித்தும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

80—

நிதி உதவி

வினா எண் 17341—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகாம்வாழ் இலங்கைத் தமிழர் விபத்தின் காரணமாக மரணம் அடைந்தால் வாரிசுக்கு முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் தொகைகளை உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்கள் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் அசாதாரண நிகழ்வுகளில் நேரிடும் இறப்பின்போது வழங்கப்படும் நிதி உதவித்தொகையை ரூ.15,000/-த்திலிருந்து ரூ.25,000/-ஆக உயர்த்தி வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-05-2012 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண் 503, பொது (மறுவாழ்வு-1)த் துறை, நாள் 20-06-2012-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணை 15-05-2012 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

81—

கடன் தொகை

வினா எண் 17458—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் கல்விக் கடன் வழங்கும் திட்டத்தின்மூலம் கடன் தொகையினை உயர்த்தி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் கல்விக் கடன் வழங்கும் திட்டத்தின்மூலம் கடன் தொகையினை உயர்த்தி வழங்குவதுதொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2012 நவம்பர் 2

82—

நலத் திட்டங்கள்

வினா எண் 17460—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டு வருமானம் கிராமப்புறப் பகுதிகளில் 1 இலட்சம் எனவும், நகர்ப்புறப் பகுதிகளுக்கு மூன்று இலட்சம் எனவும் நிர்ணயித்து, பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் அனைத்து நலத் திட்டங்களையும் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் சலுகை பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆண்டு வருமான வரம்பு குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	திட்டம்	ஆண்டு வருமான வரம்பு	
1.	கல்வி உதவித்தொகை திட்டம்	இளங்கலை படிப்பு	வருமான வரம்பு இல்லை
		முதுகலை, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு	பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
2.	வேலைவாய்ப்பு பயிற்சி		பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு
3.	விடுதிகளில் மாணவர் சேர்க்கை		

2012 நவம்பர் 2]

4.	தனியார் பள்ளிகளில் 11 (ம) 12 ஆம் வகுப்பு பயிலுவதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம்	மிகாமல் இருத்தல் வேண்டும்
5.	இந்திய குடிமைப் பணிகளுக்கான சிறப்பு பயிற்சி	பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
6.	பொதுப் பரிசு வழங்கும் திட்டம்	வருமான வரம்பு இல்லை.
7.	தந்தை பெரியார் விருது வழங்கும் திட்டம்	
8.	அண்ணா நினைவுப் பரிசு வழங்கும் திட்டம்	
9.	மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்	
10.	தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்	ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.40,000/-ம் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.60,000/-க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
11.	சலவைப்பெட்டிகள் வழங்கும் திட்டம்	
12.	வீட்டு மனைகள் வழங்கும் திட்டம்	
13.	டாப்செட்கோ மூலம் சிறுவணிகக் கடன் திட்டம்	ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.40,000/-ம் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.55,500-க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் நலத் திட்டங்களில் பயன்பெற ஆண்டு வருமானத்தை உயர்த்துவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2012 நவம்பர் 2

83—

உதவித் தொகை

வினா எண் 17463—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் ஆங்கில வழிக்கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட 6 முதல் 8 மற்றும் 11, 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பெறும் பள்ளிப் படிப்பு உதவித்தொகை மற்றும் கல்வி கட்டணத் தொகை ஆகியவற்றினை உயர்த்தி வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் மற்றும் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் அனைத்து மாணவ/மாணவியருக்கும், சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்வித சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மேலும் தமிழ் வழிக்கல்வி பயிலும் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவ/மாணவியருக்கு கல்வி கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற மாணவ/மாணவியருக்கு கற்பிப்பு கல்விக் கட்டணம் பின்வருமாறு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் ஈடு செய்யப்படுகிறது:

2012 நவம்பர் 2]

6 முதல் 8 ஆம் வகுப்பு வரை	மாதம் ரூ.20 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.200/-
9 மற்றும் 10 ஆம் வகுப்பு	மாதம் ரூ.25 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.250/-
10 ஆம் வகுப்பு	ஆங்கில வழிக்கல்வி பயிலும் மாணவ/ மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் முழுமையாக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் ஈடு செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500 கற்பிப்புக் கட்டணமாக வழங்கப்படுகிறது. 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவ/மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

3. கல்வித் துறையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் மேற்படி கற்பிப்புக் கட்டணங்கள் (Tuition Fees) ஒப்பளிக்கப்படுகிறது. கற்பிப்புக் கட்டணங்கள் கல்வித் துறையால் உயர்த்தப்பட்டால், அத்தொகையினை இத்துறை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர்களுக்கு உயர்த்தி வழங்கும்.

(ஆ) வினா எழவில்லை.

84—

வெளியீடு

வினா எண் 17484—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலமாக வழங்கப்படும் சிறுபான்மையின மாணவர்கள் கல்வி கடனுதவி திட்டத்தின் விவரங்களை ஊடகங்கள்மூலம் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலமாக வழங்கப்படும் சிறுபான்மையின மாணவர்கள் கல்வி கடனுதவித் திட்டத்தின் விவரங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர்மூலமாக அந்தந்த மாவட்ட பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகின்றன.

85—

வட்டி விகிதம்

வினா எண் 17486—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலமாக வழங்கப்படும் பொது காலக் கடன் திட்டத்தின் வட்டி விகிதத்தை 2 விழுக்காடாகவும், கடன் தொகையின் உச்சவரம்பினை ரூ.10,00,000/- ஆகவும் திருப்பிச் செலுத்தும் காலவரையினை பத்து வருடமாக உயர்த்தி நிர்ணயம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுடில்லியிலுள்ள மத்திய அரசு நிறுவனமான தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின்

2012 நவம்பர் 2]

மாநில முகவராக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்படுகிறது. இந்நிறுவனம் தேசிய கழகத்திடமிருந்து நிதி உதவிபெற்று, இந்நிறுவன பங்களிப்புடன் கடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் நிர்ணயித்துள்ள வட்டி விகிதத்தின்படி, பொது காலக் கடன் திட்டத்தின்கீழ், இந்நிறுவனம் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படும் 6 விழுக்காடு வட்டியில், 3 விழுக்காடு வட்டித் தொகையை தேசிய கழகத்திற்குச் செலுத்த வேண்டும். மீதம் 3 விழுக்காடு வட்டித்தொகை இந்நிறுவனத்தின் துணை முகவர்களான கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வங்கிகளுக்கு சேவைக் கட்டணமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தை 2 விழுக்காடாகக் குறைத்தால், இந்நிறுவனத்திற்கு நிதி இழப்பு ஏற்படுவதுடன், சேவைக் கட்டணமின்றி இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு கூட்டுறவுக் கடன் சங்கங்கள்/வங்கிகள் முன்வராது. எனவே, வட்டி விகிதத்தினை 2 விழுக்காடாகக் குறைப்பதற்கு சாத்தியமில்லை. மேலும், கடன் தொகையின் அதிகபட்ச உச்ச வரம்பினை ரூ.10,00,000/- ஆக உயர்த்துவது குறித்தும், திரும்பச் செலுத்தும் காலவரையினை 10 வருடமாக உயர்த்தி நிர்ணயம் செய்வது குறித்தும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

உதவித் தொகை

வினா எண் 17492—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்வியில் இளங்கலைப் பட்டம் பயின்ற, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மைப் பிரிவு வழக்கறிஞர்கள் அலுவலகம் அமைத்திட ஒரு இலட்சம் உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டக் கல்வியில் இளங்கலைப் பட்டம் பயின்ற, பிற்படுத்தப்பட்டோர் பிரிவு வழக்கறிஞர்கள் அலுவலகம் அமைத்திட ரூபாய் ஒரு இலட்சம், பொதுக் காலக் கடன் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், 'உதவித் தொகை' வழங்குவது அரசின் கொள்கை முடிவிற்கு உட்பட்டது. மேலும், புதுடெல்லி தேசிய சிறுபான்மையினர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று மேற்படி கழகத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையினர் இனத்தவர்களுக்கு, அதாவது குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் ரூ.40,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறமாயின் ரூ.55,000/-க்கு மிகாமலும், அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் வரையில் சிறு தொழில் துவங்க குறைந்த வட்டியில் தனிநபர் கடன் திட்டம்மூலம் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, சட்டக் கல்வியில் இளங்கலைப் பட்டம் பயின்ற சிறுபான்மைப் பிரிவு வழக்கறிஞர்கள் அலுவலகம் அமைத்திட ஒரு இலட்சம் உதவித் தொகை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் வழங்க இயலாது.

87—

விளம்பரம்

வினா எண் 17498—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின், வேலைவாய்ப்பு நோக்கிலமைந்த பயிற்சித் திட்டத்தில் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.2,00,000/-ஆக நிர்ணயம் செய்திடவும், இத்திட்டத்தினை ஊடகங்கள் மூலமாக விளம்பரம் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 நவம்பர் 2]

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள படித்து வேலைவாய்ப்பற்ற பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன இளைஞர்கள் மாணவ, மாணவியர் படித்து முடித்தவுடன், எளிதில் வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சிகளைப் பெற மத்திய, மாநில அரசு மற்றும் தனியார் பயிற்சி நிலையங்களின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிற்சிக் கட்டணம் முழுவதும் அரசால் ஏற்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு 2008-2009 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டங்களில் பயிற்சியாளர்களைச் சேர்க்கும்போது பயிற்சியைப் பற்றித் தெளிவாக அறிந்திட ஏதுவாக பயிற்சியின் பெயர், பயிற்சியின் காலம் ஆகிய விவரங்கள் அடங்கிய விரிவான விளம்பரம் ஒவ்வோர் ஆண்டும் செய்தித்தாள்கள்மூலம் வெளியிடப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சியர் அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டம் பற்றிய விவரங்கள் அடங்கிய செய்திக்குறிப்பு வெளியிடப்படுகிறது.

88—

கல்வி உதவித் தொகை

வினா எண் 17501—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுபான்மையின மாணவ, மாணவியரின் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தில் குறைந்தபட்சம் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கும் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறுபான்மையின மாணவ/மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம், மத்திய அரசின் 15 அம்சத் திட்டத்தின்படி, தகுதி அடிப்படையில் (Merit) சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டு, இந்த கல்வி உதவித் தொகை பெற 50 விழுக்காட்டிற்குக் குறையாத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டுமென குறைத்தபட்ச தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் குறைந்தபட்சம் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கும் உதவித் தொகை வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

89—

விளம்பரம்

வினா எண் 17503—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் பயிற்சி பெற்ற பெண்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை தொலைக்காட்சி மற்றும் நாளிதழ்கள் மூலமாக விளம்பரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொழில் முனைவோருக்கான பயிற்சி பெற்ற மகளிருக்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை

2012 நவம்பர் 2]

ஆண்டுக்கு 6% வட்டி விகிதத்தில் பொதுக் கடன் திட்டத்தின் விதிமுறைப்படி கடன் வழங்கி வந்தது. தற்போது, சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ள மகளிருக்கு அதிகபட்சமாக ரூ.50,000/- வரை 4% வட்டி வீதத்தில் கடனுதவியும், புதிய பொற்காலத் திட்டத்தின்கீழ் மகளிருக்கு மட்டும் அதிகபட்சமாக ரூ.1,00,000/- வரை 5% வட்டி வீதத்தில் அதிக அளவில் கழகம் கடனுதவி வழங்கி வருவதாலும், தொழில் முனைவோர் பயிற்சி பெற்ற மகளிருக்காக கடனுதவி கோரி இக்கழகத்தில் விண்ணப்பம் ஏதும் பெறப்படுவதில்லை. எனவே, இத்திட்டம் பற்றி தொலைக்காட்சி மற்றும் நாளிதழ்கள் மூலமாக விளம்பரம் செய்ய அவசியம் எழவில்லை.

90—

விளம்பரம்

வினா எண் 17973—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 148 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு கொள்கையளவிலான ஒப்புதலும், அவற்றில் 2012-2013 ஆம் ஆண்டில் நிலம் தேர்வு செய்யப்பட்டு தயாராக உள்ள 84 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதலும் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இது தவிர, 3 சிறுபான்மையினர் நல விடுதிகள் உட்பட 56 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கலாம்.

[2012 நவம்பர் 2

91—

பணக் கொடை

வினா எண் 18934—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களின் வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தி மாதாந்திர பணக் கொடை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத்திட்ட உதவிகளையும், முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டித்து தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும் இலங்கைத் தமிழர் முகாம்களின் நிலையினை மேம்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. முகாம்களிலுள்ள வீடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும்பொருட்டு இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த மாதாந்திர பணக் கொடை உயர்த்தப்பட்டு, குடும்பத் தலைவருக்கு ரூ.400/-லிருந்து ரூ.1,000/- ஆகவும், பிற குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.288/-லிருந்து ரூ.750/- ஆகவும், 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ரூ.180/- மற்றும் ரூ.90/-லிருந்து ரூ.400/- ஆகவும் 4-8-2011 முதல் உயர்த்தப்பட்ட தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் மாதாந்திர பணக் கொடையை மேலும் உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை.

2012 நவம்பர் 2]

92—

அலுவலகம்

வினா எண் 22429—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்காக மாவட்டந்தோறும் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறுபான்மையினருக்கான கடன்களை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், இதன் கிளைகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தாய்கோ வங்கி மற்றும் ஆவின் வழியாக வழங்கி வருகிறது. டாம்கோ மூலம் வழங்கப்படும் மேற்படி கடன்களை வாங்குவதற்கும், அக்கடன்களை வாங்கியவர்கள் திரும்பச் செலுத்துவதற்கும் ஏதுவாக அவர்கள் வசிக்கும் இடத்திலேயே கூட்டுறவு வங்கிகள் இருப்பதால், இக்கடனை வாங்குவதற்கும், செலுத்துவதற்கும் எளிதாக உள்ளது. மேலும், மாவட்டந்தோறும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தலைமையில் அலுவலகம் செயல்பட்டுவருவதுடன், சிறுபான்மையினர் நலத் திட்டங்களைச் செயல்படுத்திட கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டு வருவதால் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்காக மாவட்டந்தோறும் அலுவலகம் அமைப்பதற்கு அவசியம் எழவில்லை.

[2012 நவம்பர் 2

93—

ஒதுக்கீடு

வினா எண் 6873—திரு. எஸ். வேதாச்சலம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் பகுதியிலுள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை 5-வது வார்டு நகராட்சிப் பள்ளிக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் பகுதியில் உள்ள அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் முக்கிய வருமானம் உண்டியல் வருமானம் ஆகும். இதன்மூலம் ஆண்டுதோறும் ரூ.20000/- கிடைக்கப் பெறுகிறது. இத்திருக்கோயிலுக்கு 2 ஹெக்டேர் நிலம் மட்டுமே உள்ளது. இந்நிலம் திருக்கோயிலில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ள நகர்ப்புற நிலமாகும். இத்திருக்கோயிலுக்கு வேறு நிலமோ இதர வரவினங்களோ ஏதுமில்லை. திருக்கோயில் வருமானம் கருதி, இவ்விடத்தில் வணிக வளாகம் கட்டி வருமானத்தை உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான 2 ஹெக்டேர் நிலத்தை பள்ளிக்கூட பயன்பாட்டிற்கு வழங்க இயலாத நிலை உள்ளது.

94—

குத்தகை

வினா எண் 8827—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல் ஊராட்சியில் அண்டக்குடி ஸ்ரீநல்லாண்ட அம்மன் கோயிலுக்குச் சொந்தமான 65 ஏக்கர் நிலத்தினை உழுபவர்கள் உரிய குத்தகையை திருக்கோயிலுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல் ஊராட்சியில் அண்டக்குடி ஸ்ரீநல்லாண்ட அம்மன் திருக்கோயில் நிருவாகம், நடைமுறை நிருவாகியால் தற்போது நிருவகிக்கப்பட்டு வருகிறது. மேலும், திருக்கோயில் நிருவாகத்தில் பரம்பரை நிருவாகத் தன்மை வழங்கிடக் கோரி சிவகங்கை இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் நீதிமன்றத்தில் மனு தொடுக்கப்பட்டு, விசாரணையில் உள்ளது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நன்செய் 20.20 ஏக்கர் மற்றும் புன்செய் 16.29 ஏக்கர் நிலங்களனைத்தும் ஆக்கிரமிப்பில் உள்ளன. மேற்படி நிலங்களை உழவடை செய்துவந்த குத்தகைதாரர்கள் 2000 ஆம் ஆண்டிற்குப் பின் குத்தகையினைச் செலுத்தாமல் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலையில், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் மீதான ஆக்கிரமிப்பினை அகற்றிட இணை ஆணையர் முன் உள்ள நிலுவை அசல் மனுவில், இடைக்கால மனு தாக்கல் செய்து செயல் அலுவலர்/அர்ச்சகர் ஒருவரை தக்காராக நியமனம் செய்து திருக்கோயில் நிலத்தினை மீட்க சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

95—

அடிப்படை வசதிகள்

வினா எண் 9127—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 நவம்பர் 2

(அ) தமிழ்நாட்டில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கு குடிநீர், குளியலறை, கழிப்பறை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இதற்கான ஒப்புதல் ஆணை எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் திருவாகம், இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.70.94 கோடி ஆகும். திருமுருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாகத் திகழும் சிறப்புடைய இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான குடிநீர், பழனி நகராட்சிமூலம் பெறப்படுகிறது. இக்குடிநீர் தங்கும் விடுதிகள், மலைக்கோயிலில் பக்தர்களுக்கும், பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டு கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது. மலைக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க படிவழிப் பாதையிலும், மலை மீதும் 2 சுத்திகரிப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மலைமேல் 34 இடங்களிலும், படிவழிப் பாதையில் 35 இடங்களிலும் குடிநீர் இணைப்புகள்மூலம் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பக்தர்களின் வசதிக்காக ஆண்களுக்கு 56 கழிப்பிடங்களும், பெண்களுக்கு 48 கழிப்பிடங்களும், பொதுக்கழிப்பிடங்கள் 21-ம் தண்ணீர் வசதியுடன் அமைக்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், திருவாவினங்குடி திருக்கோயில் அருகில் சரவணப் பொய்கையில் சகல வசதிகளுடன் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே குளியலறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. விழாக்காலங்களில் பக்தர்களின் வசதிக்காக கூடுதலாக தற்காலிகக் கழிப்பிடங்கள் ஆண்களுக்கு 58-ம், பெண்களுக்கு 49-ம் மற்றும் பொதுக் கழிப்பறைகள் 2-ம் அமைக்கப்பட்டுள்ளன.

2012 நவம்பர் 2]

96—

தங்கும் விடுதிகள்

வினா எண் 9128—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் தங்கும் விடுதிகள் கட்டப்பட உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், இதற்கான ஆணை எப்போது வெளியிடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் இணை ஆணையர் / செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. திருமுருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாகத் திகழும் சிறப்புடைய இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக 60 அறைகள் கொண்ட தங்கும் விடுதி கட்ட உத்தேசிக்கப்பட்டு, முதற்கட்டமாக 12 அறைகள் கொண்ட தங்கும் விடுதியினை ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, விரைவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன.

97—

மடிக்கணினிகள்

வினா எண் 9134—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய மற்றும் அறநிலையத் துறை 2011-2012 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது சட்டமன்றத்தில் அறிவிப்பு எண் 11 இல் "இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், அனைத்து நிலை செயல் அலுவலர்கள், களப் பணியாற்றும் சரக ஆய்வர்கள் உள்ளிட்ட 873 அலுவலர்களுக்கு அலுவல் பணிக்காக ரூ.3.50 கோடி செலவில் மடிக்கணினிகள் வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அரசாணை (நிலை) எண் 292, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (அநி2-2)த் துறை, நாள் 8-11-2011 இல் தற்போது பணியில் உள்ள 560 அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கிட அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 560 மடிக்கணினிகள் எல்காட் நிறுவனம்மூலம் ரூ.2,12,13,920/- செலவில் கொள்முதல் செய்யப்பட்டது.

கடந்த 27-3-2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மடிக்கணினிகள் வழங்கப்பட்டதை அடுத்து அந்தந்த மண்டல இணை ஆணையர்கள் மூலமாக இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், அனைத்து நிலைச் செயல் அலுவலர்கள் மற்றும் களப்பணியாற்றும் சரக ஆய்வர்கள் அனைவருக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

98—

பராமரித்தல்

வினா எண் 9778—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 நவம்பர் 2]

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பூமாயியம்மன் கோயில் குளத்தை பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் நகர், அருள்மிகு பூமாயியம்மன் திருக்கோயில், இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம், செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.2,71,035/- ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளம் சீரமைக்க வேண்டிய நிலையில் உள்ளது. மாவட்ட நிருவாகத்தின் உள்ளாட்சி அமைப்புத் திட்டங்கள்மூலம் இக்குளத்தினைச் சீரமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

99—

குடியிருப்பு

வினா எண் 10723—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மைவாடி ஊராட்சி, கச605-ல் அருள்மிகு நரசிங்கப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் வீட்டுவசதி குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 நவம்பர் 2

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மைவாடி ஊராட்சி, க.ச.605-ல் உள்ள அருள்மிகு நரசிங்கப் பெருமாள் திருக்கோயில் நிலத்தினை பொது ஏலத்தில் குத்தகைக்குவிட திருக்கோயில் தக்காரால் நடவடிக்கை எடுக்கப்பட்டபோது திருமதி குணவதி, திருமதி தனலட்சுமி என்ற இரு நபர்கள் கோயிலில் பூஜை செய்து வந்த திரு. ராமானுஜ அய்யங்கார் என்ற அர்ச்சகரின் வாரிசுகள் என்ற அடிப்படையில், உடுமலை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ். 673/2004 என்ற எண்ணில் உறுத்துக் கட்டளை வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு, 14-8-2008 அன்று வாதிகள் விளம்புகை பரிகாரம் கேட்காமல், உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டிருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்று திருக்கோயிலுக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஓ.எஸ்.673/2004 வழக்கின் 14-8-2008 ஆம் தேதிய தீர்ப்பினை எதிர்த்து, மேற்கண்ட நபர்களால் உடுமலை சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.13/2009 என்ற எண்ணில் மேல்முறையீடு செய்து அவ்வழக்கு தற்போது நிலுவையிலுள்ளது. மேலும், மேற்கண்ட நிலத்தினை இத்திருக்கோயில் அர்ச்சகர்கள் ஏற்கெனவே உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த ஐஸ்வர்யா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளனர். இதன் காரணமாக ஐஸ்வர்யா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளனர். மேற்கண்ட விற்பனை, அறநிலையத் துறை அனுமதியின்றி செய்யப்பட்டது என்ற காரணத்தினால் அந்த நிலத்திலுள்ள ஐஸ்வர்யா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தை வெளியேற்றம் செய்வதற்கு சட்டப்பிரிவு 78-ன்கீழ் மனு தாக்கல் செய்து, இணை ஆணையர் முன்பு நிலுவையிலுள்ளது. மேற்கண்ட வழக்குகள் அனைத்தும் முடிவுற்ற பின்னரே, இந்த நிலப் பயன்பாடு குறித்து முடிவு செய்ய இயலும். மேலும், மைவாடி கிராமத்திலுள்ள சர்வே எண் 605-ல் உள்ள நிலத்தினை வீட்டுவசதி குடியிருப்பு

2012 நவம்பர் 2]

கட்டுவதற்கு விற்பனைக்கு வேண்டி வீட்டுவசதி வாரியத்திடமிருந்து விண்ணப்பம் ஏதும் வரப்பெறவில்லை.

100—

திருப்பணிகள்

வினா எண் 15317—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் திருப்பணி செய்திட நிதியுதவி அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை திருக்கோயில்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் வாழும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு, 2011-2012 ஆம் நிதி ஆண்டிற்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.50,000/- வீதம் 300 திருக்கோயில்களுக்கு ரூ.1.50 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) சுகாதாரப் பணிகளை மேம்படுத்தி அரசு மருத்துவமனைகளின் வசதிகளையும், பாதுகாப்பையும் அதிகரிக்க பணியாளர்களை நியமித்தல் மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 3 அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் மனித வளர்ச்சியின் அளவினை நிர்ணயிப்பதிலும், ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியின் அளவுகோலாகத் திகழ்வதிலும் முக்கியப் பங்கு வகிப்பது மக்கள் நல்வாழ்வு என்று சொன்னால் அது மிகையாகாது. இதன் அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பினை அளித்திடும் வகையில் அரசு மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை நியமித்தல், எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரம்வாய்ந்த மருத்துவ வசதிகள் கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினைப் பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை அளித்தல் போன்ற முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.*

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் முக்கியமான திட்டங்களை முன்னின்று நிறைவேற்றுவதில் முக்கிய பங்கினை வகிப்பவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் ஆகியோர் பற்றிய விவரங்களை கணினிமூலம் தினந்தோறும் பதிவு செய்வதற்காக அருகிலுள்ள வலைதள மையங்களுக்கும் அதாவது Browsing Centres-*க்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.*

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனவே, கிராம சுகாதார செவிலியர்களுக்கு ஏற்படும் கால விரையத்தினைக் குறைக்கும் வகையிலும், அவர்கள் பணி மேம்பாடு அடையும் வகையிலும், அவர்களுக்கு விலையில்லாமல் மடிக்கணினி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 21 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், மருத்துவ அலுவலகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தல், சுகாதாரத்தைப் பேணுதல், மருத்துவமனை வளாகத்தைப் பராமரித்தல், பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர், அதாவது Multipurpose Hospital Worker என்ற பெயரில் பணியாளர்களை கிழ்க்காணும் முறையில் நியமிக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்: (மேசையைத் தட்டும் ஒலி)

1. 200 படுக்கைகளுக்குக் குறைவான மருத்துவமனைகளில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கும் தொகுப்பூதிய அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் 5 ஆண்டு நீட்டிப்புக்கு வழிவகை செய்யும் வகையில் ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள். இந்தவகையில் சுமார் 4,000 பேர் பணி நியமனம் செய்யப்படுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 200 படுக்கைகளுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் புற ஆதார முறையில், அதாவது Outsourcing முறையில் நிரப்பப்படும்.

3. காலியாகவுள்ள செவிலியர் உதவியாளர்-நிலை 2 பணியிடங்கள், மருத்துவமனைப் பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு பணியமர்த்தல்மூலம் நிரப்பப்படும்.

இதேபோன்று, மருத்துவமனைகளின் பாதுகாப்பினை செம்மைப்படுத்தும் வகையில், 2,176 காவல் பணியாளர்கள்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

கீழ்க்காணும் முறையில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்: (மேசையைத் தட்டும் ஒலி)

1. பெரிய மருத்துவமனைகளின் பாதுகாப்பினை நாள் முழுவதும் மேற்கொள்ளும் வகையில் 8 மணி நேர பணி, சுழற்சி அடிப்படையில் புற ஆதார முறையில், அதாவது Outsourcing முறையில் நுழைவாயில்களுக்குத் தேவையான 776 காவல் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

2. 200 படுக்கைகளுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளிலுள்ள தீவிர சிகிச்சைப் பிரிவு, அதாவது I.C.U.-அவசரப் பிரிவு அதாவது Emergency Ward, மகப்பேறு பிரிவு அதாவது Maternity Ward மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு அதாவது Neonatal Care வார்டுகளுக்கு என்று சுமார் 1,400 காவல் பணியாளர்கள் புற ஆதார முறையில் அதாவது Outsourcing முறையில் நியமிக்கப்படுவர். இப்பணியாளர் நியமனத்திற்கென கூடுதல் செலவினமாக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

இதுமட்டுமல்லாமல், மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கும் வகையில், அதாவது கழிவு நீர் அகற்றல், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றை மேம்படுத்துதல்; மின் அமைப்புகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை 15 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளவும்; மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள உடைந்த மரச் சாமான்களுக்குப் பதிலாக 10 கோடி ரூபாய் செலவில் புதிய மரச் சாமான்கள் வாங்கவும்; (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவமனைகளில் தொய்வின்றி சேவை மேற்கொள்ளும்பொருட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வாங்க கூடுதலாக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

மேலும், மருத்துவமனைகளில் மருந்துகள் வாங்குவதற்கும்; உயிர் காக்கும் உயர் ரக மருந்துகள் வாங்குவதற்கும்; ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட 284 கோடி ரூபாய் இல்லாமல், உயிர் காக்கும் சிறப்பு மருந்துகள் வாங்க கூடுதலாக 10 கோடி ரூபாய் நிதியினை நான் ஒதுக்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தரமான மருத்துவ சேவையை தமிழக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" 11-1-2012 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகளும்; 23 முக்கிய பரிசோதனைகளும்; 113 தொடர் சிகிச்சை முறைகளும் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட 77 நோய்களுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வரை சிகிச்சை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. சிகிச்சை சம்பந்தப்பட்ட பரிசோதனைகளும் காப்பீட்டுக்காக வரையறுக்கப்பட்ட தொகையில் அடங்கும். இதுவரை இந்தத் திட்டத்தின்கீழ் 1,64,365 பயனாளிகளுக்கு 384 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, அதாவது Liver Transplantation; சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய மருந்துகள் அதாவது Renal Transplantation including Post Transplant Immunosuppressant Therapy; எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, அதாவது Bone Marrow Transplantation; காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சை, அதாவது Cochlear Implantation; ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை, அதாவது Stem Cell Transplantation ஆகிய சிகிச்சைகளை மேற்கொள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக செலவு ஆகிறது என்பதால் இந்தக் கூடுதல் செலவினத்தை ஏழை, எளிய நோயாளிகளே ஏற்கும் நிலைமை உள்ளது என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இத்தகைய ஏழை, எளிய நோயாளிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக ஏற்படும் கூடுதல் செலவினத்தையும் அரசே ஏற்கும் வகையில் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஒரு சிறப்பு தொகுப்பு நிதி, அதாவது Corpus Fund ஒன்று உருவாக்கப்படும். இந்தச் சிறப்பு தொகுப்பு நிதிக்கு முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இனிவரும் காலங்களில் அரசு மருத்துவமனைகளில் இடைக்கும் காப்பீட்டுத் தொகையிலிருந்து இந்தச் சிறப்பு தொகுப்பு நிதிக்காக

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

ஆண்டொன்றிற்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பண்புடையதும்; மருத்துவத் தன்மைகளைக் கொண்டதும்; நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டதும்; அழகை அதிகரித்து இளமையைத் தக்க வைக்கும் குணமுடையதுமான புழக்கத்தில் இருந்த பாரம்பரிய வேளாண் பொருட்கள் வழக்கொழிந்து போவது வேதனைக்குரிய ஒன்றாகும்.*

நவீன பொருட்களின் ஆதிக்கம் காரணமாக, பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவத்தை, இன்றியமையாத் தன்மையை பெரும்பாலான மக்கள் உணராமல் உள்ளனர்.

பண்டைக் காலத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய வழக்கத்தில் இருந்த வேளாண் பொருட்களில் முக்கியமானதாக இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவை விளங்கின.

இளநீரை எடுத்துக் கொண்டால் அதில் பொட்டாசியம், சோடியம், மக்னீசியம், கால்சியம், இரும்புச் சத்து ஆகியவை அதிக அளவில் உள்ளன. இதுமட்டுமல்லாமல், உடலுக்குக் குளிர்ச்சியை ஊட்டவும், ஜீரண சக்தியை மேம்படுத்தவும் இளநீர் பயன்படுகிறது. இளநீர் பருகுவதன்மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது.

முற்பகல் 11-10

தமிழகத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மற்றொரு வேளாண் பொருளான சீயக்காய், கூந்தலின் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கவும், கூந்தலின் வளர்ச்சியை மிருதுவாக்கவும், கூந்தலில் ஏற்படும் பொடுகைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதேபோன்று, மற்றொரு பாரம்பரிய வேளாண் விளைபொருளான பருத்தி, ஆடை நெய்வதற்கான முக்கிய மூலப்பொருளாக விளங்குகிறது. பருத்தி ஆடைகள் கோடையில் நிலவும் கடும் வெப்பத்தையும், பனிக் காலங்களில் நிலவும் கடும் குளிரையும் தாங்கவல்லதாகவும், சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பானதாகவும், சருமப் பராமரிப்பிற்கு ஏற்றதாகவும் விளங்குகின்றன.

இதுபோன்ற பல பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் மருத்துவத் தன்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையிலும், பாரம்பரிய பொருட்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையிலும், வழக்கொழிந்துபோன பாரம்பரிய பொருட்களைப் புழக்கத்தில் கொண்டுவரும் வகையிலும், இயற்கையின் படைப்பினைப் பயன்படுத்தி மக்களின் நலத்தினைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும், பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு மாநில மற்றும் மாவட்ட, வட்டார அளவிலான கருத்தரங்கங்கள், விழிப்புணர்வுப் பேரணிகள், வானொலி விளம்பரப் பாடல்கள், "இளநீர் குடியுங்கள், உடல் நலம் பேணுங்கள்" போன்ற மக்களைக் கவரும் வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள், கருத்துக் கண்காட்சிகள், திரையரங்கு விளம்பரங்கள், பத்திரிகை விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியவற்றின்மூலம் தமிழகமெங்கும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகளை அறிமுகம் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி, அதன்மூலம் ஊட்டச்சத்துக் குறைவினை அகற்றுதல், பள்ளி செல்லும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரித்தல்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

இடைநிற்றலை அகற்றல் ஆகிய நோக்கங்களை எய்தும்பொருட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1982 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் சத்துணவுத் திட்டத்தில், பல காலமாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதை அறிந்த நான், காலத்திற்கு ஏற்பவும், குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், உணவு முறையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தேன்.

எனது உத்தரவின்பேரில், புதிய வகை உணவு முறையினை அறிமுகப்படுத்துவது குறித்து புகழ்பெற்ற சமையற் கலைஞர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கலந்தாலோசனைக்குப் பிறகு, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பள்ளியிலும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலும் சோதனை முறையில் கொண்டைக்கடலை புலவு சாதம் மற்றும் மிளகுத்தூள் கலந்த முட்டை தயாரித்து பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இதனைப் பள்ளிக் குழந்தைகள் விரும்பி உண்பது கண்டறியப்பட்டது. இதுமட்டுமல்லாமல், 13 வகையான கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான முட்டை மசாலாக்களை சமையல் நிபுணர்கள் தயாரித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேற்கூறிய சோதனை முறையின் அடிப்படையில் புதிய உணவு வகைகளை சத்துணவுத் திட்டத்தில் படிப்படியாக அறிமுகம் செய்ய எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில், திங்கட்கிழமையன்று காய்கறி பிரியாணி மற்றும் மிளகுத்தூள் முட்டையும், (மேசையைத் தட்டும் ஒலி) செவ்வாய்க்கிழமையன்று கொண்டைக்கடலை புலவு மற்றும் தக்காளி முட்டை மசாலாவும், (மேசையைத் தட்டும் ஒலி) புதன்கிழமையன்று தக்காளி சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும், (மேசையைத் தட்டும் ஒலி) வியாழக்கிழமையன்று சாதம், சாம்பார் மற்றும் வேகவைத்த

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முட்டையும், (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிக்கிழமையன்று கருவேப்பிலை சாதம் அல்லது கீரை சாதம், முட்டை மசாலா மற்றும் மிளகாய்ப்பொடியில் வறுத்த உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களில் திங்கட்கிழமையன்று சாம்பார் சாதம் மற்றும் வெங்காயம், தக்காளி முட்டை மசாலாவும்; செவ்வாய்க்கிழமையன்று மீல் மேக்கர், காய்கறி கலவை சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; புதன்கிழமையன்று புளியோதரை மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; (மேசையைத் தட்டும் ஒலி) வியாழக்கிழமையன்று எலுமிச்சை சாதம், தக்காளி முட்டை மசாலா மற்றும் சுண்டலும்; (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிக்கிழமையன்று சாதம், சாம்பார், வேகவைத்த முட்டை மற்றும் உருளைக்கிழங்கு பொரியலும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, அங்கன்வாடி மையங்களுக்கு வருகைதரும் குழந்தைகளின் சிறப்பம்சம் மற்றும் செரிமானத் திறன் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கும் புதிய உணவு வகைகள் அறிமுகம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி, திங்கட்கிழமையன்று தக்காளி சாதம், வேகவைத்த முட்டையும்; செவ்வாய்க்கிழமையன்று கலவை சாதம் மற்றும் சுண்டலும்; புதன்கிழமையன்று காய்கறி புலவு சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வியாழக்கிழமையன்று எலுமிச்சை சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக்கிழமையன்று பருப்பு சாதம், வேகவைத்த உருளைக்கிழங்கும்; சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கலவை சாதமும் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட புதிய உணவு வகைத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலில் ஒரு வட்டாரத்தில் மட்டும் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, அந்த வட்டாரத்தில் இந்தப் புதிய உணவு முறைத் திட்டத்தின் செயல்பாடு குறித்து அறிந்த பிறகு, மற்ற வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை, கல்வி பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கையையும், அவர்களின்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. சுகாதாரப் பணிகள் மேம்பாடு மற்றும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படுதல், பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம் ஆகியவை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக மனித நேயத்தின் சிகரம் அன்னை தெரசா அவர்களால் 'அன்பு மகளே' என அழைத்து, அரவணைத்து, உலக அளவிலே நான் உருவாக்கிய இந்த மனித நேயத்தை, எனக்குப் பின்னால் கொண்டு செல்கிற மிகச் சிறந்த நிருவாகிகளில் ஒருவராக நீங்கள் வருவீர்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தெரசா அவர்களால் வாழ்த்தப்பட்ட நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மூன்று முத்தாய்ப்பான அறிக்கைகளை விதி 110-ன்கீழ் இங்கு தந்திருக்கிறார்கள்.

ஓர் அரசு வசதியுடையவர்களுக்கு, வாய்ப்புள்ளவர்களுக்கு, செல்வந்தர்களுக்கு, உதவுவதைவிட ஏழை எளிய மக்களுக்கு, நலிந்தவர்களுக்கு, அடித்தட்டு மக்களுக்கு, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு, வாய்ப்பு வசதி இல்லாதவர்களுக்கு, ஏக்கத்தில் இருப்பவர்களுக்கு அந்த ஏக்கத்தைப் போக்குகிற வகையிலே திட்டமிடுவது இருக்கிறதே அதுதான் இந்த அரசின் மிகச் சிறந்த சாதனையாக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, கிராமப்புற மக்கள், தொழிலாளர்கள், ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்விலே தாங்கள் வளர்வதற்கு, தங்களைக் கைதூக்கி விடுவதற்கு ஒரு கரம் கிடைக்காதா என்று நினைப்பவர்களுக்கு, கைதூக்கி விடுகிற ஒரு ஏந்திழையாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

2012 நவம்பர் 2] [முனைவர் செ.கு. தமிழரசன்]

முதல் திட்டம், கிராமப்புறங்களிலே இருக்கிற அனைத்து சுகாதார நிலையங்களையும் ஒரு புரட்சிகர செயலாக்கத் திட்டத்திலே இன்றைக்குப் புதுமைப்படுத்துகிற திட்டம். பலநோக்கு சுகாதார உதவியாளர்கள் இருக்கிறார்களே, கிராம சுகாதார உதவியாளர்கள் அவர்களுக்குக்கூட இன்றைக்கு மடிக்கணினி தந்து, கம்ப்யூட்டர் முறையிலே இன்றைக்குக் கிராமப்புறத்திலே ஒரு மருத்துவப் புரட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவமனைகளிலே தகுந்த மருத்துவ வசதிகள், அதேபோன்று பணி நியமனங்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு தாயாக தமிழ்நாட்டில் சத்துணவு பெறுகிற குழந்தைகளுக்கெல்லாம் என்ன தர வேண்டுமென்று மெனு தயாரித்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தாய் தன்னுடைய குழந்தைகளுக்கு எதைத் தந்தால் அந்தக் குழந்தை மகிழ்ச்சியோடு இருக்கும், படுத்து உறங்கும், பாடும், ஆடும், ஓடி விளையாடும், வளரும், பெரிய கல்விமானாக வரும் என்று கவனமாகக் கருத்திலே கொண்டு, கனவோடு வளர்ப்பார்களோ, அதைப்போல ஒரு கனவோடு இன்றைக்குத் தமிழகத்திலுள்ள குழந்தைகளையெல்லாம் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயாக வளர்க்கிற அந்தப் பாங்கு அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

ஐந்து நட்சத்திர விடுதிக்கு நிகராக, Five Star Hotels இருக்கிறதே, அதற்கு நிகராக menu. மாதம் முழுவதும், முதல் வாரத்தில் இது, இரண்டாவது வாரத்தில் இது, மூன்றாவது வாரத்தில் இது, நான்காவது வாரத்தில் இது, இன்றைக்கு கொண்டைக்கடலை, நாளைக்கு Vegetable Biriyani என்று விதவிதமாக, விதவிதமாக அந்தக் குழந்தைகளெல்லாம் பார்த்தறியாத அந்த உணவுகளையெல்லாம், படங்களில் பார்த்த அந்த உணவை, ஊடகங்களில் பார்த்த அந்த உணவை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்கள் வீடு தேடிப் போய் தருகிற அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகக் குழந்தைகளுக்கெல்லாம், அந்தக் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, அந்தக் குழந்தைகளைப் பெற்ற தாய்களுக்கும் அவர்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறார்கள். எங்களால் முடியவில்லை, எங்கள் தாய் இன்றைக்கு எங்களின் குழந்தைகளைச் சீராட்டி, பாராட்டி வளர்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2012 நவம்பர் 2

அதைப்போலவே பரம்பரைச் சித்தர்களால் பாராட்டப்பட்ட, சித்தர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட, அந்த வைத்தியங்களுக்கும், சித்தர்கள் போற்றிய இளநீருக்கு, சீயக்காய்க்கு, அதற்கு மேலே பருத்திக்கு, கருவேப்பிலைக்கு, இன்றைக்கு இதற்கெல்லாம் வாழ்வு கிடைக்கிற வகையிலே, அந்தச் சித்தர்கள் செய்து காட்டிய அப்படிப்பட்ட வித்தைகளையெல்லாம் மீண்டும் தமிழகத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிற அளவிற்கு, ஒரு பாரம்பரிய மருத்துவப் புரட்சியும், நம்முடைய விஞ்ஞான மருத்துவப் புரட்சியும், அதற்கு மேலே இந்தச் சத்துணவில் ஒரு புரட்சியும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவரால் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தை, புரட்சித் தலைவருடைய அரசியல் வாரிசான புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மேம்படுத்தியிருக்கிறார்கள் என்கிறபோது, ஏழையெளிய மக்களின், ஒடுக்கப்பட்ட ஒரு கோடி மக்களின் சார்பில் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டையும் சொல்லி, நீங்கள் வாழ்வாங்கு வாழ்வீர்கள் என்று வாழ்த்தி அமைகிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுக்கான அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுக்கென்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களைத் தந்து மேம்படுத்தியது மட்டுமல்லாமல், அதைச் சுகாதாரமாக, சுத்தமாகப் பராமரிப்பதற்காக சுமார் 4,000 பேருக்கு மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்களை நியமித்து, ஆரம்ப சுகாதார வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்கின்ற உத்தரவை, ஆணையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அறிவிப்பின் வழியாகத் தந்துள்ளார்கள்.

அதேபோன்று, அந்த மருத்துவமனையைப் பாதுகாப்பதற்கு சுமார் 2,176 காவல் பணியாளர்களை நியமித்தும், தீவிர சிகிச்சைப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, பிரசவப் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளைப் பாதுகாப்பதற்காக 1,400 காவல் பணியாளர்களை

2012 நவம்பர் 2] [திரு. உ. தனியரசு]

நியமித்து, மருத்துவம் அல்லது சிகிச்சை பெற வருகின்ற நோயாளிகள் பாதுகாப்போடு, சுகாதாரத்தோடு, மகிழ்வோடு, அமைதியோடு சிகிச்சை பெற்று, குணம் அடைய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று இந்த அரிய அறிவிப்பைத் தந்து, நாட்டு மக்களை மகிழ்விக்கிற செய்தியாகத் தந்திருப்பதற்காக நன்றி பாராட்டுகிறேன்.

உயிர் காக்கின்ற இந்தப் பொதுக் காப்பீட்டுத் திட்டத்தில், கூடுதலாக செலவாகக்கூடிய உயர் அறுவை சிகிச்சைக்கு, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை போன்ற உயர் அறுவை சிகிச்சைக்கு ஆகும் கூடுதலான செலவை, அந்த பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்கள் சுமப்பது கடினம் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருதி, அதற்காக அந்தக் கூடுதல் செலவையும், தொகுப்பு நிதியாக 10 கோடி ரூபாயைத் தந்து, அந்த ஏழையெளிய சாமானிய மக்களின், அந்த மருத்துவ சிகிச்சைக்கு ஆகும் செலவினை அரசே ஏற்கும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தாயுள்ளத்தோடு அவர்கள் இந்த அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். நாட்டு மக்கள், குறிப்பாக நோயாளிகள், பாதிக்கப்பட்டவர்கள், உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களின் உயிரைப் பாதுகாக்க நம்முடைய தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்பு. இந்த அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள், பழக்கவழக்கங்கள், நாகரிகத்திற்கு மூல ஆதாரமாக இருக்கிற உணவு வகைகள். குறிப்பாக இளநீர் போன்றவற்றை பயன்படுத்த, ஊக்கப்படுத்துவதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தவிருக்கிறார்கள். சாதாரணமாக நம்முடைய தோட்டங்களிலே, வீடுகளிலே கிடைக்கின்ற இளநீரில் அவ்வளவு அரிய வகையான உடல் நலத்திற்குத் தேவையான அனைத்து வகையான சத்துக்களும், ஊட்டமும் இருக்கின்றன. அதுபோன்று நம்முடைய மனிதன் முதன் முதலாக ஆடை தைத்து மானத்தைக் காக்க உதவிய பருத்தியைப் பாதுகாப்பதற்கும், அதைப் பயன்படுத்த விழிப்புணர்வூட்டி அதனுடைய விளைச்சலை உயர்த்துவதற்கும் வழிவகுத்திருக்கிறார்கள்.

[திரு. உ. தனியரசு] [2012 நவம்பர் 2

முற்பகல் 11-25

அதுபோன்று சீயக்காய். சாதாரண, கோடிக்கணக்கான மக்கள் பாரம்பரியமாகக் குளியலுக்குப் பயன்படுத்தி வந்த சீயக்காயினுடைய பயன்பாடு குறித்து விழிப்புணர்வைத் தந்ததற்காகவும், அதற்காக 10 கோடி ரூபாய் தந்துதவியதற்காகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரம்பரியமிக்க நம்முடைய தமிழ் சமுதாயத்தினுடைய பண்பாட்டை, நாகரிகத்தை, அவர்களுடைய உணவு பழக்கவழக்கங்களைப் பாதுகாப்பதற்கும், அதை மேம்படுத்துவதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் அறிவிப்பு செய்ததற்காகவும் நன்றி பாராட்டுகிறேன்.

நிறைவாக, ஏழையெளிய, சாமானிய மக்கள் தங்களுடைய குடும்பங்களிலே அவர்கள் சமைத்து, அப்படி சமைக்கப்பட்ட வகை, வகையான உணவுகளை உண்பதற்கான வாய்ப்புக் குன்றிய கோடிக்கணக்கான அடித்தட்டு மக்களினுடைய அன்புக் குழந்தைகள், சிறார்கள் அறுசுவை உணவு என்று எழுத்திலோ அல்லது ஏதாவது ஒரு வகையில் பார்த்திருப்பார்கள் அந்த உணவை. அந்தக் குழந்தைகள் அறுசுவை உணவைக் கண்டிராத குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு அறுசுவை அல்ல, நூற்றுக்கணக்கான வகை, வகையான உணவை, அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களிலே தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு முன்பு பேசிவிட்டு அமர்ந்து இருக்கின்ற பாசமிகு திரு. செகு. தமிழரசன் ஐயா அவர்கள் சொன்னதைப் போன்று, நட்சத்திர உணவுக்கூடங்களிலே கிடைக்காத வகை, வகையான உணவைக்கூட, அந்த சாமானிய மக்களுடைய குழந்தைகள் பெற்று, அவர்கள் வயிறார உண்ட மகிழ்ச்சியில், அவர்களுக்கு முறையாகக் கொடுத்த கல்வியை மகிழ்ந்து கற்க வேண்டும். இந்தத் தமிழ் நிலத்தில் குழந்தைப் பருவத்திலிருந்து அவர்கள் ஆரோக்கியமாக வளர வேண்டும் என்பதற்காக, ஊட்டச்சத்தைத் தருகின்ற, வகை, வகையான உணவு வகைகளைத் தந்திருக்கிறார்கள். உலக வரலாற்றில், பொதுவுடைமை நாடுகளிலே மட்டுமல்ல, எந்த வளர்ந்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலேகூட இல்லாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வசதியை, வாய்ப்பை, தமிழ் நிலத்திலே வாழுகின்ற எனதருமை ஏழைத் தமிழ்க் குழந்தைகளுக்கு, குழந்தைச் செல்வங்களுக்குத் தந்துதவிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

2012 நவம்பர் 2] [திரு. உ. தனியரசு]

திட்டங்களில் எல்லாம் சிறப்பான திட்டமாக, இந்தத் திட்டத்தைக் கருதி, மூன்று அறிவிப்புகளைத் தந்து, நாட்டு மக்களினுடைய உள்ளங்களில் எல்லாம் மகிழ்ச்சியை ஊட்டியிருக்கின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றி பாராட்டி, வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றையதினமும் மூன்று முத்தான அறிக்கைகளை மக்களுக்காக அர்ப்பணித்திருக்கின்றார்கள். கிராமங்களிலே வாழுகின்ற தாய்மார்கள் கருவிலே வளர்கின்ற குழந்தைகளைக் கண்காணிக்கின்ற செவிலியர்களுக்கு, அவர்கள் ஊர், ஊராகச் சென்று எல்லா தாய்மார்களையும் கவனிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மடிக்கணினி வழங்கி, அவர்கள் ஒரே இடத்தில் இருந்து அனைத்தையும் கவனிக்கின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு புதிய உத்தியை தமிழகத்தில் அறிமுகப்படுத்தியிருப்பதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மருத்துவமனைகள். மருத்துவமனைகளிலே சுகாதாரக் கேடு இருக்கக்கூடாது. எந்த நேரத்திலும் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதற்காக, பணியாளர்களை நியமித்து, அதிலும்கூட, 200 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைக்கு ஒருவிதமாகவும், அதைவிட அதிகமாக படுக்கை வசதிகள் இருக்கின்ற மருத்துவமனைகளிலே தொகுப்பு ஊதியத்திலே காவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பணி அமர்த்துகின்ற வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கின்றார்கள்.

ஊட்டச்சத்து. சத்துணவுத் திட்டத்திலும் சரி, அங்கன்வாடி திட்டத்திலும் சரி, ஒருவன் வளரும்போது, 'ஆளும் வளரணும், அறிவும் வளரணும், அதுதாண்டா வளர்ச்சி' என்ற பாடிய பாட்டிற்கிணங்க, அவன் சிறு வயதிலேயே அனைத்து உணவு வகைகளையும் உண்டு, நன்றாக வளர வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை, ஒரு நாளைக்கு ஒரு முறை

[திரு. பி.வி. கதிரவன்] [2012 நவம்பர் 2

menu அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிறிய வயதிலேயே அந்தக் குழந்தைகளுக்கு menu என்ற பழக்கத்தை உருவாக்கி, அவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவுகளைக் கொடுக்கின்ற நல்ல திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள்.

அதேபோன்று இயற்கை வேளாண்மைப் பொருட்களான இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவையெல்லாம், குறிப்பாக, தமிழகத்தில் பாரம்பரியமானவை. அந்தப் பாரம்பரியத்தைக் காக்கின்ற வகையிலே, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும், இந்தப் பொருட்களைப் பயன்படுத்துவதால் உடல் நலத்திற்கு நல்லது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 10 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார்கள். இதுபோன்ற சிறந்த திட்டங்களையெல்லாம், ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகின்ற திட்டங்களையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே கொண்டுவந்து அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். அதற்காக எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மனதாரப் பாராட்டி அமர்கின்றேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலேயே இனிப்பான மூன்று அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருக்கிறார்கள். எங்கே தொடங்குவது என்று தெரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது; மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நான் பிறந்திருந்தால், பள்ளிக் கூடத்தில் சேர்ந்து இன்னும் நன்றாகப் படித்திருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களைக் கர்ணனாகவே பார்க்கின்றேன். நான் கர்ணனைப் படங்களில் பார்த்திருக்கின்றேன். 'கலியுகக் கர்ணன்' என்று சொன்னால், அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2012 நவம்பர் 2] [திரு. ரா. சரத்குமார்]

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மனித வாழ்க்கைக்கு மிக மிக அவசியம் கல்வி; கல்விக்கேற்ற வேலை; வேலைக்கேற்ற ஊதியம். அதன்பிறகு, சுகாதாரம் மிக மிக அவசியம். ஏனென்றால், கல்வி பயிலுபவர்கள் சுகாதாரமாக, நல்ல உடற்கட்டுடன், நோயில்லாமல் வாழ்ந்தால்தான் அவர்கள் பள்ளிக்குச் செல்லமுடியும்; வேலைக்குச் செல்லமுடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகையால், கல்வி, சுகாதாரம், வேலை இவையெல்லாம் முக்கியமான அம்சங்கள் ஆகும்.

கல்வியை எடுத்துக்கொண்டால், மாணவர்கள் கல்வி பயிலவேண்டும் என்பதற்காக மதிய உணவுத் திட்டத்தை, சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான வகையிலே முட்டையையும் சேர்த்துக் கொடுத்து, அதன்பிறகு விரிவாக்கப்பட்டு, இன்றைக்கு அந்தச் சத்துணவுத் திட்டத்தின்மூலம், தினமும் பலவகையான உணவு வகைகளைக் கொடுக்கின்ற அளவிற்கு இதைச் சிந்தித்திருக்கிறார்கள் என்றால், அனைவரும் அனைத்தையும் பெறவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான். ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வைக் களைந்து, நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்கும் அறுசுவை உணவு கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில், பள்ளிக் குழந்தைகள் சிறப்பாகப் படிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய வீட்டிலேயே சில சமயம் அம்மா தினமும் காலையிலே முட்டையைக் கிண்டிக் கொடுத்தால், 'என்னம்மா! தினமும் இதேதானா?' என்று நாமே கேட்டுவிடுகிறோம்.

அதேபோன்று, பள்ளிக் குழந்தைகளுக்கும் இதேபோன்று சாப்பாட்டினைப் போட்டுக் கொண்டிருந்தால், அவர்களுக்கும் இதுபோன்றதொரு saturation point வந்துவிடுமே என்று எண்ணி, அவர்களுள் புகுந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறு குழந்தைகளுள் புகுந்து, அவர்களின் எண்ணத்தில் என்ன பதிவாகியிருக்கும் என்பதை உணர்ந்து, இதைச் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவர்களுக்கு என்ன தேவை? அவர்களுடைய பக்கத்து வீட்டில் முட்டை மசாலா சாப்பிடுகிறார்கள்; மட்டன் மசாலா சாப்பிடுகிறார்கள் என்றால், இந்தக் குழந்தை ஏங்குமே என்று ஒரு தாயுள்ளத்துடன், அந்தக்

[திரு. ரா. சரத்குமார்] [2012 நவம்பர் 2

குழந்தையும் சிறப்பான உணவு உண்ண வேண்டும் என்ற அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் சிந்தித்து 7 நாட்களுக்கும் 7 விதமான உணவைக் கொடுத்திருக்கிறீர்களே! உண்மையிலேயே நீங்கள் கலியுகக் கர்ணன்தான்! (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தவொரு மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

ஒரு நல்லாட்சிக்கு, ஒரு நல்ல முதலமைச்சர் இருக்கவேண்டும். அந்த வகையில் நாம் நல்ல ஒரு முதலமைச்சரைப் பெற்றிருக்கின்றோம். பலரும் வெளியே பலவிதமாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், மக்களை நன்றாகப் புரிந்து, உணர்ந்து, நல்லாட்சி தரவேண்டுமென்று உறுதியுடன் இருக்கின்ற ஒரு முதலமைச்சரைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சுகாதாரம்; அந்த அடிப்படையிலேயே சுகாதாரம் மிக மிக அவசியம். சிலர் சிகிச்சை பெறமுடியாமல் இருப்பவர்கள், சிகிச்சைக்கு வசதியில்லாமல் இருப்பவர்கள், முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக இன்றைக்குப் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 77 நோய்களுக்கு அந்தக் காப்பீட்டுத் திட்டம் இருந்தாலும், kidney transplantation, liver transplantation, stem cell therapy போன்ற நோய்களுக்கெல்லாம் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று உன்னிப்பாகக் கவனித்து—வெளிநாடுகளில்கூட இதுபோன்று சிந்திக்க முடியாது. அந்த அளவிற்கு சிந்தித்து—இவற்றிற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்களால், சாதாரண குடும்பத்தினரால் இதுபோன்ற நோயைத் தீர்க்க மருத்துவமனைக்குச் சென்றால், அவர்களால் நிச்சயமாக பணத்தைச் செலவழித்து உயிரைக் காப்பாற்ற முடியாது என்பதை நன்கு உணர்ந்து, அந்த நோய்களையும் அந்தத் திட்டத்திலே சேர்த்திருக்கிறார்கள்.

Liver transplantation, kidney transplantation, stem cell therapy, bone marrow transplantation போன்றவற்றிற்கெல்லாம் சாதாரண மக்களால் சிகிச்சை பெறுவது மிகவும் கடினம். மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரேயொரு கோரிக்கை; இந்த facial disfigurement என்பது நிறைய பேருக்கு இருக்கின்றது. அதைக்கூட இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும். பாதிக்கப்பட்ட பலரின்

2012 நவம்பர் 2] [திரு. ரா. சரத்குமார்]

குடும்பத்தினருக்கு கிட்டத்தட்ட எட்டரை இலட்சம் ரூபாய் செலவாகிறது; ஐந்தரை இலட்சம் ரூபாய் செலவாகிறது என்று சொல்கிறார்கள். பல பேர் பிறக்கும்போதே உதடு பாதியாகப் பிரிந்து, வேறுமாதிரியான முக அமைப்புடன் பிறக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கும் பயனளிக்கும் வகையில், இந்த நோயையும் அந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டீர்கள் என்றால், சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக மாற்று அறுவை சிகிச்சை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-35

திரு. ரா. சரத்குமார்: அது முதலிலே இருக்கிறது. அது சென்ற காப்பீட்டுத் திட்டத்தில் இருந்தது. அண்மையிலே அது சில இடங்களிலே செய்யப்படாத சூழ்நிலையை உணர்ந்ததன் அடிப்படையிலேதான் இந்தக் கருத்தை நான் மீண்டும் உங்களிடம் பதிவு செய்தேன். மிக்க நன்றி. அது தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற அவா. அதனால் மீண்டும் அதை வலியுறுத்தி இருக்கின்றேன்.

அது மட்டுமல்லாமல், உடல் நலத்திற்கு இளநீர் குடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். ஏனென்றால், மது அருந்தாதே என்று 4 ஆம் தேதி அன்று நடை பயணம் இந்தியா முழுவதும் நடக்கிறது. இளநீர் குடியுங்கள் என்று சொல்லி ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நடக்கச் சொல்லி இருக்கிறீர்கள் அம்மா! நீங்கள் சொன்னீர்கள் என்றால், நான் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை நடக்கத் தயார். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நன்றாக இருக்க வேண்டும், சுகமாக இருக்க வேண்டும், நன்றாக வாழ வேண்டும், அவர்கள் தெம்பாக, நன்றாக இருக்க வேண்டும். நல்ல நல்ல பழக்கத்தை, அதாவது, நல்லவர்கள் நல்லபடியாக இருக்க வேண்டுமென்றால், அந்தக் குழந்தைகள்

[திரு. ரா. சரத்குமார்] [2012 நவம்பர் 2

சிறப்பாக இருக்க வேண்டும். வருங்காலத்தில் சிறந்த மாணவர்களாக, நல்லவர்களாக வளர வேண்டுமென்றால், சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வி பயில பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்போது வித விதமான உணவுகளைக் கொடுக்க வேண்டும். அதை எதற்கு நான் முக்கியமாகச் சொல்கிறேன் என்றால், சாப்பாடு மட்டும் போடவில்லை. Drop–outs-ஏ இல்லாத ஒரு பள்ளிக்கூடத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் விதைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டிலே சாப்பாடு இல்லை, பக்கத்து வீட்டிலே நல்ல சாப்பாடு கிடைக்கவில்லை என்பதையெல்லாம் மறந்து, அங்கே போனால் நல்ல சாப்பாடும் கிடைக்கும், நீ படிக்காவிட்டால் அப்புறம் அப்பா நிச்சயமாகக் கண்டிப்போடு நடந்துகொள்வார்கள் என்று எச்சரிக்கை செய்கின்ற வகையிலே சிறந்த ஒரு முயற்சி எடுத்திருக்கிறார்கள்.

Outsourcing method-லே மருத்துவமனைகளையெல்லாம் எப்படி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக Outsourcing முறையிலே அதற்குப் பணியாளர்கள், பலர் நிறைய எழுதி இருக்கிறார்கள். அதைச் சொல்ல முடியாது. சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அத்துணை அளவிற்கு சிறப்பான மூன்று அறிவிப்புகளைச் சொல்லி, மக்களுக்கு எது தேவை என்பதை உணர்ந்து, அந்தத் தேவைகளை உணர்ந்து செயல்படுகின்ற ஒரு முதலமைச்சர் அவர்கள் நீடுழி வாழ்ந்து, பல்லாண்டு வாழ்ந்து, பல பேறு பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த மாதிரி உள்ளம் பல்லுக்கு இருக்காது. பிறரைப் பற்றிச் சிந்திக்கின்ற நல்ல உள்ளம் கொண்டவர்கள் என்றும் நீடுழி வாழ வேண்டும் என்று சொல்லி, கலியுகக் கர்ணனாக இருக்கும் நீங்கள் தொடர்ந்து இதுபோன்று விதி 110-ன்கீழ் அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும், நாங்கள் வாழ்த்திக்கொண்டே இருக்க வேண்டும் என்று கூறி, நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விதி 110-ன்கீழ் தமிழக முதல்வர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய 3 அறிக்கைகளையும் முதற்கண் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். மக்கள் நல்வாழ்விலே

2012 நவம்பர் 2] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பெரிதும் அக்கறை கொண்டு, ஏறக்குறைய 8 கோடி மக்கள் வாழ்கின்ற தமிழகத்தில், அவ்வப்பொழுது கிராமங்களில், நகரங்களில் திடீர், திடீர் என வரக்கூடிய நோய்கள், குறிப்பாக, டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்கள் மற்றும் பிற நோய்கள் எல்லாம் வருகின்றபொழுது, தமிழகத்திலே ஒரே நேரத்திலே எந்தெந்த இடத்திலே, என்னென்ன விதமான நோய்கள், எத்தனை பேருக்கு இந்தக் காய்ச்சல் அல்லது இருமல் அல்லது வேறு விதமான நோய்கள் இருக்கின்றன என்பதை சாதாரணமாகக் கணக்கெடுக்கின்றபொழுது காலதாமதம் ஆகும். எனவே, கணினி என்று வருகின்றபொழுது உடனுக்குடன் தலைமைக்கு வந்து சேரவும், அது குறித்து உடனடியாகத் திட்டமிடவும், அந்த நோயை முளையிலேயே கிள்ளி எறிவதற்கும் இந்த விலை இல்லாத மடிக் கணினியை, குறிப்பாக, கிராம அளவிலே, அடிமட்ட அளவிலே, grass root workers என்று அழைக்கக்கூடிய கிராம சுகாதார செவிலியர்களுக்கு வழங்கி இருப்பது உண்மையிலேயே 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்ற அந்தத் திட்டத்தினுடைய ஒரு கட்டமாக அதை நான் கருதுகிறேன். இது உண்மையிலேயே ஒரு breakthrough என்று அழைக்கக்கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திட்டம். எனவே, இந்தத் திட்டத்தை நான் மனதார வரவேற்கிறேன்.

அதேபோல, அடிக்கடி இப்பொழுது மருத்துவமனைகளில் குழந்தைகள் திருட்டு என்பது நடைபெற்றுவிடுகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. குழந்தைகள் இல்லாதவர்கள் குழந்தைகளைத் தேடிப் பிடித்து, ஆட்களை வைத்து திருடுகிறார்கள். இது குறிப்பாக, மகப்பேறு மருத்துவப் பகுதிகளிலே காவலர்கள் இல்லாத ஒரு குறையின் காரணமாக இதெல்லாம் நடந்து விடுகிறது. எனவே, அதைக் கணக்கிலேகொள்ள வேண்டும், அதேபோல அண்மையிலேகூட பொது மருத்துவமனையிலே குழந்தையை எலி கடித்த ஒரு கிறிய சம்பவம்கூட நடந்தது. எனவே, ஒட்டுமொத்தமாக அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளுக்கு எந்த விதத்திலேயும், எந்த நிலைகளிலேயும் குறைவாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலேயும், மருத்துவமனைகளை சுகாதாரமாகவும், பாதுகாப்பாகவும் வைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்களையும் மற்றும் காவலர்களையும் நியமிக்கப் போவதாக தமிழக முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் outsourcing என்ற

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2012 நவம்பர் 2

முறையில் மட்டும்தான் எங்களுக்கு உடன்பாடு கிடையாது. அரசே நேரிடையாக நியமித்தால்தான் அதில் வேறு எந்தத் தவறும் ஏற்படாது என்ற என்னுடைய கருத்தை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாதிகளுக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்த விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ஏற்கெனவே மக்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சாதாரண வியாதிகள் மற்ற வியாதிகளுக்குகூட தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையிருந்தாலும், முக்கியமான சிகிச்சையான, சிறுநீரக மாற்று சிகிச்சை (Kidney transplantation), stem cell and liver transplantation *போன்ற சிகிச்சைகளுக்குக்கூட, அதாவது* post surgical, *அறுவை சிகிச்சை முடிந்த பின்னர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அவர்கள் சிகிச்சை பெற வேண்டிய நிலை இருக்கிறது. அதற்கு அவர்கள்* Immunosuppressants *என்ற மருந்தைச் சாப்பிட வேண்டும். ஏனென்றால் வேறு உடலிலிருந்து சிறுநீரகத்தை எடுத்து வைக்கும் காரணத்தினால், சிறுநீரகத்தைப் பொருத்தும் உடலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது. அதாவது* rejection *ஏற்பட்டு விடக்கூடாது. இதற்கு அதிகமான செலவுகள் ஏற்படும் என்ற காரணத்தினாலும், வாழ்நாள் முழுவதும் மருந்துகள் சாப்பிட வேண்டும் என்ற காரணத்தினாலும் பல நபர்கள் இந்த சிகிச்சையை மேற்கொள்ளாமல் இருக்கிறார்கள். தற்போது இந்த அரசு அந்தச் செலவுகள் முழுவதையும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. இதனை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மீண்டும் நான் வரவேற்கிறேன்.*

Liver Transplantation surgery, stem cell அதாவது bone marrow-*விலிருந்து* cell *எடுத்து ஒரு உறுப்புக்குப் பதிலாக, இதை வைத்து, அந்த உறுப்புகளை வளர்த்தெடுப்பது என்பதெல்லாம் நவீன சிகிச்சைகள். இப்போது இந்தச் சிகிச்சைகள் பம்பாய் போன்ற இடங்களிலும், சென்னையில் சில இடங்களில் மட்டும்தான் நடைபெறுகின்றன. இப்போது இந்தச் செலவினத்தையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இது சுகாதாரத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும்.*

2012 நவம்பர் 2] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அடுத்து, தமிழக முதலமைச்சர் சத்துணவில் கூடுதலாக சுவையான உணவு, விதவிதமான உணவு கொடுப்பது என அறிவித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். ஏனென்று சொன்னால், இப்போது தனியார் பள்ளிகளை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு பார்வை பொதுவாக வந்துவிட்டது. இதை எப்படி நிறுத்தலாம் என்றால், ஒன்று பள்ளிகளில் நல்ல தரமான பாடங்களைச் சொல்லிக் கொடுப்பது, அடுத்து குழந்தைகளுக்கு தரமான, சத்தான உணவு வழங்குவது. ஏற்கெனவே முட்டை கொடுத்து வந்தாலும்கூட, அதனை எந்தவிதத்திலும் நிறுத்தாமல், தினமும் விதவிதமாகவும், தினம் ஒரு உணவு, வாரத்திற்கு ஒவ்வொரு உணவாக மாற்றி புதிய வகைகளில் அந்த உணவைக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இதெல்லாம் ஒட்டுமொத்தமாக கல்வியில், மருத்துவத்தில், தொழில் மற்றும் பல்வேறு வழிகளில் மனித வளத்தை மேம்படுத்தும் வகையில் தமிழக முதலமைச்சர் அறிவித்திருக்கக்கூடிய அந்த அறிவிப்புகளுக்கு என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் பாரம்பரியமாகப் பயன்படுத்தக்கூடிய இளநீரைப் பயன்படுத்தாமல் வெளிநாட்டு பானங்களை இப்போது நாம் பயன்படுத்தும் வழக்கத்திற்கு வந்து இருக்கிறோம். அதிலிருந்து விடுபட இளநீரைப் பயன்படுத்தவும், ஷாம்பு போன்ற பொருட்களைப் பயன்படுத்தி முடிகள் எல்லாம் கொட்டி மொட்டையாகாமல் தடுத்திட, சீயக்காயைப் பயன்படுத்துவதற்கும், நவீன ஆடைகளைப் பயன்படுத்தி அலர்ஜி ஆகாமல் பருத்தியை ஊக்குவிக்கக்கூடிய வகையில் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக ஏறக்குறைய 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கக்கூடிய இந்த நல்ல நடவடிக்கைகளை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வரவேற்று அமருகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: Hon'ble Speaker and my beloved Amma, your love knows no bounds for the people of Tamil Nadu. Everyday is a new day when you come here to the Assembly, because we know that we are going to get immense gifts from you . And today you have given us plenty, about which I want to say a few words as special acknowledgement. Improving the security system in the

[Dr. (Tmt) Nancy Ann Cynthia Francis] [2012 நவம்பர் 2

Government hospitals is very commendable. Implementing the increase in the reimbursement for certain illnesses like liver transplant, bone marrow transplant, stem cell transplant, kidney transplant and extending insurance cover not only for the treatment as such but also for the post transplant treatment is commendable. These treatments are not affordable even for the middle class people. But you Amma, in your great love for us, have made it available for even the poor persons. Giving a balanced diet for the children at the noon meal centres and the Anganwadis was just not giving some rice to eat, but your maternal love has proved that you have taken so much great care not only to provide a balanced diet but a very palatable diet, a variety of dishes, (Thumping of desks) till now they would be seen only in the kitchens and dining tables of affordable persons. (Thumping of desks) Amma, we, the people of Tamilnadu, are very lucky in having you as our Chief Minister, (Thumping of desks) someone who takes care of our every need to the very minutest detail. God bless you, Amma. Thank you.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூரக் காட்சியோடு, நல்ல சிந்திக்கிற சிந்தனையோடு வளமான தமிழகத்தை மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அற்புதமான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். சுகாதாரம் மிகவும் இன்றியமையாதது என்பதையும், கிராம மருத்துவத்திலே கம்ப்யூட்டர் யுகத்தைக் கொடுத்திருப்பதும், எந்த மருத்துவ சுகாதார நிலையங்களிலும் குறை இல்லாமல் பணியாளர்களை நியமித்தும், மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள் இருந்தும், ஏழைகள் பெரிய நோய்களால் பாதிக்கப்படுகின்றபோது, எந்த மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை பெற அவதிப்படுகிற ஏழை மக்களைப் பாதுகாக்கக்கூடியவிதத்திலே, இங்கே அளிக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம் போற்றுதலுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சாதாரண ஒரு ஏழை, ஒரு சிறிய நோய்க்கு சாதாரண ஒரு மருத்துவரைப் பார்த்து, இல்லையென்றால் ஒரு அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

2012 நவம்பர் 2] [திரு. ஜேஜி. பிரின்ஸ்]

ஆனால், கொடிய, பெரிய நோய்கள் வருகின்றபோது இலட்சக்கணக்கான பணத்தைச் செலவழிக்க அவனுக்கு வாய்ப்பு இல்லை; அவனுக்குக் கிடைப்பது மரணம்தான். கடினமான சூழ்நிலையில் ஏழைகள் மருத்துவம் பெற்றுக்கொள்வதற்குக் கொடுத்திருக்கக்கூடிய திட்டம் என்பது இறைவன் கொடுக்கக்கூடிய ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, விவசாய மக்களுடைய நலனைக் கருதி, விவசாயிகள் குன்றிப் போகக்கூடாது, இயற்கை வழியிலே நம்முடைய மக்கள் திகழ வேண்டும், வலிமையான மனிதர்களாக, மக்களாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தோடு சீயக்காய், இளநீர் மற்றும் பருத்தி உடைகளை அணிந்து வலிமையான மனிதர்களாக வாழ வேண்டுமென்று அறிவுரை கொடுத்திருப்பது மிகவும் இன்றியமையாத ஒன்று.

அதுமட்டுமல்ல, சாதாரண பிள்ளைகள், அங்கன்வாடியிலே படிக்க வேண்டும், எல்லாப் பிள்ளைகளும் ஒரே தரமாகப் படிக்க வேண்டும், ருசிகரமான உணவுகளைச் சாப்பிட வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு, நல்ல எண்ணத்தோடு கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த உணவு, சிறந்த நிபுணர்களை வைத்து எல்லாப் பிள்ளைகளும் ருசிகரமான உணவுகளை அருந்தி, வருங்காலத்திலே படித்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று சொல்லக்கூடிய அற்புதமான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் கொடுத்திருப்பது வரவேற்கக்கூடியது. காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வரவேற்பதில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற மூன்று திட்டங்களையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முதலில் வரவேற்கிறேன். முதலிலே, பாரம்பரியமான வேளாண் பொருட்கள் பயன்பாடு என்ற நமது தமிழக முதலமைச்சருடைய சிந்தனை என்பது சிறப்புக்குரியது, சரியானது. வேளாண் தொழிலை முதன்மைத் தொழிலாக

[திரு. சு. குணசேகரன்] [2012 நவம்பர் 2

உருவாக்குவது என்பது உற்பத்திக்கு மட்டுமல்ல, நமது நாட்டு வேளாண் உற்பத்திப் பொருட்களை நாம் பயன்படுத்துகிற ஒரு நல்ல கொள்கையை நாம் முதலிலே உருவாக்க வேண்டும். அந்த அடிப்படையில் இளநீர், சீயக்காய், பருத்தி என்ற மூன்று பொருட்களையும் இன்றைக்கு மக்கள் பயன்படுத்துகிறவிதமாக ஒரு விழிப்புணர்வு இயக்கத்தை நடத்துவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் திட்டமிட்டது, காலத்தில் எடுக்கப்பட்ட முடிவாக நான் கருதுகிறேன். நமது நாட்டிலே ஒரு பழமொழி உண்டு; "பெத்த பிள்ளை காப்பாற்றாவிட்டாலும், வைத்த பிள்ளை காப்பாற்றும்" என்று சொல்வார்கள். தென்னம்பிள்ளையை நாம் பிள்ளை என்றுதான் அழைக்கிறோம். ஆனாலும். தென்னை இன்றைக்குப் பயனளிக்கவில்லை என்று கூக்குரல் எழுப்புகிற நேரத்தில் தென்னை விவசாயிகள், இளநீரை கூடுதலாக மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று சரியான சிந்தனையில் சொல்வதற்குப் பதிலாக, கள் இறக்க வேண்டும் என்று அதற்கான போராட்டம் நடைபெறுகிற நேரத்தில், இளநீரைத் தமிழகத்திலே இருக்கிற மக்கள் பயன்படுத்த வேண்டும். அதனால் மக்களுக்கு உடல்நலம் எப்படி (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாக இருக்கும் என்பதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, பெற்ற பிள்ளையை மட்டுமல்ல, நாம் வைத்த பிள்ளையையும் காப்பாற்றுகிற ஒரு திட்டமாக இந்த இளநீருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நாம் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-50

அதைப்போல சீயக்காய், நாமெல்லாம் மறந்து விட்டோம். தமிழக முதல்வர் அறிவிக்கும்போதே எனக்கு சிறிய வயதிலே என்னுடைய அம்மா ஞாபகம் வந்தது. அப்போதெல்லாம் பார்த்தீர்களென்றால், சீயக்காயை காயப் போட்டு அதிலே வெந்தயம் போன்ற பல்வேறு பொருட்களைக் கலந்து மிஷினிலே அரைத்துக் கொடுத்து, சிறிய பிள்ளைகளாக நாமெல்லாம் இருக்கையிலே, எண்ணையைத் தலையில் வைத்து சீயக்காயை கதறக் கதற தேய்த்து நம்மையெல்லாம் குளிப்பாட்டி விடுவார்கள். தமிழக முதல்வர் சொல்லும்போது சொல்கிறார்கள் பெண்களுக்கான கூந்தல் என்று, இல்லை, ஆண்களுக்கான தலைக்கும் அது தேவை. (சிரிப்பு) இன்றைக்கு சட்டமன்றத்தில் பல உறுப்பினர்களுடைய தலைகளைப் பார்க்கும்போதே இந்தச் சீயக்காயை முன்பே பயன்படுத்தி இருக்க வேண்டும். (சிரிப்பு)

2012 நவம்பர் 2] [திரு. சு. குணசேகரன்]

பயன்படுத்தி இருந்தால், கருகருவென்ற தலைமுடியுடன் ரொம்பப் பேர் இருந்திருப்பார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு சியக்காய் மிக முக்கியம்.

பருத்தி ஆடைகள் அதைவிட முக்கியம். தோல் வியாதிகள் போன்றவற்றைப் புறக்கணித்து நமது மண்ணுக்கு, வெயில் உள்ள உஷ்ணமான இந்தப் பூமிக்கு பருத்தி ஆடைகள் தேவை. கண்டிப்பாக இவற்றையெல்லாம் ஒரு ஆழ்ந்த சிந்தனையோடு, வேளாண் பாரம்பரியப் பொருட்களை படிப்படியாக நாம் பாதுகாப்பது, பயன்படுத்துவது என்ற அந்த நோக்கத்தோடு எடுத்திருக்கிற அந்த முயற்சியை, சிந்தனையை நான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

அதைப்போல, ஊட்டச்சத்து அங்கன்வாடியில் 13 வகையான கலவை சாதம், நான் எழுத ஆரம்பித்தேன். சொன்ன வேகத்திற்கு எழுத முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான சாதம். நாம் உண்மையிலேயே நீண்டகாலமாக இதை உணரவில்லை. அதை தாயுள்ளம் கொண்டவர்கள்தான் உணர முடியும். அந்த அடிப்படையில் உணர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏதோ வார்த்தைக்காக இதைச் சொல்லவில்லை. நமது நாட்டில் இருக்கக்கூடிய எல்லா தாய்க்கும் இருக்கக்கூடிய ஒரு பண்பின் அடிப்படையில் நம்முடைய தமிழக முதல்வரும் அதை உணர்ந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டிலேயே பார்த்தீர்களென்று சொன்னால், முட்டை ஒன்றுதான் ஒன்றாக வாங்குகிறோம். மூன்று பிள்ளைகளுடன் உட்கார்ந்து சாப்பிடுகையில், ஒரு பையன் அவித்த முட்டை வேண்டுமென்கிறான், ஒரு பையன் ஆம்லெட் போட வேண்டுமென்கிறான், ஆப்-பாயில் போட வேண்டும், அதைத் திருப்பிப் போட வேண்டும் என்று ஒரு பையன் சொல்கிறான். அதைத் திருப்பிப் போடாமலேயே கொடு என்று ஒரு பையன் சொல்கிறான். இப்படியெல்லாம் நாம் உணவு வகையிலே ஒரு குடும்பத்திற்குள்ளே பலவாறாகச் சாப்பிடுகிற நேரத்தில், நாம் இந்த ஊட்டச்சத்து பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரே மாதிரியாக அந்தத் தண்ணீரிலே போட்டு அவித்த முட்டையை அந்தத் தோலை எடுத்து உரித்துக் கொடுத்தோமென்றால் அந்தப் பிள்ளைகள் எப்படித்தான் சாப்பிடும். எனவே, மிளகுத்தூள், மசாலா, இன்னும் என்னென்னவோ சொன்னார்கள். மனப்பாடமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்தமாதிரி பலவகையான சாதம்

[திரு. சு. குணசேகரன்] [2012 நவம்பர் 2

போடுவது உண்மையிலே பாராட்டுக்குரியது. இதை நினைக்கிற நேரத்தில் இப்போது நாம் குழந்தைகளாக இருந்திருக்கக்கூடாதா, என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு நல்ல திட்டமாக நான் பார்க்கிறேன். அதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

அதைப்போல, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களில் சில திட்டங்களில் எங்கள் கொள்கை, அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் பொதுவாக இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இன்றைக்கு சுகாதாரப் பணியாளர்கள் நான் பேசும்போது கூடச் சொன்னேன். நமது தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு 4,000 பேரை ஒரே நேரத்தில் பணியமர்த்தி மருத்துவமனைகளை எல்லாம் சுகாதார மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். நான் சமீபத்தில் நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கும்போதுகூட ஒரு கருத்தைச் சொன்னேன். சமீபத்தில் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு ஒரு நோயாளியைப் பார்க்கச் சென்றிருந்த நேரத்தில், உண்மையிலேயே நான் ஒரு புகழ்ச்சிக்காக சொல்லவில்லை. நான் உள்ளே போனவுடன் அந்த மருத்துவமனையை 2, 3 தடவை பார்த்தேன். ஒருவேளை தனியார் மருத்துவமனைக்கு வந்து விட்டோமோ என்று. அந்த அளவுக்கு இராஜாஜி மருத்துவமனை எந்தவிதமான வாடையும் இல்லாமல், மிகச் சுகாதாரமாக, சுத்தமாக இருந்தது. நான் உடனடியாக நேராக அங்கிருக்கக்கூடிய Dean, மேலாளரை எல்லாம் சந்தித்து அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இதைப்போல மருத்துவமனைகளை வைத்துக்கொண்டாலே மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளுக்கு பாதி நோய் தீர்ந்துவிடும். எனவே, சுகாதாரத்தை இன்னும் நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அந்தச் செய்தியை நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் இங்கே வந்து சொன்னேன். அப்படிப்பட்ட நடைமுறையை தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா மருத்துவ அதிகாரிகளும், எல்லா மருத்துவமனைக்கும் கொண்டு வந்தாலே உண்மையிலேயே பாதி நோய் தீர்ந்துவிடும் என்ற அடிப்படையில் அதற்கு உதவியாக இன்றைக்கு சுகாதாரப் பணியாளர்கள் 4,000 பேரை நியமித்திருப்பது; அதைப்போல இன்றைக்கு காவலர்களை பணி நியமனம் செய்திருப்பதெல்லாம் சிறப்புக்குரியது. இன்றைக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

2012 நவம்பர் 2] [திரு. சு. குணசேகரன்]

என்பது ஏதோ பேருக்காக இல்லாமல் மக்களுடைய நலனுக்காக என்ற அந்த உயரிய நோக்கத்தோடு செயல்படுத்தப்படுகிறது.

முற்பகல் 11-55

ஒன்றைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சமீபத்தில் ஏற்பட்டிருக்கிற டெங்கு காய்ச்சல், பத்திரிகையிலே நான் பார்த்தேன். டெங்கு காய்ச்சல் வந்தவுடன் அதற்கான பரிசோதனைகள் மக்களுக்கு, ஏழையெளியோர்களுக்கு செலவு கூடுதலாக ஆகிறது என்ற அடிப்படையில், அதை முதலிலே மருத்துவக் காப்பீட்டில் சேர்க்கவில்லை என்று சொன்னாலும், உடனடியாக அந்த டெங்கு காய்ச்சலுக்குக்கூட மருத்துவக் காப்பீட்டில் இணைத்து, மருத்துவ பரிசோதனை செய்வது என்பது, நமது தமிழக அரசுக்குரிய சிறப்பான செயல்.

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னதைப் போல, நோய் என்பது தாக்கப்படுகிற நேரத்தில் மக்களுக்கு ஆற்றுகிற பேருதவியாக ஒரு நல்ல திட்டமாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுகிறது. அதன் அடிப்படையில்தான் நோய்களிலே மிகப் பெரிய நோயாகக் கருதப்படுகிற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, Stem Cell Transplantation இப்படிப்பட்ட பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைச் செலவு அதிகம்.

கடந்த 15 தினங்களுக்கு முன்னால் என்னுடைய தொகுதியிலே ஒரு நண்பர் 25 வயது பையன், கல்லீரல் பாதிக்கப்பட்டு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து வேலூருக்கு அனுப்பப்பட்டு வேலூரில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்கிறார்கள். 20 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். என்ன செய்வது என்று கேட்கின்ற நேரத்தில், நானும் என்ன செய்வது என்று புரியாமல் இருந்த நேரத்தில் அவன் இறந்துவிட்டான். உண்மையிலேயே அந்த வருத்தம் என் உள்ளத்திலே இருந்தது. இன்றைக்கு அப்படிப்பட்ட சாதாரண மனிதர்களுக்கு அல்லது நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்று சொல்கிற நேரத்தில் ரூ.5 இலட்சம், ரூ.10 இலட்சம் செலவு

[திரு. சு. குணசேகரன்] [2012 நவம்பர் 2

ஏற்படுகிறது. அந்த முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டு, எந்த நோய் வந்தாலும் இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற மக்களைக் காப்பாற்றுவேன் என்று சொல்லுகிற ஒரு அரசைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மக்கள் நல்வாழ்வு அரசாகப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் உண்மையிலேயே மிகச் சிறந்தது. சமீபத்தில் நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கிற ஒரு வாய்ப்பு ஏற்பட்டு அப்படி செல்கிற நேரத்தில் அங்கே இருக்கிற மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள், மருத்துவமனைகளைப் பற்றி விசாரித்தேன். அங்கே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிற மருத்துவக் காப்பீடு அல்லது மக்களுக்கான அந்த உத்தரவாதம், தமிழ்நாட்டிலே எப்போது வரும் என்று நான் நினைக்கிற நேரத்தில், இங்கே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஐரோப்பிய நாடுகளுக்கு இணையான அந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்குகிற அளவில், முழுச் செலவை ஏற்கிற அந்த ஒரு திட்டத்தை உண்மையிலேயே மனதாரப் பாராட்டுகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு இங்கே சொல்லப்பட்டிருக்கிற எல்லா அம்சங்களையும் வரவேற்று, ஒரேயொரு கருத்து, வேறுபாடாக அல்ல, ஒரு ஆலோசனையாக இந்த Outsourcing முறையை மட்டும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறு பரிசிலனை செய்ய வேண்டும். அதையும் அரசுத் துறையிலேயே எடுத்து அந்தப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அதைப்போல 6,000 செவிலியர்கள் இன்றைக்கும் பணி உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். நான் அவர்களுக்கும் அந்தக் கோரிக்கை மனுவை அளிக்க இருக்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுகின்ற உறுப்பினர்கள் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்வதோடு மட்டும் நிறுத்தினால் நன்றாக இருக்கும். மற்றவற்றை வேறு நேரத்தில் பேசிக் கொள்ளலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை வீட்டுக் குழந்தைகள் ஒரு வேளையாவது ஒரு நாளைக்கு சாப்பிட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட

2012 நவம்பர் 2] [திரு. ச. இராமச்சந்திரன்]

சத்துணவுத் திட்டம். அந்த ஒருவேளை உணவையும், சுவைபட வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளை வரவேற்கிறேன்.

அதிலே எல்லாம் முட்டை, முட்டை என்று தான் வருகிறது. அண்மையில் பொருளாதார மேதை இந்திரா ராஜாராமன் அவர்கள், குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கிற ஊட்டச் சத்து குறைவைப் பற்றி குறிப்பிடுகையில் பாலும் ஒரு சிறந்த சத்துணவு என்ற வகையிலே பாலும் குழந்தைகளுக்கு வழங்கப்படுவது நன்று என்று கூறியிருக்கின்றார். இப்போது சோதனை அடிப்படையிலே இந்தத் திட்டத்தை மேற்கொள்கிறபோது, பாலையும் சேர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற பாரதியாரின் பாட்டுக்கிணங்க எல்லா உயிர்களுக்கும் உணவளித்துக் கொண்டிருக்கின்ற எங்கள் அன்னை, சத்துணவுக் கூடங்களில் அங்கன்வாடி மையங்களில் படித்துக் கொண்டிருக்கிற பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, உணவுத் தரத்தையும் உயர்த்திக்காட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த சத்துணவுத் திட்டத்தில் புகுத்தியிருக்கின்ற புரட்சித் திட்டங்களை அம்மா அவர்கள் படித்துக்கொண்டிருக்கும்போதே எங்களுக்கெல்லாம் பசிக்க ஆரம்பித்துவிட்டது. அம்மா அவர்கள் கொடுத்த மெனுவைப் பார்த்துவிட்டு உட்கார்ந்திருந்த அனைவருமே மிகுந்த ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தோம். இன்றைக்குக்கூட அந்த மெனுவின்படி மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைக்காதா என்ற ஏக்கத்திலேகூட அம்மா அவர்களின் அந்தப் பட்டியலைப் பார்த்துக்கொண்டிருந்தோம். கேட்டதும் கொடுப்பவன் கிருஷ்ணன். ஆனால், குழந்தைகள் நினைக்காமலேயே, ஒரு தாய்க்குத் தெரியும் எந்த நேரத்தில் குழந்தைக்குப் பசி வரும், எந்த நேரத்தில் என்ன உணவு கொடுக்க வேண்டும் என்பது ஒரு தாய்க்குத்தான் தெரியும்.

[திருமதி பா. வளர்மதி] [2012 நவம்பர் 2

ஆகவேதான், தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நன்றாக நினைத்து நினைத்து ஒவ்வொரு வகையான, புதுவகையான உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து குபேர வீட்டுக் குழந்தைகள் மட்டுமே சாப்பிட்டு வந்த உணவுப் பழக்கவழக்கத்தை குடிசை வீட்டுக் குழந்தைகளும் சாப்பிட வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) புது வகையான உணவு வகைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்ற எங்களின் தாய்க்கு துறையின் சார்பிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு, சத்துணவுத் திட்டத்தினுடைய உயர்மட்டக் குழு உறுப்பினராக எங்களுடைய அன்னையை நியமித்தார்கள். அப்போதே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். என்றைக்காவது ஒரு நாள் இந்தச் சத்துணவுத் திட்டத்திலே ஒரு புரட்சி வரும். (மேஜையைத் தட்டும் ஒலி) அந்தப் புரட்சியைச் செய்யப் போகிறவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பது புரட்சித் தலைவருக்குத் தெரிந்துதான் எத்தனையோ பேர்கள் இருந்தும்கூட எங்களின் அன்னையை உறுப்பினராக்கினார். எங்களுடைய அன்னையும் உடனடியாக தன்னுடைய சொந்தப் பணத்தில் தான் நடித்து உழைத்து சம்பாத்தியம் செய்த பணத்தில் ஒரு சத்துணவுக் கூடத்தை, சாப்பிடுகின்ற அரங்கத்தை தேவிப்பட்டினத்திலே தன்னுடைய அன்னையாரின் பெயரிலே அன்னை சந்தியா உணவுக் கூடம் என்று திறந்து வைத்து அன்றைக்கே இந்தத் திட்டத்திற்குப் பெருமை சேர்த்துத் தந்தவர் எங்களுடைய அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எதைச் செய்தாலும்சரி ஒரு கணக்குப்போட்டுத்தான் செய்திருக்கிறார் என்பது இப்போதுதான் எங்களுக்குத் தெரிய வருகிறது. மதுரையில் நடைபெற்ற மாநாட்டிலே செங்கோலைத் தந்தார் எங்களின் அன்னைக்கு. புரட்சித் தலைவருக்குத் தெரியும். இந்த நாட்டை எதிர்காலத்திலே நிரந்தரமாக ஆளப்போவது அம்மாதான் என்று புரட்சித் தலைவருக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவுத்

2012 நவம்பர் 2] [திருமதி பா. வளர்மதி]

திட்டத்திலே உயர்மட்டக் குழு உறுப்பினராக்கினார். அப்போதும் தெரியும் புரட்சித் தலைவருக்கு. இந்தத் திட்டத்தை மாற்றியமைக்கப் போகிறவர் மாண்புமிகு அம்மா என்று. அதுமட்டுமல்ல நாடாளுமன்றத்தினுடைய மேலவை உறுப்பினராக அறிஞர் அண்ணா அவர்கள் உட்கார்ந்த அந்த சீட்டிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களை அமர வைத்த பெருமை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சாரும். புரட்சித் தலைவருக்கு அன்றைக்கே தெரியும் எதிர்காலத்தில் இந்தியத் திருநாட்டில் மைய மண்டபம் மட்டுமல்ல, (மேஜையைத் தட்டும் ஒலி) இந்த நாடாளுமன்றத்தையே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளப்போகிறார் என்பதை கணக்குப் போட்டுத்தான் ஒவ்வொரு செயலையும் செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆரம்பித்த திட்டத்திற்கு இன்றைக்கு புது உணர்ச்சியை ஊட்டியிருக்கின்ற எங்களின் அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு, வணங்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நல்ல திட்டங்களை வேளாண்மைத் துறையிலே அறிவித்து, விவசாயிகள் வாழ்க்கையில் ஒளி விளக்காக இருக்கின்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், உதவுகின்ற வகையிலும் விதி 110-ன்கீழ் வேளாண் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற இளநீர், சீயக்காய், பருத்தி போன்ற மருத்துவத் தன்மையுடைய பொருட்களை பொதுமக்கள் அதிகமாக வாங்கி பயன்படுத்துகின்ற வகையிலே, விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற கருத்தரங்கம் மற்றும் விளம்பரம் செய்ய பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இதன்மூலம் விவசாயிகளுடைய வருமானத்தை அதிகப்படுத்தவுள்ள இத்திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய துறையின் சார்பாகவும், விவசாயிகள் சார்பாகவும், குறிப்பாக தென்னை விவசாயிகள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவத் துறையில் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் வரலாறு காணாத வகையில் ரூபாய் 5,386 கோடி நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள். இது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைவிட 40 விழுக்காடு அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழ்நாடு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே Health Indicators எனப்படும் சுகாதார குறியீடுகளில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மருத்துவமனைகளை மேம்படுத்த வேண்டுமென்ற முறையில் அடிப்படைச் சேவைப் பணிகளை மேம்படுத்தவும் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 12-05

மருத்துவமனைகள் தூய்மையானதாகவும், பாதுகாப்பானதாகவும், தரமானதாகவும் தனியார் மருத்துவமனைக்கு இணையாகவும் பராமரிக்கப்பட முதல்முறையாக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கிராம செவிலியர்களின் பணிச் சுமையைக் குறைக்கின்ற வகையில் அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதைவிட மேலாக புரட்சித் தலைவியின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒன்றரை இலட்சத்திற்கு மேல் செலவாகும் நவீன அறுவை சிகிச்சைகளையும் சேர்த்துள்ளார்கள். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்றால் கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் செலவாகிறது. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை என்றால் 15 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதேபோல் Cochlear implantation என்று சொல்லப்படுகின்ற செவித் திறனற்ற சிறு குழந்தைகளுக்குச் செய்யப்படுகின்ற அறுவை சிகிச்சைக்கு 7 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதைவிட முக்கியமாக stem cells treatment-க்கு கிட்டத்தட்ட 50 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இவற்றையெல்லாம் ஏழையெளிய மக்கள் பயனடையும் வகையில் அதிகப்படியான தொகையை அரசே

2012 நவம்பர் 2] [டாக்டர் வி.எஸ். விஜய்]

ஏற்கும் என்று அறிவித்த டாக்டர்களுக்கெல்லாம் டாக்டராக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆழ்ந்த நம்பிக்கை இமயமலையைப் போன்றது. அதை எவராலும் அசைத்துவிட முடியாது என விவேகானந்தர் குறிப்பிட்டார். கஷ்டம் இல்லாமல் வெற்றி இல்லை, முட்கள் இல்லாமல் அரியணை இல்லை, முயற்சி இல்லாமல் பெருமை இல்லை என அரிஸ்டாட்டில் குறிப்பிட்டார். வாழ்க்கையின் முழு அர்த்தமே ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதுதான். பிறர் உயர்வுக்கும் பயன்படுகிற மாதிரி அடைகிற தனி மனித முன்னேற்றமே உன்னத வெற்றியாகும் என சர்ச்சில் குறிப்பிட்டார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கூறிய பெரியவர்கள் சொன்ன கருத்துகளை இயற்கையாகவே தன்னிடத்தில் முழுவதுமாகப் பெற்று, அரிஸ்டாட்டில், இங்கர்சால், பெர்னாட்ஷா, சாக்ரட்டீஸ், ஷேக்ஸ்பியர் ஆகியோர் வடிவில் மானுட வாழ்வு சிறக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர். அந்தக் குறைவற்ற செல்வத்தை எதிர்காலச் சந்ததியினர் நிரம்பப் பெற வேண்டும் என்பதற்காக மனிதப் புனிதவதி நடவடிக்கை எடுத்து சுகாதாரத் துறையிலே பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள்.

எதிர்கால தமிழகச் சிற்பிகள், குழந்தைகள், ஊட்டச் சத்துக் குறைவினால் வாட்டம் அடையக்கூடாது என்பதற்காக, பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். பாரம்பரியமிக்க வேளாண்மைப் பொருட்களின் மகத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவிப்பு. அம்மா இன்றைக்கு உங்களால் இளநீரும், சீயக்காயும், பருத்தியும்கூட உயர்வை அடைந்திருக்கின்றன.

சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட வீரமங்கை வேலுநாச்சியாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க கோரிக்கை வைத்த உடனேயே நிறைவேற்ற ஆணையிட்ட நமது வீரத் திருமகள், வெற்றித் திருமகள், வேலுநாச்சியார் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

அன்னையே, நீர் இன்றி அமையாது இவ்வுலகு. அம்மா, நீங்கள் இன்றி உயராது தமிழ்நாடு. தமிழ்நாட்டை இத்தரணியில் தலைநிமிர்த்த, முன்நிறுத்த முப்பொழுதும் உழைக்கும் முன்னவர், முறை செய்து காக்கும் மூலவர், தன்னை மெய்வருத்தி உழைக்கும் தியாகத்தின் திருவுருவம், பன்மொழி வித்தகம், பல்கலைப் புத்தகம், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு அளித்திருக்கின்ற முத்தான திட்டங்கள் அனைத்தையும் கண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியோடு என்னுடைய மகிழ்ச்சியையும் இணைத்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழநாட்டிற்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவினையும், உச்ச நீதிமன்ற உத்தரவையும் நிராகரித்து கர்நாடக அரசு தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கே. உலகநாதன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

2012 நவம்பர் 2]

பிற்பகல் 12-10

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசும், மத்திய அரசும் தொடர்ந்து தமிழகத்தை வஞ்சித்து வருகின்ற காரணத்தினால் தமிழ்நாட்டுக்கு காவிரியிலிருந்து கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்காமல் இந்த ஆண்டு குறுவை சாகுபடி அறவே நடத்தமுடியாமல் போய்விட்டது. அதேபோன்று சம்பா சாகுபடியும் மேட்டூர் அணை காலதாமதமாகத் திறக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்ட காரணத்தினால் வழக்கமான சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளமுடியாமல் நேரடி விதைப்பு என்கிற முறையிலே சாகுபடி செய்யவேண்டிய இக்கட்டான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தமிழகத்தினுடைய உரிமையைப் பெறுவதற்கு, காவிரி நீரைப் பெறுவதற்கு, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்ட வைத்து, நம்முடைய உரிமைக்காகக் குரல் கொடுத்திருக்கிற தமிழக அரசினுடைய நடவடிக்கையையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற நடவடிக்கையையும் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், இந்த ஆண்டு துவக்கத்திலேயே கர்நாடக அரசாங்கம் கோடைக்காலத்திலே சட்டத்திற்கு விரோதமாகத் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்தி அந்த நீர் நிலைகளையெல்லாம் காலிசெய்து விட்டது உட்பட நம்முடைய முதலமைச்சர், மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதேபோன்று உச்ச நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு, அவர்கள் காவிரி ஆணையத்தைக் கூட்ட வைத்து, நமக்குத் தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்று அங்கே கோரிக்கை வைத்து ஆணையமும் நமக்கு தினமும் வினாடிக்கு 9,000 கன அடி தண்ணீர் விடவேண்டுமென்று உத்தரவிட்டது. அதை சுப்ரீம் கோர்ட் மீண்டும் வலியுறுத்தியது. இவற்றையெல்லாம் கர்நாடக அரசாங்கம் முழுமையாக அமல்படுத்த முடியாது என்று அடம் பிடித்துக்கொண்டேயிருக்கிறது. இப்பிரச்சினையில், நடவடிக்கை எடுக்க வேண்டிய மத்திய அரசு ஒரு பார்வையாளராக இருக்கிறதே தவிர அவர்கள் உருப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசாங்கத்திலே தமிழகத்தின்

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2012 நவம்பர் 2

அமைச்சர்களாக இருக்கிறவர்கள், இன்றைக்கு தமிழகம் இப்படி வஞ்சிக்கப்படுகிற இந்த நேரத்தில் கூட மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையை அமல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தாதது அவர்கள் தமிழகத்திற்குச் செய்திருக்கிற துரோகம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தச் சூழ்நிலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், 'கவனத்தை ஈர்க்கிறேன்' என்று சொல்லி உங்கள் உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: நான் வற்புறுத்த விரும்புவது தமிழக அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் மத்திய அரசாங்கத்தை இன்னும் கூடுதலாக வற்புறுத்துவதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, பிரதமர் அவர்களை நேரடியாகச் சந்தித்து வற்புறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது மேலும் நம்முடைய குரலை வலுப்படுத்துவதற்கு உதவி செய்யும். இன்னும் சொல்லப்போனால், யார் யார் அந்தக் குழுவிலே இடம் பெறுகிறார்கள் என்பதை அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் அது உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதே சட்டமன்றக் கூட்டத்திலே இதனை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசை வற்புறுத்தவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இப்போது மழை வெள்ளத்தால் ஒரு பக்கம் சேதம் ஏற்பட்டிருந்தாலும், மழை முடிந்த பிறகு மீண்டும் தண்ணீர் பிரச்சினை வரக்கூடும். எனவே, இந்த ஆண்டு சம்பாவையும் முழுமையாக காப்பாற்ற முடியாத இக்கட்டான சூழ்நிலையில், மத்திய அரசாங்கத்திடம் இந்த பாதிப்புகளுக்கு நஷ்ட ஈடு கோருகிற அந்தத் தீர்மானத்தையும் தமிழக அரசு நிறைவேற்றி வற்புறுத்த வேண்டுமென்று கேட்டு, தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் தமிழகத்தின் உரிமை. ஒவ்வோர் ஆண்டும் காவிரி நீரை போராடித்தான் பெறவேண்டிய சூழல் இருக்கிறது.

2012 நவம்பர் 2] [திரு. கே. உலகநாதன்]

அந்த வகையில்,மத்திய அரசு கண்டுகொள்ளாத போக்கில் உள்ளது. கர்நாடக அரசும் தமிழகத்திற்குரிய தண்ணீரைக் கொடுக்க மறுக்கிற போக்கில் உள்ளது. இதை உணர்ந்துதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், 2003 ஆம் ஆண்டு முதல் கூட்டப்படாத அந்த ஆணையத்தைக் கூட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வெற்றி கண்டார்கள். ஆகவே, அந்த வகையில் காவிரி டெல்டா விவசாயிகளின் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, காவிரி ஆணையம் தமிழகத்திற்கு உரிய 9,000 கன அடி தண்ணீரை கொடுக்கச் சொல்கிறபோதுகூட இன்றைய கர்நாடக அரசு, ஒரு சொட்டுத் தண்ணீர்கூடக் கொடுக்க முடியாது என்று சொல்கிறது. ஆகவே, மத்தியில் இருக்கக்கூடிய கர்நாடகத்தைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களும், திரு. வீரப்பமொய்லி அவர்களும் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறபோதுகூட தமிழகத்தைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாயைத் திறக்காது மௌனியாக இருக்கிறார்கள் என்பதை, தமிழக விவசாயிகளையும், காவிரி டெல்டா விவசாயிகளையும் வஞ்சிக்கிற போக்காக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, அந்த வகையில் இன்றைக்கு காவிரி நதி நீர் ஆணையம் அறிவித்தபடி 205 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி தண்ணீர் தந்ததன் காரணமாக, அந்த ஆண்டு அந்த விவசாயிகள் நல்ல உற்பத்தி செய்தார்கள்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், 'கவனத்தை ஈர்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. கே. உலகநாதன்: சரி, சொல்லிமுடித்து விடுகிறேன். ஆகவே, அந்த வகையில் காவிரி நதி நீர் ஆணையம் அறிவித்ததன் அடிப்படையில், முழு தண்ணீரையும் பெற்றுத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்கு மத்திய அரசும், நம்முடைய தமிழக அரசும் நிரந்தரமாக ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க

[திரு. கே. உலகநாதன்] [2012 நவம்பர் 2

வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த ஆண்டு, காலம் கடந்து தண்ணீர் தருவதால் குறுவையும் கிடையாது; அதைப்போல சம்பா நடவுகூட இன்றைக்கு பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. இதை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் வழங்குவதற்கும், அதைப்போல இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையாக விளங்குவது காவிரி நதி நீர்ப் பிரச்சினை. 1892 ஆம் ஆண்டு மற்றும் 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் காவிரியில் தமிழ்நாட்டிற்குள்ள உரிமையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றாமல், 1960-களின் பின் பகுதியிலும், 1970-களின் தொடக்கத்திலும் மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், காவிரி நதியில் உரிமையுள்ள மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமலும், தன்னிச்சையாக பல்வேறு அணைக்கட்டுகளை கர்நாடக அரசு கட்டியது. ஆண்டுக்காண்டு விவசாய நிலங்களின் பரப்பினையும் கர்நாடகா அதிகரித்துக்கொண்டே சென்றது. இதனையடுத்து 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் தாவா சட்டத்தின்படி, நடுவர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, மத்திய அரசிற்கு ஒரு கடிதத்தினை அனுப்பியது. இந்தக் கடிதத்தின்மீதும் மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1986 ஆம் ஆண்டு என்றால், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்காலம். இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு காவிரி நீர்ப் பாசன விளைபொருள்கள், விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினால் தொடுக்கப்பட்ட வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், உணர்வுப் பூர்வமான இந்தப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு 1990 ஆம் ஆண்டு ஓர் உத்தரவினைப் பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவினைத் தொடர்ந்து 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர்

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழக அரசால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு உயிரூட்டும் வகையில் காவிரி நடுவர் மன்றத்தை ஜூன் 1990 ஆம் ஆண்டு மத்திய அரசு உருவாக்கியது. இந்தக் காவிரி நடுவர் மன்றம் 25-6-1991 அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையில், மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கர்நாடகா தனது நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்றும், கர்நாடகா தனது பாசனப் பரப்பை 11.20 இலட்சம் ஏக்கருக்கு மேல் விரிவாக்கம் செய்யக்கூடாது என்றும், இடைக்கால ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் தமிழகத்திற்கு நீர் விடுவிக்க வேண்டுமென்றும், இந்த இடைக்கால ஆணை, இறுதித் தீர்ப்பு அளிக்கும்வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தீர்ப்பு அளித்துள்ளது. காவிரி நடுவர் மன்றத்தால் அளிக்கப்பட்ட இந்த இடைக்கால ஆணை தமிழகத்திற்கு சாதகமாக இல்லை என்ற போதிலும், காவிரி பாசன விவசாயிகளின் உடனடி நலன் கருதியும், மாநிலங்களுக்கிடையே நல்லுறவு நிலவ வேண்டும் என்ற எண்ணத்தோடும், இறுதி ஆணையில் கூடுதலாக நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் தமிழ்நாடு அரசு இடைக்காலத் தீர்ப்பினை ஏற்றுக்கொண்டது. ஆனால், கர்நாடக அரசோ, காவிரி நடுவர் மன்ற ஆணை, கர்நாடகத்தைக் கட்டுப்படுத்தாது என்று தெரிவித்து, இடைக்கால ஆணையினை அவமதிக்கும் வகையில் ஓர் அவசரச் சட்டத்தினை இயற்றியது. அதனை எதிர்த்து, எனது தலைமையிலான தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், கர்நாடக அரசின் அவசரச் சட்டம் செல்லாது என்றும் 22-11-1991 அன்று மத்திய அரசுக்கு கருத்துரை வழங்கியது. பின்னர், எனது தலைமையிலான அரசின் உறுதியான நடவடிக்கை காரணமாக 10-12-1991 அன்று காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசிதழில் மத்திய அரசு வெளியிட்டது. இருப்பினும், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைப்படி ஒருமுறை கூட கர்நாடகா நமக்குத் தண்ணீரை விட்டது இல்லை. மாறாக, உபரி நீரை மட்டுமே கர்நாடகா விடுவித்து வந்தது. கர்நாடக அரசின் பிடிவாதப் போக்கின் காரணமாக மரபு உரிமைப்படி இயல்பாக நமக்கு காவிரி நதி நீரில் பாசனத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

நீதிமன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகின்ற சூழ்நிலைக்கும், அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில் பயிர்களைக் காப்பாற்ற மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் தமிழ்நாடு பலமுறை தள்ளப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 12-20

இந்தச் சூழ்நிலையில், 5-02-2007 அன்று காவிரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை வெளியிட்டதோடு, இந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் பரிந்துரை செய்துள்ளது. நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 14-06-2011 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புது டெல்லியில் நேரில் சந்தித்து காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்றும், இந்த ஆணையை நடைமுறைப்படுத்த காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றினை அமைக்க வேண்டு என்றும் வலியுறுத்தினேன். இதனைக் கடிதங்களின் வாயிலாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் பலமுறை வலியுறுத்தியிருக்கிறேன். காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட தடையில்லாத சூழ்நிலையில், உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வந்தபிறகுதான் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட முடியும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவும், காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை ஏற்படுத்தவும் மத்திய அரசுக்கு உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீட்டு மனுவை விசாரணைக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவிரி நடுவர் மன்றத்தில் காலியாகவுள்ள தலைவர் பதவியை நிரப்ப வேண்டியதன் அவசியத்தை பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்தச் சூழ்நிலையில் கர்நாடகா தனது கோடைக்காலப் பாசனத்திற்காக கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி மற்றும் ஹாரங்கி நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்தி வருகிறது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கைமூலம் தமிழகத்தின் குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காது என்பதைக் கருத்தில்கொண்டு, 21-03-2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றினை எனது தலைமையிலான அரசு தாக்கல் செய்தது. இந்த மனுவில், கர்நாடகா கோடைப் பாசனத்திற்கு தனது அணைகளில் இருந்து தண்ணீர் விடுவிப்பதை தடை செய்ய வேண்டுமென்றும், இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து 103.24 டி.எம்.சி. அடிநீருக்கு மேல் கர்நாடகா பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், கர்நாடக அரசு அதன் கோடைக்காலப் பாசனத்திற்காக 1-02-2012 முதல் நீரை உபயோகித்துள்ளது என்றும், நீர்த்தேக்கங்களுக்கு வரக்கூடிய நீர் வரத்தினைத் தேக்கி வைத்துக்கொண்டு, நீர்த்தேக்கங்கள் நிரம்பும் நிலையில் மட்டுமே நீரை கர்நாடகா விடுவித்து வருவதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரவேண்டிய நீர் வரத்து குறைந்து, குறுவை சாகுபடி பாதிப்புக்கு உள்ளாகிறது என்றும் சுட்டிக்காட்டி, விரைந்து காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்டுமாறு பாரதப் பிரதமர் அவர்களை 18-5-2012 நாளிட்ட கடிதத்தின்மூலம் நான் கேட்டுக்கொண்டேன். ஆனால், பாரதப் பிரதமர் இதற்கு செவிமடுக்கவில்லை. இதனையடுத்து தமிழ்நாட்டுடன் குறிப்பிட்ட விகிதாச்சாரப்படியான அதாவது Pro-rata sharing அளவில் நீரைப் பகிர்ந்துகொள்ள கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்றும், காவிரி கண்காணிப்புக் குழுவினால் இறுதி செய்யப்பட்டுள்ள இடர்ப்பாடு பங்கீட்டு முறைக்கு ஒப்புதல் வழங்கும் வகையில், காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினைக் கூட்ட உத்தரவிட வேண்டியும், உச்ச நீதிமன்றத்தில் 21-7-2012 அன்று எனது தலைமையிலான அரசு ஒரு இடைக்கால மனுவினை தாக்கல் செய்தது. தமிழகத்தில் நிலவும் இடர்ப்பாட்டினைச் சுட்டிக்காட்டி, குறுவை சாகுபடியை தமிழக விவசாயிகள் இழந்துவிட்ட நிலையில், குறைந்தபட்சமாக ஒருபோக சம்பா சாகுபடியையாவது விவசாயிகள் மேற்கொள்ள ஏதுவாக தமிழகத்திற்கு உரிய நீரைத் திறந்து விடுமாறு கர்நாடக அரசுக்கு அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு பாரதப் பிரதமரை 23-8-2012 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2 பிற்பகல் 12-25

எனது தலைமையிலான அரசு எடுத்த உறுதியான தொடர் நடவடிக்கையினையடுத்து உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டின் காரணமாக, காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் 19-9-2012 அன்று புதுடெல்லியில் கூட்டப்பட்டது. 12-9-2012 முதல் காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் நடைபெறும் வரை நாள்தோறும் வினாடிக்கு 10,000 கன அடி தண்ணீரை கர்நாடகா, தமிழகத்திற்குத் திறந்து விட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் 10-9-2012 அன்று ஆணை பிறப்பித்தது.

19-9-2012 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற காவிரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தில் இடர்ப்பாடு காலத்தில் நீரைப் பகிர்ந்துகொள்ளுதல் கணக்கீட்டுப்படி தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நீரில், குறைபாடான 48 டி.எம்.சி. அடி நீரை, நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 24 நாட்களுக்கு உடனடியாகத் திறந்து விட வேண்டுமென்றும் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகா தொடர்ந்து நீரை விடுவிக்க ஆணை பிறப்பிக்குமாறும் நான் வலியுறுத்தினேன். கர்நாடகா இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினரிடையே ஒத்த கருத்து ஏற்படாத சூழ்நிலையில், 20-9-2012 முதல் 15-10-2012 வரை நாளொன்றுக்கு வினாடிக்கு 9,000 கன அடி வீதம் கர்நாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டுமென்றும் அதன்பிறகு காவிரி கண்காணிப்புக் குழு 15-10-2012 அன்று கூடி சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்தாலோசித்து 15-10-2012-க்குப் பிறகு நீர் விடுவிப்பது குறித்து முடிவெடுக்கலாமென்றும் காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவரான மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்தார். ஆனால், கர்நாடகா அரசு இதனை ஏற்க மறுத்தது. தமிழகத்திற்கு சாதகமான முடிவினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவிக்காததைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்த குறைந்தபட்ச தண்ணீரைக்கூட விடுவிக்க முடியாது என்று கர்நாடக அறிவித்ததைக் கருத்தில்கொண்டும், எனது எதிர்ப்பினைத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தை மீண்டும் அணுகுவதைத் தவிர வேறு வழியில்லையென்று நான் அறிவித்தேன்.

இதனையடுத்து நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம் 48 டி.எம்.சி. அடி தண்ணீரை அடுத்த 24 நாட்களுக்கு கர்நாடகா

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டுமென்றும், காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, கர்நாடகா தமிழகத்திற்கு நீரை விடுவிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் ஆணையத்தின் தலைவர் பிறப்பித்த உத்தரவை கர்நாடக அரசு செயல்படுத்த வேண்டுமென்று 28-9-2012 அன்று தீர்ப்பளித்தது. இதன்படி 29-9-2012 முதல் நீரினை விடுவிக்கத் துவங்கிய கர்நாடகா, திடீரென்று தன்னிச்சையாக 8-10-2012 அன்று தண்ணீர் விடுவிப்பதை நிறுத்தி விட்டது. இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அவமதிக்கும் வகையிலும் நடந்துகொண்ட கர்நாடக அரசுக்கு எதிராக, நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை 10-10-2012 அன்று எனது தலைமையிலான அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

பிற்பகல் 12-30

இந்தச் சூழ்நிலையில், 11-10-2012 அன்று காவிரி கண்காணிப்புக் குழுவின் கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் நீர் விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டு நீரான 48 டி.எம்.சி. அடி நீரை நாளொன்றுக்கு 2 டி.எம்.சி. அடி வீதம், 24 நாட்களுக்குத் திறந்து விட வேண்டும் என்றும், கர்நாடக அரசு உச்ச நீதிமன்ற ஆணையை மதிக்காததால் உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு ஏற்பட்டது என்றும், இடர்ப்பாடு ஆண்டிலும் கர்நாடக அரசு நீரை அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து தனது பயன்பாட்டிற்காக விடுவித்துள்ளது என்றும் தெரிவித்து, தமிழ்நாட்டின் சம்பா பாசனத்திற்காக 15-10-2012 முதல் 16-02-2013 வரை சுமார் 145 டி.எம்.சி. அடி நீர் தேவைப்படும் என்று தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. எனினும், கர்நாடகத்தின் 4 அணைகளில் போதுமான நீர் இருப்பு இருந்தபோதிலும் தமிழகத்திற்கு மேலும் தண்ணீர் வழங்க இயலாது என கர்நாடகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் 16-10-2012 முதல் 31-10-2012 வரையிலான காலத்திற்கு 8.85 டி.எம்.சி. அடி நீரை கர்நாடகா தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று காவிரி கண்காணிப்புக் குழுவின் தலைவர் தனது முடிவினை அறிவித்தார். இந்த முடிவு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 நவம்பர் 2

தமிழகத்திற்கு எதிரானது என்றும், இடர்ப்பாடு காலத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கான 48 டி.எம்.சி. அடி குறைபாடு நீரை கணக்கில் கொள்ளாமல் 15 நாட்களுக்கு மட்டும் நீரை அளிக்க உத்தரவிட்டது சரியானதல்ல என்றும் தமிழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இந்தக் குறைந்தபட்ச நீரைக்கூட கர்நாடகா விடுவிக்க மறுத்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில், கர்நாடகத்தின் பிடிவாதப் போக்கை எதிர்த்து, தமிழகத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 30-10-2012 அன்று விசாரணைக்கு வந்தபோது, இதுதொடர்பான அனைத்து அம்சங்களையும் பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய வேண்டுமென காவிரி கண்காணிப்புக் குழுவிற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து, 31-10-2012 அன்று புது டெல்லியில் நடைபெற்ற காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் 31-10-2012 வரை 8.85 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழ்நாட்டிற்கு விடுவிக்க வேண்டுமென்று காவிரி கண்காணிப்புக் குழு 11-10-2012 அன்று உத்தரவிட்டதில், 2.15 டி.எம்.சி. அடி தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறதென்றும், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, 2012 நவம்பர் மாதம் முதல் 2013 பிப்ரவரி வரை தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டுமென்றும் தமிழகத்தின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட காவிரி கண்காணிப்புக் குழு, 16-10-2012 முதல் 31-10-2012 வரை தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டிய தண்ணீரில் உள்ள பற்றாக்குறையான 2.15 டி.எம்.சி அடி தண்ணீரை 1-11-2012-க்குள் விடுவிக்குமாறும், 1-11-2012 முதல் 15-11-2012 வரையிலான காலத்திற்கு 3.94 டி.எம்.சி. அடி தண்ணீரை விடுவிக்குமாறும், ஆக மொத்தம் 6.09 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழகத்திற்கு திறந்துவிடுமாறும் உத்தரவிட்டுள்ளது. மேலும், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தமிழ்நாடு, காவிரி கண்காணிப்புக் குழுவிற்கு அளிக்கவிருக்கும் கோரிக்கைகள் குறித்தும், தமிழகத்திற்கு மேற்கொண்டு தண்ணீர் விடுவிப்பது குறித்தும், 15-11-2012 அன்று நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று காவிரி கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், சம்பா சாகுபடியை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில், காவிரியில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை எப்படியாவது பெற வேண்டுமென்பதன் அடிப்படையில், எனது அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நான் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியினாலும், உச்ச

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நீதிமன்றத்தின் தலையீட்டாலும், கர்நாடகா ஓரளவு தண்ணீரை விடுவிக்க கட்டாயப்படுத்தப்பட்டு தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்தின்மூலம் தமிழகத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும் என்ற எனது நம்பிக்கையையும் தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 12-35

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012—2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 61 முதல் 72 வரையிலான பன்னிரெண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த முதலமைச்சரும் செய்யாத வகையில் தமிழகத்திலுள்ள அனைத்து சீருடைப் பணியாளர்களும் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் பொருள் வாங்க சிறப்பு அங்காடிகளை உருவாக்கியும், இடர் படி, உணவுப் படிகளை உயர்த்தியும், அவர்களுக்கு 'உங்கள் சொந்த இல்லம்' என்ற திட்டத்தினை உருவாக்கி, அதன்மூலம் 2,673

[திரு. வி. சோமசுந்தரம்] [2012 நவம்பர் 2

வீடுகளுக்குத் தங்கள் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டியும், ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியும், காவலர்களுக்கே காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, *2012—2013* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் *37* முதல் *42* வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிருக்கு வான் மழைபோல், நாடிய மனிதருக்கெல்லாம் வாழ்வளிக்கும் ஒளி விளக்கே, கேடு நினைக்கும் வீணர்களைச் சுட்டெரிக்கும் சுடர் விளக்கே, தீய சக்திகளால் இருண்டுபோன தமிழகத்திற்கு புத்தொளி பாய்ச்சிட புதுப்புது உறுதியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற தெய்வ சக்தியே, தொட்டதெல்லாம் துலங்க வைக்கும் வெற்றித் திருமகளே, பட்டமரத்தையும் தளிர்க்க வைக்கும் தெய்வத் திருமகளே, எதிரிகளைத் தொடை நடுங்க பகை முடிக்கும் வீரத் திருமகளே, நல்லோரை வாழவைத்திட, தீயோரை அழித்திட, திக்கற்றோரின் துயர் துடைத்திட, காலம் நமக்குத் தந்திட்ட அருட்கொடையாம் ஆயிரம் கண்ணுடை அன்புத் தாயே, நாள்தோறும், நாள்தோறும், துறைதோறும், துறைதோறும் புதுமைகள் படைத்து வருகின்ற புறநானூற்றுத் தாயே, தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை என்கின்ற சீறிப் பாயும் இளம் சிங்கங்களின் சிறப்புப் படை அமைத்து இளைஞர்களின் வாழ்வில் ஒளி ஏற்றிவைத்திட்ட இளைய சமுதாயத்தின் விடிவெள்ளியே, அம்பானி வீட்டுப் பிள்ளைகளுக்கும் கிடைத்திடாத வகை, வகையான அறுசுவை உணவுகளையும், சாமானிய வீட்டுக் குழந்தைகளுக்கும் வாரி வழங்கியிருக்கின்ற அன்னபூரணியே, (மேசையைத் தட்டும் ஒலி) நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு; ஆம், வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்களை நம்பினோர் யாரும் கெட்டதில்லை, இது சத்தியத்தின் தீர்ப்பு. கடைக்கோடி சாதாரண சாமானியத் தொண்டனான எனக்கு அரசு

2012 நவம்பர் 2] *[திரு. ஆர்.பி. உதயகுமார்]*

உறுதிமொழிக் குழுவின் தலைவராகப் பணியாற்றிட நல்வாய்ப்பு வழங்கியிருக்கின்ற கருணையின் பிறப்பிடமே, அன்பின் திருவுருவமே, ஆற்றலின் இருப்பிடமே, வீரத்தின் விளை நிலமே, வெற்றியின் விலாசமே, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டின் வழிகாட்டியே, வாழும் மனித தெய்வமே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழிக் குழுவின் 35 முதல் 39 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா டாக்டர் வைகைச்செல்வன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***டாக்டர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு என்றால் அன்பு என்று பொருள். அன்பு என்றால் அம்மா என்று பொருள். அம்மாவை அம்மா என்று அழைக்கலாம். அம்மாவைக் கடவுள் என்றும் அழைக்கலாம். அந்தக் கடவுளாக இருக்கின்ற எங்கள் அன்னையே, நட்பின் இலக்கணத்தை வரையறை செய்ய வேண்டுமென்று கேட்டபோது, நட்பை நகமும் சதையும் என்று வரையறை செய்தார்கள். ஒரு நண்பர் கேட்டார். நட்பை நகமும் சதையும் என்று சொன்னாயே, ஆகவேதான் நான் வளர, வளர-நகம் வளர, வளர வெட்டிவிடுகின்றாயோ என்று சொன்னாராம். ஆக, இப்படிப்பட்டவர்கள் வாழுகின்ற உலகில் நாதியற்றோருக்கும், நலிந்தோருக்கும், கண்ணீரோடும், கவலையோடும், காலத்தாலும், கொண்ட கோலத்தாலும், சீலத்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், வேதனையாலும், துன்பத்தாலும் துவண்டு கொண்டிருக்கின்றவர்களையும், கரை சேர்க்கின்ற கலங்கரைவிளக்கமாக, கடவுளாக விளங்குகின்ற எங்கள் அன்னையே, இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றக் கூடியவர், தமிழகத்தின் முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்கின்ற தகுதியும், மிகுதியும் படைத்து, ஆனை, சேனை, ஆள், அம்பு, கோட்டைக் கொத்தளத்தில் தர்பார் மண்டபத்தில் கோலோச்சிக் கொண்டிருக்கிற மாண்புமை பொருந்திய தமிழ்நாடு*

[டாக்டர் வைகைச்செல்வன்] [2012 நவம்பர் 2

அரசின் முதலமைச்சர், எங்கள் நாடி நரம்பில், ஊனில், உணர்வில், உதிரத்தில் கலந்திட்ட உயரனையத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எளியவன், அடியவன், எம்பொருட்டும் அரசின் தலைமைக் கொறடாவாகவும், மனுக்கள் குழுவின் தலைவராகவும் பணியாற்றக்கூடிய உயர்ந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்குகிறேன். அம்மாவின் பாதங்களில் என் நன்றிக் கண்ணீரை நனைக்கின்றேன். அதைச் செந்நீரால் துடைக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் நடந்து செல்கிற பாதையில் கிடக்கின்ற மண்ணே எங்களுக்கு திருநீறு. அம்மா அவர்கள் கால் பதிக்கிற இடம்தான் எங்களுக்கு கைலாயம் என்று சொல்லி, அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் 2012-2013 ஆம் ஆண்டுக்கான 13 முதல் 15 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12-40

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், பதிலுரையும் மற்றும் வாக்கெடுப்பும். துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, எதிர்பாராத செலவுகள் ஏற்படுகிறபொழுது, துணை மானியக் கோரிக்கை தந்து அனுமதி பெறுவது இயற்கை. அந்தவகையில் முதல் துணை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துகளைக் கூற விழைகிறேன்.

எதிர்பாராத செலவினங்கள் என்று சொல்கிறபொழுது, டீசல் விலை உயர்த்தப்பட்டதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு 200 கோடி ரூபாய் கூடுதல் நிதி தரவேண்டியுள்ளது என்பது எதிர்பாராமல் ஏற்பட்ட செலவு. அதேபோல, இன்னும் தொழில்

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 நவம்பர் 2

துறை, வேளாண்மைத் துறை, மின்சார வாரியத்திற்குத் தந்த நிதி, இவையெல்லாம் எதிர்பாராமல் ஏற்பட்ட செலவினங்கள் என்ற பட்டியலிலே வருகின்றன. ஆனால், அதேநேரத்தில், மானியம் எண் 17-ல், கைத்தறி மற்றும் துணி நூல் துறையில் விலையில்லா வேட்டி, சேலை வழங்குவது என்கின்ற வகையில், 94 கோடி ரூபாய் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே கேட்கப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே வரவு-செலவுத் திட்டத்திலே வந்ததைவிட கூடுதலாகக் கேட்கப்படுகிறதா அல்லது இதுதான் முதல் கோரிக்கையா என்கின்ற விவரத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், விலையில்லா வேட்டி, சேலை வழங்குவது என்பது ஆண்டுதோறும் அரசு செய்து வருகின்ற செலவினமாகும். ஆகையினாலே, நிதிநிலை அறிக்கையிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

பிற்பகல் 12-45

இன்னொன்றையும் இந்தக் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கையில் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் துறை மானியம் 27, பக்கம் 85, அதிலே இனம் எண் 5, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், தொக்கியம் கிராமத்தில் SSN 1/2-ல் அடங்கிய 6.54 எக்டேர் அரசு நிலத்தில் கிரானைட் கற்கள் வெட்டி எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது தொடர்பாக திரும்பச் செலுத்திய குத்தகைத் தொகை 40 இலட்சத்து 50 ஆயிரம் மற்றும் முன்வைப்புத் தொகை 4 இலட்சத்து 5 ஆயிரத்திற்கு உச்ச நீதிமன்ற ஆணைப்படி 97.41 இலட்சம் வட்டியாகத் தொடுக்கப்பட்டிருக்கிறது. கிரானைட் நிறுவனத்தார்-வெட்டியெடுத்த நிறுவனத்தார் குத்தகைத் தொகை தந்தது 40 இலட்சம், முன்வைப்புத் தொகை 4 இலட்சம், இரண்டும் சேர்த்து 44 இலட்சம். ஆனால், என்ன காரணத்தினாலோ இப்பொழுது அதற்கு வட்டி மட்டும் 12 சதவீதம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புப்படி என்று சொன்னார்கள். ஆனால், அதற்குப் பின்னால் சொல்கின்றபோது, அவர்கள் கற்கள்

வெட்டியெடுத்தார்கள், கட்டியது 40 இலட்சம் ரூபாய், நாம் கொடுத்தது 97 இலட்சம் ரூபாய் என்று சொன்னார்கள். அதிலே சிறிய திருத்தம். 16-10-1990 அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படுகின்றது. அதற்குப் பின்னால், அந்த லைசென்ஸ் வழங்குகின்றபோது அது வனத் துறையினுடைய இடம் என்பது தெரியாமல் கடந்த கால தி.மு.க. அரசு கொடுத்துவிட்டது. அதற்குப் பின்னால், அவர்கள் அந்த லைசென்ஸை செயல்படுத்த முடியாத காரணத்தினால், கட்டிய பணத்தைத் திருப்பித் தர வேண்டுமென்று கேட்கின்றார்கள். கேட்கின்றபோது அரசு மறுக்கின்றது. உடனடியாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். கட்டிய பணம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அதற்குண்டான வட்டித்தொகை வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் ஆணை பெற்று, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை பெற்றதற்குப் பின்னாலும்கூட, அவர்கள் contempt petition போட்டதற்குப் பின்னால்தான் அந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வழங்கப்பட்டதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் கொடுத்ததே 44 இலட்சம் ரூபாய், 97 இலட்சம் ரூபாய் அளவிற்கு அது வட்டியோடு வழங்க வேண்டிய அவசியத்திற்கு எந்தத் துறையில், எந்த அதிகாரி அதற்குக் காரணமானார் என்பதைத் தெரியப்படுத்தவும். ஏனென்றால், உச்ச நீதிமன்றம் சென்றும் நாம் வழக்கில் வெற்றி பெறவில்லை. அவர்கள் கொடுத்தது 40 இலட்சம் ரூபாய் என்கிறபோது, அவர்களுக்கு வட்டியே நாம் 90 இலட்சம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு என்பதை-அந்தப் பொறுப்புக்குரிய அதிகாரியின்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16-10-1990 அன்று வழங்கப்பட்ட உத்தரவு என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். அதற்குப் பின்னால் கிட்டத்தட்ட 20 ஆண்டுகாலம் அந்த வழக்கு நடைபெற்றிருக்கின்றது. அப்பொழுது இருந்த அதிகாரிகள் யார் என்பது தெரியாது. ஆனால், உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணைப்படி, இப்பொழுது அதுவும் contempt போட்டதற்குப் பின்னால்தான் அந்தத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக நான் ஏற்கெனவே உங்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். இருந்தாலும் அப்பொழுது உத்தரவு வழங்கிய அதிகாரிகள் இருப்பார்களேயானால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதைப் போல, இந்தத் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, எதிர்பாராச் செலவு என்கின்றவகையிலே, இப்பொழுது 'நீலம்' புயல் விளைவித்த சேதங்கள் பற்றி முன்பணம் எதுவும் இதிலே கோரிக்கையாக வைக்கப்படவில்லை. ஒருவேளை செலவு செய்தபிறகு, கணக்குகள் எல்லாம் எடுத்தபிறகு தருவார்களோ என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், சேதத்தின் விவரங்கள் தெரியாது. இருந்தாலும் ஓரளவுக்கு அரசின் சார்பிலே எவ்வளவு முன்பணம் ஒதுக்குவார்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புயல் அடிக்கப் போகிறது என்றால், அது அடித்த பிறகுதான் எந்த அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது, அரசு எவ்வளவு தொகை செலவு செய்ய வேண்டியிருக்கும் என்பதெல்லாம் தெரிய வரும் என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, First Instalment அதாவது இந்த சட்டமன்றத்திலே அறிவிப்பீர்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். புயல் நிவாரணப் பணிகளுக்கு உரிய தொகை வருங்காலத்திலே இடம் பெறும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலம்' புயல் 2 நாட்களுக்கு முன்னால்தான் வந்து சென்றிருக்கிறது. அதனுடைய பாதிப்பு எந்தளவில் இருக்கிறது என்பதனைக் கணக்கிட்டு, அதுகுறித்த மதிப்பீடுகள் தனியாக வரும். அதற்கிடையில் தேவைப்படுகிற நிவாரணங்களை, இயற்கை இடர்பாடுகள் நிதியிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செலவழித்துக்கொண்டுதான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த துணை மதிப்பீடுகளில் நீர் வழிகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக சென்னை போன்ற இடங்களுக்கு 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கின்றேன். இன்று பொதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலேகூட விதி 110-ன்கீழே அறிக்கையைக் கொடுத்தார்கள். பொதுச் சுகாதாரத்தைப்பற்றி மிகுந்த அக்கறை எடுக்கவேண்டிய சூழ்நிலையிலே நாம் இருந்துகொண்டிருக்கின்றோம். பலவகையான காய்ச்சல்கள் வந்தவண்ணம் உள்ளன. பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், விஷக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் என்று பல பெயர்களிலே தமிழ்நாட்டிலே, இன்றைக்கு ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் என்பவை ஏதோ தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டதுபோல் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். இதைவிட அதிகமான பாதிப்புகள் கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் ஏற்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: ஆகவே அவற்றைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, பொதுச் சுகாதாரத் துறைக்கு எந்தளவுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்படவேண்டுமோ, அந்தளவுக்கு நிதி ஒதுக்கி பொதுச் சுகாதாரப் பணிகளை மேம்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்பதும், குப்பைகள் மலிந்து கிடப்பதும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெங்கு காய்ச்சல் அதிகமாக வரத் துவங்கியிருக்கிறது என்ற தகவல்கள் வந்தவுடனேயே, 2 மாதங்களுக்கு முன்பே, இன்னும் சொல்லப்போனால், 3 மாதங்களுக்கு முன்பே அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை இந்த அரசு தொடங்கிவிட்டது. Fogging அதாவது, புகை அடிப்பது-எங்கெல்லாம் இந்த டெங்குக் காய்ச்சல் பாதிப்பு இருந்ததோ அங்கெல்லாம் போர்க்கால அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 2 கோடி ரூபாய்க்குமேல் அரசு ஏற்கெனவே நிதி ஒதுக்கியிருக்கிறது. மேலும் தொலைக்காட்சிகள் மூலமாகவும், documentary படங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் என்னென்ன தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பொதுமக்களுக்குத் திரும்பத் திரும்ப அரசு அறிவுறுத்தியிருக்கிறது.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மைய சர்க்காரிலிருந்து வந்த அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள், கொசு கடிக்காமல் இருப்பதற்கு முழுக்கைச் சட்டையைப் போட்டுக்கொள்ளுங்கள் என்ற ஒரு யோசனையை இங்கே சொல்லிவிட்டுப் போனார். அதைப்போன்ற நடவடிக்கைகளைத்தான் இன்றைக்கு அண்டை மாநிலங்களிலே அல்லது டெல்லி சர்க்காரிலே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள், திரு. குலாம் நபி ஆசாத் அவர்களின் யோசனையின் அடிப்படையில்தான் முழுக்கைச் சட்டையைப் போட்டு வந்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் யோசனைக்கு முன்பிருந்தே நான் முழுக்கைச் சட்டையிலேதான் இருக்கிறேன். அப்படியிருந்தும் எனக்கு 2, 3 நாட்களாக உடல்நிலை சரியில்லை. அந்தளவுக்கு எங்கு பார்த்தாலும், ஒரு fever வருகின்ற சூழ்நிலையிருக்கிறது. Bill Gates Foundation-ல் கொசுவினால் ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்காக ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலே கொசு வலையை அந்த Foundation மூலமாகவே தருகிறார்கள். அதிலே சில medicated பொருட்களெல்லாம் போட்டுத் தருகிறார்கள். ஒரு வேளை நம்முடைய மாண்புமிகு டாக்டர் அமைச்சர் அவர்களுக்கு இதுபற்றி தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். அதைப்போல தமிழ்நாட்டிலே அரசின் சார்பிலே மட்டுமல்லாது தொண்டு நிறுவனங்கள், இன்னும் பொதுவான அமைப்புகள் யார், யாரால் முடியுமோ அந்தளவுக்கு ஏழையெளிய மக்களுக்கு கொசு வலை வழங்குகின்ற ஒரு திட்டத்தையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கொசுக்கள் இரவு நேரத்தில் கடிக்கும். அதற்கு வேண்டுமானால், கொசு வலையைக் கொடுக்கலாம், பயன்படுத்தலாம். ஆனால், டெங்கு ஜுரத்தை ஏற்படுத்துகின்ற கொசு பகல் நேரத்தில்தான் கடிக்கும். அப்பொழுது கொசு வலையைப் போர்த்திக்கொண்டா திரிய முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பகல் நேரத்தில் போட்டுக்கொள்ளச் சொல்லவில்லை. அதை ஒரு யோசனையாகப் பரிசீலிக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கொசுக் கடியினால் ஏற்படுகின்ற விளைவுகளை அந்தக் கொசு வலைகளின்மூலம் தவிர்க்க முடிகிறது என்பதை அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். World Health Organisation அதை வரவேற்றுப் பாராட்டியிருக்கிறது. எனவே, அதுபற்றியும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த நோய் சம்பந்தமாக வருகின்ற விவரங்களிலேகூட அரசியல் குழப்பம் ஏற்பட்டு, அதன் விளைவாக மக்களிடத்திலே ஓர் அச்சம், பீதி ஏற்பட்ட நிலை இருக்கிறது. உண்மையிலேயே டெங்குக் காய்ச்சலா அல்லது வைரல் ஜுரமா அல்லது என்ன காய்ச்சல் என்பதை அந்த டாக்டர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் ஏற்கெனவே தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சலா என்பதைக் கண்டறிய ELISA Test என்று ஒரு Test இருக்கிறது. அந்த Test

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தான் டெங்குக் காய்ச்சலா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு ஒரே வழி.

மேலும், வடகிழக்குப் பருவமழை தொடங்குகின்ற காலங்களிலெல்லாம் ஒவ்வோர் ஆண்டும் மழைக்காலத்தில் பலவிதமான ஜுரங்கள் வருவது சாதாரணமான ஒன்று. இப்பொழுது நடைபெற்றிருக்கிறது ஏதோ அசாதாரணமான நிகழ்ச்சியல்ல. பொதுவாகவே மக்களில் ஒரு சதவீதம் மக்களுக்கு இந்த மழைக் காலத்தில் காய்ச்சல் வரும், ஜுரம் வரும். ஆண்டு முழுவதும் மக்கள்தொகையில் ஒரு சதவீதம் மக்களுக்கு சாதாரணமாக காய்ச்சல் வரும், பலவிதமான காய்ச்சல். மழைக்காலத்தில் அது இரண்டு சதவீதமாக உயரும். இதுதான் ஒவ்வோர் ஆண்டும் இருக்கின்ற வழக்கமான நடைமுறை. அதுபோல சாதாரணமாகவே, பொதுவாக மக்களுக்கு சாதாரண காய்ச்சல் வரும். மக்களில் ஒரு சதவீதம் மக்களுக்கு எப்போதும் ஏதோ ஒரு காய்ச்சல் இருந்துகொண்டே இருக்கும். மழைக்காலத்தில் அது இரண்டு சதவீதமாக அதிகரித்துள்ளது, அவ்வளவுதான். இப்பொழுது எந்த அசாதாரண நிகழ்வும் ஏற்படவில்லை. அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களில் இந்த ஜுரம் ஏற்பட்டதன் விகிதாச்சாரம் மிக அதிகமாக இருக்கின்றது. தமிழ்நாட்டைவிட மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் சொல்ல வந்தது அதுபற்றிய சரியான தகவல் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றுதான். ஏனென்றால், பல ஊடகங்களில், பல பத்திரிகைகளில், சாதாரண ஜுரத்தைக்கூட டெங்கு காய்ச்சல் என்று ஒரு பீதியைக் கிளப்புகிறார்கள். அந்த நிலைமை இல்லாமல் சரியான தகவலைக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்களையெல்லாம் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக, சரியான தகவலை, சரியான விவரங்களை மக்களுக்குத் தெரிவிப்பதற்காக மிக அண்மையில், சில நாட்களுக்கு முன்பு தமிழக அரசின் சார்பில் ஒரு குறும்படம்-ஒரு Documentary படம் தயாரிக்கப்பட்டு, தமிழகத்திலுள்ள அனைத்துத் திரைப்பட அரங்குகளிலும், அனைத்துத் தொலைக்காட்சி சேனல்களிலும், அனைத்து கேபிள் டிவி. சேனல்களிலும் இது ஒளிபரப்பப்பட்டது, பத்திரிகைகளிலும் விளம்பரமாகத் தரப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, இத்தகைய ஜுரம் வருகிறபொழுது அதனால் குழந்தைகள், எங்களைப்போன்ற வயதானவர்கள் பாதிக்கப்படாமலிருக்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, இந்த துணை மானியக் கோரிக்கையில் வெகுவான தொகை மின்சார வாரியத்திற்கு அளிக்கப்படுகிறது. இன்றைக்கு மின்சார நிலைமையைப் பொறுத்தவரையில், மிகப்பெரிய நெருக்கடியிலே நாம் இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாக ஏற்கெனவே மிகத் தெளிவான அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். "Instead of cursing the darkness, it is better to light a candle" என்று சொல்வார்கள். "இருட்டை ஏசுவதைவிட விளக்கை ஏற்றி வைப்பது மேல்." அதைப்போல, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடியை, அதைப்பற்றி குறை சொல்வதைவிட, அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு என்ன வழி என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக, மின் நிறுவுத் திறன் மற்றும் தேவை-installed capacity and sustained demand என்று பார்க்கிறபோது, 1993-1994-ல் மின் உச்சத்தேவை 3,676 மெகா வாட். ஆனால், நிறுவுத் திறன் 6,900. கிட்டத்தட்ட ¾ மடங்கு நிறுவுத் திறன் கூடுதலாகிறது. இப்பொழுது 2011-2012-ல் நிறுவுத் திறன் குறைந்து உச்சத் தேவை அதிகமாகிவிட்டது. ஏற்கெனவே ¾ மடங்கு நிறுவுத் திறன் கூடுதலாக இருந்தது. இன்றைக்கு 10,713 மெகா வாட் உச்சத் தேவை. இதற்கு அதே விகிதத்தில் நிறுவுத் திறன் என்று

2012 நவம்பர் 2] [திரு. ச. இராமச்சந்திரன்]

பார்க்கப்போனால், கிட்டத்தட்ட 18,000 மெகா வாட் நிறுவுத் திறன் வேண்டியிருக்கிறது. ஆனால், உண்மையில் நிறுவுத் திறன் 10,364 தான். (குறுக்கீடு)

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்புகின்ற கேள்விக்கு அன்றைக்கே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிக்கையிலே விரிவான பதில் அடங்கியிருக்கிறது. இன்று பெருகிவரும் தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்களோ அப்போதெல்லாம் பெருகிவரும் தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்கி வந்திருக்கிறார்கள்.

ஆனால், இடையிலே வந்த கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, அவர்கள் ஆட்சிக் காலத்திலே, பெருகிவருகின்ற தேவைக்கும், அதற்கேற்ப உற்பத்தியைப் பெருக்காததன் விளைவாகத்தான் இந்த உற்பத்திக்கும், பற்றாக்குறைக்கும் மிகுந்த இடைவெளி ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் புள்ளிவிவர ஆதாரத்துடன் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு முந்தைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேகூட, 2,518 மெகா வாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யப்பட்டது. அதற்குப் பின்பு வந்த தி.மு.க. ஆட்சியிலே வெறும் 206 மெகா வாட் அளவிற்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்ற விவரங்களையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது இந்த இடைவெளி பற்றாக்குறை, தேவைக்கேற்ப உற்பத்தி பெருகாததற்கான காரணம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி துவியும் காரணம் அல்ல என்பதை இந்த நேரத்திலே மீண்டும் ஒருமுறை தெரிவித்து, அதற்கு முழுமுதற் காரணம் கடந்த தி.மு.க. ஆட்சிதான். கடந்த ஆட்சிதான் காரணம் என்று சொன்னாலுங்கூட, அதை நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்துவருகின்ற அனைத்து முயற்சிகளையும் அம்மா அவர்கள் ஏற்கெனவே இங்கு

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 நவம்பர் 2

பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, நிச்சயமாக அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி வருகின்ற 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2013 ஆண்டுக்குள் நிச்சயமாக, தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே, எப்படி தமிழகம் ஒளிமயமான தமிழகமாகத் திகழ்ந்ததோ, அதைப்போல மீண்டும் தமிழகத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலம் ஒளிமயமாகத் திகழும் என்பதற்கு வேண்டிய அனைத்து ஆதாரங்களும் இங்கே விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன என்பதை மீண்டும் ஒரு முறை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொன்னது குறை காணும் நோக்கத்தில் அல்ல. இருக்கும் நிலைமையை எடுத்துச்சொல்லி, அதற்கு மேற்கொண்டு எங்களுக்குத் தெரிந்தது என்ன என்பதைப் பற்றி எடுத்துச் சொல்வதற்காகத்தானே தவிர வேறு அல்ல.

The installed capacity, நிறுவுத் திறன் என்று சொல்கிறபோது, அவற்றிலே நாம் பார்க்கவேண்டியது இப்போது இந்தக் காற்றாலையோ அல்லது நீர் மின் திட்டமோ இவை போன்றவை firm power அல்ல. அதாவது காற்று அடித்தால் மின்சாரம் இடைக்கும், மழை பெய்தால் மின்சாரம் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று அடித்தால் Wind Energy வரும், காற்று அடிக்காவிட்டால் Wind Energy வராது என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் installed capacity-ல் Wind Energy production capacity-யை நாங்கள் சேர்ப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

2012 நவம்பர் 2]

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது அவற்றைச் சேர்க்கக்கூடாது என்பதல்ல. அவற்றில் சாதாரணமாக 20 per cent எடுத்துக்கொள்வார்கள்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, காற்றாலை மின் உற்பத்தி எப்பொழுதுமே installed capacity-மின்சாரம் நிறுவு திறனில் சேர்ப்பதில்லை. ஏனென்று சொன்னால், அது ஒரு seasonal energy. அது அரசுக்கு நன்றாகத் தெரியும். அந்தக் குறிப்பிட்ட காலத்திலே வருகின்றபொழுது-தேவைப்படும்போது பயன்படுத்துகிறோம். ஆனால், அதையே நம்பி இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், இப்பொழுது நிரந்தரமான தீர்விற்கு, ஒட்டுமொத்தமாக எல்லாக் காலங்களிலும் தீர்வு ஏற்பட வேண்டுமென்பதற்காக புதிய மின் உற்பத்தித் திட்டங்களை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாகச் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நிறுவுத் திறனில் சேர்ப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினையை நான் அதோடு விட்டுவிடுகிறேன். நான் சொல்ல வந்தது, இந்த நெருக்கடியை நாம் மூன்று அம்சங்களிலே பார்க்க வேண்டும். 1. மின் உற்பத்தி, 2. மின் விநியோகம் 3. மின் சேமிப்பு. மின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெளிவாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். 2013 ஆம் ஆண்டு இறுதி வரை பொறுமையாக இருந்துதான் இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டும். அப்பொழுதுதான் மின்வெட்டு இல்லாத ஒரு நிலைமை ஏற்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். மின் உற்பத்தியிலே போய் அவற்றை விளக்கமாகச் சொல்ல வேண்டியதில்லை.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 நவம்பர் 2

ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மின்சார வாரியமே அனல்மின் நிலையங்களை எல்லாம் நிறுவியபொழுது, மூன்று ஆண்டுகள், அதிகபட்சம் நான்கு ஆண்டுகளிலே நிறுவினோம். இப்பொழுது National Thermal Power Corporation, BHEL, இன்னும் Private joint sector என்று போனதனுடைய விளைவு, மின்சார வாரியத்தின்மூலம் நாம் எடுத்துக்கொண்ட அக்கறை அளவிற்கு, அவர்கள் அதிலே அக்கறை காட்டாத காரணத்தாலோ என்னவோ நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, எதிர்காலத்திலே மின்சார வாரியமே அனல்மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவது சரலப்பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மின் உற்பத்தித் திட்டங்களிலேகூட NTPC-National Thermal Power Corporation மூலமாக நம்முடைய TNEB-யையும் சேர்த்துத்தான் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். அதைச் செயல்படுத்துகின்றபொழுது, அதைக்கூட இன்றைக்கு தனியார் நிறுவனம் செய்யவில்லை. அதனுடைய EPC contract-ஐகூட மத்திய அரசினுடைய BHEL நிறுவனம்தான் செய்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியமே நேரடியாகச் செய்வது என்று சொன்னால், அந்த contract-ஐ தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே செய்கிறது என்று சொன்னால்கூட, ஏதாவது ஒரு வகையிலே ஒப்பந்தப்புள்ளி, தனியாருக்கோ அல்லது அரசு நிறுவனத்திற்கோ பொது ஏலம் மூலமாக விட்டுத்தான் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

மத்திய அரசு நிறுவனமும் இன்றைக்குக் குறிப்பிட்ட காலத்திலே அதைச் செய்து முடிக்கவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே நடத்துகின்ற மேட்டூர் அனல்மின் நிலையத்திலேகூட, தனியார் நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலேதான் நடத்துகிறது. அதிலேயும் குறிப்பிட்ட காலத்திலே உற்பத்தியைத் தொடங்க முடியவில்லை. இவற்றையெல்லாம் திமுக. ஆட்சிக் காலத்தில் முடித்திருக்க வேண்டும். ஆனால், முடிக்கவில்லை. காரணம், ஒரு அரசை நடத்துகிறவர்கள் எப்படி இருக்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அதனுடைய விளைவு நிச்சயமாகக்

2012 நவம்பர் 2] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

கிடைக்கும். ஒரு வண்டியை இயக்குகிற ஓட்டுநர் எப்படி எந்தத் திசையில் ஓட்டுகிறாரோ, அந்தத் திசையில்தான் அந்த வண்டி செல்லும். நல்ல தலைமையில் ஓர் அரசு இருந்தால், அது எந்த நிறுவனமாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட காலத்திலே உற்பத்தியைக் கொண்டு வந்திருக்க முடியும். கடந்த ஆட்சிக்காலத்திலே செய்து முடிக்க வேண்டிய பணிகளெல்லாம் அன்றைக்கு அப்படியே கிடப்பில் போடப்பட்டுவிட்டன. இப்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்பு, அவற்றையெல்லாம் தூசி தட்டி, கிடப்பிலே போடப்பட்ட திட்டங்களையெல்லாம் இப்போது விரைவாகச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, இன்றைக்கு மின்சார வாரியமே செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள். வடசென்னையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலேதான் எடுத்து செய்கிறது. ஆனால், அதையும் மத்திய அரசு நிறுவனமான BHEL நிறுவனம்தான் ஒப்பந்தத்தில் எடுத்திருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு மின்சார வாரியம், தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே நடத்துகின்ற திட்டத்தை யாரிடமாவது ஒப்படைக்கிறார்கள், அதை நேரடியாக அவர்களே செய்ய முடியாது. EPC Contract. அதை நிறுவ ஒப்பந்தப்புள்ளி எடுத்த அந்த அரசுத் துறை நிறுவனம்கூட காலதாமதம் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, சில நேரங்களில் மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு இல்லாததும், வேண்டிய அனுமதி கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதும் அல்லது அந்த அரசை நடத்துகின்ற தலைமையிலே இருப்பவர்கள் சரியான வழிகாட்டுதல் இல்லாமல், வெளியே சொல்ல முடியாத சில பிரச்சினைகளின் காரணமாகத்தான் அந்தத் திட்டங்கள் எல்லாம் செயல்படுத்த காலதாமதம் ஆகிவிட்டது என்பதுதான் உண்மை என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். இப்போது மணி 1-10 ஆகிவிட்டது. (குறுக்கிடு) அதற்குப் பிறகு நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

திரு. ச. இராமச்சந்திரன்: நான் முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி ஒருபுறம் இருக்க, மின்சாரத்தைச் சேமிப்பதற்கு ஏதேனும் திட்டங்கள் அரசிடம் இருக்கிறதா? அதைப்பற்றியும் அவர்கள் ஆராய்ந்து சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். One unit saved is equal to two units generated என்று பொதுவாகச் சொல்வார்கள். ஆகவே, இந்த இக்கட்டான நேரத்திலே, நெருக்கடியான நேரத்திலே, மின்சாரத்தை எப்படிச் சேமிப்பது? ஏனென்றால், எந்த அளவிற்கு மின்சாரத்தை ஏற்கெனவே பயன்படுத்துகின்றவர்கள் சேமிக்கின்றார்களோ, அதற்கு ஏதேனும் ஒரு incentive என்ற முறையில், அதற்கு ஏதேனும் ஒரு சிறப்புத் திட்டம் இருக்குமேயானால், அதுவும் உண்மையிலேயே இந்த நேரத்திலே பயன்படும் என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைச் சேமிப்பதற்காகத்தான், படிப்படியாக அனைத்து அரசுக் கட்டடங்களிலும், தமிழ்நாடு முழுவதும், எல்.இ.டி. பல்புகளைப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண பல்புகளைத் தவிர்த்து, எல்.இ.டி. பல்புகளைப் போட வேண்டும். மேலும், சூரிய மின் சக்தியை அதிகமாகத் தயாரித்து, அதன் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக, மிக அண்மையில் ஒரு கொள்கை ஆவணத்தை வெளியிட்டு, அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல, மின் சிக்கனத்திற்கு வேண்டிய, மின் சேமிப்பிற்கு வேண்டிய அத்தனை நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இலவச மின்சாரம் பெறுகின்ற 14 இலட்சத்து 50

2012 நவம்பர் 2] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

ஆயிரம் குடிசைப் பகுதிகளில், குண்டு பல்புகளை எல்லாம் அகற்றிவிட்டு, இன்றைக்கு அரசின் செலவிலேயே எல்.இ.டி. பல்புகளை மாற்றி மின்சாரத்தைச் சேமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

அதேபோன்று, இன்றைக்குப் புதிதாகக் கட்டப்படுகின்ற அரசுக் கட்டடங்களிலும், அரசின் சார்பில் பசுமைக் குடில் திட்டத்தின் மூலமாகக் கட்டப்படுகின்ற வீடுகளிலும் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், சூரிய ஒளியுடன்கூடிய மின் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். அதுமட்டுமல்லாமல், மின்சாரச் சேமிப்பிற்கென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, கல்வி நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது நல அமைப்புகள் போன்ற அனைத்து அமைப்புகளிலும், இன்றைக்குத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் (Tamil Nadu Energy Development Agency) மூலமாக பெரிய அளவிலே விளம்பரங்கள், ஊர்வலங்கள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, distribution-ஐப் பொறுத்தவரையிலே, பயனீட்டாளர்களில் மின் வெட்டைச் சமாளிக்கக்கூடியவர்களும் உண்டு; அதைச் சமாளிக்க முடியாதவர்களும் உண்டு. இப்போது மின்சாரம் இல்லையென்றால், Inverter-ஐப் போட்டுக் கொள்வார்கள்; Generator-ஐப் போட்டுக் கொள்வார்கள். அதேபோல, தொழில் நிறுவனங்களுக்கென்று Generator இருக்கும். ஆனால், மின்சாரம் இல்லையென்றால், சாதாரண ஏழையெளிய மக்களுக்கு அந்த வாய்ப்பு இருக்காது. ஆகவே, முன்னுரிமை என்கின்ற அடிப்படையிலே, மின் வெட்டை அமல்படுத்துவதற்கு ஏதேனும் நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம் கொண்டுவந்தபோது ஒரு கணக்கைப் போட்டோம். மேட்டூரிலே இருக்கக்கூடிய Madras Aluminium Company ஒரு நாளைக்குப் பயன்படுத்துகிற மின்சாரம்,

[திரு. ச. இராமச்சந்திரன்] [2012 நவம்பர் 2

தமிழ்நாட்டிலே இருக்கின்ற குடிசைகளுக்கு ஓராண்டிற்குப் போதும் என்கின்ற அளவிற்கு இருக்கும். அவர்களுடைய ஒரு நாளைய மின்சாரம், தமிழகத்தில் உள்ள குடிசைகளுக்கு ஒரு வருடத்திற்குப் போதும். ஆகவே, அதைப்போல, தாங்கக்கூடியவர்கள் - Electricity Intensive Industries - அல்லது அவர்களுக்குத் தனியாக Generators இருக்கும். அவர்களுக்கு மின் வெட்டை அமல்படுத்தி, எந்த அளவிற்கு மின் வெட்டைச் சமாளிக்க இயலாமல் பலகீனமான பிரிவினர் இருக்கின்றார்களே, அவர்களுக்கு அந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டிலே தனித்தனி distribution companies இருந்தன. சேஷசாயி, திருச்சியிலே இருந்தது; நாகப்பட்டினத்திலே இருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேதான் அதை அரசு சார்பில் எடுத்தார்கள். ஒவ்வொரு ஏரியாவிலே ஒரு priority உண்டு. சேலம் என்று எடுத்துக்கொண்டால், அங்கே விசைத்தறி. திருப்பூர் என்று எடுத்துக்கொண்டால் கார்மெண்ட்ஸ். அந்தந்தப் பகுதியில் இருக்கும். அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்களைப் பயன்படுத்தி, அங்கே இருக்கக்கூடிய consumers, பயனீட்டாளர்களுடைய தன்மையை முன்னுரிமைப்படுத்தி, வரிசைப்படுத்தி, பாமர மக்கள், சாதாரண மக்கள் பாதிக்கப்படாத அளவிற்கு மின் விநியோகத்தை சீரமைப்பதற்கு அதிகாரிகள்மூலம் அல்லது பொறியாளர்கள்மூலம் திட்டம் வகுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 1-15

தமிழ்நாடு முழுவதற்கும் சேர்த்து என்று சொல்கிறபோது, அதிலே பிரச்சினைகள் வரும். ஆங்காங்கே தனித் தனியாக இருக்கக்கூடிய நிலைமைகளைப் பரிசீலித்து, பெரும்பாலான மக்கள் பாதிக்கப்படாத அளவிற்கு தாக்குப் பிடிக்க வேண்டும், ஏனென்றால், இன்னும் ஒரு வருஷம் 2013 கடைசி வரை என்று சொல்கிறோம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இந்த அவையில் நான் பேசியதை திரித்து கூறக்கூடாது என்று நான் தங்கள்

2012 நவம்பர் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த ஆண்டு 2013 இறுதி வரை இதே நிலைமை நீடிக்கும் என்று நான் சொல்லவில்லை. இந்த மாதம், நவம்பர் மாத இறுதியிலிருந்தே படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு மின் உற்பத்தித் திட்டங்கள், பல்வேறு நிலைகளில் பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. ஆகவே, இந்த மாத இறுதியிலிருந்து, இந்த புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்பாட்டுக்கு வரும். ஒவ்வொரு திட்டமும் செயல்பாட்டுக்கு வரும்போது நமக்கு கூடுதலாக மின்சாரம் கிடைக்கும், அப்போது மின் வெட்டு குறையும். ஆக, இதே நிலைமை அடுத்த ஆண்டு இறுதி வரை நீடிக்கும் என்று நான் சொல்லவில்லை, அது புரிய வேண்டிய மக்களுக்குப் புரிந்து விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த எண்ணத்திலே சொல்லவில்லை. மின் பற்றாக்குறை அது வரை இருக்கும் என்று அந்த அடிப்படையில் சொன்னேன். படிப்படியாக முன்னேறும் என்பதை நானும் ஒப்புக்கொள்கின்றேன். அதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. ஆக, இந்த மும்முனையிலேயும் நீங்கள் இந்த அளவுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்ன ஒரு தொழில்நுட்ப விஷயம் அவருக்குத் தெரிந்திருக்கும், ஆனால் எப்படிச் சொல்கிறார் என்று தெரியவில்லை. தாக்குப் பிடிக்கக்கூடிய மக்கள் என்று பிரித்து தேவையானவர்களுக்கு தேவையான நேரத்திலே கொடுப்பதும், மற்றவர்களுக்கு மின் விநியோகத்தை சீரமைப்பதிலே சில பிரச்சினைகள் இருக்கிற நேரத்தில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று சொல்கிறார். தனி ஃபீடர் உள்ள, தனி சப் ஸ்டேஷனிலிருந்து தனியாக மின்னூட்டிகள் மூலமாக தனி இணைப்பு பெறுகிறவர்களுக்கு அந்த மின் இணைப்பு நேரத்தை, வேண்டிய

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்][2012 நவம்பர் 2

அளவிற்குக் குறைத்துக் கொள்ளலாம் அல்லது முழுமையாகவும் கொடுக்கலாம். அந்த வசதி இருக்கிறது. ஆனால் மிக்ஸீடுஃபீடர் என்று சொல்வார்கள். ஒரு துணை மின் நிலையத்திலேயிருந்து மின்னூட்டிகள் மூலமாக வழங்கப்படுகிற மின்சாரத்திலே சாலைகளுக்கும், குடிசைப் பகுதிகளுக்கும், அந்த மின்னூட்டிகள் மூலமாகத்தான் மின்சாரம் செல்லும். அங்கே இருக்கின்ற பங்களாவுக்கும், அந்த மின்னூட்டிகள் மூலமாகத்தான் செல்லும். அதை நிறுத்தினால் மொத்தமாகத்தான் நிறுத்த முடியும், அல்லது கொடுத்தால் மொத்தமாகத்தான் கொடுக்க முடியும். இப்படிப்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் இருப்பதால், அங்கே வசதியானவர்கள், வசதியில்லாதவர்களுக்கு என்று பிரித்து மின்சாரத்தை வழங்குவதிலே சில தொழில்நுட்பப் பிரச்சினைகள் இருக்கின்றன. இப்போது அம்மா அவர்கள் அதனை ஆய்வு செய்யுமாறு உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

பிற்காலத்திலே மின்சாரத்தைப் பெரிய அளவில் பயன்படுத்துகின்ற விவசாயிகளுக்கு, விவசாயிகளுக்கான மின்சாரத்திற்கு மட்டும் தனியாக மின்னூட்டிகளைக் கொடுத்து, தொழிற்சாலைகள் எப்படி மின்னூட்டிகளுக்கு தனியாக சர்வீஸ் இணைப்புகளைப் பெற்றிருக்கின்றனவோ, அதைப்போல் தனியாக தொழிற்சாலைக்கு ஒன்று, வீட்டுப் பகுதிக்கு ஒன்று என்று தனியாகப் பிரிப்பதற்கு ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு மிகப் பெரிய அளவில் நிதி தேவைப்படும் என்ற காரணத்தினால், அதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அதைப் பற்றி ஆய்வு செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் domestic என்று சொன்னால், வீட்டுப் பகுதிகளுக்கு என்று தனியாகவும், அதிலே வசதியானவர்கள், குடிசைப் பகுதிகள் என்று பிரிக்க முடியாது. ஆனால், ஒட்டுமொத்தமாக தொழிற்சாலைகள் மற்றும் வீட்டு வசதி என்று பிரிக்க முடியும். பிரிக்க வேண்டுமென்றால், அதற்கும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அம்மா அவர்களுடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்றைய சூழலில் அந்த அளவிற்கு தொழில்நுட்ப வசதிகள் எங்கும் இல்லை என்பது ஒரு புள்ளிவிவரமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

2012 நவம்பர் 2]

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே தேவருடைய குரு பூஜை நடந்த போது பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி உதவி கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று, விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், பூம்பிடாகை கிராமம், மாயாண்டி என்பவர் இறந்திருக்கிறார், பன்னீர்செல்வம் என்பவர் காயமுற்றிருக்கிறார். அவர்களுக்கும் உரிய நிவாரண நிதியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தென்கோடியில், எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு அரசியல் முகவரி தந்து, நகரக் கழகச் செயலாளராக்கி, நகர்மன்றத் தலைவர் பொறுப்பு அளித்து, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராக்கி, மாவட்ட கழகச் செயலாளராக்கி, கழகத்தின் பொருளாளராக்கி, ஆட்சி அடையாளம் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சராக்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்திடவும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்திடவும், பொன்னான வாய்ப்பினை எனக்களித்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல, கழகத் தொண்டர்களைக் காக்கும் காவல் தெய்வம். எதன்பொருட்டும், எவர்பொருட்டும் தமிழர் உரிமைகளை விட்டுத் தராத துணிவின் சின்னம், தீயசக்தியின் அரட்டல், உருட்டல், மிரட்டல்களை அஞ்சாது எதிர்கொண்டு, அனைத்திலும் வெற்றிகொள்ளும் வீரத்திலகம், தேர்ந்த நிருவாகத் திறனால் தமிழகத்தின் நிதி அமைப்பை அமுதசுரபி ஆக்கி, தீட்டிய திட்டங்களுக்கு வேண்டிய நிதியை வள்ளலாய் வாரி வழங்கும் கருணையின் சிகரம். மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 2

தலைவி அம்மா அவர்களின் அரசு, கடந்த 26-3-2012 அன்று 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, அவற்றைத் திறம்பட நிறைவேற்றியும் வருகிறது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த பிறகு, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்குவதும், வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் இடம்பெறாத அதாவது, அதற்குப் பிறகு அறிவிக்கப்பட்ட புதிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதியை வழங்குவதும் இந்த முதல் துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும். அதன் அடிப்படையில், கடந்த 29-10-2012 அன்று இப்பேரவையில் ரூபாய் 5,617.14 கோடி கூடுதலாகத் தேவைப்படுகிறது எனவும், அதற்குரிய அனுமதியை பேரவை வழங்க வேண்டும் எனவும் கோரி முதல் துணை மானியக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து 31-10-2012, 1-11-2012 மற்றும் இன்று ஆகிய மூன்று நாட்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், தே.மு.தி.க.வைச் சார்ந்த உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினைச் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் இதர கட்சிகளைச் சார்ந்த அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் முதல் துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களது மேலான கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விவாதத்தில் பங்கேற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு துறைகளைச் சார்ந்த பொருள்கள் குறித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அதற்கு சம்பந்தப்பட்ட துறைகளின் மாண்புமிகு அமைச்சர்கள் அவ்வப்போது உரிய பதிலைத் தெரிவித்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தின் தற்போதைய மின் நிலைமை குறித்தும், இப்படிப்பட்ட நிலைமை உருவாக காரணகர்த்தா யார் என்றும், இந்த நிலைமையைச் சீர்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேற்கொண்டு வரும் துரிதமான நடவடிக்கைகள் குறித்தும் தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூறினார்கள்.

இன்று தமிழகம் சந்தித்துவரும் மின் பற்றாக்குறைக்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்கின்ற வினாவிற்கு விளக்கம் அளிக்கின்ற தெம்போ, எடுத்து வைக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கின்ற திராணியோ இல்லாத காரணத்தால், இந்த அவையை விட்டு எப்படி வெளியேறலாம் என்று திட்டமிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) போரில் புறமுதுகிட்டு ஓடும் கோழைகளைப்போல நடந்துகொண்டார்கள்.

மகாகவி பாரதி சொன்னதைப்போல, கண்கள் இரண்டிருந்தும் காணும் திறமையற்ற கூட்டமாய் இருக்கிறார்கள். காதுகள் இருக்கின்றன, ஆனால் கேட்க மறுக்கிறார்கள். Zero Hours-ல் பேசுகிறேன் என்று பேரவைத் தலைவரிடம் அனுமதி வாங்குவது, Adjournment Motion என்று தாவுவது; இது எந்த ஊர் சபை நாகரிகமோ, அவர்களுக்கே அது வெளிச்சம்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நேற்றைய தினம் இந்த அவையில் விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கையில் எடுத்துக் கூறியதுபோல தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சி பெறும் வகையிலும், நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபற்றிக் கூறும்பொழுது சர்வதேசப் புகழ்பெற்ற இந்திய மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 12 தொழில் நிறுவனங்கள் 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்திட உள்ளன என்றும், இதன்மூலம் 36 ஆயிரத்து 855 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் ஒரு இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்றும், மேற்படி 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 2

ஒப்பந்தங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எதிர்வரும் 5-11-2012 அன்று கையொப்பமிட உள்ளது என்றும் இப்பேரவையில் நேற்று அறிவித்தபோது, தமிழகத்தின் நலம் நாடும் நல்ல உள்ளங்கள் எல்லாம் மகிழ்ச்சியில் திளைத்தன. குறிப்பாக, வேலைவாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இளைய சமுதாயம் ஆனந்தக் கூத்தாடியது என்று சொன்னால், அது மிகையாகாது. ஒரே நாளில் தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய தொகையை முதலீடு செய்யும் வகையில், இத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடும் இந்தச் சாதனை, கின்னஸ் புத்தகத்திலே இடம்பெறும் மகத்தான சாதனை என்பதை மிகுந்த பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசாங்கத்தின் அச்சாணியாக விளங்குகிற அரசு ஊழியர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அவர்களுக்கான வீடு கட்டும் முன்பணக் கடனை 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சமாக உயர்த்தினார்கள். பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், அரசுப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை மேம்படுத்தி அவர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் பயன் அடையும் வண்ணம், அதற்கென வழங்கப்படும் நிதி உதவியை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, அந்த அளவிற்கு உட்பட்டு எத்தனை முறை வேண்டுமானாலும் சிகிச்சை பெற்றுக்கொள்ள வழி வகுத்துள்ளார். அண்மையில் மத்திய அரசு, அதன் ஊழியர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தியவுடன் மாண்புமிகு அம்மா அவர்களும், சற்றும் தாமதமின்றி தமிழக அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்.

அதுமட்டுமின்றி, 25 ஆண்டுகாலம் அப்பழுக்கற்ற பணியை முடித்த அரசு ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த வெகுமானத் தொகை 500 ரூபாயை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதோடு மட்டுமின்றி, அத்தொகை ரொக்கமாக வழங்கப்படும் என்று நேற்றையதினம் இந்த அவையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேலும், அவர்களுக்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தை 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அரசு ஊழியர்களின் நலனையும் காக்கும் நல்லரசு என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மற்றும் துணை மதிப்பீடுகள்மீது 180 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ளனர். அவை அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களால் பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் பேசும்போது, முதல் துணை மானியக் கோரிக்கையில் 51 துறைகள் சம்பந்தமாக ரூபாய் 5617.14 கோடி கோரப்பட்டுள்ளது என்றும், 515 திட்டங்களில் 128 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுதலாக நிதி கோரப்பட்டுள்ளது என்றும், 54 அரசுத் துறைகளில் 35 துறைகள் 2012-2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட இந்த ஆறு மாத கால அளவிலேயே அரையாண்டுக்கான ஒதுக்கீட்டினைவிட கூடுதலாக செலவிட்டுள்ளன என்றும், ரூபாய் 3,501 கோடி ஒதுக்கீடு பெற்றுள்ள, மடிக்கணினி போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் மிக முக்கிய துறைகளான சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை, ரூபாய் 222 கோடி ஒதுக்கீடு பெற்றுள்ள சுற்றுச் சூழல் துறை, ரூபாய் 18 கோடி ஒதுக்கீடு பெற்றுள்ள மாநில சட்டமன்றம் ஆகிய துறைகள் கூடுதல் நிதி கோரி எந்த அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லையென்றும் அது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப் போல் துணை மானியக் கோரிக்கை என்பது எல்லாத் துறைகளிலும் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 2

அவசியம் இல்லை. எந்தெந்தத் துறைகளுக்குக் கூடுதல் நிதி தேவைப்படுகிறதோ, அந்தத் துறைகளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுவது அவசியம்.

இந்த மூன்று துறைகள் கூடுதல் நிதி கோரவில்லை என்றால், அந்தத் துறைகளுக்குக் கூடுதல் நிதி தேவைப்படவில்லை என்பதுதான் பொருள். அதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல், 35 துறைகளில், முதல் அரையாண்டில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது என்றால், அந்தத் துறை செயல்படுத்தும் திட்டங்களில் மாதாந்திர வாரியாக நிதித் தேவையைப் பொறுத்தே செலவினம் அமையும்.

உதாரணமாக, எரிசக்தித் துறையைப் பொறுத்தமட்டில், மின்சார வாரியத்தின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட முழு மானியத்தையும் அத்துறைக்கு முன்னரே வழங்கியதால்தான், அரையாண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

அதேபோல, பல திட்டங்களில் முதல் அரையாண்டிலேயே, நிதி கணிசமாக செலவழிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அந்தத் துறைகளில் கூடுதலாகச் செலவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனினும், ஆண்டு இறுதியில் துறை வாரியாக, தலைப்பு வாரியாக, நிதி ஒதுக்கீடு, செலவு, தேவை ஆகியவை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, இறுதி துணை மானியக் கோரிக்கையில், தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு சரி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. பாண்டியராஜன் அவர்கள் பேசுகிறபோது, ஏற்கெனவே உள்ள நிதிப் பற்றாக்குறையான ரூ.19,832 கோடியில், பெறப்படும் கடன் ரூ.18,389 கோடி என்ற நிலையில், துணை மானியக் கோரிக்கையில் அனுமதிக்கப்படும் ரூ.567.14 கோடியையும் சேர்த்தால், நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் ஐந்து சதவீதத்தைத் தாண்டிவிடும் என்றும், இதனால் ஏற்படும் கூடுதல் கடன் ரூ.31,232 கோடியை எட்டி அதன் அளவும் மாநில உற்பத்தி மதிப்பில் நிதி நிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் குறியீட்டினை மீறுவதோடு, வட்டிப் பளு மட்டும் ஆண்டிற்கு ரூ.15,000 கோடியைத் தாண்டும் எனவும், இவ்வாறு அதிகக் கடன் சுமையை அரசு எப்படித் தாங்கும் என்றும் கேட்டுள்ளார்.

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துவக்க உரையிலேயே, தற்போது துணை மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ள ரூ.5,617.14 கோடியை வணிக வரி மற்றும் கலால் வரி ஆகியவற்றில் ஏற்கெனவே கணிக்கப்பட்ட அளவைவிட, கூடுதலாக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது என்றும், அந்தக் கூடுதல் நிதி ஆதாரத்தைக் கொண்டும், செலவினங்களைக் கட்டுப்படுத்தியும் இந்தக் கூடுதல் நிதித் தேவை பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு 2012-2013 ஆம் ஆண்டிற்கு, தமிழக அரசு கடன் பெற அனுமதித்துள்ள அளவு ரூ.20,716 கோடி என்றாலும், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, ரூ.18,387.47 கோடி அளவே கடன் பெற நாம் உத்தேசித்துள்ளோம். மின்சார பகிர்மானக் கழகத்திற்கு வழங்கப்படும் கூடுதல் நிதி உதவியையும் கணக்கில் கொண்டாலும், கூடுதலாகக் கடன் பெறாமல் அரசின் நிதித் தேவையை நிறைவு செய்யவே மாண்புமிகு அம்மாவின் அரசு முயன்று வருகிறது.

ஒருவேளை, சிறிது கூடுதல் கடன் பெற வேண்டி இருந்தாலும் அதுகூட மத்திய அரசு விதித்துள்ள அளவுக்குள் மட்டுமே இருக்கும் என்பதையும், அது நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தின் கடன் குறியீட்டு அளவான, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 24.8 சதவீதம் என்ற அளவிற்குள் கட்டுப்படுத்தப்படும் என்பதையும் நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்படும் என்பதையும் இங்கே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன். எனவே, இந்த நிதியாண்டு நிறைவு பெறும் வரை, திரு. பாண்டியராஜன் அவர்கள் பொறுமை காத்து, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எவ்வாறு பொறுப்போடு நிதியைக் கையாண்டு நிருவகிக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

முதல் துணை மானியக் கோரிக்கையில் தற்போது கோரியுள்ள ரூ.5,617.14 கோடியில், மின்சார வாரியத்திற்கு மட்டுமே ரூ.4,249 கோடி என்பதை மாமன்ற உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் சுட்டிக்காட்டி, மத்திய அரசு அனுமதித்துள்ள ரூ.1,20,000 கோடிக்கான கடன் சீரமைப்புத் திட்டத்தில், இந்த உதவி வழங்கப்படுவதாகவும், ஏற்கெனவே மின்சார வாரியத்தை மூன்று நிறுவனங்களாகப் பிரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முடிவு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 2

பெறாத நிலையில், இது ஒரு வீணான செலவு எனவும், விழலுக்கு இறைத்த நீர் எனவும் இங்கே குறிப்பிட்டார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1-35

மாண்புமிகு அம்மா அவர்களது அரசைப் பொறுத்தவரை, எந்தத் துறைக்கு எந்தப் பணிகளுக்கு நிதி அவசியம் தேவைப்படுகிறதோ அதை உரியவாறு வழங்க வேண்டும் என்பதை முறையாகச் செய்து வருகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைய நிலையில் தமிழகத்தில் பெரும் சவாலாக உள்ளது மின்சாரம் பற்றிய பிரச்சினைதான். இதற்கு விரைவில் ஒரு நிரந்தரத் தீர்வு கண்டு தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் திட்டி அயராது பாடுபட்டு வருகிறார். எனவேதான் மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கூடுதல் நிதியைக் கோரியுள்ளோம். இந்த நிறுவனத்திற்கு வழங்கப்படுகின்ற ரூ.4,086 கோடியில், ரூ.1,000 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. ரூ.1,086.25 கோடி மின்சார வாரியத்திற்குக் கூடுதலாக வழங்க வேண்டிய மானியத் தொகையாகும். மத்திய அரசு கடன் சீரமைப்புத் திட்டத்தை ரூ.1,20,000 கோடிக்கு செயல்படுத்த உள்ளதாக பத்திரிகைகளிலும் செய்தி வந்துள்ளது. ஒரு சில உறுப்பினர்களும்கூட இதைத் தெரிவித்தார்கள். ஏதோ, மத்திய அரசு இந்த ரூ.1,20,000 கோடியை வழங்குவதுபோல் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், இந்த ரூ.1,20,000 கோடி என்பது கடன் சுமையில் மூழ்கியிருக்கும் ஏழு மாநிலங்களைச் சார்ந்த மின் உற்பத்திக் கழகங்களின் மொத்த குறுகிய காலக்கடன் அளவுதான். அதாவது இந்த ரூ.1,20,000 கோடி என்பது ஏழு மாநிலங்களைச் சார்ந்த மின் உற்பத்திக் கழகங்களின் மொத்த குறியீடு ஆகும். இதில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிருவாகச் சீர்கேட்டால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் குறுகிய காலக் கடன் அளவு அசல் மட்டும் ரூ.19,146 கோடி ஆகும். இதில் ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிருவாகச் சீர்கேட்டால் குறுகிய காலக் கடன் மட்டும் ரூ.19,146 கோடி. மொத்த கடன் எவ்வளவு? இந்த ரூ.19,146

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோடி இல்லாமல் ரூ.43,829 கோடி ரூபாய். இதுமட்டுமல்லாமல், பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு அவர்கள் ஆட்சியைவிட்டு செல்லும்போது, பெல் நிறுவனத்திற்கு செட்டில்மென்ட் செய்யாமல் பாக்கி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். இதுதான் கடந்த தி.மு.க. ஆட்சியின் நிருவாகச் சீர்கேடு என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதனை மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் நமக்கு இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். 1957-லிருந்து 2006 வரை ரூ.9,326 கோடிதான் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடனாக இருந்தது. இந்த ரூ.9,326 கோடி, கடந்த தி.மு.க. ஆட்சியான 2006 முதல் 2011 வரை ரூ.44,503 கோடியாக கடன் அளவு உயர்ந்திருக்கின்றது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்த நான் இங்கே கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்காது. ரூ.1,27,000 கோடி என்று மத்திய அரசு ஏழு மாநிலங்களுக்கு அறிவித்திருக்கிறது. இந்த நிதியையும் மத்திய அரசு முழுமையாக வழங்காது. பின் எப்படி வழங்குகிறது? இந்த குறுகிய காலக் கடன் சுமையில், 50 சதவீதக் கடனை, அதாவது ரூ.9,573 கோடியை, மாநில அரசே ஏற்றுக்கொண்டால், அதில் அசல் தொகைக்கு மட்டும் 25 சதவீதம் மத்திய அரசு வழங்குகிறது. அதாவது, மொத்தம் ரூ.19,000 கோடி ரூபாயில், 9,573 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்றுக்கொண்டால், அந்த 9,573 கோடியில் 25 சதவிகிதம். அப்படி என்றால் எவ்வளவு, 2,375 கோடி ரூபாய். இதுதான் மத்திய அரசு வழங்குகின்ற உதவி. இது ஏதோ ரூபாய் 1,20,000 கோடியை மத்திய அரசு வழங்குவதாக நாம் நினைத்துக்கொண்டு, இங்கே மாமன்ற உறுப்பினர்கள் அதனை மூலதனச் செலவிற்குக்கூட பயன்படுத்தலாம் என்றுகூட நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசினார்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். அதன்பிறகு நீங்கள் கடைசியில் பேசுங்கள். பின்னர் அந்த 50 சதவிகிதத்தில் அதற்குரிய அசல் மட்டும்தான் மத்திய அரசு தருகிறது. அதற்குரிய வட்டியையும் மாநில அரசுதான் செலுத்த வேண்டும் என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இந்தக் கடன் சுமை முழுவதையும் ஏதோ மத்திய அரசு அப்படியே ஏற்றுக் கொள்வதைப்போல் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி பத்திரிகைகளில் செய்தி வெளிவருவதும், அதனடிப்படையில் மாமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுவதும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 2

நமக்கு வியப்பாக உள்ளது என்பதையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால், அவர்கள் அசலை திரும்பச் செலுத்த மூன்றுகால அவகாசங்கள் கிடைக்கும். அதாவது, மாநில அரசு ஏற்றுக்கொண்டது போக, மீதி உள்ள 50 சதவீதக் கடனை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமே பொறுப்பேற்க வேண்டும். 100 சதவிகிதம் இருக்கின்ற கடனில், 50-ல் 25 சதவிகிதம் மத்திய அரசு கொடுக்கும், மீதியை மாநில அரசு ஏற்கும். இது நிதி மறு சீரமைப்பு, மத்திய அரசினுடைய திட்டம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த 50 சதவீத கடனை மாநில அரசே ஏற்கும் என்பதை ஏற்கெனவே அறிவித்து விட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மொத்த குறுகிய காலக் கடனான ரூ.19,142 கோடியில், மாநில அரசு ஏற்றுக்கொள்ளவேண்டிய 50 சதவீதமான ரூபாய் 9,573 கோடியை, நிதிநிலை பொறுப்புடைமை சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு, ஒரே ஆண்டில் மாநில அரசே திரும்பச் செலுத்துவது என்பது இயலாத காரியம் என்பதால், இந்த ஆண்டு ரூபாய் 2,000 கோடி மட்டும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மீதித் தொகையை அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாக வழங்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-40

இந்த நிதி மறு சீரமைப்பு நடவடிக்கைகளுக்கும், மின்சார வாரியத்தை மூன்றாகப் பிரிப்பதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. நேற்று முதல்நாள் திரு. பாண்டியராஜன் பேசும்போது இந்த இரண்டையும் போட்டு குழப்பிக்கொண்டிருந்தார். நிதி மறு சீரமைப்பையும், மின்சார வாரியத்தைப் பிரிப்பதையும் இரண்டையும் போட்டு மாற்றி மாற்றி பேசிக்கொண்டிருந்தார். அவருக்கு நான் தெளிவாகக் கூறுகின்றேன். மின்சார வாரியத்தைப் பிரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும். நிதி மறு சீரமைப்பிற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எழுப்பிய கருத்துகளில் மின்சார பிரச்சினை முக்கியமாக எதிரொலித்தது. இதற்கான நீண்ட விளக்கத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த அவையிலே அளித்துள்ளார்கள்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதி, தொலைநோக்குடன் செயல்படத் தவறியதாலும், மின் உற்பத்திக்கான தொலைநோக்குத் திட்டங்களைத் தீட்ட அக்கறை காட்டாத காரணத்தாலும், நீண்டகால மின்சார கொள்முதலுக்கான ஒப்பந்தங்களைப் போடத் தவறியதாலும், தற்போது தமிழகத்தில் கடுமையான மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தக்க ஆதாரங்களுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மின் பற்றாக்குறையை முழுமையாக நீக்கிடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டு வருகின்ற பல்வேறு புதிய திட்டங்களைப் பற்றி தெளிவாக மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான பல திட்டங்களை விரைவுபடுத்தும் அதே நேரத்தில் மின்சார சேமிப்பை ஊக்கப்படுத்தவும், மாற்று எரிசக்தி வாய்ப்புகளை உருவாக்கவும், சூரிய எரிசக்தி உற்பத்தியைப் பெருக்கும் புதிய கொள்கையை 27-10-2012 அன்று வெளியிட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இங்கே நினைவுகூர்ந்தார்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கு ஓர் உறுதியை அளித்திருக்கிறார்கள். 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மின்வெட்டு அறவே நீக்கப்படும் என்ற உறுதிமொழியை இந்த மாமன்றத்தில் அளித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு அளித்த உறுதிமொழியை நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினை மின் வெட்டு இல்லாத மாநிலமாக மட்டுமல்ல, மின் மிகை மாநிலமாகவும் மாற்றிக்காட்டுவார்கள் என்பதையும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 நவம்பர் 2

நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கைத்தறித் துறையில் எவ்வாறு 197 கோடி ரூபாய் அரசுக்கு அவசர கூடுதல் செலவு ஏற்பட்டது என்று கேட்டார். வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 268 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதியைக்கொண்டு தற்போதைய விலை நிலவரப்படி வேட்டி, சேலை வாங்கி வழங்க இயலாது என்பதால் ஏற்கெனவே வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுடன் கூடுதலாக ஏற்படவுள்ள செலவிற்கு 94 கோடி ரூபாயும், கரூர் டெக்ஸ்டைல் பார்க் அமைக்க 15,99,00,000 ரூபாயும், கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கும் மின்சார மானியத்திற்கு கூடுதலாக 93,80,00,000 ரூபாயும், இன்னும் ஓரிரு கூடுதல் இனங்களுக்கும் சேர்த்து மொத்தம் இந்த மானியத்தில் 197 கோடியே 57 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'நீலம்' புயலுக்கு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்கள். மாநில பேரிடர் நிவாரண நிதி 2012-2013 ஆம் ஆண்டிற்கு 323 கோடியே 61 இலட்சம் ரூபாய் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதிலிருந்து உடனடி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. சேதாரம் கூடுதலாக இருந்தால் அதற்கான நிதித் தேவைக்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நேரத்தில், உரிய நிதியை ஒதுக்கீடு செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் எத்தனையோ திட்டங்களை அறிவித்து அவற்றை செம்மையாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

பிற்பகல் 1-45

கடுமையான பிரச்சினைகளுக்கு இடையிலும் நிதி ஆதாரங்களைத் திறம்பட திரட்டி, எந்த ஒரு திட்டத்திற்கும் நிதிப் பற்றாக்குறை என்பது இல்லாமல், கவனமாகச் செயல்பட்டு வருகிறார்கள். குறிப்பாக கல்வி, மருத்துவம், சமூக நலன்,

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

விவசாயம், கால்நடை, ஊரக வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, மீன் வளத் துறை போன்ற பல முக்கிய துறைகளுக்கு அதிகளவிற்கு நிதியை ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திறம்படச் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே நான் பெருமையாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை பெருமைப்படுத்தும் கடமையைச் செய்வதில், தமிழக மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் ஒருநாளும், ஒருபோதும் சோர்வடையமாட்டேன் என்று சூளுரைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் பகைவர்களை வேரறுத்து, தமிழகத்தை மேம்படுத்தி, தமிழ் இனத்தை முன்னேற்றவும் தமிழகம் இதுவரை காணாத உயர்ந்த நிலையை, உன்னத நிலையை அடைந்திடவும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்கள். ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாய், பிற மாநிலங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் தமிழகத்தில் நடைபெற்று வரும் பொற்கால ஆட்சி போலவே, உலகமே உற்று நோக்கும் வல்லரசாய், இந்திய மக்கள் புகழ்ந்து பேசும் நல்லரசாய், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே மிக விரைவில் மத்திய அரசு மலரும். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பாரதம் உருவாகும், உருவாகும், உருவாகும் எனச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளக்கங்களை ஏற்று மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, இந்த முதல் துணை மானியக் கோரிக்கையை இம்மாமன்றம் அனுமதித்து, தேவையான கூடுதல் நிதியை ஒதுக்கிட வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன் நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலத் தீர்வை பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம், நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். 2013 வரை படிப்படியாக மின்வெட்டு அகலும் என்கிற அந்த வாக்குறுதி

[திரு. அ. சவுந்தரராசன்] [2012 நவம்பர் 2

எல்லோருக்கும் மன நிறைவைத் தருகிற வாக்குறுதி, எங்களுக்கும் தருகிறது. ஆனால், குறுகிய காலத் தீர்வாக 500 கோடி ரூபாய் ஒதுக்கினால்தான், மக்களுடைய கவலையை, குறிப்பாக தொழிலாளர்களின் கவலையைப் போக்கமுடியும் என்று நாங்கள் மன்றாடி, மன்றாடிக் கேட்டோம். நிதியமைச்சருடைய பதிலுரையிலும் அதற்கு ஒன்றும் இல்லை என்பது எங்களுக்குக் கவலை அளிக்கிறது, வேதனை அளிக்கிறது. ஆகவே, மக்களுடைய வேதனையைப் பிரதிபலிக்கக்கூடிய முறையிலே, அமைச்சருடைய பதில் அந்த விஷயத்தில் திருப்தி அளிக்கவில்லை என்று சொல்லி, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்பது வெறும் 500 கோடி ரூபாய்தான். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருப்பது அதைவிட பலமடங்கு, 4,500 கோடி ரூபாய்க்குமேல் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலையைப் பொறுத்தவரையில், மின்சார வாரியத்திற்கு அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்ற அளப்பரிய நிதியுதவியை, நேற்றைக்குக்கூட இங்கே பட்டியலிட்டுக் காட்டினார்கள். மீண்டும் சொல்கிறேன், 500 கோடியைவிட அதிகமாக சென்ற ஆண்டு, 2011-2012 ஆம் ஆண்டில், மொத்தம் 7,913 கோடி ரூபாயை முன்பணமாக, மானியமாக அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, 2012-2013 ஆம் ஆண்டில் மானியமாக, முன்பணமாக எல்லாவகைகளிலும் 5,020 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல இன்றைக்கு மத்திய அரசு வழிகாட்டுதலின்படி மட்டுமல்ல; அவர்கள் கொடுப்பது சிறிய உதவியாக இருந்தாலும்கூட மாநில அரசே ஏற்றுக்கொள்கின்ற வகையிலே-முழுமையாகச் சொல்கிறேன், என்னென்ன நிதியுதவி-நீங்கள் கேட்பது 500 கோடி ரூபாய்; அம்மா அவர்கள் வழங்கியிருப்பது எத்தனை மடங்கு என்பதைப் பாருங்கள். மின்சார வாரியத்திற்காக அம்மாவினுடைய அரசு, தாய் உள்ளத்தோடு எத்தனை மடங்கு கூடுதலாக வழங்கியிருக்கிறது

2012 நவம்பர் 2] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன் பிறகு நீங்கள் கேளுங்கள். மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற சுருங்கிய காலக் கடனிலே 50 சதவீதமான அந்தத் தொகையில், ஏறத்தாழ 9,529 கோடி ரூபாயை இப்போது அம்மாவினுடைய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நிதியமைச்சர் அவர்களும் அதை விரிவாகச் சொன்னார்கள். அதில் மத்தியஅரசு ஏற்றுக்கொண்டது வெறும் 25 சதவீதம்தான்; இருந்தாலும், 2,294 கோடி ரூபாயை மாநில அரசு இன்றைக்கு தாயுள்ளத்தோடு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதேபோன்று நடப்பாண்டில் 4,300 கோடி ரூபாய் நஷ்டம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நஷ்டத்திலும்கூட 30 சதவீதத்தை, அதாவது, 1,294 கோடி ரூபாயை மாநில அரசு, அம்மாவினுடைய அரசுதான் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிச்சுமையை இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மின் கட்டணத்தையும் மாற்றி அமைத்ததற்குப் பின்பும்கூட, 4,500 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிற வகையிலேதான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான், நீங்கள் கேட்கின்ற 500 கோடி ரூபாய்—இவ்வளவு அள்ளிக் கொடுத்திருப்பதற்குப் பின்பும் அதற்கு நன்றி பாராட்டுவதை விட்டு விட்டு, இன்னும் 500 கோடி ரூபாய் கொடுக்கவில்லையே, 500 கோடி ரூபாய் கொடுக்கவில்லையே என்று சொல்வது என்பது எந்த வகையில் நியாயம் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-50

இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன். அதைப்போல இன்னும்கூட அம்மா அவர்களுடைய அரசு கொள்முதலுக்காக பல்வேறு வசதிகளை—ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள்- கொள்முதல் செய்தால் இங்கே கொண்டுவருவதற்கு டிரான்ஸ்மிஷன் லைன், வழித்தடங்கள் எல்லாம், மற்ற சரக்குகளாக இருந்தால், ஏதாவது, ஆத்திர, அவசரமாக இருக்கும் நேர்வில், லாரியில் ஏற்றிக்கொண்டு வந்து விடலாம்; goods train-ல் ஏற்றிக் கொண்டு வந்துவிடலாம். மின்சாரத்தைக் கம்பி வழியாகத்தான் கொண்டு வரமுடியும். ஆகவே, அந்த வழி முறைகளெல்லாம்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 நவம்பர் 2

இல்லை. எவ்வளவுதான் பணம் செலவழித்து நாம் கொள்முதல் செய்தாலும், அதைக் கொண்டுவருவதற்கு வழி இல்லை. ஏற்கெனவே இங்கே அம்மா அவர்கள் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். குஜராத்தில் வாங்கிய 500 மெகா வாட் மின்சாரத்தில், 235 மெகா வாட்தான் கொண்டுவர முடிகிறது. Case-1 bidding-ல் 1,100 மெகா வாட் மின்சாரம் வாங்குவதற்காகப் போட்ட நீண்டநாள் ஒப்பந்தத்தில் வெறும் 85 மெகா வாட்தான் பெற்றுக்கொண்டிருக்கிறோம். பணம் செலவழித்தாலும்கூட இப்படிப்பட்ட இடையூறுகளெல்லாம் இருக்கின்றன. இடைக்கால நிவாரணமாக, இங்கே கொண்டுவருவதற்கு, கொள்முதல் செய்வதற்கு வழிவகை சற்றுக் குறைவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மத்திய அரசு நினைத்தால் இதில் உதவிட முடியும். சிறப்பு ஏற்பாடுகள் செய்து ஏதாவது வழிதடங்களை, ஏற்கெனவே இருக்கின்ற ஒதுக்கீடுகளை மாற்றி அமைத்துக் கொடுக்க முடியும். அவர்களுக்கு மனம் இல்லை. அதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லி அரசு ஒப்படைத்த 1,721 மெகா வாட் மின்சாரத்தை தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்காக உச்ச நீதிமன்றம் வரை செல்லும் வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவினை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்திருக்கிறார்கள். இது இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் எடுக்காத, மக்களுடைய நலனுக்காகப் போராடும் வகையில் எடுக்கப்பட்ட ஒரு துணிவு மிக்க முடிவு. இதெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டு. இன்னும் சொல்லப்போனால், தமிழக மக்களின் நலனுக்காக மின்சாரம் கொடுக்கவேண்டும் என்பதில் உங்களுக்கு இருக்கக்கூடிய அக்கறையைவிட இலட்சம் மடங்கு அதிக அக்கறை அம்மா அவர்களுக்குக் கூடுதலாக இருக்கிறது என்பதை பலமுறை இங்கே புள்ளிவிவரங்களுடனும், ஆதாரத்துடனும் எடுத்துச் சொன்னதற்குப் பிறகும், (மேசையைத் தட்டும் ஒலி) 500 கோடி ரூபாய் கொடுங்கள், 500 கோடி ரூபாய் கொடுங்கள் என்று சொல்வது, இந்த உதவிகளை எல்லாம் திசைதிருப்புவதற்காக நீங்கள் ஏதோ முயற்சிக்கிறீர்களோ என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே, நீங்கள் தயவுசெய்து, செய்ததைப் பாராட்டுங்கள். (குறுக்கீடுகள்)

2012 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு மணிக்குள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இரண்டு மணிக்குள் வாக்கெடுப்பு நடத்தி முடிக்க வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

31-10-2012 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் பெறுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன

"2012-2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29-10-2012 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2012-2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவேற்றப்பெற்ற 2012–2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
1 மாநிலச் சட்டமன்றம்	1	....	....
2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	....	....
3 நீதி நிருவாகம்	20,10	....	....
4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	13,17,62	....	....
5 வேளாண்மைத் துறை	876,47,24	82,80	....
6 கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	11,96,51	1	....
7 மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	22,96,28	2	....

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
8 பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	2	—	—
9 பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத் துறை	1,48,90	2	—
10 வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	5,49,03	—	—
11 முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	3	—	—

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	1	—	—
13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	14,03	1	—
14 எரிசக்தித் துறை	2,042,54,00	—	1,000,00,01
16 நிதித் துறை	11,42,08	—	10,00,00
17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	197,57,00	—	6,23,00

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
18 கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	—	—	10,00,00
19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	26	2	—
20 உயர் கல்வித் துறை	5	30,00	—
21 நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	2	24	—
22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4,10,65	1	—

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	13,96,60	1	—
24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை)	3,05,79	—	—
25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	5	—	—
26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	1,01,81	—	36,48,00
27 தொழில் துறை	39,74	1	353,08,00

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	19,02,40	90,00	—
29 சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	15,97	1,00,02	—
30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	—	6,50,00	—
31 தகவல் தொழில் நுட்பவியல் துறை	1	—	—
32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	8,62,76	4	—

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	2,23,78	373,36,02	—
35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	2,94,28	—	—
36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	6	—	—
37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,00,00	—	—
38 பொதுத் துறை	7,05	—	—
39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	1,50,24	1,33,19	—
40 பாசனம் (பொதுப் பணித் துறை)	6	32	—
41 வருவாய்த் துறை	8,33,09	1	—

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	152,89,71	3	—
43 பள்ளிக் கல்வித் துறை	13	3	—
44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	9	3	—
45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	127,24,67	—	—
46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	2,01,52	—	1
47 இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	1	—	—
48 போக்குவரத்துத் துறை	200,00,01	1	13,91,00

கோரிக்கை	ரூபாய் ஆயிரத்தில்		
	வருவாய்	மூலதனம்	கடன்
49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	3,88,02	—	—
50 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	2	—	—
51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	23,97,80	—	—
52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	6	—	—
54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	1,26,51	2	—
பெருமொத்தம்	3,76,1,16,09	384,22,87	1,42,9,70,02

2012 நவம்பர் 2]

8. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2012) மற்றும் 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2012) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2012). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] 2-11-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

2012 நவம்பர் 2]

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2012). மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] *1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

(இ) சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012). மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] 1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2012). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[@] 31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012 நவம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்}

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2012), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[@] 31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2012), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. கே.பி. முனுசாமி] [2012 நவம்பர் 2

"2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] 31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2012). மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2012)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

@ 1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2012 நவம்பர் 2

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2012). மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[@] *1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2012 நவம்பர் 2

(ஐ) தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2012). மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] *1-11-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2012 நவம்பர் 2

(ஒ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2012). மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] *31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2012 நவம்பர் 2

(ஒ) அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2012), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] *1-11-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2012 நவம்பர் 2

(ஒள) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2012). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்பேரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[@] *31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2012 நவம்பர் 2

(அ.அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) திரு. க. பாலகிருஷ்ணன்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திருத்தத்தின்மூலம் அதாவது ஏற்கெனவே உறுப்பினரைச் சேர்ப்பதற்கு நிருவாகக் குழுவிற்கு மட்டுமே இருந்த தகுதி, நிருவாகக் குழு இல்லாத காலத்தில், பேரவையின்மூலம் உறுப்பினராகச் சேர்ப்பதற்கான திருத்தம் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிறது. அப்படியானால், ஏற்கெனவே 2001 ஆம் ஆண்டிலிருந்து இப்போதுவரை 'பி' கிளாஸ் உறுப்பினராக இருக்கிறவர்கள் 'ஏ' கிளாஸ் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்களா? ஏனென்றால் இதிலே புதிய உறுப்பினர்கள் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'பி' கிளாஸ் உறுப்பினர்களாக இருக்கிறவர்கள், பேரவையின் ஒப்புதல் மூலம் 'ஏ' கிளாஸ் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்களா என்கிற விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.*

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[@] *1-11-2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

2012 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிப்பது என்னவென்றால், புதிய உறுப்பினர்கள் மட்டுமல்ல, இதில் 'B' class உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டுமென்று மனு கொடுத்ததன் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல மனதோடு சட்டமுன்வடிவிற்கு திருத்தம் செய்து கொண்டு வந்து, 11 ஆண்டு காலமாக சங்க வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற 'B' class உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும், அந்தச் சங்கத்தினுடைய சட்ட துணை விதிகளுக்குட்பட்டு இருப்பவர்கள், அந்த எல்லைக்குள் இருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் அந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தகுதியுடையவர்கள். யார் வேண்டுமானாலும் மனு கொடுக்கலாம். அவர்கள் பொது மகா சபைக் கூட்டத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுதான் இந்தச் சட்டத்தினுடைய வடிவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம்

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

திருத்தச்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2012) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

(அஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2012). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

[@] 1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 2]

(அஇ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2012). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2012)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ *1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 2]

பிற்பகல் 2-25

(அஅ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2012). மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] 1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2012 நவம்பர் 2]

(அஉ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2012). மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

[@] *1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2009) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஊ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2012). மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

[@] *31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஎ) தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2012). மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

[@] 31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2012 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஏ) தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2012). மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[@] 1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-35

(அஅ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2012). மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[@] 2–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2012 நவம்பர் 2

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012 நவம்பர் 2] [திரு. என்.ஆர். சிவபதி]

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஅ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2012). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[@] 1–11–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012 நவம்பர் 2] [டாக்டர் வி.எஸ். விஜய்]

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஏ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2012). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2012)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[@] 31–10–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2012 நவம்பர் 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-40 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

21. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 25-10-2012 ஆம் நாளிட்ட 136 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. 2011-2012 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

23. 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

2012 நவம்பர் 2]

24. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (2012-2013)

25. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2012-2013)

26. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2012-2013)

27. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2012-2013)

28. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கை. (2012-2013)

29. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஆறாவது அறிக்கை. (2012-2013)

30. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஏழாவது அறிக்கை. (2012-2013)

31. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து எட்டாவது அறிக்கை. (2012-2013)

32. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2012-2013)

33. பொதுக் கணக்குக் குழுவின் எழுபதாவது அறிக்கை. (2012-2013)

34. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2012-2013)

35. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2012-2013)

36. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2012-2013)

37. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2012-2013)

38. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2012-2013)

[2012 நவம்பர் 2

39. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2012-2013)

40. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2012-2013)

41. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2012-2013)

42. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2012-2013)

43. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2012-2013)

44. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2012-2013)

45. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2012-2013)

46. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2012-2013)

47. மனுக்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை. (2012-2013)

48. மனுக்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2012-2013)

49. மனுக்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2012-2013)

50. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (1 முதல் 100 வரை)

51. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (1 முதல் 100 வரை)

52. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (1 முதல் 100 வரை)

*****

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS